ஸ்ரீமதேராமாநுஜாயநம:.
ப்ரபந்நஜந கூடஸ்தரான நம்மாழ்வார்
திருவாய் மலர்ந்தருளிய

திருவாய்மொழி.

ஆறும்பத்து

இதற்கு

* தெள்ளாரும் ஞானத்திருக்குருகைப்பிரான் பிள்ளான்
அருளிச்செய்த ஆறாயிரப்படியும்,
* அன்போடழகிய மணவாளச்சீயரருளிச் செய்த
பன்னீராயிரப்படி உரையும்
* தெள்ளியதா நம்பிள்ளை செப்புநெறிதன்னை
வள்ளல் வடக்குத்திருவீதிப் பிள்ளை அருளிச்செய்த
ஈடு ப்ரதி திருவாய்மொழியின்
ப்ரவேசங்களும்
ப்ரதி பாசுரங்களின் அவதாரிகைகளும்

ஸபாபண்டிதரான
ஸ்ரீமான், புதுப்பட்டு-திருவேங்கடாசார்யரால்
பரிசோதிக்கப்பட்டு

ஸ்ரீ வைஷ்ணவ கிரந்த முத்ராபக சபையாரால்
சென்னை.
ஸ்ரீநிகேதன முத்ராக்ஷர சாலையில்
அச்சிட்டு ப்ரசுரம் செய்யப்பட்டது.
பிரபவ௵

1927

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

திருவாய்மொழி.

ஆறாம் பத்து.

முதல் திருவாய்மொழி—வைகல் : ப்ரவேசம்.

ஆறு ;—(வைகல்பூங்கழிவாய்) எம்பெருமானோடே கலந்து பிரிந்தாளொரு பிராட்டி.

ப—ஆறாம்பத்தில், கீழ் பத்திலே - ஈஸ்வரனுடைய வுபாயபாவத்தை ஸப்ரகாரமாக நிரூபித்து, அநந்தரம், இவ்வுபாயஸ்வரூபத்தினுடைய ஸ்வீகார ப்ரகாரத்தை யருளிச்செய்வதாக ; உபாயஸ்வீகாரம் கடகரான ஆசார்யர்கள் முகமாக ஸித்திக்கும் ப்ரகாரத்தையும், ஸ்வீகர்த்தாவான அதிகாரியினுடைய பகவதாபிமுக்யம் ஸ்வீகாரத்துக்கு அபேக்ஷிதமென்னுமிடத்தையும், அகடிதகடநாஸமர்த்தனான ஈஶ்வரவிஷயத்தில் பலப்ரதத்வஶக்தியில் ஸம்ஶயமில்லை யென்னுமிடத்தையும், ஆகர்ஷகசேஷ்டிதனாகையாலே ஆஶ்ரயணம் ஸுகரமென்னுமிடத்தையும், தத்ஸக்தியை யாசைப்பட்டார்க்கு அந்யபரர்பக்கல் வைராக்யம் அபேக்ஷிதமென்னுமிடத்தையும், ஆத்மாத்மீயபதார்த்தமெல்லாம் அவனிட்ட வழக்காம்படியான ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தியையும், தாரகாதிகளெல்லாம் தானேயான ப்ராப்யவிஷயத்தில் த்வராயோகத்தையும், த்வரிதனுடைய பராஸக்தியில் கடகானார் விஷயத்தில் அத்யந்தாதரத்தையும், பரிபூர்ணமான ப்ராப்ய ப்ராவண்யம் அதிகாரிக்கு விஶேஷணமென்னுமிடத்தையும், ஸர்வரக்ஷகனான ஶரண்யன்பக்கல் ஸப்ரகார ஶரணாகதியையும் அருளிச்செய்து, ஸ்வஸித்தமான வுபாயவிஷயத்தில் ஸ்வீகாரத்தை ஸ்வாநுஷ்டாந பர்யந்தமாக வருளிச்செய்கிறார்.

ஈ இதில் முதல்திருவாய்மொழியில், ஆஶ்ரயணம் ஆசார்யோபஜ்ஞமாகையாலே ; ஆஶ்ரயணீயனானவன் கையுந்திருவாழியுமான வடிவழகைக் காட்டி யடிமைகொள்ளும் நிருபாதிக ஶேஷித்வஸம்பந்தத்தையும், அந்த ஸம்பந்தமடியான ஆபத்ஸகத்வத்தையும், ரக்ஷகத்வபோக்யத்வவிஶிஷ்டமான ஆதிக்யவிஶேஷத்தையும், அநுபாவ்யாகாரயுக்தமான ஆஶ்ரிதபவ்யதையினுடைய அதிஶயத்தையும், போக்யத்வஶேஷித்வத்தால் வந்த பூர்த்தி விஶேஷத்தையும், தத்கார்யமான ஸர்வநிர்வாஹகத்வத்தையும், அநுபாவ்ய அஸாதாரணமான லக்ஷணங்களையும், விலக்ஷண லக்ஷணங்களாலே ப்ரகாஶிதமான விஶேஷாதிக்யத்

ஸ்தையும், ஆஶ்ரிதவஶ்யதைக்கடியான அத்யந்தவ்யாமோஹத்தையும், வ்யாமோஹகார்யமான விரோதிநிரஸந ஸாமர்த்யத்தையுமநுஸந்தித்து, ஏவம்ப்ரகாரவிஶிஷ்டனான ஸர்வேஶ்வரனுடைய ஆஶ்ரயணம் கடகத்வாரமாகவேணுமென்றறுதியிட்டு, கடகத்வாநுரூபமான ஸ்வபாவவிஶேஷங்களையுடைய வ்யக்திவிஶேஷமுகத்தாலே ஸ்வதஶையை யறிவித்தப்ரகாரத்தை, விஶ்லிஷ்டநாயகிநாயகனைநோக்கித் தூதுவிடுகிற பாசுரத்தாலே யருளிச்செய்கிறார்.

ஈடு ;—கீழ் * நோற்றநோன்பு தொடங்கி நாலுப்ரயோகம் ஶரணம்புக்கவிடத்திலும் தம் அபேக்ஷிதம் பெற்றிலர். பலத்தோடு அவ்யபிசாரியாய் அவிளம்ப்ய பலப்ரதமான வுபாயத்தை ஸ்வீகரிக்கச்செய்தேயும் அபேக்ஷிதங்கிட்டாதொழிவானென் ? என்னில் ;— ஆழ்வாருடைய ஹிதத்தோபாதி ஜகத்தினுடைய ஹிதத்துக்கும் கடவனாகையாலே ஈஶ்வரபுத்த்யா தலைக்கட்டிற்றில்லை.

உகந்தருளின நிலங்கள்தோறும் புக்குத் தட்டித்திரிந்தார் ; அங்குத் தாம் நினைத்தபடி பரிமாறப்பெற்றிலர் ; நினைத்தபடி பரிமாறலான அவதாரத்தேறப்போனார் ; அது காலாந்தரமாகையாலே கிட்டப்பெற்றிலர் ; அதுதானே தளர்த்திக்கு உடலாயிற்று. இனி நித்யஸந்நிதியுமுண்டாய், முகப்பழக்கத்தாலும் குறையற்று, ஶக்தி வைகல்யமுமின்றிக்கேயிருக்கிற இவ்விடமே யமையுமென்று மீண்டார் ; அவ்வநுஸந்தாநந்தான் கால்நடை தந்து போகாதபடி ஈடுபடுத்திற்று, கால்நடைதருவார் காலிலே விழுந்து தூது விடுகிறார்.

தாம் கீழ் அநுஸந்தித்தவவதாரம் தூதர்க்குச் சென்று அறிவிக்க வொண்ணாதபடியா யிருந்தது ; “இனி அறிவிக்கலாம்படி கிட்டநின்றானாகில் திருவண்வண்டூரிலே யறிவிப்போம்” என்று அங்கே ஆள் விடுகிறார். இவர்க்குப்பிறந்தது ஜ்ஞாநகர்மாநுக்ருஹீதபக்தியன்றே ; ஒருவன் ப்ரஸாதமடியாக வந்ததிறே. தந்தலையிலேயும் ஒன்றுண்டாய் “அது நிறம்பிப்பெறவேணும்” என்று இருக்கிலிறே விளம்பம் பொறுக்கலாவது ; அங்ஙனம் சொல்லலாவதொன்றின்றிக்கே யிருந்தது இவர்தாம் பரிக்ரஹித்த ஸாதநந்தான் விளம்ப ஸஹமுமன்றே ; உபாயாந்தரங்களிற்காட்டில் கால்வாசியேற்றமுண்டே ; இங்ஙனே யடிப்பட்டவுபாயத்தை ஸ்வீகரித்தவர் ஆறியிருக்க மாட்டாரிறே ; ஆகையாலே ஆற்றாமை கரைபுரண்டு ஆளிட்டு அறிவிக்கிறார்.

"ஶரணம்புக்கோமாகில் அத்தலையாலே பெருமாளவும் ஆறியிருப்போம்" என்று தரித்திருக்கவல்ல ப்ரக்ருதியன்றே. ப்ரஹ்மாஸ்த்ரம் வாய்மடியச்செய்தேயும் இவர் தூதுவிடுகிறவிது ஜ்ஞாந கார்யமோ சாபலகார்யமோ தெரிகிறதில்லை; ஶ்ருதிகளுங்கூட (௧) "யதோ வாசோ நிவர்த்தந்தே - யதோவாசோநிவர்த்தந்தே" என்று - பேச்சுக்கு நிலமன்று என்று மீண்ட விஷயத்தை மறுபாடுருவப் பாசுரமிட்டுச் சொல்லவல்ல இவர்க்கு "அறிவில்லை" என்னவொண்ணாது; பக்ஷிகளின் காலிலேவிழுகிற இவர்க்கு "அறிவுண்டு" என்னவுமொண்ணாது. ஆனால் என்னாவது? என்னில்;—ஜ்ஞாந கார்யமான சாபலமிறே இவரது.

இதரவிஷயங்களில் விரக்தியிறே ஜ்ஞாநத்துக்கு ப்ரயோஜநமாகச்சொல்லுகிறது; அந்த ஜ்ஞாநபலமாயிறே இவ்விஷயத்தில் சாபலமிருப்பது. (௨) * ஜ்ஞாநவைராக்யராஶயே - ஜ்ஞாநவைராக்யராஶயேயிறே; இனித் தூதுவிடப்பார்த்தால் ஒரு ஐந்த்ர வ்யாகரணபண்டிதனைத் தூதுவிடுகிறதுமன்றே. இத்தால் சொல்லுகிறது - பிராட்டியிலுண்டான ஏற்றமோ? என்னில்:—அதுவுமுண்டிறே,—அவரொருவரையும் அநுபவிக்கையால் வந்ததிறே அவளுக்குள்ளது; இருவரையுங்கூட வநுபவிக்கக் கோலுகிற ஏற்றமுண்டிறே இவளுக்கு - விஷயாநுகுணமாயிறே கலக்கமிருப்பது. இனித் தான் அத்தலையில்நின்றும் வந்தார்க்கே வார்த்தை சொல்லிவிட வேணுமென்னும் நிர்ப்பந்தமில்லையே இவளுக்கு, ராவணஸங்கையில்லாமையாலே; ஆசையாலே கண்ணாற்கண்டாரை யடங்கலும் போகவிடுகிறாள்.

பிரிந்தார் இரங்குவது நெய்தல் நிலத்திலேயிறே; திருவல்லவாழ், திருவண்வண்டூரென்கிறவையெல்லாம் அந்நிலங்களிறே. தூதுவிடுவார், நாயகன்பக்கலிலே சில குணங்கள் கண்டிறே விடுவது; அவையாவன:—இத்தலையில் ஆர்த்தியறியுந்தனை அறிவையுமுடையனாய், அறிந்தால் வருகைக்கீடான நீர்மையுடையனாய், வருகைக்கீடான ஶக்தியுடையனாயிருக்கையிறே; அவையெல்லாம் இவள் தூதுவிடுகிற விஷயத்திற் குறையில்லை, அறிவில்வந்தால் (௩) "ஜ்ஞாநஸம்பந்ந: - ஜ்ஞாநஸம்பந்ந:" என்கிறபடியே - அறிவு

---

(௧) தை - ஆநந்த (௨) ஸ்தோத்ரரத்ந.

(௩) ரா - பா - ௧ - ௧௩

கொடுத்த வஸிஷ்டாதிகளுக்கு முபகரிக்கவல்லனும்படி யிருப்பா னொருவன்; நீர்மையில்வந்தால் (க) "[illegible] - ரிபூணுமபிவத்ஸல:" என்றால் (உ) "[illegible] - ஸஞ்ஜாபாஷ்ப:" என்னும்படியிறே அதிருப்பது; ஶக்தியில் வந்தால் (ங) "[illegible] - ரஞ்ஜநீயஸ்யவிக்ரமை:" என்று-எதிரிகள்பக்கலிலே கேட்குமத்தனை.

இனித்தான், நாயகனுவான் அறிவு நிறைவு ஓர்ப்பு கடைப்பிடி யுடையவனிறே. இப்படிப்பட்ட குணங்களை யுடையவனு யிருக்கிறவன் வாராதொழிகைக்குஹேது-அவ்விடங்களிலே ஆர்த்தர் பலருண்டாகையாலே அவர்கள் ரக்ஷணத்திலே யொருப்பட்டு இத்தலையை மறந்தானித்தனை; ரக்ஷணத்திலே யந்வயித்தால் (ச) "[illegible] - அஸ்தமிதாந்யபாவம்" என்னும்படியிறே யிருப்பது; ஆனபின்பு "ஆர்த்தியை அறிவிக்கவரும்" என்று பார்த்தாள். இனி அறிவித்தால் ஆர்த்திக்கு இத்தலையில் மேற்பட்டாரின்றிக்கே யிருக்குமிறே. அறிவிக்குமிடத்தில் தான் கால்நடை தந்துபோகமாட்டாள், தன் பந்துவர்க்கம் தனக்குமுன்னே நோவுபாடரிறே; இனி கால்நடை தந்துபோகவல்லார் வேணுமே; தன் பரிஸரத்தில் வர்த்திக்கிற பக்ஷிகளை "ஏகதேஶ வாஸித்வத்தால் வந்த ஸம்பந்தமே நங்கார்யம்செய்து தலைக்கட்டுகைக் குறுப்பு' என்று பார்த்து, அவற்றின் காலிலேவிழுந்து போகவிடுகிறாள்.

உறுத்தோறும், இத்திருவாய்மொழி யருளிச்செய்யப் புக்கவாறே ஜீயர் அருளிச்செய்யும்வார்த்தை - 'பாண்டவர்கள் கார்யத்துக்காகத் தன்னைப்போக்கி அவர்கள் கழுத்தைக் கட்டிக்கொண்டு கூடத் திரியச்செய்தேயும் அவர்கள்பட்ட வ்யஸநமெல்லாம் படுகிறார்காணு மிவரும்; அவர்கள்தான் ஒரு தர்மபாஸமுண்டு என்றிருக்கையாலே வ்யஸநப்படுகிறார்கள்; இவர்க்கு அதுவுமின்றிக்கேயிருக்க என்செய்யப்படுகிறார்" என்று அருளிச்செய்வர்.

(ரு) '[illegible] - ஸாஹம்கேஶக்ரஹம்ப்ராப்தா - த்வயிஜீவத்யபிப்ரபோ" என்றவள் நிலையிறே இவளது. (சு) [[illegible]

(க) ரா - அயோ - உக - சு (உ) ரா - கிஷ்கி - உச - உச.

(ங) ரா - யுத்த - க0சு - சு. (ச மாலதீமாதவ

(ரு) பாரத - உத்யோ - அங (சு) பார - உத்யோக.

வெஹ்ராஹமஹவாந் ஹரி: - மஹத்யாபதி ஸம்ப்ராப்தே ஸ்மர்த்தவ்யோ பகவாந்ஹரி:] ஆபாஸாக்ஷகரான பர்த்தாக்களாலும் தன்னை நும் நோக்கிக்கொள்ள வொன்ணுதபடி அவ்வருகுபட்ட வாபத் திறே. [ஹமவாந் - பகவாந்] - பூர்ணரன்றே அபூர்ணர் கார் யம் செய்யவல்லாரென்றுகாணும் அவன் நினைவு. [ஹரி: - ஹரி:] - ஆஸ்ரிதருடைய விரோதி நிரஸநமே ஸ்வபாவமாகவுடைய வனைப் பற்றினான். ஜ்ஞாநாதிகுணங்களால் சொன்ன பூர்த்தியிலே ஶக்தியுமுண்டாயிருக்கச் செய்தே "ஹரி:" என்று விஶேஷிக்க வேண்டிற்று - அல்லாதார்க்கும் இக்குணங்கள் ஓரொருகால் உண் டாகையாலே; இவனுக்கு அங்ஙனன்று, இது ஸ்வபாவம் என்கைக் காக வெடுத்தது.

ஈடு ; அவ ;—முதற்பாட்டு. சில குருகுகளை நோக்கி, திருவண் வண்டூரிலே சென்று எம்பெருமானுக்கு என் தசையை யறிவியுங்கோ ளென்கிறாள்.

வைகல்பூங்கழிவாய் வந்துமேயுங்குருகினங்காள் *
செய்கொள்செந்நெலுயர் திருவண்வண்டூருறையும் *
கைகொள்சக்கரத் தென்கனிவாய்ப் பெருமானைக்கண்டு *
கைகள்கூப்பிச்சொல்லீர் வினையாட்டியேன்காதன்மையே. (க)

ப —முதற்பாட்டில், "நம்மைத் தன்னழகைக்காட்டி அநந்யார்ஹமாக் கிக்கொண்ட ஶேஷியானவன் திருவண்வண்டூரில் ஸந்நிதியிலே அந்யபரனு யிருக்கிறானாகக்கூடும்" என்று நினைத்து, ஸந்நிஹிதமான சிலகுருகுகளைத் தூதாகப்போகவிடுகிறாள்.

வைகல்—என்றுமொக்க
பூ—அழகிய
கழிவாய்—கழியிலே
வந்து—என்கண் முகப்பேவந்து
மேயும்—மேய்கிற
குருகினங்காள்—குருகினங்காள்!
செய்—செய்யை
கொள்—விளாக்கொலைகொள்ளுகிற
செந்நெல்—செந்நெலானது
உயர்—மிகவும்வளருகிற
திருவண்வண்டூர்—திருவண்வண்டூரிலே
உறையும்—நித்யவாஸம்பண்ணுநிற்பானாய்
(ஆஸ்ரிதர்க்கநுபாவ்யமாம்படி)
கை—கையிலே
கொள்—இடங்கொண்ட
சக்கரம்—திருவாழியையுடையனாய்
என்—அவ்வழகாலே என்னை வஶீகரித்து எனக்கு போக்யமாக்கித் தந்த

கனி—கனிபோன்ற
வாய்—அதரசோபையையுடையனும்
பெருமானை—(இப்படி என்னை அநந்யார்ஹனாக்கிக்கொண்ட) பரமசேஷியானவனை
கண்டு—கண்டு
கைகள்கூப்பி—அவனுடைய சேஷித்வத்துக்குத் தகுதியாம்படி சேஷத்வாநுரூபவ்ருத்தியைப்பண்ணி
வினையாட்டியேன்—விஶ்லேஷஹேதுவான பாபத்தையுடையேனான வென்னுடைய
காதன்மை—அபிநிவேஶாதிசயத்தை
சொல்லீர்—சொல்லுங்கோள்.
குருகுகைகூப்புதல்—அநுவ்ருத்திரூபமான சிறகசைத்தல். இத்தால்-கடகருடைய ஸமானதேசவர்த்தித்வத்தால்வந்த ஸந்நிதியும் உத்தேஶ்யவிஷயாநுவ்ருத்தியும் தோற்றுகிறது. (க)

ஆறு ;—தன்னுடைய நிரவதிக ஸௌந்தர்யத்தாலே என்னுடைய ஸர்வகரணங்களையும் அபஹரித்துப்போய், திருவண்வண்டூரிலுள்ள நிரவதிகைஶ்வர்யத்தாலே என்னை மறந்திருக்கிற எம்பெருமானைக்கண்டு எனக்காக அவனைக் கைகள்கூப்பிச்சொல்லீர் வினையாட்டியேன் காதன்மையென்று சிலகுருகுகளைநோக்கி யருளிச்செய்கிறாள்.

ஈடு ;—இரண்டாம்பாட்டு. ஆர்த்தரக்ஷணத்திலே தீக்ஷிதனானவனுக்கு என்னுற்றாமையை அறிவியென்று ஒரு நாரையை யிரக்கிறாள். [காதலித்யாதி] - "முன்புபோகவிட்டவர்கள் கொண்டுவருகிறார்கள்" என்று கொண்டாறியிருக்கலாம் விஷயமன்றே ; அங்ஙனேயாமன்று முன்புபண்ணின ப்ரபத்தியே யமையுமே.

காதல்மென்பெடையோ டுடன்மேயுங்கருநாராய் *
வேதவேள்வியொலிமுழங்கும் தண்திருவண்வண்டூர் *
நாதன்ஞாலமெல்லாமுண்ட நம்பெருமானைக்கண்டு *
பாதம்கைதொழுதுபணியீர் அடியேன்திறமே. (உ)

ப.—அநந்தரம், ஆபத்ஸகனான அந்தசேஷியைக்குறித்து, பேடையோடேமேய்கிற நாரையைப் போகவிடுகிறாள்

காதல்—ப்ராவண்யாதிசயத்தாலே
மென்—பிரிவுபொறுக்கமாட்டாத மென்மையையுடைய
பெடையோடு—பேடையோடே
உடன்—கூட
மேயும்—மேயாநிற்கிற
கரு—ஶ்யாமளமான நிறத்தையுடைய
நாராய்—நாராய்

வேதவொலி—வேதகோஷமும்
வேள்வியொலி—வைதிகக்ரியாகோலாஹலமும்
முழங்கும்—முழங்கும்படியாய்
தண்—ஸாம்ஸாரிகதாபம் தட்டாத குளிர்த்தியையுடைய
திருவண்வண்டூர்—திருவண்வண்டூருக்கு
நாதன்—ஸ்வாமியாய்
ஞாலமெல்லாம்—ஸகலஜகத்தையும்
உண்ட—ப்ரளயங்கொள்ளாமல் வயிற்றிலேவைத்துநோக்கின ஆபத்ஸகத்வத்தை
நம்—நமக்கு ப்ரகாசிப்பித்த
பெருமானை—பெரியவனை
கண்டு—நான் காண்கைக்குறுப்பாக முன்னே கண்டு
பாதம்—அவன் திருவடிகளைக்குறித்து
கைதொழுது—அஞ்ஜலிபண்ணி
அடியேன்—அவனுக்கு சேஷபூதையான என்
திறம்—இடையாட்டமாக
பணியீர்—வார்த்தை சொல்லுவீராக வேணும்

பன்மை - பெடையோடேகூட்டிச் சொல்லுகிறது; பணியீரென்று - கௌரவந்தோற்றுகிறது. அடியேனென்று - கடாக்ஷவிஷயமாகவுமாம். இத்தால் - கடகருடைய அபிமதஸாஹசர்யமும், ஆபிரூப்யமு முத்தேஶ்யமென்று கருத்து. (௨)

ஆறு;—(காதல்) பரமகாருணிகனாய் ஆஶ்ரித வத்ஸலனாயிருந்த திருவண்வண்டூர் நாதனைக்கண்டு, பாதம் கைதொழுது பணியீரடியேன் திறமென்கிறாள். (௨)

ஈடு; அவ;—மூன்றாம்பாட்டு. திறந்திறமாக ஸஞ்சரிக்கிற புள்ளினங்களைக்கண்டு, என்வ்யஸநத்தை யறிவியுங்கோளென்கிறாள்.

திறங்களாகியெங்கும் செய்களூடுழல்புள்ளினங்காள் *
சிறந்தசெல்வம்மல்கு திருவண்வண்டூருறையும் *
கறங்குசக்கரக்கைக்கனி வாய்ப்பெருமானைக்கண்டு *
இறங்குநீர்தொழுதுபணியீர் அடியேனிடரே. (௩)

ப—அநந்தரம், ரக்ஷகத்வபோக்யத்வங்களாலே ஸர்வாதிகனானவனைக்குறித்து, ஸங்கமாக வர்த்திக்கிற சிலபக்ஷிகளைப் போகவிடுகிறாள்.

திறங்களாகி—திறந்திறமாக
எங்கும்—ஸர்வதேசத்திலும்
செய்களூடு—விளை நிலங்களுக்குள்ளே
உழல்—ஸஞ்சரிக்கிற
புள்ளினங்காள்—பக்ஷிஸங்கங்காள்!
சிறந்த—தன்னுடையபெருமைக்குத் தகுதியான
செல்வம்—ஐஶ்வர்யம்
மல்கு—விஞ்சியிருக்கிற
திருவண்வண்டூர்—திருவண்வண்டூரிலே

உறையும்—நித்யவாஸம்பண்ணுவானாய்
கறங்கு—(பகவதநுபவாநந்தத்தாலும் ஆஶ்ரிதவிரோதிநிரஸநோத்யோகத்தாலும்) சுழன்றுவருகிற
சக்கரம்—திருவாழியையுடைய
கை—திருக்கையையுடையனாய்
கனி—நிரதிஶயபோக்யமான
வாய்—அதரசோபையையுடையனாய்
பெருமானை—(இந்த ரக்ஷகத்வபோக்யத்வங்களால் வந்த) மேன்மையையுடையனானவனை
கண்டு—கண்டு (ஆம்மேன்மைக்கீடாக)
நீர்—நீங்கள்
இறங்கி—தாழ்ந்து
தொழுது—தொழுது
அடியேன்—'என்காரியம் நீங்களிட்ட வழக்காம்படி) பாதந்த்ரையான வென்னுடைய
இடர்—விஶ்லேஷக்லேஶத்தை
பணியீர்—சொல்லவேணும்.
இத்தால்—கடகருடைய ஸமவாயம் உத்தேஶ்யமென்று தோற்றுகிறது.

ஆறு;—(திறங்களாகி) ஆஶ்ரித விரோதி நிரஸநார்த்தமான த்வரையாலே சுழலாநின்ற திருவாழியைத் திருவணிகலனாகவுடையனாய், ஈஷதுந்மிஷிதரவிந்தஸத்ருஶ திவ்யவதநனான வெம்பெருமானைக்கண்டு இறங்குநீர் தொழுதுபணியீரடியேனிடரென்கிறாள்.

ஈடு; அவ;—நாலாம்பாட்டு. சில அன்னங்களைக் குறித்து, ஶரீரம் கட்டழிந்து ஶிதிலையாகாநின்றாளென்று சொல்லுங்கோளென்கிறாள்.

இடரில்போகம்மூழ்கி இணைந்தாடும்மடவன்னங்காள் *
விடலில்வேதவொலிமுழங்கும் தண்திருவண்வண்டூர் *
கடல்மேனிப்பிரான் கண்ணனைநெடுமாலைக்கண்டு *
உடலம்நைந்தொருத்தி உருகுமென்றுணர்த்துமினே. (௪)

ப—அநந்தரம், அபிரூபனாய் ஆஶ்ரிதபவ்யனானவனைக்குறித்துச் சில வன்னங்களைப் போகவிடுகிறாள்.

இடர்—விஶ்லேஷப்ரஸங்கம்
இல்—இல்லாதபடியான
போகம்—போகத்திலே
மூழ்கி—அவகாஹித்து
இணைந்து—பிரியாதே
ஆடும்—நடையாடுவதாய்
மடம்—பரஸ்பரபவ்யங்களான
அன்னங்காள்—அன்னங்காள்!
விடல்—விச்சேதம்
இல்—இல்லாத
வேதவொலி—வேதகோஷமானது
முழங்கும்—முழங்கும்படியாய்
தண்—ஶ்ரமஹரமான
திருவண்வண்டூர்—திருவண்வண்டூரிலே வர்த்திப்பானாய்

கடல்—கடல்போலே தர்ஶநீயமான
மேனி—வடிவை
பிரான்—எனக்குபகரிப்பானாய்
கண்ணனை—நானிட்ட வழக்காம்படி எனக்கு பவ்யனாய்
நெடு—அந்தபவ்யதைக்கெல்லை காணவொண்ணாதபடி
மாலை—மிகவும் பெரியனானவனை
கண்டு—கண்டு
ஒருத்தி—ஒருத்தி
உடலம்—தன்ஶரீரம்
நைந்து—ஶிதிலமாய்
உருகும்—உருகாநின்றாள்
என்று—என்று
உணர்த்துமின்—அறிவியுங்கோள்.
இத்தால்—கடகருடைய (௬) “த்ருஷ்டே ஸதி ஹரௌ ஸதிவ துஷ்யந்தி சாமந்திச” என்கிற பரஸ்பர பகவதநுபவ ஸௌக்யமும், அந்யோந்யபவ்யதையு முத்தேஶ்யமென்று கருத்து (௪)

ஆறு;—(இடரில்) ஸௌந்தர்ய ஸௌலப்ய வாத்ஸல்ய கல்யாணகுணகணநிதியான அவனைக்கண்டு, ஐயோ! ஒருத்திபடும் பாடே இதுவென்று சொல்லுங்கோளென்று சிலவன்னங்களைக்குறித்துச் சொல்லுகிறாள். (௪)

ஈடு; அவ;—அஞ்சாம்பாட்டு. திரியவும் சில அன்னங்களைக் குறித்து; அத்தேசம் புக்காரைமறப்பிக்கும், நீங்கள் புக்கா லென்னையும் நினையுங்கோ ளென்கிறாள்.

உணர்த்தலூடலுணர்ந்து உடன்மேயும்மடவன்னங்காள் *
திணர்த்தவண்டல்கள்மேல் சங்குசேருந்திருவண்வண்டூர் *
புணர்த்தபூந்தண்துழாய்முடி நம்பெருமானைக்கண்டு *
புணர்த்தகையினரா யடியேனுக்கும்போற்றுமினே. (௫)

ப—அநந்தரம், போக்யத்வ ஶேஷித்வபூர்ணனான ஸர்வாதிகனைக்குறித்துப் பின்னும் சில வன்னங்களைப் போகவிடுகிறாள்.

உணர்த்தல்—உணர்த்தலிலருமையையும்
ஊடல்—ஊடலில் க்லேஶத்தையும்
உணர்ந்து—உணர்ந்து
உடன்—பிரியாதேகூட
மேயும்—மேய்வனவாய்
மடம்—ஒன்றுக்கொன்று துவட்சியையுடையவாயிருக்கிற
அன்னங்காள்—அன்னங்காள்!
திணர்த்த—கதிப்பையுடைத்தான
வண்டல்கள்மேல்—வண்டல் மணல்களின்மேலே
சங்கு—சங்குகளானவை
சேரும்—சேருகிற
திருவண்வண்டூர்—திருவண்வண்டூரிலே

புணர்த்த—தொடுக்கப்பட்ட
பூ—அழகிய
தண்துழாய்—செவ்வித்திருத்துழாயையுடைய
முடி—திருமுடியையுடையனுன
நம்—நம்முடைய
பெருமானை—ஸ்வாமியை
கண்டு—கண்டு
புணர்த்த—அஞ்ஜலிபந்தம் பண்ணின
கையினராய்—கையை யுடையீராய்
அடியேனுக்கும்—உங்களுக்கு சேஷபூதையான எனக்காகவும்
போற்றுமின்—ஸ்தோத்ரரூபமாம்படி கௌரவித்து வார்த்தை சொல்ல வேணும்.
இத்தால்—கடகருடைய பரஸ்பரவிஶ்லேஷநிருத்தவும் உத்தேஶ்யமென்று கருத்து. ௫

ஆறு ;—(உணர்த்தல்) நாங்களும் உன்திறமாகச் சொல்லும் வார்த்தையை அவன் கேட்டருளா தொழியிற் செய்வதென்னென்னில் ; உங்களுடைய சேவல்கள் உங்களோடுள்ள வூடலாலே தொழுது உங்களை யூடல்தீர்த்தாற்போலே நீங்களும் எனக்காக அவனைத் தொழுது என்னோடுள்ள வூடல் தீர்த்துப் பின்னை என்திறம்சொல்லுவது. உங்களுக்குத்தானித்தனைவருத்தம் வேண்டுவதில்லை, அவன்தான் இத்தனைபோது இங்கெழுந்தருளுகைக்காக வொப்பித்தருளாநிற்கும், சொல்லும் இத்தனையே வேண்டுவதென்கிறாள்.

---

௬ ; அவ ;—ஆறும்பாட்டு. சிலகுயில்களைக் குறித்து அவனுக்கென்தசையை யறிவித்து அங்குநின்றுமொரு மறுமாற்றங்கொண்டுவந் தருளிச்செய்யவேணு மென்கிறாள்.

> போற்றியானிரந்தேன் புன்னைமேலுறைபூங்குயில்காள் *
> சேற்றில்வாளைதுள்ளும் திருவண்வண்டூறையும் *
> ஆற்றலாழியங்கை யமரர்பெருமானைக்கண்டு *
> மாற்றங்கொண்டருளீர் மையல்தீர்வதொருவண்ணமே. (௬)

ப—அநந்தரம், போக்யதாப்ரகர்ஷத்தாலே ஸம்ஶ்லேஷயனவனைக் குறித்துச் சில குயில்களைப் போகவிடுகிறாள்.

புன்னைமேல்—பசுத்தநிறத்தையும் பரபாகமாய் நாநாவர்ணமான புஷ்பத்தையுமுடைய புன்னையின்மேலே
உறை—ஸாபாஶ்ரயமானவிஷயத்தைப்பற்றி யிருப்பாரைப்போலே நிரந்தராஶ்ரயணம்பண்ணி
பூ—அத்தாலே யுஜ்ஜ்வலவேஷங்களான
குயில்காள்—குயில்காள்
போற்றி—(உங்கள் * நிவாஸவ்ருக்ஷாஶ்ரயணத்துக்கும் தர்ஶநீயதைக்கும்) மங்களாஶாஸநம்பண்ணி

யான்—உங்கள்வாயது வாளுளாயிருக்கிற நான்
இரந்தேன்—அநந்யகதியானுர்பண்ணும் ப்ரார்த்தனையைப் பண்ணினேன்;
சேற்றில்—தன்னிலத்திலே வர்த்திக்கையாலே களித்து
வளை—வாளை
துள்ளும்—துள்ளாநிற்கிற
திருவண்வண்டூர்—திருவண்வண்டூரிலே
உறையும்—வர்த்திப்பானுய்
ஆற்றல்—பெருமிடுக்கனை
ஆழி—திருவாழியாலே
அம்—அலங்க்ருதமான
கை—திருக்கையையுடையனுய், (அவ்வழகாலே)
அமரர்—நித்யஸூரிகளை நிர்வஹிக்கிற
பெருமானை—ஸர்வாதிகனை
கண்டு—கண்டு
மையல்—என்னுடைய ப்ரமம்
தீர்வது—தீரும்படியானது
ஒருவண்ணம்—ஒருப்ரகாரத்தாலே
மாற்றம்—மறுமாற்றம்
கொண்டு—கொண்டுவந்து
அருளீர்—எனக்கு உபகரிக்கவேணும்
ஆற்றல்—அமைதியாய், மதிப்பையுடையவனென்றுமாம். இத்தால் - கடகருடைய வுக்தி மாதுர்யமும் அர்த்தநியதியுந் தோற்றுகிறது.

ஆறு ;—(போற்றியான்) ஆஶ்ரிதர்க்காத்மதாநம் பண்ணினுலு மொன்றும் செய்யாதானுயிருக்கும் ஸ்வபாவனுய், ஆஶ்ரிதவிரோதி நிரஸநார்த்தமாக அநவரத முத்யதாயுதனுய், ஆஶ்ரித ஸம்ஶ்லேஷைக போகனுயிருந்த எம்பெருமானைக்கண்டு, மாற்றங்கொண்டருளீர் மையல்தீர்வ தொருவண்ண மென்கிறுள். (சு)

எ ; அவ ;—ஏழாம்பாட்டு. சில கிளிகளைக்குறித்து, அவனுடையாளங்களைச்சொல்லி, இவனுடைய எப்படியேகண்டு எனக்காக வொருவார்த்தை சொல்லுங்கோளென்கிறுள்.

ஒருவண்ணஞ்சென்றுபுக் கெனக்கொன்றுரையொண்கிளியே *
செருவொண்பூம்பொழில்சூழ் செக்கர்வேலைத்திருவண்வண்டூர் *
கருவண்ணஞ்செய்யவாய் செய்யகண்செய்யகைசெய்யகால் *
செருவொண்சக்கரஞ்சங்கு அடையாளந்திருந்தக்கண்டே. (எ)

ப.—அநந்தரம், அஸாதாரண தர்மீய லக்ஷணனுனவனைக்குறித்து ஒரு கிளியைப் போகவிடுகிறுள்.

ஒண்—வடிவழகாலே யவனையொப்புச்சொல்லலாம்படியான வைலக்ஷண்யத்தையுடைய
கிளியே—கிளியே
செரு—பரஸ்பர ஸ்பர்த்தானுக்களைப்போலே யிசலியிசலி

ஒண்—அழகிய
பூ—பூக்களையுண்டாக்கும்
பொழில்—பொழில்
சூழ்—சூழ்ந்து
(அந்தப் புஷ்பபராகத்தாலே)
செக்கர்—செக்கர்
வேலை—காலத்தையுடைத்தான
திருவண்வண்டூர்—திருவண்வண்டூரி லே
(பொழிலின் போக்யதையிலகப்படாதே)
ஒருவண்ணம்—ஒருபடி
சென்று—சென்று
புக்கு—புக்கு
(அந்த அமரர்பெருமானுடைய)
கரு—ஶ்யாமளமான
வண்ணம்—வடிவும்
செய்ய—சிவந்த
வாய்—வாயும்
செய்ய—செய்ய
கண்—கண்ணும்
செய்ய—செய்ய
கை—கையும்
செய்ய—செய்ய
கால்—காலும்
செரு—இவ்வழகுக்கு போக்தாக்களானருடைய விரோதிநிரஸநத்திலே யுத்யுக்தமாய்
ஒண்—போக்யமான வேஷத்தையுடைத்தான
சக்கரம்—திருவாழியும்
சங்கு—ஸ்ரீ பாஞ்சஜந்யமுமாகிற
அடையாளம்—அடையாளங்களை
திருந்த—அபரோக்ஷித்து
கண்டு—கண்டு
எனக்கு—அப்படிகாண வாசைப்பட்டிருக்கிற வெனக்கு, (இனிதாக)
ஒன்று—ஒருவார்த்தை
உரை—சொல்லவேணும்.
கண்டபடிவந்தெனக் கொருவார்த்தை சொல்லவேணுமென்றுமாம். இத்தால்-கடகருடைய பகவத்ஸமாநாசாரதை தோற்றுகிறது. (எ)

ஆறு;—(ஒருவண்ணம்) திருவண்வண்டூரில் சோலைகளுடையவும், தாமரைத்தடாகங்களினுடையவும் அதிமநோஹரமான வழகுகளிலே அகப்படாதே யொருவண்ணம் சென்றுபுக்கு, என்னோடுள்ள கலவியாலே புதுக்கணித்த திருநிறத்தையும் திருப்பவளத்தையும் திருக்கண்களையும் திருக்கைகளையும் திருவடிகளையும் திருவாழியையும் திருச்சங்கையும் தனக்கு திவ்யசிஹ்நமாகவுடையனாயிருந்தவனைத் திருந்தக்கண்டு எனக்கொன்றுரை யொண்கிளியே! என்கிறாள்.

(எ)

ஈடு; அவ;—எட்டாம்பாட்டு. சில பூவைகளைக் குறித்து; மீண்டுவந்தெனக்குச் சொல்லலாம்படி வ்யக்தமாகக்கண்டு, ஒருமறுமாற்றம் கேட்டுவந்து சொல்லவேணுமென்கிறாள். காணவொண்

ஞமைக்கு வேண்டும் ஹேதுக்களைச் சொல்லிவைத்துத் திரியவும் திருந்தக்காணுங்கோ ளென்கிருளிறே.

திருந்தக்கண்டெனக்கொன்றுரையா யொண்சிறுபூவாய் *
செருந்திஞாழல்மகிழ் புன்னைசூழ் தண் திருவண்வண்டூர் *
பெருந்தண் தாமரைக்கண் பெருநீண்முடி நாற்றடந்தோள் *
கருந்திண்மாமுகில்போற் றிருமேனியடிகளையே. (அ)

ப.—அநந்தரம், ஆதிக்யஸௌசகலக்ஷணங்களை யுடையவனைக் குறித்து ஒரு பூவையைப் போகவிடுகிருள்.

ஒண்—தர்ஸநீயமாய்
சிறு—"புலன்கொள்மாண்" என்றவடிவுபோலே சிரும்பித் தநுபவிக்கலாம்படி சிறுகினவடிவையுடைய
பூவாய்—பூவாய்
செருந்திஞாழல்மகிழ்புன்னை - செருந்திதொடக்கமான நாநாவித புஷ்ப வ்ருக்ஷங்களாலே
சூழ்—சூழப்பட்டு
தண்—ப்ரமஹாரமான
திருவண்வண்டூர்—திருவண்வண்டூரில்
பெரு—அதிவிஸாலமாய்
தண்— குளிர்ந்த
தாமரை—தாமரைபோலேயிருக்கிற
கண்—திருக்கண்களையும்
(ஸ்வாதிராஜ்ய ஸூசகமாய்)
பெரு—பெரிய
நீள்—வளர்த்தியையுடைய
முடி—திருவபிஷேகத்தையும்
தடம்—சுற்றுடைத்தாய்ப்பணைத்த
நால்—நாலு
தோள்—திருத்தோள்களையும்
கரு—ஸ்யாமளமான நிறத்தை யுடைத்தாய்
திண்—காலாந்தரத்தே வேற்று நிறமாகை யன்றியே ஸ்த்திரமான
மாமுகில்போல்—மஹா மேகம்போலே யிருக்கும்
திருமேனி—திருமேனியையுமுடைய
அடிகளை—ஸர்வஸ்வாமியானவரை, (அவருடையநினைவை)
திருந்த—திருந்த
கண்டு—கண்டு
எனக்கு—அவரபிப்ராயம் அறியவாசைப்பட்டிருக்கிற வெனக்கு
ஒன்று—ஒருவார்த்தை
உரையாய்—சொல்லவேணும்.
ஞாழல்—பச்சைநிறமாயிருப்பதொரு லதாவிசேஷம் இத்தால் கடகருடையவடிவில்ஸௌக்ரஹத்வமும், யதாத்ருஷ்டார்த்த வாதித்வமும் உத்தேஸ்யமென்று கருத்து. (அ)

ஆறு ;—(திருந்த) ஸ்வஸம்ஸ்லேஷ ஜநிதமான வழகு தானிருக்கும்படியைச் சொல்லுகிருள். (அ)

ஈடு ; அவ ;—ஒன்பதாம்பாட்டு. சிலவன்னங்களைக்குறித்து ; ஏகாந்தத்திலே (௧) "நகஸ்ஸ்ரீஞாவராயஹ்ருதி - நகஸ்ஸிந்நாபராத்யதி" என்பார் முன்பாக என்னிடையாட்டத்தை யறிவியுங்கோளென்கிறாள்.

அடிகள்கைதொழுது அலர்மேலசையுமன்னங்காள் *
விடிவைசங்கொலிக்குந் திருவண்வண்டூருறையும் *
கடியமாயன்தன்னைக் கண்ணனைநெடுமாலைக்கண்டு *
கொடியவல்வினையேன் திறங்கூறுமின்வேறுகொண்டே. (௯)

ப.—அநந்தரம், ஆஶ்ரிதவிஷயத்தி லத்யந்த வ்யாமுக்தனானவனைக் குறித்து விலக்ஷணங்களான சில வன்னங்களைப் போகவிடுகிறாள்.

தறையில் பாவாதபடியான செருக்காலே
அலர்மேல்—பூவின்மேலேயிருந்து
அசையும்—தூங்குமெத்தையி லிருப்பாரைப்போலேகாற்று வளத்திலே அசைகிற
அன்னங்காள்—அன்னங்காள் !
விடிவை—விடிவுக்குப்ரகாசகமான
சங்கு—சங்கு
ஒலிக்கும்—முழங்குகிற
திருவண்வண்டூர்—திருவண்வண்டூரிலே
உறையும்—வர்த்திப்பானாய்
கடிய—தான்நினைத்த காரியத்திலே எதிர்த்தலையிலும் முற்பாடனான கடுமையையுடையனாய்
மாயன்றன்னை—எதிர்த்தலை யகப்படும்படியான ஆஸ்சர்யசேஷ்டிதங்களை யுடையனாய்
கண்ணனை—அவ்வளவி லத்யந்த நியாம்யனான பவ்யதையையுடையனாய்
நெடுமாலை—அதுக்கடியான வதிஶயித வ்யாமோஹத்தை யுடையனானவனை
கண்டு—உங்கள் பெருமையாலே மேலெழ நினைத்திராதே யுள்ளூறக் கண்டு
அடிகள்—அவன் திருவடிகளையுத்தேசித்து
கைதொழுது—அநுவ்ருத்திகளைப்பண்ணி
கொடிய—அத்யந்தபரிதாப ஹேதுவாய்
வல்—அதிப்ரபலமான
வினையேன்—ப்ராவண்யரூபமான பாபத்தையுடையேனான என்
திறம்—இடையாட்டமாக
வேறுகொண்டு—ஏகாந்தத்திலே யிடங்கொண்டு
கூறுமின்—வார்த்தை சொல்லுங்கோள்.
இத்தால்—கடகருடைய ஜ்ஞாநோத்கர்ஷமும், விலக்ஷண ஸம்ஸ்லேஷத்தால் வந்த செருக்கும் தோற்றுகிறது. (௯)

ஆறு ;—(அடிகள்) சென்றால் எங்களுக்குக் காலமாயிருக்குமோ வென்ன ; நீங்கள் செல்லுமளவிலே திருப்பள்ளி யுணர்ந்தருளும் காலமாம், திருப்பள்ளியுணர்ந்தருளின வாறே, ஆஶ்ரிதருடைய ஸமஸ்த துக்கங்களையு மொருக்ஷணத்திலே போக்கியருளும் ஸ்வபாவனாய் ஆஶ்ரிதவாத்ஸல்யனாயிருந்தவனைக்கண்டு, கொடியவல்வினையேன் திறம் கூறுமின் வேறுகொண்டென்கிறாள். (௯)

ஈடு ; அவ ;—பத்தாம்பாட்டு. "சில வண்டுகளைக் குறித்து, அவர் இத்தலையில் ஸத்தையுமில்லை யென்றிருப்பர், அவளுமுளளென்று சொல்லுங்கோ ளென்கிறாள்" என்று ஆளவந்தாரருளிச்செய்வர் "இத்தலை யில்லையாகி லத்தலை யுண்டாகக் கூடாது ; 'பெண்பிறந்தார் காரியமெல்லாம் செய்தோம்' என்று க்ருதக்ருத்யரா யிருக்கிறவர்க்கு, ரக்ஷ்யவர்க்கத்திலே நானுமொருத்தியுண்டென்று சொல்லுங்கோ ளென்கிறாள்" என்று எம்பெருமானார் அருளிச்செய்வர்.

வேறுகொண்டும்மையானிரந்தேன் வெறிவண்டினங்காள் *
தேறுநீர்ப்பம்பை வடபாலைத்திருவண்வண்டூர் *
மாறில்போரரக்கன் மதிள்நீறெழச்செற்றுகந்த *
ஏறுசேவகனார்க்கென்னையு முளளென்மின்களே. (௧௦)

ப—அநந்தரம், ஆஶ்ரிதவ்யாமோஹகார்யமான விரோதிநிரஸந ஸாமர்த்யத்தை யுடையவனைக் குறித்துச் சில வண்டுகளைப் போகவிடுகிறாள்.

வெறி (௧) "ப்ரஹ்மகந்த⁴ஃப்ரவிஶதி - ப்ரஹ்மகந்தஃப்ரவிஶதி" என்று முக்தனுக்கு * அமரர் சென்னிப்பூவான ப்ரஹ்மகந்த ப்ராப்திபோலே, உங்கள் போகவிஷயமான பூவில் பரிமளம் ஸங்க்ரமிக்கும்படியான வடிவையுடைய

வண்டினங்காள்—வண்டினங்காள் !

உம்மை—உங்களை

வேறுகொண்டு—இதர ஸஜாதீயபுத்தி பண்ணாதே அத்யந்த வ்யாவ்ருத்த புத்திபண்ணி

யான்—உங்கள் வ்யாவ்ருத்தியே தஞ்சமென்றிருக்கிற நான்

இரந்தேன் — உத்தேஶ்யனான வவன் பக்கல்பண்ணும் ப்ரார்த்தனையை, அவனைச் சேர்த்துத்தரும் உங்கள் பக்கலிலே பண்ணினேன் (விரஜைக்கக்கரையான தேஶம் போலே)

தேறு—தெளிந்த
நீர்—நீரையுடைய
பம்பை—பம்பைக்கு
வடபாலை—வடகரையான
திருவண்வண்டூர்—திருவண்வண்டூரில்
மாறு—எதிர்
இல்—இல்லாத
போர்—யுத்தத்தையுடையனாய்
அரக்கன்—யுத்தக்ரௌர்யஹேதுவான ராக்ஷஸஜந்மத்தை யுடைய ராவணன்
மதிள்—அரணாகவிட்ட மதிளை
நீறெழ—பொடிபொடியாம்படி
செற்று—அழித்து
உகந்த—அத்தாலே “க்ருதக்ருத்யர்” என்னும்படி யுகந்திருப்பாராய்
ஏறு—அநுகூல ப்ரதிகூலவிபாகமற வெல்லார்க்கும் ஸம்ப்ரதிபந்நமான ஸம்ருத்தியையுடைத்தான
சேவகனார்க்கு—பராக்ரமாதிஶயத்தை யுடையவர்க்கு
உளள்—தாம் சேவகஞ்செய்து விரோதி நிரஸநம்பண்ணிப் பெற்றவளொழிய இவளுமொருத்தியுளளென்று
என்னையும்—என்னையும்
என்மின்கள்—சொல்லுங்கோள்

அவளை யொழிய வென்னையு மிதுக்கு முன்பு ஸத்தையோடே யிருந்தாளென்னுங்கோள் என்றுமாம் இத்தால்—„யபெ்ஶா ஹி:-ஸூர ஹி: - யஶோபி: ஸூரபி:” என்கிறபடியே, கடகருடைய பகவதநுபவ ப்ரதையால்வந்த ஸௌரப்யந்தோற்றுகிறது வெறியென்று-தேஜஸ்ஸாய் ஔஜ்ஜ்வல்யமாகவுமாம். (க0)

ஆறு ;—(வேறுகொண்டு) தன்னுடைய புஜபலத்தாலே ஸகலஜந்துஜாதமும் ஸுபரித்ராதமாய்ச்செல்லாநிற்கச்செய்தே, திருவண்வண்டூரிலுள்ள தன்னுடைய நிரவதிகஸம்ருத்தியாலே என்னை மறந்த அவனுக்கு, தனக்கு ரக்ஷணீயையாயிருப்பாள் நானுமொருத்தியுளளென்று சொல்ல வேண்டுமென்று சில வண்டுகளை யபேக்ஷிக்கிறாள். (க0)

ஈடு ; அவ ;—நிகமத்தில் - இத்திருவாய்மொழி வல்லவர்கள், காமிநிகளுக்கு காமுகர் போக்யமாமாபோலே ஸர்வேஶ்வரனுக்கு ஸ்ப்ருஹாவிஷயமாவரென்கிறார்.

மின்கொள்சேர்புரிநூல்குறளா யகல்ஞாலம்கொண்ட *
வன்கள்வனடிமேல் குருகூர்ச்சடகோபன்சொன்ன *
பண்கொளாயிரத்துள்ளிவைபத்தும் திருவண்வண்டூர்க்கு *
இன்கொள்பாடல்வல்லார் மதனர்மின்னிடையவர்க்கே. (கக)

ப ;—அநந்தரம், இத்திருவாய்மொழியை யப்யஸித்தவர்கள் ஸ்புரத்ஸ்வபாவரான பாகவதவிஷயத்துக்கு உசப்புக்குறுப்பாவரென்று பலத்தையருளிச்செய்கிறார்.

மின்—ஒளியை
கொள்—உடைத்தாய்
சேர்—திருமேனிக்கும் ப்ரஹ்மவர்ச்சஸத்துக்கும்சேர்ந்த
புரிநூல்—திருயஜ்ஞோபவீதத்தையுடைய
குறளாய்—வாமநனாய்
அகல்—விஸ்தீர்ணமான
ஞாலம்—பூமியை
கொண்ட—அநந்யார்ஹமாக்கிக்கொண்டவனாய்
வன்—கொடுக்கிறவனோடு நாட்டாரோடுவாசியற இசையும்படி ப்ரபலமான
கள்வன்—வஞ்சனத்தையுடையவன்
அடிமேல்—திருவடிகள் விஷயமாக
குருகூர்ச்சடகோபன்—ஆழ்வார்
சொன்ன—அருளிச்செய்ததாய்
பண்—பண்ணனது
கொள்—இயலைத்தனக்குள்ளேயாக்கிக்கொள்ளும்படியான
ஆயிரத்துள்—ஆயிரத்துள்ளே
திருவண்வண்டூர்க்கு—திருவண்வண்டூர்க்கேயாய்
இன்—இனிமையை
கொள்—உடைய
பாடல்—பாடலான
இவைபத்தும்—இவைபத்தையும்
வல்லார்—அப்யஸிக்கவல்லவர்கள்
மின்—மின்போலே ஸ்புரிக்கிற
இடையவர்க்கு—மத்யாவயவத்தையுடையவர்களுக்கு
மதனர்—மதநஹேதுவாவர்.
இத்தால்—ப்ரமாணஶரீரத்தில் மத்யமாவயவஸ்தமான அநந்யஶரணத்வ ஔஜ்ஜ்வல்யத்தை யுடைய பாகவதர்க்கு ஹர்ஷஹேதுவாவரென்று கருத்து. இது, கலித்துறை. (கக)

ஆறு ;—(மின்கொள்.) இப்பிராட்டி, ஒருபடியாலும் விரஹவ்யஸநமாற்றவும் முடியாததொரு தஶை வரச்செய்தேயும் எம்பெருமானெழுந்தருளா தொழிந்தவாறே, தன்னழகாலே மஹாபலியைத் தோற்பித்து அவன் அகல்ஞாலங்கொண்ட வன்கள்வனடி மேற் சொன்ன இத்திருவாய்மொழியைவல்லார், மின்னிடையவர்க்கு மதனர்போக்யமாமாபோலே எம்பெருமானுக்கும் ஸ்ரீவைஷ்ணவர்க்கும் போக்யமாவரென்கிறார். (கக)

முதல்திருவாய்மொழி வ்யாக்யாநம்

முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:.

ஆறாம் பத்து.

இரண்டாந்திருவாய்மொழி—மின்னிடைமடவார் ப்ரவேசம்.

——: o :——

ஆறு ;—(மின்னிடைமடவார்கள்.) "இப்படி தன்னை நான் நெடுங்காலம் விச்லேஷித்திருக்கச்செய்தேயும் தூதப்ரேஷணம் பண்ணச் செய்தேயும் எம்பெருமான் எழுந்தருளாதொழிகிறது என்னுடைய நிகர்ஷாநுஸந்தாநத்தாலே யென்னை யுபேக்ஷித்து, அவர்கள்பக்கலுள்ள ப்ரேமாதிசயத்தாலே அவர்களை விச்லேஷிக்கில் தரிக்கமாட்டாமையாலே" என்று நிச்சயித்து அத்யந்த மவஸந்நையாய் ப்ரணயகோப யுக்தையுமாய், அந்த ப்ரணயகோபத்தாலே தோழிமாரோடும் கிளிகள் பூவைகளென்றுள்ள தன்னுடைய லீலோபகரணங்களோடுங்கூட, 'இனி நாம் அவன் வந்தாலும் அவனைக் கடாக்ஷிக்கவுங் கடவோமல்லோம்" என்று ஸமயமிட்டுக்கொண்டு, அவனெழுந்தருளினாலும் வந்தணுகவொண்ணாதபடி அநபிபவநீயையாயிருக்க ; எம்பெருமானும் இவளைப் பிரிந்த நிரவதிக வ்யஸநத்தாலே அத்யந்த மவஸந்நனாய்வந்து, இவளுடைய தோழிமார் அநபிபவநீயைகளாயிருக்கையாலே அவர்களைச் சென்றணுகி அவர்களைப் புருஷகாரமாகக்கொண்டு இவளுடைய திருவடிகளிலே விழுந்து ஸ்வாபராதத்தை க்ஷமிப்பித்து ஸம்ச்லேஷித்து தாரணம்பண்ணுதல், தன் திருநாமங்களைக்கற்பித்து வளர்த்த இவளுடைய கிளிகள் பூவைகளென்றுள்ள லீலோபகரணங்களினுடைய வநபிபவநீயதையாலே அவற்றைச் சென்றெடுத்துத் தன் திருநாமங்களைச்சொல்லுவித்து அவைசொல்லக்கேட்டாச்வஸித்தல், இப்பிராட்டி தன்னுடைய அநபிபவநீயதையாலே இவளை வந்தணுகி இவளோடே ஸம்ச்லேஷித்து தாரணம்பண்ணுதல் செய்யப்பெறுமையாலே ஆத்மதாரணக்ஷமனன்றியே, ஆத்மதாரணார்த்தமாக, ஸ்வஸம்ஸ்பர்சவிஸம்வாதாக்ஷமமான இவளுடையபந்து கழல்களென்ற அசேதநமான லீலோபகரணங்களையெடுத்து அவற்றை ஸர்வகாத்ரங்களாலும் ஸ்பர்சித்தும் ப்ரேக்ஷணம்பண்ணியு மாச்வஸித்து லப்தாத்மதாரணனாயிருந்த விவனை அபாங்கவீக்ஷணத்தாலேபார்த்து ;

ப ;—இரண்டாந்திருவாய்மொழியில், "இப்படி கடகோபஜ்ஞமாகவாஶ்ரயிக்க வுத்யோகித்தவர், அநாதிகாலம் பகவத்த்வேஷத்தாலே விமுகரான தம்மை ஈஶ்வரன் ஸ்வயத்நத்தாலே யபிமுகராக்கிக்கொண்டபடியை யாராய்ந்து ; இந்த அபிமுகீகரணத்துக்கடியான வவனுடைய விரோதி நிவர்த்தகத்வத்தையும், ஆகர்ஷகமான அவயவஶோபையையும், அபேக்ஷாப்யபேக்ஷாபகத்வத்தையும், அகடிதகடநா ஸாமர்த்த்யத்தையும், ஆஶ்ரிதகார்யார்த்தமான பரிகரவத்தையையும், ஸர்வலோக நிர்வாஹகத்வத்தையும், ஆஶ்ரிதஸம்ரக்ஷணத்தி லத்யந்தாபி நிவேஶத்தையும், அதிஶயிதஜ்ஞாநத்தையும், அபிமததமமான முகஶோபையையும் அகிலப்ரகாரரக்ஷணத்தையு மநுஸந்தித்து ; இந்த ஸ்வபாவவிஶேஷங்களாலே ஸ்வரூபாநுகதமன்றியே தமக்குவந்தேறியான வைமுக்யத்தைக் கழித்து அபிமுகீகரித்துக்கொண்ட ஆகாரத்தை, ப்ரணயரோஷத்தாலே விமுகையாய் "அவன்வந்தாலும் முகங்கொடேன்" என்று தோழிமாரோடே கூட லீலாப்ரஸங்கத்தாலே அந்யபரதாபாவனைபண்ணியிருக்கிற கோபிகையை யநுபவித்து ஊடல்தீர்த்து ஆபிமுக்யம்பண்ணுவித்துக்கொண்டு ஸம்ஶ்லேஷித்த ஆகாரமாகிற அந்யாபதேசத்தாலே யருளிச்செய்கிறார்.

ஈடு ;—இவ்வாழ்வாராகிறார், ஸம்ஸார பயத்தாலும் பகவத்ப்ராவண்யத்தாலும் கைங்கர்யருசியாலும் வ்யதிரேகத்தில் தரியாமையாலும் பகவத்விஷயத்தில் கைவைத்தா ரெல்லாருடைய படியுமுடையராயிருப்பர். (க) "பொய்ந்நின்றஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்பும்" என்கையாலே பத்தர்படியுண்டென்னவுமாயிருந்தது ; "இந்நின்றநீர்மையினியாமுறாமை" என்றுகொண்டு - அது பொருந்தாதபடியிருக்கைபாலே முமுக்ஷுக்கள்படியுமாயிருந்தது ; "வழுவிலாவடிமைசெய்ய வேண்டுநாம்" என்று கைங்கர்யத்தாலல்லது தேஹயாத்ரை செல்லாமையாலே, முக்தர்படியுண்டென்னலாயிருந்தது ; "நின்னலாலிலேன்காண்" என்று - அதுதான் ஸத்தாப்ரயுக்தமாயிருக்கையாலே நித்யரோடொக்கச் சொல்லலாயிருந்தது ; ப்ரணயரோஷத்தாலே யூடுகையாலே பிராட்டிமாரோடொக்கச் சொல்லலாயிருந்தது. (உ) "விஷ்ணுநா ஸத்ருஶோ வீர்யே ஸோமவத்ப்ரியதர்ஶந: - விஷ்ணுநாஸத்ருஶோவீர்யே ஸோமவத்ப்ரியதர்ஶந:" என்று பெருமாளுடைய ஓரோ ஸ்வபாவங்க

(க) திருவி - க. (உ) ரா - பா - க - கஅ.

ளுக்கு ஸகலபதார்த்தங்களையு மொப்பாகச்சொல்லுமாபோலே, அல்லாதார்படியடங்கலும் இவருடைய ஓரோ அவஸ்த்தைக் கொப்பாமத்தனை; இதுதான் பால்யாத்ப்ரப்ருதியிறேயிவர்க்கு; "அறியாக் காலத்துள்ளே அடிமைக்கணன்புசெய்வித்து" என்றும், (க) 'மூலையோமுழுமுற்றும்போந்தில - பெருமான்மலையோ திருவேங்கடமென்று கற்கின்றவாசகம்" என்றும் சொல்லுகிறபடியேயிறே இவர் பருவம் நிரம்புவதற்கு முன்னும் இருக்கிறபடி

இனி * ஏறாளுமிறையோனிலே அவன் வேண்டாத நானுமென்னுடைமையும் வேண்டா என்றார்; * மாசறுசோதியிலே எனக்குறுப்பல்லாத அவனும் அவன் விபூதியும்வேண்டா என்று அழிக்கப்பார்த்தார்; * பிறந்தவாற்றிலே-தரித்துநின்று குணாநுஸந்தாநம் பண்ணவல்லேனும்படி பண்ணியருளவேணு மென்று ஶரணம்புக்கார்; அப்பெரியவார்த்தியோடேகூடத் தூதுவிட்டார்; விட்ட ஆள் சென்று அத்தலைப்பட்டு அவனுக்கறிவிக்க, அவனும் இழவாளனாய் ஆனைக்கருள்செய்யவந்து தோற்றினாற்போலே பதறிநடந்து வாராநிற்க, அவ்வளவு பற்றாதே கிடந்து துடித்தலமர்ந்து, "இனி இவ்வளவில் நாம் செய்ய அடுப்பதென்?" என்று பார்த்து, "முடிந்து பிழைக்கைக்குமேற்பட்ட பரிஹாரமில்லை" என்று பார்த்து அறுதியிட்டு முடியப்பார்க்கிறாள்.

அது இவள் ஸங்கல்பித்தபோதாக முடியலாயிராதிறே; அங்ஙன் செய்யலாமன்று, இவள் * ஏறாளுமிறையோனில் 'வேண்டா' என்றபோதே போமிறே. இனி போகத்துக்கு அவன்வரவு வேண்டினவோபாதி முடிவுக்கும் அவன்வரவு வேண்டியிருந்தது. பிரிவில் குணாநுஸந்தாநம்பண்ணி தரிக்கலாம்: அவன் ஸந்நிதியில் அவனையொழிய அரைக்ஷணம் முகம்மாறியிருக்குமதுக்கு மேற்பட முடிவு உண்டோ? அவன்போரநின்று இத்தலையைப்பண்ணின மிறுக்கடங்கலும், அவன் ஸந்நிதியிலே தான்முடிந்து அவனையே நோவுபடுத்தப் பார்க்கிறாள். அவன்வரவிலே அல்பம்தாழ்க்க, ப்ரணயரோஷம் தலையெடுத்து, "இனியிருந்து ஜீவிக்கும் ஜீவநம்வேண்டா" என்று முடியப் பார்க்கிறாளிறே பிரிவுபொறுக்கமாட்டாமை. * (உ) "வை ஜையாத்ராஹிரா நாத்ரவரிவிக்ஷவாராவவஃ — ப்ராணயாச்சாபிமாநாச்

(க) திருவி - கூ0.　　(உ) ரா - அயோ - ௩0 - உ.

சபரிசிக்ஷேபராகவம்" என்கிறபடியே. அவரோடுண்டான சிரபரிச யத்தாலும் கலவியாலும், "என்னுடையவரன்றோ" என்கிறவேண்டப்பாட்டாலும், பெருமாளைமேலிட்டு வார்த்தைசொன்னாள்: என் சொன்னாளென்னில் :—(க) "किं त्वाऽमन्यत वैदेहः पिता मे मिथिलाधिपः । राम जामातरं प्राप्य स्त्रियं पुरुषविग्रहम् - கிம்த்வாமந்யதவைதேஹ: பிதாமேமிதிலாதிப: । ராம ஜாமாதரம்ப்ராப்ய ஸ்த்ரியம் புருஷவிக்ரஹம்" என்று வாரீர், ஒருவனுக்கு ஆற்றுவொருத்தி உண்டோ? என்னையொருத்தியையும் நோக்கமாட்டாமையே வைத்துப்போகப்புகுகிறது! இது தன்னை எங்களய்யர் கேட்கில் போர வெறுப்பர்; ஒரு பெண்பெண்டாட்டி ஆணுடையுடுத்து என்பட்டைக் கைப்பிடித்துக்கொண்டு போனவித்தனையாகாதே என்றிராமே கடுகக்கொண்டுபோகப்பாரும். (௨) [ईर्ष्यारोषौ बहिष्कृत्य - ஈர்ஷ்யாரோஷௌ பஹிஷ்க்ருத்ய] பிறருயர்த்திகண்டால் பொறுக்கவேண்டாவோ? நான் "உம்மோடேகூடப்போர" என்று புறப்பட்டு நாலடி இட்டால், எனக்கு அத்தால்வரும் ஏற்றங்கண்டு பொறுக்கமாட்டாமையா லுண்டான கோபாஸூயைகளைப் பொகடும். [भुक्तशेषमिवोदकम् - புக்தஸேஷமிவோதகம்] இதுவும் அப்படியாகாதே தான். ப்ரணயிகள் கோஷ்டியிலிங்ஙனேகாணும் பரிமாற்றம் - ப்ரணயிநிகளுக்கு உண்டான தன்னேற்றம் தன்னதாயிருக்கவேண்டாவோ? [नय मां वीर - நய மாம்வீர] என்னை அறியாதாப்போலே உம்மையும் அறிந்திலீராகில், நான் சொல்லக்கேளும். உமக்கொருகுறைகளு மில்லைகாணும்; என்னைக்கொடுபோகப் பாரும். [विस्रब्धः - விஸ்ரப்த:] தந்தாமை யறியாவிட்டால் ஆப்தர்வாயிலே கேட்டறியவேணுங்காணும். [पापं मयि न विद्यते - பாபம்மயிநவித்யதே] பொகடும்; இங்ஙனன்றாகில், நீரென்னை யிங்கே நிறுத்திப்போனால், நீர் மீண்டுவருந்தனையும் தரித்திருக்கைக்குவேண்டும் ஹேது எனக்கில்லைகாணும். இப்படியிறே ப்ரணயரோஷம் தலையெடுத்தாலிருக்கும்படி.

(க) ரா - அயோ - ௩௦ - ௨ (௨) ரா - அயோ - ௨௭ - ௬.

இன்ன மிவ்வளவேயோ? இவர்தாம் இலக்காகச் சொன்னவை யிறேயிவை. இவர் வரவிட்ட ஆளின் முன்பேயும் * (க) "காஸீ யஜிகாகஸ்த்: கிம் நாவஸாதாஸெசவொ | உஹீக்ஷஹதிகொ வெந யாதாஸாந்திஙிவொத்தி: - குஸலீயதிகாகுத்ஸ்த்த: கிம் நஸாகரமேகலாம் | மஹீம்தஹதிகோபேந யுகாந்தாக்நிரிவோத்தித:" என்னுமவளிறே [காகஸ்த்: - காகுத்ஸ்த்த:] - பரபரிபவம் பொறுத குடியிலேயன்றே தாம் பிறந்தது; "பிறர்க்குவந்தவை பரிஹரிக்குமத்தனையல்லது, தமக்குவந்தது பரிஹரிக்கலாகாது" என்றிருக்கிறரோ? [கிம் நாவஸாதாஸெசவொாஉஹீக்ஷஹதி - கிம் நஸாகரமேகலாம் மஹீம்தஹதி] "த்ரவத்ரவ்யத்துக்கு ஓரம்பும் கடிநத்ரவ்யத்துக்கு ஓரம்பும் வேணும்" என்றிருக்கிறரோ? கடலில் நீரே நெய்யாக எரிக்கவல்ல அம்புடையவரன்றே. ஒக்கக் கைப் பிடித்தவர்களாகிலும் பரிவட்டம்பேணியிருக்கும்படி வைத்தாரிறே; ராஜாக்களுக்கு பூமியும் ஸ்த்ரீபோலேயிறே; ஈஸ்வரர்கள் ஸ்ருஷ்டித்தபடி கிடப்பது இவர் கண்சிவக்குமளவுமாகாதேயென்றும், (உ)"யஐ்லரவெஜெஹாத்ருஜ தஸ்ராஜ்ஞொஶாவாவஸ்ரணும் நயத: வஜாதிழ - தர்மாபதேஶாத்த்யஜதஶ்சராஜ்யம் மாஞ்சாப்யரண்யம் நயத:பதாதிம்" என்கிறபடியே பித்ருவசநபரிபாலநம் பண்ணப் போந்தாரோ? என்னை நலிகைக்காகப் போந்தாரத்தனையிறே என்றும் - இப்புடைகளிலே சொன்னவை அநேகமிறே.

இவளும் * மாசறுசோதிதொடங்கிப்போர நோவுபட்டு, அது தன்னை * வைகல்பூங்கழிவாயளவும் வரப் பாடாற்றி, அவ்வளவிலும் வரக்காணாமையாலே தூதுவிட்டு, தூதவாக்யமத்தலைப்பட்டு மீளுவதற்குமுன்னே பற்றுதபடி பதறி, "இனி அவன்முன்வந்தாலும் ஸம்ஶ்லேஷமாய் அதுவிஶ்லேஷாந்தமாபல்லது இராது; ஆன பின்பு, அவன்வந்து கலந்துபிரிந்தகோள்வாய் பொறுக்க அரிதாயிருக்கும்; அநந்தரம் பிரிவாகிற புதுக்கோமுற்றவன்வந்து முதன்மை கொண்டாடுமதில், முகம்பழகின வ்யஸதயே யமையும்" என்று ஆற்றாமை தோற்றவிருந்தாள்.

(க) ரா - ஸு - நக - கச. (உ) ரா - ஸு - நக - உக.

எங்ஙனே யிருந்தாளோவென்னில் ? (க) [ஹிமஹதநளிநீவ நஷ்டஶோபா - ஹிமஹதநளிநீவநஷ்டஶோபா] பன்னிரண்டாண்டு தண்ணீர்த்துரும்பறக் கலந்துபோந்த விவளுக்கு வந்தேறியானபிரிவிறே: அத்தாலே அழுகழிந்திருந்தாள். [வ்யஸநபரம்பரயா - வ்யஸநபரம்பரயா] பிரிவோபாதி கலவியும் வந்துகழியப்பெற்றதில்லை. [அதிபீட்யமாநா - அதிபீட்யமாநா] ஆஶ்ரயத்தினளவில்லாதபடியாயிருக்கை. [ஸஹசராரஹிதேவசக்ரவாகீ - ஸஹசரரஹிதேவசக்ரவாகீ] வருமளவும் உணர்ந்து பொறுத்திருக்கமாட்டாதிருக்கை அவற்றின்படி யங்ஙனேயிறே. [ஜநகஸுதா - ஜநகஸுதா] "இவைவரும்" என்று வளரப்பெற்றதில்லை. [க்ருபணாம் தஶாம்ப்ரபந்நா - க்ருபணாம்தஶாம்ப்ரபந்நா] கீழ்ச்சொன்னவிவையொன்றும் ஒப்பாகமாட்டாது, சிலசொல்லிற்றுமித்தனை. இவளும் அப்படியே, "முகம் பழகினவாற்றாமையோடே யிருந்து முடியவமையும் ; இனி, அவன் வரவு நமக்குவேண்டா" என்றிருக்கிறாள்.

இவள் தானிப்படி பாரிக்கைக்கு அவன்றான் வாராநின்றானோவென்னில்? - அவன் வரவுக்கு ஸூசகமான நன்னிமித்தங்கள் அநேகமுளவாயிருந்தன. (உ) [பக்ஷீச - பக்ஷீச] பக்ஷியானது சிறகை விரித்தது. † (பக்ஷத்தையுடைத்தென்கிற விஶேஷணத்துக்கிதுவேயிறேகருத்து.) [ஶாகாநிலய꞉ - ஶாகாநிலய꞉] உலர்ந்தகொம்பிலன்றிக்கே, பசுமையையுடைத்தான பணையிலேயிருந்தது. வ்ருக்ஷத்தை வலமாகவந்து, தழைத்தபணையிலே நற்றரிக்க இருந்தது. [ப்ரஹ்ருஷ்ட꞉ - ப்ரஹ்ருஷ்ட꞉] அங்குள்ள பலாதிகளை புஜிக்கையாலுண்டான ஹர்ஷம் வடிவிலே தோற்றும்படி இருந்தது. [புந꞉புநஶ்சோத்தம ஸாந்த்வவாதீ - புந꞉புநஶ்சோத்தம ஸாந்த்வவாதீ] மேன்மேலென நல்வார்த்தைகள் சொல்லத் தொடங்கிற்று. அதுக்கு மேலே, [ஸுஸ்வாகதாம் வாசமுதீரயாந꞉ - ஸுஸ்வாகதாம் வாசமுதீரயாந꞉] இவ்வளவல்லகிடாய் அத்தலைபட்டது என்று சொல்லுமாபோலேயிருந்தது. [புந꞉புநஶ்சோதயதீவ - புந꞉புநஶ்சோதயதீவ] வரவு நிஶ்சிதமான பின்பு, குளித்தலொப்பித்தல் செய்யாதிருக்கிறது என்னென்று சொல்லுமாபோலே யிருந்தது.

(க) ரா - ஸு - கரு - ௩௦. (உ) ரா - ஸு - உஎ.

[𑌹𑍃𑌷𑍍𑌟𑌃 - ஹ்ருஷ்ட:] வந்தால் பிறக்கும் வேறுபாடுதோற்ற உடம்புமயிர் எறிந்திருந்தது. (௧)[𑌤𑌥𑌾𑌗𑌤𑌾𑌮𑍍 - ததாகதாம்] (௨)"𑌰𑌹𑌸𑍍𑌯𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌂 𑌚 - ரஹஸ்யஞ்சப்ரகாஶஞ்ச" என்றுகொண்டு ப்ரஹ்மாவின் ப்ரஸாதத்தாலே யுள்ளபடியெல்லாம் தோற்றக்கடவதாகப் பெற்றுடையனான ருஷிக்குப் பாசுரமிட்டுச் சொல்லவொண்ணாதபடி யிருக்கிறபடி. [𑌤𑌾𑌮𑍍 - தாம்] தர்மிக்குமேற்பட அவ்வருகொன்றின்றிக்கேயிருக்கை. [𑌵𑍍𑌯𑌥𑌿𑌤𑌾𑌮𑍍 - வ்யதிதாம்] கீழ்ச்சொன்னவை ப்ரக்ருதியாய், வ்யஸநமுள்ளது மேலேயென்று தோற்றும்படியாய் இருந்தாள்; (௩) "𑌸𑌮𑌾 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶 𑌤𑌤𑍍𑌰𑌾𑌹𑌮𑍍 - ஸமாத்வாதஶதத்ராஹம்" என்று பன்னிரண்டாண்டு கலந்துபிரிந்த இவளுக்கு அதொன்றுந்தோற்றாதே து:கத்தையிட்டு நிரூபிக்கவேண்டும்படியா யிருந்தாள். [𑌅𑌨𑌿𑌨𑍍𑌦𑌿𑌤𑌾𑌮𑍍 - அநிந்திதாம்] அத்தலையைப் பிரிந்தா விருக்கக்கடவபடியே யிருந்தாள். இப்படி யிராதவன்று நிந்திதையேயாகாதே. [𑌵𑍍𑌯𑌪𑍇𑌤𑌹𑌰𑍍𑌷𑌾𑌮𑍍 - வ்யபேதஹர்ஷாம்] "ஹர்ஷம் குடிபுகுந்துபோயிற்று" என்று தெரியாதாயிருக்கை. [𑌪𑌰𑍀𑌤𑌮𑌾𑌨𑌸𑌾𑌮𑍍 - பரீதமாநஸாம்] ஹர்ஷம்வந்தாலும் ஆஶ்ரயமுமின்றிக்கேயிருக்கை, [𑌶𑍁𑌭𑌾𑌮𑍍 - ஶுபாம்] மண்தின்றுவந்த நகடுபோலன்றிறே குணாதிகவிஷயத்தைப் பிரிந்தால் இருக்கும்படி; கடலேறிவடிந்தாற்போலே யிருக்கிற அவ்விருப்புதனக்கே ஆலத்திவழிக்கவேண்டும்படி யிருக்கை. [𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑌿 𑌶𑍁𑌭𑌾𑌨𑌿 𑌭𑍇𑌜𑌿𑌰𑍇 - நிமித்தாநிஶுபாநிபேஜிரே] நிமித்தங்களானவை இத்தலைக்கு நன்மைசொல்லித் தந்தாம் ஸ்வரூபம் பெற்றன. [𑌨𑌰𑌂 𑌶𑍍𑌰𑌿𑌯𑌾𑌜𑍁𑌷𑍍𑌟𑌮𑌿𑌵𑍋𑌪𑌜𑍀𑌵𑌿𑌨𑌃 - நரம்ஶ்ரியாஜுஷ்டமிவோபஜீவிந:] ஸாக்ஷால்லக்ஷ்மிக்குக் கிஞ்சித்கரித்து ஸ்வரூபம்பெற்றன; என்போலவென்னில்?—அர்த்திகளாயிருப்பார் உதாரர் பக்கலிலே சென்று தந்தாம் ப்ரயோஜநம் பெற்று ஹ்ருஷ்டராமாபோலே. இப்படியாயிருந்தன நிமித்தங்களின் அளவு.

இனி, அவனளவு பார்த்தால் (௪) [𑌆𑌰𑍍𑌤𑍋 𑌵𑌾 𑌯𑌦𑌿 𑌵𑌾 𑌦𑍃𑌪𑍍𑌤𑌃 - ஆர்த்தோவாயதிவாத்ருப்த:] ஆர்த்தனாய் ஶரணம்புகவுமாம்; அன்றிக்கே, நாம் திருநாமங்களைச் சொன்னால் சேவகர் நம்மை ஆக்ஷே

(௧) ரா - ஸு - ௨௯ - ௧. (௨) ரா - பா - ௨ - ௩௩.
(௩) ரா - ஸு - ௩௩ - ௧௭. (௪) ரா - யு - ௧௮ - ௨௮

பித்துச் சொல்லுமாபோலே செருக்காலே சொல்லவுமாம். இங்ஙன் விகல்பிப்பானென்? ஆர்த்தனுக்கன்றோ பலப்ராப்தியுள்ளது? மற்றையவனுக்கு உண்டாகச் சொல்லுகிறவிடம் ப்ரஸித்தமன்றிறே யென்னில்?—இஸ்ஸ்லோகத்தால், ஶரணாகதலக்ஷணம் சொல்லுகிறதல்ல: ஶரண்யலக்ஷணம் சொல்லுகிறது. இவனுடைய ஆர்த்திதானு முபாயத்தில் அந்வயியாதிறே; ஆனபின்பு அவனோடிவனோடு வாசியில்லை. "தன்தசையறிந்து, 'நமக்கொருகைம்முதலில்லையாயிருந்தது' என்று தன்குறையை அறிவிக்கவும் மாட்டாதபடியாயிருந்தான்; ஆனபின்பு, இவனுக்கு நாமே யாகாதேயுளோம்" என்று திருவுள்ளம் இவன்பக்கலூன்றியிருக்கும். [பரேஷாம்ஶரணாகத: அரி: - பரேஷாம்ஶரணாகத: அரி] - ஶத்ருக்களில் வைத்துக்கொண்டு ஶரணாகதனை ஶத்ருவாயிற்றிவன். அதென்னில்;—"ஶரணம்" என்கிற உக்தியைச் சொல்லுகையாலே ஶரணாகதன் என்னவுமாய், அகவாயில் இல்லாமையாலே ஶத்ருவென்னவுமாயிருக்கை. அன்றிக்கே, பூர்வவ்ருத்தத்துக்கு அநுதாபமில்லாமையாலும், இப்போது 'ஶரணம்' என்கிற ஶப்தத்தைச் சொல்லுகையாலும், இரண்டும் சொல்லலா யிருக்கை. (க) "கொன்றேன் - அன்றே வந்தடைந்தேன்" என்னுமாபோலே. [ப்ராணாந்பரித்யஜ்ய - ப்ராணாந்பரித்யஜ்ய] - ப்ராணங்களை யொருதலையாகவிட்டு. "ப்ராணாநபி" என்னவேண்டாவோவென்னில்?—அவன்சொன்ன சொலவுக்கு இதொன்றும் போராமையாலே அது வேண்டாவாயிற்று. [ரக்ஷிதவ்ய: க்ருதாத்மநா - ரக்ஷிதவ்ய: க்ருதாத்மநா] ஶிக்ஷிதமநாவா யிருக்குமவனால் இத்தனையும் செய்யப்படும். அறிவுடையார்க்கித்தனையும் செய்தல்லது நிற்கவொண்ணாது. இதிறே அவன்படி.

"இப்படி, களித்து 'ஶரணம்' என்றாலும் பொறுக்கமாட்டாதவன், *மாசறுசோதியேதொடங்கிப்போரமிறுக்குப்பட்டு நாலு ப்ரயோகம் அடுத்து ஶரணம்புக்கு, அவ்வளவிலும் முகங்காட்டாதொழியச் செய்தேயும் தூதுவிட்டு, 'இப்படி இடமிறுக்கெல்லாம்பட்டது நம்மையுத்தேசித்திறே' என்றிருக்கும்" என்றிருக்கையாலும், இவ்வளவும்வர இவள்தான் முடியாதே கிடக்கையாலும்,

---

(க) தி-மொ-க-கூ-ரு.

அவன் ஸ்வபாவத்தை விச்வஸித்திருக்கையிலும், அவன்வரவுக்கு த்யோதகமான ஸந்நிமித்தங்கள் அநேகங்களுண்டாகையிலும், இதெல்லாங்கிடக்க "நம்முடைய பாக்யஹாநிதான் அவனை நம்முன்னே கொண்டுவந்து நிறுத்தும்" என்றிருக்கையிலும், "பிரிவு அநிஷ்டமான தசையிலே போகவல்ல நிர்லஜ்ஜன்; வரவு அநிஷ்டமான தசையிலே முன்னேவந்து நிற்கவும்வல்லன்" என்றிருக்கையிலும், "இன்னமுமொருகால் கலந்துபிரிந்து நம்மைமுடிக்க வேணும்" என்றிருக்கையிலும், "வரவுதப்பாது" என்று அவன் வரவை நிச்சயித்து - தோழிமாருந்தானுமாக "இனி அவன் வந்தாலு மவனுக்கு முகங்கொடுத்தல் வார்த்தைசொல்லுதல் செய்யக் கடவோமல்லோம்" என்று ஸங்கல்பித்து, "அவனறியாததோரிடத்தே போயிருக்கவேணும்" என்று பார்த்து; காயாம்பொழிலாய் அதிலே விளையாடுசூழலாய் அதின் நடுவே அதி மநோஹரமாய் இருப்பதொரு மண்டபமாய், அதிலே இவர்களெல்லாருங்கூடிக்கழகமாகவிருந்து, வந்தாலு மவனுக்கு இட்டுக்கொள்ளுகைக்குப் பற்றுசில்லாதபடி பூவை கிளிதொடக்கமான அசேதநமாயும் சேதநமாயுமுள்ள லீலோபகரணங்களை ஊரழிபூசலில் அரணுள்ள கோட்டைகளிலே சரக்குவாங்குவாரைப்போலே ஓரிடத்தே திரளவாங்கி, இனி இவர்கள் மறந்தவை ஏதேனுமுண்டாகில் அதுபெற்று அவனுக்கு ஸத்தையுண்டாகவேண்டும்படியாய், இப்படி யிவர்கள் சமயமிட்டு, வந்தாலும் அவனுக்குப் புகுரவொண்ணாதபடி அநாதரமாகிறகன்மதிளை உரக்கவிட்டு, அவனுடைய ஸர்வஜ்ஞத்வங்கொண்டு காரியங்கொள்ளுகைக்கு ஒருவழியில்லாதபடியும் ஸர்வசக்தித்வங் கொண்டு வ்யாபரிக்கவொண்ணாதபடியாகவும் இவர்கள் வ்யவஸ்தை பண்ணியிருந்து - க்ருஷ்ண வ்ருத்தாந்தம் சொல்லுவார் (க) "கஸ்சித் ... க்ருஷ்ண: - கச்சித்ஸ்ரம் ... க்ருஷ்ணா:" - என்று இப்பிதற்றுத்தானென்ன என்று, (உ) "... - அந்த ... தாலாபை:" என்பாராய், அஸுரப்ரக்ருதிகளான உகவாத ஹிரண்யாதிகள் கோஷ்டிகளில் திருநாமம் சொல்லுகை அஸஹ்யமாம்போபாதி, இவர்கள் கோஷ்டியிலும் உகவை தலைமண்டையிட்டு, திருநாமஞ்சொல்லில் நெஞ்சு சிவிட்கென்னும்படியாய்க் கொண்டிருந்தார்கள் இவர்கள். இது இத்தலையிருந்தபடி.

(க) வி-பு-ரு உச-கஉ. (க) வி-பு.

இனி, அத்தலை இருந்தபடியென்னென்றால்; "வேறுகொண்டு உம்மையானிரந்தேன்" என்கிற ஆர்த்தநாதம செவிப்பட்டது. (க) "ஸாதுஸம்ஸ்ரிதஹ்- ஸாஸ்ரிதவாத்ஸல்ய:" நல்லது செவிப்படுமவனிறே இவ்வளவில் ஆறியிருக்குமவனன்றே; (உ) "பரமாபத-பரமாபந்ந:" - என்றுகொண்டு ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய ஆர்த்தநாதம் செவிப்பட்டபோது (ஙு) "ஆஸ்தோ(ம)ஜ தந்வீ ... வாஹநம் ... ஸ்வாமி ... அவாஹநபரிஷ்கிய் - அஸ்வீக்ருதப்ராணிதமணிபாதுகம் கிமிதிசாகுலாந்:புரம், அவாஹந பரிஷ்க்ரியம்" என்கிறபடியே திருவடிநிலைகோத்து எழுந்தருளப்பற்றாமை வெறுந் தரையிலே பத்தெட்டடி இட்டும் ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளிலும் நினைவுக்குமேற்பட ஒன்றும் காணாமையாலே, இப்பதற்றமிருந்தபடியால் "இது இவ்வளவுகளிலன்று; இதுக்கடியென்?" என்று திவ்யாந்த:புரம் கைநெருக்கும்படியாய், பாவஜ்ஞனை பெரிய திருவடியைப் பண்செய்தேறப்பெறாதே வெறும்புறத்தேமேற்கொண்டு "பகவதஸ்த்வராயை நம:" - பகவதஸ்த்வராயைநம:" - என்று அறிவுடையார் ஈடுபடும்படிவந்து தோற்றினாற்போலவும்;

த்ரௌபதியை துஸ்ஸாஸநன் நலிகிறபோது ரக்ஷகராக ப்ரஸித்தரான பர்த்தாக்கள் ஐவரிருக்க,(ச)"கோவிந்தேதி யதாக்ரந்தத் - கோவிந்தேதியதாக்ரந்தத்" என்று நம்மை ரக்ஷகராக நினைத்துக் கூப்பிட, "ருணம் ப்ரவ்ருத்தமிவ மே - மாம்த்ரரவாஸிநம்" என்று 'நான் ஸந்நிஹிதனாய் உதவப்பெற்றிலேன் அவளாபத்துக்கு' என்றுநொந்து, "அவள் தனக்கு அடுக்கும்படி செய்தாள். நான் அவதரித்தே அவதாரப்ரயோஜநமொன்றும் பெற்றிலேன்" என்று இழவாளனாய், தர்மபுத்ரன் தலையிலே முடியையும் வைத்து இவள் குழலையும் முடிப்பித்து விரோதிவர்க்கம் கிழங் கெடுத்துப் பொகட்டு * தன்னுடைச் சோதியேற எழுந்தருளுகிறபோதும் (ரு) "நாதிவஸூதநா:-நாதிஸ்வஸ்தமநா:" என்று திருவுள்ளம் புண்பட்டாற்போலவும்:(சு) "ஸாதவோ ஹி தா ஸீதா ஸாஷ்டாங்கம் நிவஹந்த ஸாந ... ராமம் ... ஸந்தோ ... ஸாந்த்வ"

(க) ஸஹஸ்ரநாம	(உ) விஷ்ணுதர் - ௯௯-௪௭.
(ஙு) ர-ஸ்த-உ	(ச) பாரத-உத்யோ-ருஅ-உஉ.
(ரு) பாரத	(ச) பாரத-ஸாந்தி-௪௯-௧௧.

கதோபீஷ்மஸ் ஸாம்யந்நிவ ஸூதாஸநஃ-மாம் த்யாதிபுருஷவ்யாக்ரஸ்ததோ மேதத்கதம்மநஃ'' என்றுகொண்டு ஸாரதல்பகதரான ஸ்ரீபீஷ்மர்க்கு முற்பாடராய் உதவ வேண்டியிருக்கப் பிற்பாடரானேம் என்று நோவுபட்டாற்போலவும்; (க) "தேநதேந... தாஃ - தேநதேந தமநுவ்ரதா:'' என்று என் முற்பாடு கண்டு அநுவர்த்திக்கக்கடவர்கள் முற்பாடராம்படி நாம் பிற்படுவதே என்றிருக்குமவனிறே; இப்படிகளாலே திருவுள்ளம் போரவிரங்கி (உ) "... ப்ரஸீதந்து பவந்தோமே ஹ்ரீரேஷா ஹிமமாதுலா, யதீத்ருஸைஸ் ஸம்விபரை ருபஸ்தேயைருபஸ்தித:'' என்று தண்டகாரண்ய பரிஸரவர்த்திகளான ருஷிகளுடைய ஆர்த்திக்கு முற்பாடராய் உதவப்பெற்றிலோமென்னும் இழவாலே லஜ்ஜித்து, அவர்களைக் காலைக்கட்டிப் பொறுப்பித்துக் கொள்ளுமவனிறே;

இனி (ங) "... - வ்யஸநேஷு மநுஷ்யாணாம்'' என்று ஸாமாந்யத்திலே இருக்கும்படிகண்டால், ப்ரணயிநி ஒருதலையானால் சொல்லவேண்டாவிறே "நாம்கிட்டி நின்று கையைக் காலைப்பிடிக்க வேண்டும் விஷயம் ஒரு திர்யக்கின் காலிலே விழும்படி நாம் பிற்படுவதே! நமக்கினியொரு பும்ஸ்த்வமாவதென்? நாம் அங்கு இனிப்போய்ச் செய்வதென்? இங்கிருந்து செய்வதென்? என்றுகொண்டு தடுமாறி, இத்தலையோடே கலந்தல்லது தரிக்க மாட்டாதானப், இவர்களிருந்தவிடத்துக்கு அநுரவிப்ரக்ருஷ்ட மாகவந்து. ப்ரணயகோபத்தாலே அணுக வொண்ணாத படியிருக்கிற இருப்பைக்கண்டு, "இத்தலையில் அபிஸந்தியைக் குலைத்து நாம் கூடினோமாம் படியென்?' என்று சிந்தித்து, "அழகு கொண்டு வெல்லுவோம்'' என்று பார்க்கில், ஸௌந்தர்யம் கொண்டு தண்ணீர் வார்ப்பாரில்லை யிக்கோஷ்டியில்; (ச) "ஐஸிதேக்ஷணா - அஸிதேக்ஷணா'' என்கிற தன்னேற்றம் உண்டிறே இத்தலைக்கு; இனி, "மேன்மைகொண்டு வெல்லுவோம்'' என்று பார்க்கில், அந்த:

(க) ரா-அயோ-சஎ-கடு (உ) ரா-ஆ-கய-க

(ங) ரா அயோ-உ-சய. (ச) ரா-ஸு-கக

புரத்தை ஆனைக்காலிட்டுத் துகைப்பித்து புஜிக்கவொண்ணாதே; இனி இவ்விஷயத்தைப் பெறுகைக்குத் தாழ்ச்சியேயிறே பரிகாரம் அது இத்தலையின் கடாக்ஷம் பெறுதிருக்க ப்ரவர்த்திக்குமன்று: நிஷ்ப்ரயோஜநமிறே; இனி இத்தனையும் செய்தால், ஆசையற்றுப் போகைக்குத் திருவடிகள்போராதே ; இசைவின்றிக்கே இருக்க, மேல்விழமாட்டானே ; இனி விழக்காபோராதே மேல்விழுமன்று, ம்ருதுப்ரக்ருதியாகையாலே இழக்கவரிலும் வருமே; இனி, சேர்ந்து குளிர்ந்த தண்ணீர் ஸந்நிஹிதமாயிருக்க, பெருவிடாயனவன் அழிஞ்சுக்காடேறப் போகமாட்டானே; அதாவது "இவன் அல்பம்தாழ்த்தான்" என்று வெறுத்து, "புகுருவானல்லன் நம் கோஷ்டியில்" என்றிருக்கிற இவர்களைவிட்டு நாட்டாரோடே உறவுபண்ணப் போவானன்றே; இனி "ஒருபடிபொருந்திறோமாம் விரகென்?" என்று கடல்கடந்த திருவடி பட்டதெல்லாம் பட்டு (க) "ராஜாஉஸ்ரஸௌ நாகீராஜாதஸாதோதாநாம" என்னும் அளவன்றே; இனிச்செய்யவடுப்பதென்? என்று (௨) "ஸர்வம்ஸஹஹ்வியாம்ஹிதோ ஏவம் பஹ்விதாம்சிந்தாம்" என்று மநோரதித்து, "நந்தலையும் அவர்கள்காலுங்கிடந்ததாகில் காலைக்கட்டிப் பொருத்திக்கொள்ளுகிறோம்" என்று அறுதியிட்டான்; தலையான உபாயம் இடதிறக்காட்டிவில்லையே: இது தான் அடியிலே கண்டதொன்றிறே

ஆக, இப்படி அறுதியிட்டு, தன்னிறத்தோடு ஒக்க விகல்பிக்கலாவதொரு சோலையுள்ளிட்டு அவளுக்கும் தோழிமார்க்கும் தெரியாதபடி கிட்டச்சென்று, அவர்களைக் காணப்பெறாதே விடாய்த்தவன் கண்களாரளவும் நின்று விளை நீரடைத்துக்கொண்டு க்ருதார்த்தனாய் நின்றான். ஆலோகாநந்தரம் ஆலாபாதிகளிலே ஸ்ரத்தை வர்த்திக்குமிறே, அதுவும்பெற்றிலன் ; அவ்வளவிலும் தனக்கு ப்ராணதாரகமான இவர்களுடைய பூவை கிளிதொடக்கமானவற்றினுடைய இனியபேச்சைக் கேட்கப்பெறுமையாலும் மிகவும் தளர்ந்து; "தானும் அவளுடனாலல்அவளிற் காட்டிலும் தன் பக்கல் ப்ரேமமிரட்டித்திறே தோழியாரிருப்பது; பிரிவிலும் அப்படியே" என்றிருந்தான் ; அவர்கள் அந்நனன்றிக்கே அவளிற் காட்டிலும் கோபமதிஸயித்திருந்தார்கள்.

(க) ரா-ஸு- ௩க-௨.   (௨) ரா-ஸு- ௩க-க.

(க) "ஸஞ்ஜாதபாஷ்பாமாஸ - ஸ்ப்ராதும்ஸ்சரணௌகாடம்" என்று புருஷகாரம் முன்னாகத் தன்பக்கல் புகுந்தார்க்குத் தன் திருவுள்ளம் இரங்கும் படிதான் அறியுமே; இங்கு அப்படியே அவர்கள் புருஷகாரமாகவும் பெற்றதில்லை; இனி இத்தலையிலிசைவுண்டானாலும் அவர்களிசையாதவன்று அழைக்கவும் போகாதே (உ) "உத்தீர்ஸ்வஹஸ்தம்ஸ்யா - தத்கமஸ்யாபயம்மயா" என்றாலும் (ங) "வ்யஸநாதி-வத்யதாம்" என்றவர் தம்மையிட்டே (உ) "ஆநய ஆநய" என்ன வேண்டிற்றிறே; அவ்வழிகளாலும் ஒருமுகம் பெற்றிலன். (ச) "நஜீவேயம்க்ஷணமபி - நஜீவேயம்க்ஷணமபி" என்றும் (ரு) "க்ஷணேபிதேயத்விரஹோதிதுஸ்ஸஹ: - க்ஷணேபிதேயத் விரஹோதிதுஸ்ஸஹ:" என்றும் க்ஷணமாத்ரவிஸ்லேஷமும் பொறுக்கமாட்டாதவன். அவர்கள் ஸந்நிதியிலே முகம்பெறுமே நின்று பிழைக்கமாட்டானே:

இனி இவன் தன் அணுகுதலாலே இவர்களிருந்த விடம் அடங்கலும் (சு) "ஸோபயந்தண்டகாரண்யம் -ஸோபயந்தண்டகாரண்யம்" என்கிற படியே மயிற்கழுத்துச்சாயலாய் இவனுடைய நிரந்தரகடாக்ஷபாதத்தாலே புளகிதகாத்ரைகளாய், இவனுடைய கடாக்ஷபாதத்தாலுண்டான ஸைத்யம் இவர்களுடையப்ரணயரோஷத்தால் வந்த கோபாக்நியும் விரஹாக்நியுமன்றாகில் பொறுக்கவரிதாம்படியாய்; கோபந்தான் அவன் ஸந்நிதியிலே மிகைத்து வாரா நிற்குமிறே, இவ்வோலக்ஷணங்களைக்கொண்டு இவன் வந்தமையை நிஸ்சயித்துத் தங்களிலே ஒருமித்து முகம் மாறியிருக்க; இவனும் அவ்விருப்பைக்கண்டு எதிரிகளிட்ட மதிளாகிலிறே முறித்துப் புகலாவது; இட்டப் பெருமையாலும் ஸந்நிதியாலும் ஆற்றாமை கரைபுரண்டு கால்தறையில் பாவாதபடியாய்க்கொண்டு தடுமாறிவருகிற ஸமயத்திலே, இவனுடைய ஜீவநாத்ருஷ்டத்தாலே இவர்கள் மறந்துபோன பந்தும் கழலும் இவன்காலிலேதாக்க; அப்போது, இருட்டறைகளிலே தடவிக்கொண்டுவாராநின்றால் உறியும் வெண்ணெயும் கையிலே தாக்கினால் ஹ்ருஷ்டனுமாபோலே பெரிய ஹர்ஷத்தோடே விழுந்து இவற்றை எடுத்துக்கொண்டு

(க) ரா-அயோ-ஙக-உ.
(உ) ரா-யு-கஅ-ஙச.
(ங) ரா-யு-கஎ-உஎ.
(ச) ரா-ஸு-சுசு-கo.
(ரு) ஸ்தோ-ர.
(சு) ரா-ஆ-ஙஅ-கச,

அத்தலையில் பண்ணின வ்யாமோஹம் அடங்கலும் இத்தலைதோற்றும்படி கண்களிலே ஏற்றிக்கொள்வது தலையிலே வைத்துக்கொள்வதாய், பிராட்டி திருவாழி மோதிரம் கண்டு பட்ட தெல்லாம் பட்டான்.

(க) [ஶ்ரீஷா வ ஈக்ஷமாணாஸா - க்ருஹீத்வா ப்ரேக்ஷமாணா ஸா] "ராவணன்மாயையாலேவந்ததோ?" என்னும் பயத்தாலே முற்படக் கண்வைக்கமாட்டாதே யிருந்தாள்: "அத்தலையாலே வந்தது" என்று தெளிந்தபின்புகண்மாறவைக்கை அரிதாம்படியா யிருந்தாள். [ஸா வை ஈக்ஷமாணா - ஸா - ப்ரேக்ஷமாணா] (உ) ஸஸ்ருஜேவி - பஸ்யதேவி" என்றுகொண்டு முன்பு பார்வைக்கு க்ருஷிபண்ண வேண்டும் படியிருந்தவள்தானே கண் மாறவைக்கைக்குக்ருஷி பண்ணவேண்டும் படியாயிருந்தாள். [ஹஸ்தா: கரவிபூஷணம் - பர்த்து:கரவிபூஷணம்] முதல்கைப்பிடிக்கிற போது உறுத்தினபடியை நினைத்தாள். [கரவிபூஷணம் - கரவிபூஷணம்] * அணிமிகுதாமரைக்கையிறே ; ஆபரணத்துக்கு ஆபரணங்காணும். [ஹர்த்தாரமிவ - பர்த்தாரமிவ] இவன் இதைத் திருக்கையிலேகொடுத்தவாறே. இக்கோடே சேர்ந்த விரலையும் தோளையும் நினைத்தாள்; அந்நினைவுதான், தான் இக்கரையில் ஆளாகவும் அவர் அக்கரையிலாளாகவும், கடல் இடையிலேகிடக்கிறதாகவும் அறிந்திலள் ; ஒரு படுக்கையிலே கூடவிருந்ததாக நினைத்தாள் ; ஒரு சூது சதுரங்கங்களிலே தோற்றுத்தன் கையிலிருந்ததாக நினைத்தாள். "இவ" என்கிறான் ருஷி ; ஜநகீஸமாதியாலே. இவளுணர்ந்தாலென்படக்கடவளென்று [ஜாநகீ - ஜாநகீ] ஸோகஹர்ஷங்களுக்கு இளையாதகுடியிலே பிறந்தவள். [முதிதாபவத் - முதிதாபவத்] ஹ்ருஷ்டையானாள். அப்படியேயாயிற்று இவனும் இவைபெற்றபின்பு.

ஸம்ஸாரி, முக்தனானால் அவனுடைய லீலோபகரணமும் போகோபகரணமும் ஸமமாய்த் தோற்றக்கடவது ; ஆகாராந்தரமான ஸ்ம்ருதியில்லையே: ததீயத்வாகாரத்தாலே நித்யவிபூதியோடொக்கத் தோற்றுமித்தனை ; அப்படியே இவனுடைய லீலோபகரணமும் போகோபகரணமாய்த் தோற்றக்கடவது. அவற்றிலே

(க) ரா-ஸு-ந-க ச. (உ) ரா-ஸு-ந-க-உ

அவன்பண்ணும் வ்யாமோஹத்தைக் கண்டார்கள். "நம்மைப் பிரிந்தபின்பு ஸத்தையோடே குறியழியாமே யிருக்கக்கடவ இவன் இவையெல்லாம் நம்மை யுத்தேசித்துச் செய்கிறானாகக்கூடாது; இங்ஙனே யாகவேணும்: "நம்மைப்பிரிந்தபின்பு போய்ச்சிலரோடே கலந்தான்; அவர்களையும் பிரிந்தான்; அவ்வாற்றாமையோடே இங்குவந்தான்; இவற்றை 'அவர்களுடைய லீலோபகரணமாயிருக்கும்' என்று ப்ரமித்தானித்தனை. இது நம்பக்கல் வ்யாமோஹமுடையனாய்ச் செய்கிறானல்லன்" என்றுகொண்டு, இவர்களிருக்க, அவனும் தன்னழகாலும் குணங்களாலும் தன் செல்லாமைகளாலும் தாழ்ச்சிகளாலும் இத்தலையில் ஊடலைத்தீர்த்து ஸம்ஶ்லேஷித்தபடி சொல்லுகிறது - இத்திருவாய்மொழி.

இனி, இத்திருவாய்மொழிதன்னை, பூர்வாசார்யர்கள், "பகவத்விஷயத்தில் ஸாபத்ந்யந்தோற்ற வார்த்தைசொல்லுகை மோக்ஷத்வலக்ஷணமன்று, * வளவேழுலகிற் படியாலே அயோக்யதாநுஸந்தானம் பண்ணுகிறார்" என்று நிர்வஹிப்பர்கள். இத்தைப் பட்டர் கேட்டு, "என்சொன்னாரானார்கள்! இவர்க்கு பகவத்விஷயத்திலுண்டான ருசிக்கு ப்ரகாசகம் இத்திருவாய்மொழியாயிருக்கும்: இதுக்கு வேறே யொருவழியிடுவதே! ஆனபின்பு இதுவே பொருளாயித்தனை" என்றருளிச்செய்தார் (க) "ஹநிஷ்யாமிஸபாந்தவம் - ஹநிஷ்யாமிஸபாந்தவம்" என்று மஹாராஜரோடே பெருமாளுக்குக்கிலாய்க்கைக்கும் உறவுண்டாயிற்றிறே.

ஈடு; அவ;—முதற்பாட்டு. இப்படி வரவுதாழ்த்ததும் இத்தலையை யொழியச்செல்லுவதாயன்றிறே; கடுக வந்துகொண்டு நின்றான், பந்தையும் கழலையும் எடுத்துக்கொண்டான், அலப்யலாபமென்று தோற்றும்படி நின்றான், இத்தலையில் பண்ணக்கடவ வ்யாமோஹம் அடங்கலும் இவற்றின்பக்கலிலே பண்ணினான். அவன் படுகிற அலமாப்பைக் கண்டு, "இவையெல்லாம் நம்மைக்குறித்துச் செய்கிறானல்லன், தான் கலந்து பிரிந்தவர்களுடைய உபகரணங்களாகக் கொண்டு செய்கிறானித்தனை; இவனுடன் வார்த்தை சொல்லாதே இருக்கிறதென்" என்று, "வாராய்! நீ நினைக்கிறவர்களது அன்றுகாண் இவை; உனக்கு உபேக்ஷாவிஷயமான எங்களது

(க) ரா-கிஷ்-நட-அஉ.

காண் இவை, இவற்றைத்தந்து அவர்கள்பக்கலிலேறப்போ” என்ன. ஓம், அது செய்கிறேன். காரைச்சுமந்தொருமின் நின்றதியென்ன, (மின்னிடை மடவார்கள்) என்கிறார்கள்.

மின்னிடைமடவார்கள் நின்னருள்சூடுவார் முன்புநானதஞ்சுவன் *
மன்னுடையிலங்கை அரண்காய்ந்தமாயவனே *
உன்னுடையசுண்டாயம் நானறிவனினியதுகொண்டுசெய்வதென் *
என்னுடையபந்தும் கழலும் தந்துபோகுநம்பி. (க)

ப—முதற்பாட்டில், இவள். தன் லீலோபகரணங்களையும் மறைய வைத்துத் தோழிமாரையும் விமுகைகளாம்படிபண்ணி யிருக்கிறவளவில், தன் பாக்ய விசேஷத்தாலே இவன் விஸ்மரித்து. அசேதநமாகையாலே தான் போகமாட்டாத பந்தையும் கழலையும் எடுத்துக்கொண்டு அவற்றிலே அத்யாதரத்தைப்பண்ணி, “நாம்முன்பு பெண்பிறந்தார்க்கு உதவி விரோதிநிரஸநம் பண்ணின ஆகாரத்தை ஆவிஷ்கரித்து. அபிமுகியாக்கக்கடவோம்” என்று நினைத்துநிற்க, “அவை எங்களது: நீ நினைத்தவர்களது அன்று காண்; தந்து போ” என்று அவனோடு உறவற வார்த்தை சொல்லுகிறாள்.

(உன்னைத் தந்தாம்பக்கலிலே அபிநிவேசிக்கும்படி பண்ணுகிற),
மின்—மின்போலே நுடங்கும்
இடை—இடையை யுடையராகையாலே ரூப சோபையில் குறைவற்று
மடவார்கள்—மடப்பம்முதலான ஆத்மகுணங்களையும் உடையவர்களாய்க்கொண்டு
(இவ்விரண்டும் உண்டாயிருக்கச் செய்தே என்னைப் போலன்றியே)
நின்—உன்
அருள்—அருளை
சூடுவார்—தலைக்கொண்டிருக்கும் அவர்களின்
முன்பு—ஸந்நிதியிலே
நான்—அவர்கள் அளவில் நீ பண்ணின வ்யாபாரம் அறிந்திருக்கிற நான்
அது—நீ இங்குப்பண்ணும் அதிக்ரமங்கள் அவர்களறிந்து நீ பரிதிலனும்படி உனக்கு முகப்ரஸாதம் பண்ணாதே வெறுப்பரென்கிற இத்தைப்பற்ற
அஞ்சுவன்—அஞ்சாநிற்பன்;
மன்னுடையிலங்கை அரண்காய்ந்த—நமக்கு உன்னையொழிய வேறு சிலருண்டோ: நாமுன்பு ஏகதாரவ்ரதராய் அவர்களுக்கு வந்த இடையூறு கழித்துக்கொடுத்தமை கேட்டு அறியாயோவென்ன
மாயவனே—“பெண்பிறந்தார்க்கு உதவுமவன்” என்று இளநெஞ்சாய் அகப்படுகைக்குச் செய்த க்ருத்ரிமசேஷ்டிதத்தையுடையவனே!
(அது)
உன்னுடைய—உன்னுடைய
சுண்டாயம்—ஸ்வார்த்தபரதையென்று

நான்—புறம்புள்ளாரைப் போலன்றியே உன் நினைவறியும் நான்
அறிவன்—அறிவன்;
இனி—இனி
(ஒருபேதைக்குப் பொய்குறிக்குமா போலே, என்பக்கல்)
அது—அது
கொண்டு—கொண்டு
செய்வது—செய்யலாவது
என்—உண்டோ?

நம்பீ—நாமொருத்தியுமே அல்லாதபடி (௧) "பதினாறாமாயிரவர் தேவிமார்" என்று ப்ரஸித்தமான பூர்த்தியை உடையவனல்லையோ? அவர்கள் வெறுதபடி போகப்ராப்தம்: போமிடத்தில்)
என்னுடைய—என்னுடைய மமதாந்தர்ப்பூதமான
பந்தும்—பந்தையும்
கழலும்—கழலையும்
தந்து—தந்து
போகு—போ.

"விமுகருடைய மமதாவிஷயம் த்யாஜ்யமாக நினைத்திருக்கும்" என்றிருந்தாள் இவள்; "இவள்வைமுக்யம் ப்ரணயக்ருதமாகையாலே இவளோடு ஸம்பந்தித்தவஸ்து உத்தேஸ்யம்" என்றிருந்தான் அவன்; செந்நூலுங் கருநூலும் வெண்ணூலுமிட்டுச் சமைத்த பந்தையும் ஐந்துகழலையும் அவனுகரித்தது-இவருடைய குணத்ரயாத்மக ஶரீரமும் இந்த்ரியங்கள் ஐந்தும் தன் விஷயமாக்க நினைத்து: இவள் அது தரச்சொன்னது-உன்னைக் கிடையாவிட்டால் பழைய ஶரீரேந்த்ரியங்கள் அமையுமென்று நினைத்து. ஈண்டாயம் ஸ்வார்த்தபரத்வம்.

(௧)

ஆ—'நிரவதிக ஸௌந்தர்ய குணயுக்தைகளாய் உன்னருள் சூடப் பிறந்தவர்களுடைய பந்தும் கழலுமல்லகாண் இவை: "என்னுடைய பந்துங்கழலும்" என்ன; "ஆனாலென்?" என்ன, "என்னுடைய பந்துங்கழலும் எடுத்து விளையாடுகிற இத்தை அவர்கள் காணில் செய்வதென்" என்ன; "அஸந்நிஹிதைகளாயிருக்கிற அவர்கள் காண்கைக்குபாயமென்?" என்ன, "நான் அஸந்நிஹிதையாயிருக்கச் செய்தே, நீ அவர்களோடே கலந்து பரிமாறிற்று எல்லாம் எங்ஙனேகண்டபடி; அப்படியே அவர்களும் காணுவர்களிறே" என்ன; "கண்டால்தான் வருவதென்?" என்ன, "தங்கள் கடாக்ஷதாரகனாயிருந்த உன்னை உபேக்ஷிப்பாரென்று பார்த்து நான் அஞ்சாநின்றேன்" என்ன; "உனக்கென்னோடு உறவில்லையாகில் வருகிறதென்?" என்ன, "என்னுடைய க்ருபையாலே உனக்கு அநிஷ்டம்வருகிறது; என்றஞ்சுகிறேன் அத்தனை; உறவினாலல்ல" என்றிவள் சொல்ல, "இப்படி அஸம்பாவிதங்களை ஆசங்கிக்கிற

(௧) பெரியாழ்வார்-திரு-௪-௯-௭.

தென்? அங்யோத்தேசேந வருகைக்கு ப்ரஸங்கமுண்டோ? உன் பக்கலுள்ள ப்ரேமாதிசயத்தாலே உன்னைப்பிரிந்து தரிக்கமாட்டா மையாலே வந்தேன் அத்தனை" என்று அருளிச்செய்ய, "என்பக் கலுனக்கு ஸ்நேஹமானது பொய்யிறே" என்ன; "நாறேனும் ஒருவரோடே பரிமாறினால் அவர்கள்பக்கல் பொய்யான ஸ்நேஹத் தைப் பண்ணுமவனோ?" என்றருளிச்செய்ய, "உனக்காரேனும் ஒருவர்திறத்திலே மெய்யான ஸ்நேஹமுண்டாகில் அவர்களை 'இன்னார்' என்று சொல்லிக்காண்" என்ன; "அசோகவநிகையிலே யிருந்த ஸ்ரீஜநகராஜர் தநயைதிறத்து நான் பண்ணினஸ்நேஹம் மெய்யன்றோ" என்றருளிச்செய்ய, "அதுவும் பொய்யே" என்றிவள் சொல்ல; "அவள்பக்கலுள்ள ஸ்நேஹம் பொய்யாகில் அவளுக்காக லங்கையை அழிக்கக்கூடுமோ?" என்றருளிச் செய்ய, "அதுஎன்னை அகப்படுத்துகைக்குச் செய்த வஞ்சனையென்னுமிடம் அறியேனோ? ஆதலால், என்னுடைய பந்துங்கழலும் தந்து. அங்கேபோகு நம்பி!"; என்று சொல்லுகிறாள். (௧)

ஈடு; அவ:—இரண்டாம்பாட்டு. நோக்குப் பெறாதவன் முகம் பார்க்கப் பெற்றான்; வார்த்தை கேட்கப் பெறாதவன் 'போ' என் னவும் பெற்றான்; இனி இதுக்கு மேற்படக்ருதார்த்ததைகை இல்லையிறே. 'போ' என்றால் அவ்வார்த்தையே யன்றிறே இவன் புத்தி பண்ணுவது; அதில் அகவாயில் ஓடுகிறதும் அறியு மவனிறே.

(௧) "இன்னம் என் கையகத்திங்கு ஒருநாள் வருதியேல் என் சினம் தீர்வன்நானே" என்று இத்தை உய்ந்தபிள்ளை பாடாநிற்கச செய்தே காலாலே உதைப்பது கையாலே தள்ளுவதாய் அபிநயித் துக்காட்டினார்; இத்தை எம்பார் கேட்டருளி, "அங்ஙனன்று: அது பின்னைப் பெற்றானாகில் அவன் நெடுநாள் ப்ரார்த்தித்துக் கிடந்த தன்றோ; ஆனபின்பு, அதன்று பொருள்" என்று முகத்தைத் திரிய வைத்துக் காட்டினார். "நீயகலநின்று பண்ணினவை எல்லாம் உன் ஸந்நிதியிலே உன்னைப் பண்ணுவேன் என்கிறாள்" என்று அருளிச் செய்தார். எம்பார் தாம் பாஹ்யவிஷயங்களில் ருசி இல்லாமை

(௧) பெருமாள் திரு-௬-௪.

யாலே பதார்த்தஜ்ஞாநம் இன்றிக்கே இருப்பர்: இப்படி இருக்கை யாலே "ஸ்த்ரீகளுக்கு அஸாதாரணமான சிஹ்நங்களெங்ஙனேயிருக் கும்படி?' என்று சிங்கப்பிரானைக் கேட்டருளினார்" என்று ப்ரஸித்த மாயிருக்கும்; இப்படி இருக்கிறவர்தாம் * மின்னிடைமடவார் அருளிச்செய்யப்புக்கால், "இந்த ஸந்யாஸி பிரட்டுப்பாடத்தொடங் கினார்" என்பராம் பிள்ளையுறங்காவில்லிதாஸர்; இவருடைய பக வத்விஷயத்தில் அவகாஹநம் இருக்கும்படி. ஒரு க்ஷுத்ரவிஷயத் திலே நாலுநாள் வாஸனை பண்ணினார்கள் போரவிரக்தராய் இரா நின்றார்கள், அவ்வளவு அல்லவிறே ஸமஸ்தகல்யாண குணாத்மக னோடே நெடுநாள் வாஸனை பண்ணினார்க்கு இருக்கும்படி. எம்பார் "ஈஶ்வரன் முன்னேவந்துநின்றாலும் 'வா' என்பாரையும் இடையாத ஸம்ஸாரத்திலே, அவனல்பம்தாழ்த்தானென்று 'போ' என்பாரைப் பெறுவதே!" என்பர்.

போகுநம்பீஉன் தாமரைபுரைகண்ணிணையும் செவ்வாய்முறுவலும்*
ஆகுலங்கள்செய்ய அழிதற்கேநோற்றோமேயாம் *
தோகைமாமயிலார்கள் நின்னருள்சூடுவார்செவியோசைவைத்தெழ*
ஆகள்போகவிட்டுக் குழலூதுபோயிருந்தே. (உ)

ப—அநந்தரம், இவள். போகச் சொன்னவிடத்திலும் போகாதே இவளைப்பார்த்து மந்தஸ்மிதம் பண்ணின அதிலே ஶிதிலசித்தையாய்; எங்களை நலியாதே. உன்னபிமதைகள் இருந்த பரிஸரத்திலேபோய் அவர்கள்வரு கைக்கு ஈடாக இருந்து குழலை ஊதென்கிறாள்,

நம்பீ—எங்களையொழியக் குறை வாளன் அன்றியே பூர்ணனான நீ
போகு—("போ" என்றுசொல்லப் போகாதிருக்கிறதென்? எங்கள் அருகினின்றும்) போ:
உன்—இங்கேநின்று எங்களைப் பார்ப்பது முறுவலிப்பது ஆகிற உன்னுடைய
தாமரைபுரை—தாமரைபோலே தர்ஶநீயமான
கண்ணிணையும்—கண்களும்
செம்—சிவந்த
வாய்-வாயிலே பாக்கிற
முறுவலும்—முறுவலும் (கண்டு உகக் கும்படி பாக்யம்பண்ணின வர்கள் அன்றியே)
யாம்—நாங்கள் (நின்றநிலையைக் குலைத்து)
ஆகுலங்கள்—அலமாப்புக்களை
செய்ய—பண்ண
அழிதற்கு—அழிந்துவிடுகைக்கு
நோற்றோமே—நோற்றே வைத்த வர்கள் அல்லோமோ

உங்களை அறிக்கைக்கோ? நான் வந்து, உங்கள் மயிர்முடிகண்டு உகந்தேனாத்தனையன்றோ வென்னில்;-அவர்கள் நாங்கள் அல்லோங்காண்;
தோகை—தோகைவிரித்த
மா—நல்ல
மயிலார்கள்-மயில்போலே அலைந்த குழலையுடையவர்கள்
நின்—உன்னுடைய
அருள்—அருளை
சூடுவார்—சூடுமவர்களல்லவோ;
(அவர்கள் அஸந்நிஹிதைகளன்றோ வென்னில்;—அவர்கள்)
ஓசை—த்வநி
செவிவைத்து—கேட்டு
எழ—எழுந்திருந்துவரும்படியாக
('அவர்களைக்குறித்தூதுகிறான்'' என்று நாட்டுக்குத்தெரியாதபடி)
ஆகள்—பசுக்களை
போகவிட்டு—தூரத்திலேபோகவிட்டு (அழைப்பாரைப்போலே)
போய்—அங்கேபோய்
இருந்து—இருந்து
குழல்—குழலை
ஊது—ஊது
'அதுவுமிங்கேயாகாதோ'' என்றிரா தேகொள்ளென்று கருத்து.

ஆ.—(போகுநம்பி)—இப்படி எம்பெருமானை உத்திஸ்ய தான் சொன்ன வார்த்தைகளாகிற அம்ருதவர்ஷத்தாலே அவன் உஜ்ஜீவித்து நிரதிசயப்ரீதியுக்தனுமாய், புதுக்கணித்த திருக்கண்களையும் திருப் பவளத்தையு முடையனுமாயிருந்தவிடத்தில், இதுவெல்லாம் அவர்களாகக் கருதி இவனுக்கு வந்ததாகக்கொண்டு; 'இவ்வழகை ஆசைப்பட்டுப்பெறுதே அவஸந்நைகளாய் மாயப்பிறந்தவர்கள்காண் நாங்கள்; இவ்வழகைக்கண்டு வாழப்பிறந்தவர்கள் அல்லோம்; தோகை மாமயிலார்கள் நின்னருள் சூடுவார்; நீயும் அங்கே போய் அவர்களோடேகலந்து பரிமாறு' என்று இவள்சொல்ல, பின்னையும் அவனெழுந்தருளாதே நின்றவாறே, போனால், அவர்களைச் சந்திக்கைக்கு உபாயம் அறியாமே நிற்கிறாயோ? ஆகில், நல்லதோர் உபாயமுண்டு; அது என்னென்னில்? பசுக்களைக் கழியப்போகவிட்டு அவற்றை அழைக்கிறாயாய் * ஆய்ச்சியர்க்கேஊதும் அத்தீங்குழலைப் போயிருந்து ஊது' என்றுசொல்லுகிறாள்.

ஈடு; அவ.—மூன்றும்பாட்டு. '' 'குழலூது போயிருந்து' என்றிறே என்னைச் சொல்லுகிறது; உத்தமானது தன்னை அநுஷ்டிக்கும் அத்தனையிறே. இனித்தான் 'உனக்குப் பெண்கள்படும் நீர்வாய்ப்புள்ள இடங்களிலே போயிருந்து ஊது' என்றிறே நீங்கள்

சொல்லிற்று; அழகிது, இத்தனையிறே. நீர்வாய்ப்புள்ளவிடந்தான் எது? அத்தைச்சொல்லலாகாதோ?" என்று இரண்டடி உட்புகுர விட்டு நற்றரிக்க இருந்து, குழலில் இனியபேச்சிலே கைவைத்தான். குழலோசைபோலன்றிறே பேச்சில் இனிமை இருக்கும்படி! "நான் செய்தபடி செய்கிறேன், 'செவியோசை வைத்தெழ-குழலூது போயிருந்து' என்றுநீங்கள் சொன்ன இதுக்குக்கருத்து எனக்குப் போச்சுதில்லை; இதெனக்கு ஜாத்யுசிதவ்ருத்தி யன்றோ?" என்றான்.

போயிருந்துநின்புள்ளுவமறியாதவர்க்குஉரைநம்பீ * நின்செய்ய
வாயிருங்கனியுங்கண்களும் விபரீதமிந்நாள் *
வேயிருந்தடந்தோளினார்இத்திருவருள்பெறுவார்யவர்கொல் *
மாயிருங்கடலைக்கடைந்த பெருமானாலே (௩)

ப.—அநந்தரம், 'போயிருந்து-குழலூது" என்றவாறே புகுரவிருந்து சில உபச்சந்தநவாக்யங்களைச் சொல்லி, போகச்சொல்லுகிறபோதை ஹஸ்த சேஷ்டையைக்கொண்டாட; அக்ஷோப்யமான கடலையும் க்ஷுபிதமாம்படி பண்ணின உன்னை இப்படி ப்ரமிக்கும்படி தங்கள்தோள்களாலே கலக்கினார் ஆரோ? என்கிறாள்.

(வேறே சிலரும் உண்டாய் அங்கேபோயிருக்கவும் சொல்லுகிறதென்? உங்களையொழிய ஆருண்டு எனக்கு? இருப்பிடமும் உங்கள் ஸந்நிதியல்லவோ? என்ன; ஆஸந்நமாகப் புகுந்திருக்கிற இவ்விருப்பைத் தவிர்ந்து)
நம்பீ—(க) "கள்வம்பொதியறை" என்னும்படி களவால் பூர்ணனானவனே
போய்—(எங்கள் பரிஸரத்தில் நின்றும்) போய்
இருந்து—(உன்னபிமதைகள் பரிஸரத்திலே) இருந்து
நின்—உன்னுடைய
புள்ளுவம்—களவு
அறியாதவர்க்கு—அறியாதார்க்கு
உரை—(இந்தக் கள்ளவார்த்தைகளைச்) சொல்லு;
(எங்களளவில்)
நின்—உன்னுடைய
செய்ய—சிவந்த
வாய்—அதரமாகிற
இரு—ஶ்லாக்யமான
கனியும்—கனியும்
கண்களும்—(பிறரையழிக்கையே ஸ்வபாவமாயிருக்கும்) கண்களும் (முன்புபோலே ஹ்ருத்யமாயிருக்கையன்றியே)
இந்நாள்—இப்போது
விபரீதம்—பாதகமாயிராநின்றன;
இவ்வளவில் உன்னுடைய நிஷேதார்த்தமான எங்களுடைய ஹஸ்த சேஷ்டையைக்கொண்டாடாதே நீ கொண்டாடும் தோளழகை உடையவர்களல்லோம் நாங்கள்;
மா—அகாதமாய்

(க) இ-பெரி-௩௦-ன-ஸ

இரு—விஸ்தீர்ணமான
கடலை—கடலை
கடைந்த—கடைந்த
பெருமானாலே—அதிஶயிதஶக்தியான இவன்தன்னாலே
இத் திருவருள்—நெஞ்சு கலங்கி வாய் விட்டுக்கொண்டாடும்படியான அருளை
பெறுவார்—பெற்றிருப்பாராய், (அதுக்கடியான)
வேய்—வேய்போலே
இரு—சுற்றுடைத்தாய்
தட—நெடிதான
தோளினார்—தோளையுடையவர்கள்
யவர்கொல்—ஆர்?—அவர்களைக்கண்டேனாகில், உன்னோடு பாதி நானும் கொண்டாடலாயிற்றேயென்று ப்ரணயரோஷத்தாலே வினவினாளென்று கருத்து (௩)

ஆ.—(போயிருந்து.)—இப்படி இவன், மேன்மேலன இவளுடைய அம்ருதோபமமான வார்த்தைகளைக் கேட்டதினாலே வந்த நிரவதிகப்ரீதியாலே அத்யத்புத நிரவதிக ஸௌந்தர்யமயமான திருப்பவளத்தையும் திருக்கண்களையுமுடையனைக் கொண்டு விநீதனைப் அருளிச்செய்ய;

இவற்றையெல்லாம் உன்னுடைய க்ருத்ரிமம் அறியாதார்க்குப் போயிருந்து சொல்லென்று அவனை உபாலம்பித்துவைத்து; உன்னுடைய திருக்கண்களினுடையவும் திருப்பவளத்தினுடையவும் அழகு இருந்தபடியென்? கண்டுங்கேட்டும் அறியாததொருபடியான இவ்வழகு, திருப்பாற்கடலிலே அம்ருத மதந ஸமயத்திலே அவதீர்ணையாய் அம்ருத ஶீகராலங்க்ருதையாய் ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்யபரிமிதோதார குணபரிபூர்ணையாய் ஸர்வ திவ்யபூஷண பூஷிதையாய் ஸர்வேஶ்வரேஶ்வரியான பெரியபிராட்டியோடு அன்றுகலந்த கலவியாலும் பிறந்ததில்லை; இப்படி பெரிய பிராட்டியிற்காட்டிலும் உனக்கபிமதைகளாய் உன்னை புஜிக்கப்பிறந்தவர்களாரோ? என்கிறாள்.

ஈடு ; அவ.—நாலாம்பாட்டு. "நான் சொன்னவையெல்லாம் இவர்கள் அந்யதாவாக புத்திபண்ணுகிறது, நம்மையொழியச் செல்லாமை பிறந்து நாம்அரைக்ஷணம் தாழ்த்தது பொறுக்கமாட்டாமையிறே" என்றுபார்த்து, "நீங்களென்னை இங்ஙனேசொல்லலாமோ? நான் பித்ராதிகளுக்குப் பரதந்த்ரனன்றோ? அவர்கள் என்கையிலே கோலைத்தந்து 'நீ போய்ப் பசுமேய்த்துவா' என்றால், என்னால்

நம்பீ—((க) 'பொய்நம்பி" என்னும் படிபொய்யாலே) நிறைந்தவனான நீ

கழறேல்—("என்னைப் பொய்செய்தேன் என்கையாவதென்?" என்று) மேலிட்டுவார்த்தை சொல்லாதேகொள்;

திண்—(பகலை இரவாக்கின பொய்க்குப் பெருநிலை நிற்கும்) திண்மையையுடைய

சக்கரம்—திருவாழியாகிற

நிழறு—தேஜ: ப்ரஸாரியான

தொல் படையாய்—அஸாதாரணாயுதத்தை யுடையவனே!

உன்—உன்னுடைய

கைதவம்—க்ருத்ரிமசேஷ்டிதங்களை

மண்ணும்—(அந்த மஹாபாரத ஸமரத்திலே) பூமியில் திரண்ட ராஜலோகங்களோடு

விண்ணும்—ஊர்த்வலோக வாஸிகளான தேவர்களோடு வாசியற

நன்கு—நன்றாக

அறியும்—அறியும்; (ஆனபின்பு)

உனக்கு—உனக்கு

நான்—நான்

ஒன்று—ஒன்று

உணர்த்துவன்—அறிவிக்கக்கேள்; எங்கள்வார்த்தை இனிமை கொண்டாடாதே; நாங்கள் அவர்களல்லோம்);

நின்—உன்னுடைய

அருள்—அருள்

சூடுவார்—சூடுகைக்கு இட்டுப்பிறந்தவர்களாய்

மழறு—அபிநவமான

தேன்—தேன்போலே யிருக்கிற

மொழியார்கள்—மொழியையுடையவர்கள்

மனம்—நெஞ்சானது

வாடி—செவ்வியழிந்து விஷண்ணமாம்படி

நிற்க—நிற்க

எம்—(அவர்களதன்றியே) எங்களதாயிருப்பதாய்

குழறு—(அவர்களைப்போலே உனக்குத் தெளிய வார்த்தைசொல்ல மாட்டாதே,) அநக்ஷர ஸரஸமான குழறுதலையுடைத்தான

பூவையொடும்—பூவையோடும்

கிளியோடும்—கிளியோடும்

குழகேல்—லீலாரஸம் கொண்டாடாதேகொள்.

இங்கு, பூவையும் கிளியுமென்றது—ஆஶ்ரிதர்க்கு உசாத்துணையாகைக்கு யோக்யமான வ்யவஹாரத்தை யுடைத்தாய் ததேகாகாங்க்ஷயமான ஸிஷ்யவர்க்கத்தை ஸூசிப்பிக்கிறது. (ரு)

ஆ—(கழறேல்) - இப்படி தன்னை உத்தேஶ்ய மேன்மேல் இவள் சொன்ன வார்த்தைகளையே தனக்குப் பற்றாசாகக் கொண்டு, இவளுடைய கிளிகளையும் பூவைகளையும் எடுத்து அவற்றைக்

(க) தி-மொ-கூ-எ-௪.

கொண்டு திருநாமங்களைச் சொல்லுவித்து ஆஸ்வஸியா நின்று கொண்டு, "என்பக்கல் பொய்யுண்டோ?" என்று தானருளிச் செய்ய, 'உன்னுடைய பொய்யை அறியாதாருண்டோ? பகலை இரவாக்கவல்ல னல்லையோ? அது நிற்க, ஒருஹிதம் சொல்லக்கேள்! அதேதென்னில்; - உன் திருநாமங்களைக் கேட்க விருந்தாயாகில், நின்னருள்சூடுவார் மனம்வாடி நிற்க இங்கேநின்று எங்களுடைய பூவைகளையும் கிளிகளையும் உன் திருநாமங்களைச் சொல்லுவித்துக் கொண்டு கேளாதே; உன்னுடைய மழறுதேன் மொழியார்களைச் சொல்லுவித்துக்கொண்டு கேளென்கிறாள். (ரு)

ஈடு; அவ;—ஆறும்பாட்டு. தங்களகவாயிலேயோடுகிறது தெரியாமல் மறைத்துக்கொண்டு அநபிபவநீயைகளாயிருக்கிற இப்பிராட்டியையும் தோழிமாரையுங்கண்டு, அவன் தன்முகமுத்ரைகளாலும், பாவகர்ப்பமான உக்திகளாலும், அத்தை அநுவதித்தாற் போலேயிருக்கிற விலாஸசேஷ்டிதங்களாலுமாக இவர்களபிஸந்தியைக்குலைத்து, இனி இவர்கள் நான் சொன்னவையெல்லாம் "வேண்டா" என்னமாட்டாதவர்களென்னும்படி வாய்மாளப் பண்ணி, அவ்வளவிலேசென்று இவளுடைய லீலோபகரணமான குழமணனை எடுத்துக்கொண்டான்.

குழகிளங்கள் குழமணன்கொண்டு கோயின்மைசெய்து கன்மமொன்றில்லை *
பழகியாமிருப்போம் பரமேயித்திருவருள்கள் *
அழகியாரிவ்வுலகுமூன்றுக்கும் தேவிமை தகுவார் பலருளர் *
கழகமேறேல் நம்பீ! உனக்குமிளைதேகன்மமே. (சு)

ப.—அநந்தரம், மேலுணித்துக் குழமணனையெடுத்தவனைக்குறித்து, "உன்னுடைய ஈஸ்வரத்வம் எங்களோடேகாட்டாதே; அதுக்குத்தகுவாரோடே காட்டு" என்கிறாள்.

குழகி எங்கள் குழமணன் கொண்டு — விளையாட்டிலே எங்கள் குழமணனையெடுத்துக்கொண்டு
கோயின்மைசெய்து—கைப்பட்ட ப்ரியத்தாலே மேன்மைபாவித்தால்
ஒன்று—ஒரு
கன்மம்—காரியம்
இல்லை—இல்லை; (உம்முடைய ஸாஸங்களும் மேன்மையும்)
யாம்—நாங்கள்
பழகி—பண்டேபழகி
இருப்போம்—இருப்புதோம்;

இ—இந்த
திரு—அதிஶயிதமான
அருள்கள்—அருள்களானவை
பரமே—நாங்கள் பொறுக்கவல்லவையல்ல;
அழகியார்—(அதுக்கநுரூபமான) அழகையுடையராய்
இ—(உம்முடைய ஸர்வேஶ்வரத்வத்துக்கு விஷயமான) இந்த
உலகுமூன்றுக்கும்—லோக த்ரயத்துக்கும்
தேவிமை—உம்மோடொக்கமுடிசூடுகைக்கு
தகுவார்—தகுதியாயிருப்பார்
பலர்—(௧) ஜெவ ஸஹஸ்ரஶ-தேவ்யஸ் ஸஹஸ்ரம்" என்னும்படி அநேகம் பேர்
உளர்—உளர்;
நம்பீ—பரிபூர்ணமான மேன்மையையுடைய உனக்கு அவர்கள் திரளல்லவோ தகுவது!
கழகம்—எங்கள் திரளில்வந்து
ஏறேல்—ஏறாதேகொள்;
உனக்கும்—(பிறர்க்குத் தீமைசெய்கையே ப்ரக்ருதியான) உனக்கும்
கன்மம்—இந்தச்செயல்
இளைது—பால்யஸூசகம்.
கழகம்—திரள்; குழமணனென்று-ஆஶ்ரிதருடைய லீலாபரிகரமும் அவனுக்கபிமதமென்று ஸூசிப்பிக்கிறது. (௬)

ஆறு;—(குழகி.)-முற்பட இவளையணுகக்கூசியிருந்த எம்பெருமான், இப்படி இவள் தன்னைக்குறித்துச் சிலவார்த்தைகளைச் சொன்னவாறே, அதுவேபற்றாசாக நிர்ப்பயனாய்ச் சென்றணுகி, இவள்பாடேயிருந்த குழமணனை எடுத்தருள; "குழகியெங்கள் குழமணன்கொண்டு அடிக்கழிவு செய்தால் உனக்கென்ன ப்ரயோஜநமுண்டு?" என்று இவள்சொல்ல, "என்னுடைய ஆத்மதாரணார்த்தமாக எடுத்தேன்" என்று அவனருளிச்செய்ய, "நாங்கள் இப்பொய்களுக்குப் பழையோமல்லோமோ! உன்னுடைய இந்த நிரவதிகமான அபிநிவேஶத்துக்கு நாங்கள் விஷயமாகப்போதுவோமோ?" என்று இவள் சொல்ல, "நீயல்லது மற்றெனக்கு ஸ்ப்ருஹணீயவிஷயமுண்டோ?" என்று அவனருளிச்செய்ய, "த்ரைலோக்யத்திலுள்ளாரிலும் அழகியார் உனக்கே தேவிமைக்குறுப்பாயிருப்பார் எத்தனைபேருளர்! அதுநிற்க; நீ முந்துற எங்கள்பரிஷத்திலே வந்தேறாதே கொள்: இது உனக்கும் இளையதான கன்மம்" என்கிறாள்.

(௬)

ஈடு; அவ;—ஏழாம்பாட்டு. ஸர்வோபாயங்களையும் அநுஷ்ட்டித்து ஸ்ரீபரதாழ்வான் தன்பக்கல் பட்டதெல்லாம் தான் இவர்கள் பக்கலிலே பட்டான். (க) "விநிவர்த்தயிதும் [illegible] விநிவர்த்தயிதும்பலாத்" என்று மீட்கையிலே போர வருந்தினானிறே. (௨) [ஸைஷ்வம் ஸுஹ்ருத்யா யாவந்நநிவர்த்ததி - ஏஷ்யே புரஸ்தாச்சாலாயா யாவந்மே ப்ரஸீததி] தரையிலேயிரங்கிமீளும்படி பண்ணுகிறேன்; அதுதான் கேட்டார்வாய் கேட்கவேணுமோ? "புரஸ்தாத்" என்றானிறே. அப்படியே இவனும் ஸர்வோபாயங்களையும் ப்ரவர்த்திப்பித்துவிடத்திலும் அணுகவொண்ணாதபடி கடுமைதோற்ற விருந்தார்கள்; "இனிச் செய்யலாவதென்?" என்று பார்த்தான்; "பலத்தாலே கார்யங்கொள்ளுவோம்" என்று நிஶ்சயித்து, இவர்கள்பாவையை எடுப்பானாகக் கணிசித்தான்; (௩) "ஹ்ருஷ்டா ஜ்ஞாத்வா கோஸலா: ப்ரேக்ஷிதஜ்ஞாஸ்து கோஸலா:" என்று நினைவறியுமவர்களாகையாலே, எல்லாரும் கூடவைத்த பாவையைச் சென்றெடுத்துக்கொண்டார்கள்; அதுதான் "நங்கார்யம்" என்றே இருந்தான். "ப்ருதக்ப்ரயத்நாபேக்ஷிதமின்றிக்கே யொழியப் பெற்றோம்" என்று பார்த்தான்; திருக்குரவை போலே ஆளுக்காளாய்நின்று கைப்பிடிக்க வேண்டாவாயிருந்தது; "நல்ல வாய்ப்பு" என்று இவர்கள் பாவையைச் சென்றுபற்றினான்.

கன்மமன்றெங்கள்கையில்பாவைபறிப்பது கடல்ஞாலமுண்டிட்ட *
நின்மலாநெடியாயுனக்கேலும்பிழைபிழையே *
வன்மமேசொல்லியெம்மைநீவிளையாடுதி அதுகேட்கிலென்னைமார் *
தன்மபாவமென்னாவரோருநான்றுதடிபிணக்கே, (௭)

ப—அநந்தரம், ப்ரயோஜநநிரபேக்ஷமாக ஸர்வலோகத்தையும் ரக்ஷிக்கும் பெருமையையுடைய உனக்கு எங்களை ஸ்பர்ஶித்துக் கையில் பாவையைப் பறிக்கிற இது கார்யமன்று என்கிறாள்.

எங்கள்—எங்கள்
கையில்—கையிலிருக்கிற
பாவை—பாவையை
பறிப்பது—தீண்டிப்பறிப்பது
கன்மம்—காரியம்
அன்று—அன்று;
கடல்—ப்ரளயார்ணவத்திலே அழுந்துகிற
ஞாலம்—ஜகத்தை
உண்டிட்ட—அமுதுசெய்து வயிற்றிலேவைத்து ரக்ஷித்து

(க) ரா-அயோ-அ௨-௧௧. (௨) ரா-அயோ-௧௧௧-௧௪- (௩)

நின்மலா—அதுதானே ப்ரயோஜநமா ம்படியான ஔஜ்ஜ்வல்யத்தை யுடையையாய்!
நெடியாய்—("இன்னமும்செய்தது போராது" என்று அவற்றை வெளிநாடுகாட்டிரக்ஷிக்கும்) பெருமையையுடையவனே!
உனக்கும்—இப்படிப்பட்டஉனக்கும்
பிழை—(இப்படி அபலைகளா யிருப்பாரைத் தீண்டிப்பறித்தாலென்கிற) பிழை
பிழையே—அவஶ்யமாயேவிடும்;
நீ—(இப்படிபெரியையாயிருக்கிற) நீ
வன்மம்—(நானுங்களைஸ்பர்ஶிக்கலாமோ? அன்று ஆரைநினைத்திருந்திகோள' என்று பூர்வஸம்ஶ்லேஷஸ்மரணத்தைப் பண்ணுவித்து எங்களுக்குநினைக்கவும் சொல்லவுமொண்ணாத) மர்மங்களை
எம்மை—எங்களை நோக்கி
சொல்லி—சொல்லி
விளையாடுதி—லீலைகொண்டாடா நின்றாய்;
என்னைமார்—எங்களுடைய ஆணுடன்பிறந்தார்
அதுகேட்கில்—அதுகேட்பராகில்
தன்மபாவம்—தர்மமும் பாபமுமென்று
எண்ணார்—நிரூபியார்கள்;
ஒருநான்று—ஒருநாள் வரையிலே வந்து
தடி—தடியையெடுத்து
பிணக்குறும்—பிணங்கும்படியாம்.
என்னைமார்—ஆணுடன் பிறந்தார்.

என்னைமார் என்கிறது - ஸஹஜமான தர்மாதர்மபமதாதிகள் பகவத்விரோதிகளென்று ஸூசிப்பிக்கிறது. 'பாவை' என்கிறது ஆஶ்ரிதவிஷயத்தில் பாரதந்த்ரமான அசித்வஸ்துவும் ஈஶ்வரனுக்கு உத்தேஶ்ய மென்று ஸூசிப்பிக்கிறது- (எ)

ஆறு;—(கன்மமன்று.) - இப்படி அவன் நிவார்யமாணனுயிருக்கச்செய்தேயும் இவளுடைய பரிஷத்திலேயேறி இவளுடைய கையிற்பாவையைப் பறித்தருள, "எங்கள் கையிற்பாவை பறிப்பது உனக்கவத்யாவஹமாம்; அநந்ய ப்ரயோஜநனாய்க்கொண்டு ஸர்வாத்மாக்களையும் வயிற்றிலேவைத்தது மஹாகுணத்தை விளைத்தாற்போலே, இத்தீமையும் உனக்கு மஹாவத்யத்தைவிளைக்கும்" என்று இவள்சொல்ல, அதன்மேலே பணிமொழிகளை இவன் அருளிச்செய்ய, "இங்ஙனே அதிதுஸ்ஸஹமான வார்த்தைகளையே சொல்லி எம்மைநீவிளையாடுதி; அதுகேட்கில் என்னைமார் இது கூடும்கூடாது என்று பாராதே உன்னையுபேக்ஷித்து ஒருநாளும் கடாக்ஷிப்பதும் செய்யார்" என்கிறாள். (எ)

ஈடு; அவ ;—எட்டாம்பாட்டு. கிட்டிநின்று இவர்களைச் சிலமிறுக்குக்களைப் பண்ணப்புக்கான்; "இங்கே யிருக்கிலன்றோ இதெல்லாம் வேண்டுவது" என்றுபார்த்து, ஒருவரொருவராகப் போகப்புக்கார்கள்; "இதுவோ பார்த்தபடி!" என்று வழியைப்பற்றி இருவிலங் காகக்கிடந்தான். உத்யாநமாகையாலே வழி ஓரடிப்பாடாயிருக்குமிறே. இப்பாட்டை ஜீயர் அருளிச் செய்யாநிற்கச் செய்தே ஆப்பானிருந்தவர் "இவர்களிவனைக் கடந்துபோனார்களாகிற்செய்வதென்?" என்றுகேட்க, "அது ஆர்காரியம்? பின்னை இரண்டத்தொன்று ஸித்திக்கும் என்றன்றோ அவன்தான்கிடந்தது!" என்றருளிச்செய்தார். †(நின்றார்களாகில் நினைத்தது பெற்றானாகிறான்; கடந்துபோனார்களாகில் ஸம்ஶ்லேஷார்த்தமான க்ருஷி தலைக்கட்டிற்றாகிறது.

பிணக்கியாவையும்யாவரும் பிழையாமல்பேதித்தும்பேதியாததோர்*
கணக்கில்கீர்த்திவெள்ளக் கதிர்ஞானமூர்த்தியினாய் *
இணக்கிஎம்மைஎந்தோழிமார் விளையாடப்போதுமினென்னப்போந்தோமை
உணக்கிநீவளைத்தால் என்சொல்லாருகவாதவரே! (அ)

ப ;—அநந்தரம், "இவன் ஸந்நிதியிலிருக்கிலன்றோ மர்மம் சொல்லுவது?" என்றபோகத்தேட, இவர்கள் போகிறவழியைக் கட்டித்தகைந்த அவனைநோக்கி; (க) 'எல்லாம் அறிவீர் ஈதேயறியீர்' என்று ஸர்வஜ்ஞனை நீ எங்களைத் தகைந்தால்உகவாதார் என் சொல்லாரென்கிறாள்.

யாவரும் யாவையும்—ஸகல சேதநா சேதநங்களையும்
பிணக்கி—(ஸம்ஹ்ருதயவஸ்த்தையிலே நாமரூப விபாகாநர்ஹதமாம்படி) கலசி, (ஸ்ருஷ்டியில் வந்தவாறே)
பிழையாமல்—(அவ்வோ சேதநருடைய கர்மங்களுக்கு ஸாங்கர்யம்) பிறவாதபடி
பேதித்தும்—தேவதிர்யகாதிபேதத்தைப் பண்ணினவிடத்தும்
பேதியாதது—(தத்தத்தேஹாவஸ்த்தையில் ஸ்வரூபத்துக்கு பேதமவாராத) படி
ஓர்—அத்விதீயமாய்
கணக்கு இல—அபரிச்சிந்நமான
கீர்த்திவெள்ளம்—கீர்த்திஸமூஹத்தை யுடைத்தாயிருக்கிற
கதிர்—ப்ரபாரூபமான
ஞானம்—ஸங்கல்ப ரூப ஜ்ஞாநத்தை
மூர்த்தியினாய்—வடிவாகவுடையவனே!
எம்—ஸஜாதீயைகளாய் ஸமாநதுக்கைகளான
தோழிமார்—தோழிமார்
எம்மை இணக்கி—நாங்கள் இசையும்படி வார்த்தைசொல்லி
விளையாட—விளையாட

போதுமின்—போங்கோள்'
என்ன—என்றுலீலையை வ்யாஜமாகச் சொன்னபடியாலே
போந்தோமை—(நீ இந்த நிற்பதறியாதே லீலாபரைகளாய்) வந்த எங்களை
உணக்கி—உண்ணவொட்டாதே உணங்கும்படி பண்ணி
நீ—நீ
வளைத்தால்—தகைந்தால், (இச்செய்திகண்டு)
உகவாதவர்—உகக்கமாட்டாத நாட்டார்
என்—என்ன
சொல்லார்—சொல்லார் ?
உகவாதவர்—உன்னுடைய மின்னிடை மடவாரென்றுமாம். இங்கு, இணக்கி எம்தோழிமாரென்றது ஸாஜாத்யத்தாலே கலந்து லீலாரஸ வ்யபதேசத்தாலே பகவத் விஷயத்திலே மூட்டும் பாகவத விஷயத்தை ஸூசிப்பிக்கிறது. (௮)

ஆறு ;—(பிணக்கி.) "இப்படி இவன் க்ருத்ரிமம்செய்து நம்மை இங்கிருந்து விளையாடவொட்டானாகில், நாமிங்குநின்றும் போவோம்" என்று பார்த்துத் தன் தோழிமாரோடேகூடப் போகப்புக "நான்போகவொட்டேன்" என்றுஇவன் தங்களை வளைத்தருள, "அறியாதே விளையாடப்போந்த எங்களை உன்னுடைய நிரவதிக ஸௌந்தர்யத்தாலே இழவித்துக்கொண்டு, ஸர்வேஶ்வரனான நீ வளைத்தால், உன்னை உகவாதவர் உனக்கென்ன பழிசொல்லார்? உனக்கெங்களோடே ஸம்ஶ்லேஷம் வ்ருத்தமென்றும் சொல்லுவரிறே! ஆனபின்பு இதுசாடல்ல" என்று அவனை உபாலம்பிக்கிறாள். (௮)

ஈடு ; அவ;—ஒன்பதாம்பாட்டு. "இவன் 'போகவொட்டேன்' என்று வளைத்துக்கிடந்ததுக்கு ப்ரயோஜநமுள்ளது இவனுக்கு நினைத்தபடி பரிமாறப் பெற்றாலன்றோ? ஒரு தேசவிசேஷத்திலே முக்தர் ஸம்ஸாரிகளோடு உறவற்றிருக்குமாபோலே இவன்முகம் பாராதேயிருக்கிறோம்" என்றத்யவஸித்துப் பேசாதேயிருந்தவாறே, "தன்னை நினைத்துக்கொண்டிருந்தோம் என்றிருக்கும் இவன்" என்று "அந்யபரதைதோற்றச் சிற்றிலிழைப்போம்" என்று இழைக்கப்புக, "என்னைப்பாராதே இருப்பதுமன்றிக்கே சிறிது அந்யபரதை பண்ணுவதே!" என்று சிற்றிலையும் சிறுசோற்றையும் தன்திருவடிகளாலே அழிக்க, அத்தாலே அவர்களுக்குச் சீற்றம்பிறந்து, தங்கள் ஸங்கல்பத்தை மறந்து அவன்முகத்தைப்

பார்த்துச் சொல்லுகிறார்கள். அவனுடைய அபிமதஸித்திக்கும் ஸாதநம் திருவடிகள்காணும். அடியுடையார்க்கெல்லாம் ஸாதித்துக் கொள்ளலாமே.

உகவையால்நெஞ்சமுள்ளுருகிஉன் தாமரைத்தடங்கண்விழிகளின் *
அகவலைப்படுப்பான் அழித்தாயுன்திருவடியால் *
தகவுசெய்திலைஎங்கள்சிற்றிலும் யாமடுசிறுசோறுங்கண்டு * நின்
முகவொளிதிகழ முறுவல்செய்துநின்றிலையே. (கூ)

ப ;—அநந்தரம், இவன் தகைந்த்வாறே கடக்கப்போய்ச் சிற்றிலிழைக்க, "நம்மை அநுவர்த்தித்துப்போகாதே அநாதரித்தார்கள்" என்கிற சீற்றத்தாலே சிற்றிலையழிக்க, நாங்கள் உன்முகஶோபையைப் பார்த்திருந்து சிற்றிலிழையாதபடி இத்தையழித்தாயே! என்றின்னாதாகிறாள்.

உகவையால்—அகவாயிலுகப்பாலே
நெஞ்சம்—நெஞ்சானது
உள்ளுருகி—உள்ளுருகி
உன்—உன்
தாமரை—தாமரைபோலேயிருக்கிற
தட—பெரிய
கண்—கண்ணினுடைய
விழிகள்—பார்வைகளாகிற
வலை—வலைக்குள்ளே
அகப்படுப்பான்—அகப்படுத்துகைக்காக
எங்கள்—எங்கள்
சிற்றிலும்—சிற்றிலையும்
யாம்—நாங்கள்
அடு—அடுகிற
சிறுசோறும்—சிறுசோற்றையும்
கண்டு—கண்டு
நின்—உன்னுடைய
முகம்—திருமுகத்தில்
ஒளிதிகழ—ஒளிதிகழும்படி
முறுவல்—முறுவல்
செய்து—செய்து
நின்றிலை—பார்த்துக்கொண்டு நில்லாதே
உன்—உன்
திருவடியால்—திருவடிகளாலே
அழித்தாய்—அழித்தாய்;
தகவுசெய்திலை—இதிலோர் இரக்கமறச்செய்தாய்,
இத்தால்—ஆஶ்ரிதருடைய லீலாவிபூதியிற் பாரிப்பை அழிக்குமென்னுமிடம் தோற்றுகிறது. (கூ)

ஆறு ;—(உகவையால்) தன்னை எம்பெருமான் இப்படி வளைக்கச்செய்தேயும் அவனைக் கடாக்ஷியாதே யிருந்து தன் தோழிமாரோடேகூடச் சிற்றிலிழைத்துச் சிறுசோறிட்டு விளையாடாநிற்க, இவளுடைய கடாக்ஷமல்லது தனக்கு ஆத்மதாரணம் இல்லாமையாலே, "ஏதேனுமொருபடியால் இவள் நம்மைக் கடாக்ஷிக்க அமையும்" என்று பார்த்து, இவள் தன்னைப் பார்த்தருளும்படியாக இவளுடைய சிற்றிலைத் தன்னுடைய திருவடிகளாலேயழித்தருள, இவளும் அவனுடைய திருமுகத்தைப்பார்த்து அவனுடைய திருக்

கண்களினழகாலே வஶீக்ருதையாய், "உன்பக்கலுள்ள ப்ரீத்யதிஶயத்தாலே நெஞ்சுருகிக் கொண்டு உன்தாமரைத் தடங்கண் விழுகளாகிற வலையிலே நாங்கள் அகப்படுகைக்காக, எங்கள் சிற்றிலுடையாமடுசிறுசோறும் உன் திருவடியா லழித்தருளினாய்; நாங்கள் விளையாடுகிறபடியைக் கண்டு உகந்துகொண்டு நிற்கமாட்டிற்றில்லை ஒன்றும் க்ருபையில்லையாகாதே?" என்றுகொண்டு, தன்னுடைய அத்யவஸாயத்தை, எம்பெருமான் தன்னழகாலே அழித்ததாக அவனையின்னாதாகிறாள். (௯

ஈடு; அவ;—பத்தாம்பாட்டு. "நின்முகவொளிதிகழ முறுவல்செய்துநின்றிலையே" என்று விழுக்காடறியாதே வாய்தப்பச் சொல்லிக்கொண்டு நின்றார்கள்; காலால் அழித்தது சிற்றிலையன்றே: இவர்கள் நெஞ்சில் மறத்தையேயிறே; அந்த மறம் போனவாறே, மேல் நோக்கிப் பாதாதிகேஶாந்தமாகப் பார்த்தார்கள்; தங்களை ஜயிக்கையாலுண்டான ஹர்ஷம் வடிவிலே தோற்றும்படி நின்றான்; அவ்வடிவில் பிறந்தவேறுபாட்டைச் சொல்லுகிறார்கள்.

நின்றிலங்குமுடியினாயிருபத்தோர்காலரசுகளைகட்ட *
வென்றிநீண்மழுவா! வியன்ஞாலம் முன்படைத்தாய் *
இன்றிவ்வாயர்குலத்தை வீடுய்யத்தோன்றியகருமாணிக்கச்சுடர்
நின்தன்னால்நலிவேபடுவோமென்றுமாய்ச்சியோமே. (௧௦)

ப ;—அநந்தரம். "முகவொளிதிகழமுறுவல் செய்து நின்றிலையே" என்று முகம்பார்த்து வார்த்தை சொன்னவளவிலே தங்களகவாயில் மறந் தீர்ந்து, தங்களை பஹுமுகப்ரவ்ருத்தியாலே அவனாபிமுக்யம் பண்ணுவித்த படியை நினைத்து, ஸர்வப்ரகார ரக்ஷகனான உன்னாலே நாங்கள் இப்படிநலிவு படுவதே! என்று ஸமாஹிதையாய் வார்த்தை சொல்லுகிறாள்.

(ஸமஸ்த ஜகத்ரக்ஷணத்துக்கும் ஒருநாளும் தாழ்வில்லாமையாலே)
நின்று—நிலைநிற்க
இலங்கு—விளங்குகிற
முடியினாய்—திருவபிஷேகத்தையுடையையாய்
இருபத்தோர்கால்—இருபத்தொருபடிகால்
அரசு—ராஜாக்களை
களைகட்ட—உந்மூலநம்பண்ணின
வென்றி—வென்றியையுடைத்தான
நீள்—பெரிய
மழுவா—மழுவையுடையையாய்
வியல்—விஸ்தீர்ணமான
ஞாலம்—ஜகத்தை
முன்—ஸ்ருஷ்டிகாலத்திலே

படைத்தாய்—உத்பாதித்தவனாய்
இன்று—இக்காலத்திலும்
இ—இந்த
ஆயர்குலம்— இடைக்குலமானது
வீடு—தங்கள்குடியோடே
உய்ய—உஜ்ஜீவிக்கும்படியாக
தோன்றிய—அவதீர்ணனான
கருமாணிக்கச்சுடர்—நீலரத்ந ப்ரபோஜ்ஜ்வலமான வடிவையுடையவனே!
நின்தன்னால்—(இப்படி ஸர்வப்ரகார ரக்ஷகனுகையினாலே எங்களுக்கு நாயகனுமாய் எங்கள்மறத்தையும் அழித்து அழிந்தஸத்தையையுமுண்டாக்கிஎங்களோடுறவுமுடையையாய் அநுபாவ்யமான வடிவையுமுடைய) உன்னாலே
ஆய்ச்சியோம்—அறிவில்லாத இடைக்குலத்திலே பிறந்த நாங்கள்
என்றும்—என்றும்
நலிவு—நலிவு
படுவோமே—படும்படியாவதே யென்று ஸமாஹிதையானபின்பு முன்புபட்ட நலிவை நினைத்துச் சொன்னளாகிறது.

"நானதஞ்சுவன்" என்று முதற்பாட்டிலேவந்த ஒருமைக்குப்பின்பு வந்த பன்மையெல்லாம் - ஆத்மநிபஹுவசநமாதல், தோழிமார்களையுங்கூட்டி அவர்களுக்காகச் சமைந்துசொன்னதாதல். (கO)

ஆறு;—(நின்றிலங்கு) இப்படி - எம்பெருமானுடைய அழகாலும் ஸ்வவிஶ்லேஷஜநித நிரவதிகாவஸாதத்தாலுமாகத் தன்னுடைய ஊடலெல்லாந்தீர்ந்து, தன்னையகப்படுத்தின அவனுடைய அழகையும் ஸௌஶீல்யகாருண்ய வாத்ஸல்யாதிகுணங்களையும் பேசி, இப்படியே குணவானுயிருந்துவைத்து, விஶ்லேஷ பரம்பரைகளாலே எங்களை யென்றும் இங்ஙனே நலிவேசெய்து போருய்; ஆய்ச்சியோமாய்ப்பிறந்து நாங்கள் உன்னுற்பட்டது உன்னைப்பிரிந்தார்படும் வ்யஸநம் அறியாத நீ யறியாய்காண் என்கிறுள். (கO)

ஈறு; அவ;—நிகமத்தில் - இத்திருவாய்மொழியை ஸாதரமாகச் சொல்ல வல்லார்க்கு பகவத்தாரித்ர்ய மில்லை யென்கிறுர்.

ஆய்ச்சியாகியவன்னையாலன்றுவெண்ணெய்வார்த்தையுள் *
கூத்தவப்பன்தன்னைக் குருகூர்ச்சடகோபன் * [சிற்றுமுண்டமூ
வத்தியதமிழ்மாலை ஆயிரத்துளிவையுமோர்பத்திசையொடும் *
நாத்தன்னால்நவிலவுரைப்பார்க்கில்லைநல்குரவே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப.—அநந்தரம். இத்திருவாய்மொழியைச்சொல்லுமவர்களுக்கு பகவதலாபரூபமான தாரித்ர்யமில்லையென்று பலத்தை யருளிச்செய்கிறார்.

ஆய்ச்சியாகிய—இடைக்குலத்திலே பிறந்த
அன்னையால்—யசோதையாகிற தாயாராலே
அன்று—
வெண்ணெய்வார்த்தையுள்—வெண்ணெய்க்களவு வார்த்தை பிறந்தவளவிலே
சீற்றமுண்டு—சீறப்பட்டு
அழு—அழுதுதோப்புக்கண்டமிட்ட
கூத்தன்—கூத்தையுடையவனை
அப்பன் தன்னை—லோகோபகாரகனை
குருகூர்ச்சடகோபன்—ஆழ்வார்
ஏத்திய—ஸ்தோத்ரரூபமாகவருளிச்செய்த
தமிழ்மாலை—த்ராவிட ஸந்தர்ப்பரூபமான
ஆயிரத்துள்ளும்—ஆயிரத்துள்ளும்
இவை—(விமுகரை அபிமுகராக்கிக் கொண்ட அத்விதீயமான) இவை
ஓர்பத்தும்—பத்தையும்
இசையொடும்—இசையோடேகூட
நாத்தன்னால்—நாவுக்கு ப்ரயோஜநமாக
நவில—செறிய.
உரைப்பார்க்கு—உரைப்பார்க்கு
நல்குரவு—பகவதலாபமாகிற தாரித்ர்யம்
இல்லை—இல்லை.
இது—ஆசிரியத்துறை. (௧௧)

ஆறு;—(ஆய்ச்சியாகிய) - அதிஸ்நேஹிநியான யசோதைப் பிராட்டி, "வெண்ணெய்களவுகண்டாய்' என்று பொடிந்தபோது போலே, ஆழ்வார் தாம் ப்ரணயகோபத்தாலே "எம்பெருமானோடு கலப்பேனல்லேன்" என்றுஅகல, அது பொறுக்கமாட்டாமே தளர்ந்த தளர்த்தியை அநுஸந்தித்து இனியராய் அவ்வெம்பெருமானை ஏத்தின இத்திருவாய்மொழியை ப்பாவவ்ருத்தியின்றிக்கே சொன்னார்க்கும், எம்பெருமான் ஸந்நிஹிதனாயிருக்கச் செய்தே ‡பிறங்கித் தாம்பட்ட து:க்கம் படவேண்டா வென்கிறார்.

ஆறும்பத்து இரண்டாந்திருவாய்மொழி
வ்யாக்யாநம் முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

மூன்றாந்திருவாய்மொழி—நல்குரவும்: ப்ரவேசங்கள்.

ஆறு ;—(நல்குரவும்.)இப்படி "எம்பெருமான்திறத்துப் படுவோமல்லோம்" என்று இருந்த ஆழ்வார், தம்மோடே ஸம்ஸ்லேஷிக்கைக்காகத் திருவிண்ணகரிலே எழுந்தருளின எம்பெருமானுடைய நிரவதிகஸௌந்தர்யத்தாலும் ஸ்வஸம்ஸ்லேஷாலாபஜநிதமான அவஸாதத்தாலும் நிவ்ருத்த ப்ரணயகோபராய் அவனோடே ஸம்ஸ்லேஷித்து, தத்ஸம்ஸ்லேஷஜநித நிரவதிகப்ரீதியாலே, கீழ் ப்ரஸ்துத நானஜகதைஸ்வர்யத்தையும் அசேஷதோஷ ப்ரத்யநீகத்வஸௌந்தர்யாத்யஸங்க்யேய கல்யாணகுணங்களையும் பேசுகிறார்.

ப—மூன்றாந்திருவாய்மொழியில், இப்படிவிமுகரான தம்மை அபிமுகராம் படிபண்ணிக்கொண்ட வருத்தாகாரப்ரஸங்கத்தாலே, பரஸ்பரவிருத்தமான பதார்த்தங்களைத் தனக்கு விபூதியாக கடிப்பித்துக்கொண்டு நிற்கவல்ல ஈஸ்வரனுடைய அகடிதகடநாஸக்தியை யபரோக்ஷித்து, அதுக்கடியான ஸர்வவ்யாபகத்வத்தையும், இதரவிஸஜாதீயதையையும். உஜ்ஜ்வல கீர்த்தித்வத்தையும், அதிஸயித க்ருபாயோகத்தையும், லீலா விபூதிநிர்வாஹகத்வத்தையும், ஆஸ்ரிதாநுபாவ்யமான ஔஜ்ஜ்வல்யத்தையும், ஸர்வலோகஸரண்யத்வத்தையும், ஆஸ்ரிதபவ்யதையையும், நிருபமோபகாரகத்வத்தையும், அஸாதாரண ரக்ஷகத்வத்தையும் அநுஸந்தித்து, இவ்வோவாகாரங்களாலே அகடிதங்களை கடிப்பிக்கவல்லவன் நித்யஸம்ஸாரிகளான நம்மையும் நித்யஸூரிகளோடே சேர்க்கவல்லவனென்று அவனுடைய பலப்ரதத்வஸக்தியையுமநுஸந்தித்து, தாம் கண்டபடியே உபதேசித்தருளுகிறார்.

ஈடு ;—" 'இப்படி தாழநின்றவன் ஸர்வேஸ்வரனென்கிறார்' என்று பிள்ளான் பணிக்கும்" என்றருளிச்செய்வர். அதாகிறது- "யாவையும்யாவரும்பிழையாமல் - பிணக்கி" என்று கீழே ப்ரஸ்துதமான ஸர்வேஸ்வரத்வத்தை யருளிச்செய்கிறார் என்று. "இதிலே ஒருவாசிதோற்ற பட்டரருளிச்செய்வர்" என்று ஜீயரருளிச்செய்வர். அதாவது - "சேரோம்" என்ற அபிஸந்தியைக் குலைத்துத் தம்மைச் சேரவிட்டுக்கொண்ட ஆஸ்சர்யத்தைக்கண்டு விஸ்மிதராகிறாரென்று. சேரவிட்டுக் கொண்டபடி தான் அநேகமிறே. முதல்தன்னிலே தம்மையும் அறியாதே அவனையும் அறியாதேயிருக்க, தன்படிகளையறிவித்துக் கூடவிட்டுக்கொண்டான் ; உள்ளே புகுர நின்றுஸ்வநிகர்ஷத்தையும் அவனுடைய உத்கர்ஷத்தை

யும் அநுஸந்தித்து 'நாம் அங்குத்தைக்கு அயோக்யர்'' என்று அகல, தன் செல்லாமையைக்காட்டிப் பொருந்தவிட்டுக்கொண்டான்; †(வளவேழுலகிலே). இனி, அவைபோலன்றிறே இது; ஒன்றால் பரிஹரிக்கலாமதன்றே. அகலில் குற்றம், அணுகில் குற்றமாயிருப்ப தொன்றிறே! ஜாதிசண்டாளனைநோக்கினால் ப்ராயஶ்சித்தமுண்டு; ப்ரணயாபராதசண்டாளர்க்கு அதுவுமில்லை.

ஆக, இப்படிகளாலே தன செல்லாமையைக்காட்டி அவன் பொருந்தவிட்டுக் கொண்டபடியைக்கண்டு விஸ்மிதராகிற இவர்க்கு, "இவ்வளவல்லகாணும் நம்முடைய ஆஶ்சர்யங்களிருக்கும்படி; லோகத்தில் தன்னில்தான் சேராத விருத்தபதார்த்தங்களுமெல்லாம் நம்மோடே சேர்ந்திருக்கிறபடி பாரீர்; ஆனபின்பு, நம்மோடுசேராதாரில்லைகாணும்!'' என்று தன்னுடைய விருத்தவிபூதிகத்வத்தைக் காட்டிக்கொடுக்கக் கண்டு, "இது இருந்தபடி என்?'' ‡கொடுத்த சைதந்யத்தைக்கொண்டு அகலுகைக்கு உடலாயிருக்கிற இவற்றையெல்லாம் கூடவிட்டுக்கொடு நிற்கிற படிகளும்,—இனி நிமித்தமானது உபாதாநமாகமாட்டாது; உபாதாநமானது நிமித்தமாக மாட்டாது; இங்ஙனேயிருக்க—இவையெல்லாம் தானாயிருக்கிற படியையும், இவற்றோடுகூடியிருக்கச்செய்தேயும் இவற்றில்தோஷங்கள் தனக்கு ஸ்பர்ஶியாமலிருக்கிறபடியையும், தோஷந்தட்டாமல் கடக்கவிருக்கையன்றிக்கே நியந்தாவாயிருக்கிறபடியையும்,—இனி நாட்டில் ப்ராப்யமானது ப்ராபகமாகமாட்டாது; ப்ராபகமானது ப்ராப்யமாகமாட்டாது; இங்ஙனேயிருக்க ப்ராப்யப்ராபகங்கள் இரண்டும் தானேயாயிருக்கிறபடியையும், மற்றும் இவனுடைய ஸௌந்தர்யஶீலாதிகளையும் அநுஸந்தித்து, இப்படி உபகாரஶீலனான ஸர்வேஶ்வரன் திருவிண்ணகரிலே வந்து ஸந்நிஹிதனானான். இவனல்லது தமக்குப்பரமபந்துக்களில்லை' என்று அறுதியிட்டு, 'இவன் திருவடிகளல்லது பற்றில்லை' என்று பேசுகிறாராயிருக்கிறது.

முதல் திருவாய்மொழியிலே பரத்வாநுபவம்பண்ணி, மூன்றாந்திருவாய்மொழியிலே ஸௌலப்யத்தையநுஸந்தித்து "எத்திறம்'' என்றுகிடந்தார். இங்கு, "போகுநம்பீ'' என்று தள்ளச்செய்தேயும் கால்வாங்கமாட்டாதே நின்ற நீர்மையை அநுஸந்தித்து அதுக்குஎதிர்த்தட்டான பரத்வத்தை அநுஸந்திக்கிறார்; *மயர்வற மதிநலமருளப்பெற்றவரிறே; மேன்மையை அநுஸந்திப்பது நீர்மையை அநுஸந்திப்பதாமத்தனையிறே.

ஈடு ; அவ ;—விருத்த விபூதிகனான ஸர்வேஶ்வரனைத் திருவிண்ணகரிலே காணப் பெற்றேனென்கிறார்.

நல்குரவும்செல்வும் நரகும்சுவர்க்கமுமாய் *
வெல்பகையும்நட்பும்விடமுமமுதமுமாய் *
பல்வகையும்பரந்த பெருமானென்னையாள்வானை *
செல்வம்மல்குகுடித் திருவிண்ணகர்க்கண்டேனே. (க)

ப ;—முதற்பாட்டில், ப்ரீத்யப்ரீதிஹேதுவான விருத்தார்த்தங்களை விபூதியாகவுடைய ஸாவ்யாபகனைத் திருவிண்ணகரிலே கண்டே னென்கிறார்.

நல்குரவும்—பதார்த்தஸங்கோசரூபதாரித்ர்யமும்
செல்வும்—† தத்விகாஸரூபமான ஸம்பத்தும்
நரகும்—து:கஸ்தாநமான நரகமும்
சுவர்க்கமும்—ஸுகஸ்தாநமான ஸ்வர்க்கமும்
ஆய்—ஆய்
வெல்—எதிர்த்தவரையைச்சாய்க்கும்
பகையும்—ஶாத்ரவமும்
நட்பும்—அதுக்கெதிர்த்தட்டான மைத்ரமும்
விடமும்—முடிக்கும்விஷமும்
அமுதமும்— உஜ்ஜீவிப்பிக்கும் அம்ருதமும்
ஆய்—ஆய். (இப்படி)
பல்வகையும்—பலவகையாலும்
பரந்த—வ்யாப்தனான
பெருமான்—ஸர்வாதிகனாய்
என்னை—இவ்வாகாரத்தையெனக்கு ப்ரகாஶிப்பித்து
ஆள்வானை—(அடிமைகொண்ட) ஸ்வாமியானவனை
செல்வம்—பகவதநுபவைஶ்வர்யம்
மல்கு—மிகாநிற்கிற
குடி—ஸஜ்ஜநஸமவாயத்தையுடைய
திருவிண்ணகர்—திருவிண்ணகரிலே
கண்டேன்—அபரோக்ஷிக்கப்பெற்றேன். ஆயென்கிறது ப்ரதி பதம் சேர்த்துக்கொள்வது. (க)

ஆறு ;—தாரித்ர்ய ஸம்பந் நரக ஸ்வர்க்காஶ்லேஷ விஶ்லேஷ விஷாம்ருத ப்ரப்ருதி விவிதபதார்த்தாந்தராத்மபூதனாய், ஸர்வேஶ்வரனாயிருந்துவைத்து என்னோடே ஸம்ஶ்லேஷித்த வெம்பெருமானை, தத்கைங்கர்ய ரஸிகவஸம்பத் ஸம்ருத்த திவ்யஜந பரிபூர்ணமான திருவிண்ணகரிலே கண்டேனென்கிறார்.

ஈடு ; அவ ;—இரண்டாம்பாட்டு. ஸ்வயத்நத்தாலே ஒருவர்க்கும் காணவொண்ணாத பெருமையையுடையவனாய்வைத்து என்னை அடிமைகொள்ளுகிறவன் ஊரான திருவிண்ணகர் ஸர்வவிலக்ஷணமெனகிறார்.

கண்டவின்பம்துன்பம் கலக்கங்களும்தேற்றமுமாய் *
தண்டமும்தண்மையும் தழலும் நிழலுமாய் *
கண்டுகோடற்கரிய பெருமானென்னையாள்வானூர் *
தெண்திரைப்புனல்சூழ் திருவிண்ணகர்நன்னகரே. (௨)

ப—அநந்தரம். அந்த ப்ரீத்யப்ரீதிரூப ஸுகதுःகங்களை அநுஸந்தித்து வரும் பதார்த்தங்களை விபூதியாகவுடையனாய், தத்ஸஜாதீயதயா த்ரஷ்டுமஶக்யனான ஸர்வேஶ்வரனுக்கு அஸாதாரணதேஶம் திருவிண்ணகரென்கிறார்.

கண்ட—லோகத்ருஷ்டமான
இன்பம்துன்பம்—ஸுகதுःகங்களையும்
கலக்கங்களும்—துःகமடியாகவரும் சிந்தாவ்யாகுலதைகளும்
தேற்றமும் ஆய்—ஸுகமடியாகவரும் தெளிவுகளுமாய்
தண்டமும்—(அக்கலக்கமடியாகவரும்) கோபமும்
தண்மையும்—(தேற்றமடியாக வரும்) ப்ரஸாதமும்
தழலும்—(கோபஸமமான ஔஷ்ண்யத்தையுடைய) அக்நியும்
நிழலும்—(ப்ரஸாதஸமமான ஶைத்யத்தையுடைய) நிழலும்
ஆய்—ஆய்
கண்டுகோடற்கு—ஸ்ஜாதீயதயா காண
அரிய—அரியனாயிருக்கிற
பெருமான்—ஸர்வேஶ்வரனாய்
என்னை—என்னை
ஆள்வான்—அடிமைகொண்டவன்
ஊர்—ஊர்
தெண்—தெளிந்தும்
திரை—திரைக்கிளப்பத்தையுமுடைய
புனல்—ஜலத்தாலே
சூழ்—சூழப்பட்ட
திருவிண்ணகர்—திருவிண்ணகராகிற
நல்நகர்—தர்ஶநீய நகரம்.

ஆறு;—(கண்ட இன்பம்.) உபலப்யமான ஸுகதுःக்க காலுஷ்ய ப்ரஸாத நிக்ரஹாநுக்ரஹ ஶீதோஷ்ணாத்யந்யோந்ய விருத்த வஸ்த்வந்தராத்ம பூதனாய், ஸுதுர்த்தர்ஶனாயிருந்த ஸர்வேஶ்வரனை நான் கண்ணாலேகண்டு அடிமை செய்யும்படி புகுந்தருளின திருநகரி திருவிண்ணகரென்று திருநகரியை அநுபவிக்கிறார். (௨)

ஈடு; அவ;—மூன்றாம்பாட்டு. திருவிண்ணகரப்பனுடைய கல்யாண குணங்களையொழிய வேறு ஒருவர்க்கும் உத்தாரகமில்லையென்கிறார்.

நகரமும்நாடுகளும் ஞானமும்மூடமுமாய் *
நிகரில்சூழ்சுடராயிருளாய் நிலனாய்விசும்பாய்ச் *
சிகரமாடங்கள்சூழ் திருவிண்ணகர்சேர்ந்தபிரான் *
புகர்கொள்கீர்த்தியல்லாலில்லை யாவர்க்கும்புண்ணியமே. (௩)

ப.—அநந்தரம், ஜ்ஞாநாஜ்ஞாநாநுபந்தி பதார்த்தங்களைவிபூதியாகவுடைய ஸர்வேஶ்வரனுடைய உஜ்ஜவலமான குணப்ரதையையொழிய வேறு ஒருவர்க்கும் உத்தாரகமில்லையென்கிறார்.

நகரமும்—விசேஷஜ்ஞப்ரசுரமான நகரமும்
நாடுகளும்—அவிசேஷஜ்ஞப்ரசுரமான நாடும், (தத்ததாகாரஹேதுவான)
ஞானமும்—ஜ்ஞாநமும்
மூடமும்—மௌக்த்யமும்
ஆய்—ஆய் (அந்த ஜ்ஞாநாஜ்ஞாந ஸாம்யத்தையுடைத்தாய்)
நிகர்—ஒப்பு
இல்—இன்றியே
சூழ—பரந்த
சுடர்—ப்ரகாஶமும்
ஆய்—
இருள்—(ததாவிதமான) இருளும்
ஆய்—ஆய்
நிலன்—(இருளுக்கு ஸ்த்தாநமான) பூமியும்
ஆய்—
விசும்பு—(ப்ரகாஶஸ்த்தாநமான) ஆகாஶமும்
ஆய்—ஆய்
சிகரம்—சிகரங்களையுடைத்தான
மாடங்கள்—மாடங்கள்
சூழ்—சூழ்ந்த
திருவிண்ணகர்—திருவிண்ணகரிலே
சேர்ந்த—பொருந்திவர்த்திக்கிற
பிரான்—ஸர்வேஶ்வரனுடைய
புகர்—ஔஜ்ஜ்வல்யத்தை
கொள்—உடைத்தான
கீர்த்தி—குணப்ரதையை
அல்லால்—ஒழிய
யாவர்க்கும்—ஸர்வர்க்கும்
புண்ணியம்—உஜ்ஜீவநஹேதுவான ஸுக்ருதம்
இல்லை—இல்லை (௩)

ஆறு ;—(நகரமும்.)-நகரஜநபதஜ்ஞாநாஜ்ஞாந தமஃப்ரகாஶ அவநிககந ஸர்வநியந்தாவாயிருந்த, சிகரமாடங்கள்சூழ் திருவிண்ணகர்ச் சேர்ந்தபிரானுடைய நிரவதிக காருண்யமல்லது மற்று உஜ்ஜீவநோபாயமில்லையென்று, தமக்கு உஜ்ஜீவநோபாயமானகாருண்யகுணத்தை அநுபவிக்கிறார். (௩)

ஈடு ; அவ ;—நாலாம்பாட்டு. புண்யபாபாதியாய் எம்பெருமானுக்குவிஶேஷணத்வேந தோற்றுகிற விபூதியெல்லாம் அவன் க்ருபையாலே உண்டாயிற்று என்கிறார்.

புண்ணியம்பாவம் புணர்ச்சிபிரிவென் றிவையாய் *
எண்ணமாய்மறப்பாயுண்மையாயின்மையாயல்லனாய் *
திண்ணமாடங்கள்சூழ் திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான் *
கண்ணனின்னருளேகண்டுகொண்மின்கள் கைதவமே. (௪)

ப—அநந்தரம், கீழ்ச்சொன்ன புகர்கொள் கீர்த்தியாவது - புண்யபா பாநுபந்தி பதார்த்தவிபூதிகளுன க்ருஷ்ணனுடைய நிர்ஹேதுகக்ருபையென்கிருர்.

புண்ணியம்பாவம்—இஷ்டாநிஷ்ட ஹேதுவான புண்யபாபங்கள்
புணர்ச்சிபிரிவு—தத்க்ருதமான தத்தத் ஸம்ஸ்லேஷவிஸ்லேஷங்கள்
என்று—என்று
இவைஆய்—இவையாய்
எண்ணம்—ஸம்ஸ்லேஷ விஸ்லேஷ கணைநயும்
ஆய்—
மறப்புஆய்—விஸ்மரணமுமாய்
உண்மைஆய்இன்மை ஆய்—தத்த தநுரூப வஸ்துக்களுடைய ஸத்பாவாஸத்பாவங்கள் ஆய்வைத்து
அல்லன்ஆய்—தததத்கர்மவஸ்யனன்றியே இருப்பானுய்

திண்ணம்—ஸ்த்திரமான
மாடங்கள்—மாடங்கள்
சூழ்—சூழ்ந்த
திருவிண்ணகர்—திருவிண்ணகரிலே
சேர்ந்த—சேர்ந்த
பிரான்—ஸர்வாதிகனுன
கண்ணன்—க்ருஷ்ணனுடைய
இன்—அதிஸயித போக்யமாம்படி அநந்யப்ரயோஜநமான
அருளே—க்ருபையையே
கண்டுகொண்மின்கள்—கீழ்ச் சொன்ன உத்தாரக கீர்த்தியாகக் கண்டுகொள்ளுங்கோள்
கைதவமே—இது கைதவமோ ? பரமார்த்தமென்று கருத்து. (௪)

ஆறு ;—(புண்ணியம்.)-புண்யபாப தத்பலபூத அபிமதவிஷய ஸம்ஸ்லேஷ விஸ்லேஷ ஸ்மரணவிஸ்மரண பாவாபாவாதி ஸகல பதார்த்தாந்தர்யாமிதயா வ்யாப்தனுயிருந்துவைத்தே தத்கததோஷைஷ ரஸம்ஸ்ப்ருஷ்டனு யிருந்த, திண்ணமாடங்கள்சூழ் திருவிண்ணகர்ச் சேர்ந்தபிரானுடைய க்ருபையாலேஸகலபுருஷார்த்தஸாதந பூத கரணகளேபரப்ரப்ருதி ஸர்வபதார்த்தங்களும் ஸ்ருஷ்டமான இவ்வர்த்தம் திருவிண்ணகரிலே ப்ரத்யக்ஷிக்கலா மென்கிருர். (௪)

ஈடு; அவ:—அஞ்சாம்பாட்டு. சிறியார் பெரியா ரென்னுதே ஸர்வர்க்கும் ரக்ஷகன் திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரா னென்கிருர்.

கைதவம்செம்மை கருமைவெளுமையுமாய் *
மெய்பொய்யிளமைமுதுமை புதுமைபழமையுமாய் *
செய்ததிண்மதிள்சூழ் திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான் *
பெய்தகாவுகண்டீர் பெருந்தேவுடைமூவுலகே. (௫)

ப.—அநந்தரம், உத்க்ருஷ்டாபக்ருஷ்ட ரூப ஸமஸ்தவஸ்துப்ரகாரகனான ஸர்வேஶ்வரனுக்கு ஸகலஜகத்தும் லீலோத்யாநமென்கிறார்.

கைதவம்—(அபக்ருஷ்டமான) கௌடில்யமும்
செம்மை—(உத்க்ருஷ்டமான) ஆர்ஜவமும். (தத்தத்ஸத்ருஶமான)
கருமை வெளுமையும் ஆய்—கருமை வெளுமையும் ஆய்
மெய்பொய்—அப்படி உத்க்ருஷ்டாபக்ருஷ்டரூப ஸத்யாஸத்யங்கள்
இளமைமுதுமை—யௌவநவார்த்தகங்கள்
புதுமைபழமையும் ஆய்—அபிநவத்வ ஜீர்ணதைகளும் ஆய்
செய்த—தொழிற்படச்செய்யப்பட்டு
திண்—சிக்கெனவையுடைத்தான
மதிள்—மதிளாலே
சூழ்—சூழப்பட்ட
திருவிண்ணகர்—திருவிண்ணகரிலே
சேர்ந்த—சேர்ந்த
பிரான்—ஸர்வேஶ்வரன்
பெய்த—வைத்த
காவுகண்டீர்—லீலோத்யாநங்கிடீகோள்
பெருந்தேவு—ப்ரஹ்மாத்யுத்க்ருஷ்ட தேவதைகளை
உடை—உடைத்தான
மூவுலகு—த்ரைலோக்யமும், (௫)

ஆறு ;—(கைதவம்.) - ஆர்ஜவாநார்ஜவ ஸிதநீல ஸத்யாஸத்ய யௌவநவார்த்தக நவத்வாநவத்வாதிரூபனான எம்பெருமான் ப்ரஹ்மாதி ஸ்தம்பபர்யந்த நிகிலஜந்து பரிபூர்ணமான ஸர்வலோகங்களுக்கும் ரக்ஷகனென்கிறார். (௫)

ஈடு; அவ;—ஆறும்பாட்டு. "நானல்லேன்" என்னச்செய்தே தன்குணசேஷ்டிதங்களைக்காட்டி மறக்கவொண்ணாதபடி கலந்து அத்தாலே உஜ்ஜ்வலனாயிருக்கிறவன் திருவிண்ணகரிலே நின்றருளின ஸர்வேஶ்வரன்கிடீரென்கிறார்.

மூவுலகங்களுமாயல்லனா யுகப்பாய்முனிவாய் *
பூவில்வாழ்மகளாய்த் தவ்வையாய்ப் புகழாய்ப்பழியாய் *
தேவர்மேவித்தொழும் திருவிண்ணகர்சேர்ந்தபிரான் *
பாவியேன்மனத்தே உறைகின்றபரஞ்சுடரே. (௬)

ப.—அநந்தரம், விலக்ஷணாவிலக்ஷண பதார்த்தங்களை விபூதியாகவுடைய ஸர்வேஶ்வரன் ஆஶ்ரிதபவ்யதையால் வந்த ஔஜ்ஜ்வல்யத்தை யுடையவனென்கிறார்.

மூவுலகங்களும் ஆய்—(ஸ்ருஜ்யத்வ கர்மவஶ்யத்வ குணத்ரயாத்மகத்வாதிகளாலே அவிலக்ஷணமான) த்ரைலோக்யமும் ஆய்
அல்லன் ஆய்—தத்ப்ரதிபடநித்ய விபூதியுக்தனும் ஆய்
உகப்பு ஆய்முனிவுஆய்—அப்படி விலக்ஷணவிலக்ஷணாத்மகராகத் வேஷங்களையும்
பூவில்வாழ்மகளாய்—ப்ரீதிஹேது வான லக்ஷ்மியையும்
தவ்வைஆய்—அப்ரீதிஹேதுவான ஜ்யேஷ்டையையும் (தத்தத்கார்யமான)
புகழ்ஆய்—புகழையும்
பழிஆய்—பழியையும் ப்ரகாரமாகவுடையனாய், (இந்தவிபூதியோகத்தாலே வந்த நீர்மையை யநுபவிக்கைக்காக
தேவர்—ஸூரிகள்
மேவி—பொருந்தி
தொழும்—தொழாநிற்கிற
திருவிண்ணகர்—திருவிண்ணகரிலே
சேர்ந்த—சேர்ந்த
பிரான்—ஸர்வேஶ்வரன்
பாவியேன்—தான் மேல்விழுந்து வரிலும் வைமுக்யம்பண்ணும் பாபத்தையுடையேனை என்
மனத்தே—நெஞ்சிலே
உறைகின்ற—நித்யவாஸம் பண்ணி நின்றுகொண்டு
பரஞ்சுடர்—அத்தாலே நிரதிஶய ஔஜ்ஜ்வல்யத்தையுடையனானான் (௬)

ஆறு;—(மூவுலகங்களுமாய்) - நிகிலலோக ததந்தர்வர்த்தி ப்ரீத்யப்ரீதி லக்ஷ்ம்யலக்ஷ்மீ கீர்த்யகீர்த்தி ப்ரப்ருதி கல்யாண ஹேய ஸகலபதார்த்தாந்தராத்மபூதனாய், கல்யாணபதார்த்தாந்தர் வர்த்திதையாலே யாதொருபடி தோஷந்தட்டாதே யிருக்கும், அப்படியே ஹேயபதார்த்தாந்தர்வர்த்திதையாலும் நிர்த்தோஷனாயிருக்கும், அதெங்ஙனே யறிந்தபடி என்னில்? - ஸமஸ்தஹேயாஸ்பதமான என்னுடைய நெஞ்சிலேபுகுந்து வைத்து ஒருதோஷமுந் தட்டாதே நிரதிஶய தீப்தியுக்தனாயிருக்கையாலே என்கிறார். (௬)

௭; அவ;—ஏழாம்பாட்டு எத்தனையேனும் அளவுடையார்க்கும் வலியபுகல் அவனல்லதில்லை யென்கிறார்.

பரஞ்சுடருடம்பா யழுக்குப்பதித்த வுடம்பாய் *
கரந்தும் தோன்றியும் நின்றும் கைதவங்கள் செய்தும் *
விண்ணோர் சிரங்களால் வணங்கும் திருவிண்ணகர் சேர்ந்தபிரான் *
வரங்கொள்பாதமல்லாலில்லை யாவர்க்கும்வன்சரணே. (௭)

ப —அநந்தரம், ஆஶ்ரிதாநாஶ்ரிதவிஷயமான ஆகாரபேதத்தையுடைய ஸர்வேஶ்வரன் திருவடிகளே ஸர்வர்க்கும்ப்ரபலாஶ்ரயமென்கிறார்.

பாஞ்சுடருடம்புஆய் — ஆஶ்ரிதாநுபாவ்யமான அப்ராக்ருதவிக்ரஹத்தையும், (அநாஶ்ரிதர்க்கு அநுபாவ்யமான)
அழுக்கு—ஹேயதையால்
பதித்த—பூர்ணமான
உடம்புஆய்—ஜகதாகாரத்தையும் உடையனாய்
கரந்தும்—(அநாஶ்ரிதவிஷயத்தில்) ப்ரகாஶியாதேயும்
தோன்றியும்—(ஆஶ்ரிதவிஷயத்தில்) ப்ரகாஶித்தும்
நின்றும்—(ப்ரகாஶிக்கும் விஷயத்தில்) ஸ்த்திரனாயும்
கைதவங்கள் செய்தும்—(இதர விஷயத்தில்) அஸ்த்திரனாயும்
ஆய்—இருப்பானாய்
விண்ணோர்—ப்ரஹ்மருத்ராதிகள், (ஸ்வாபிமத ஸித்த்யர்த்தமாக)
சிரங்களால்—தந்தாந்தலைகளாலே
வணங்கும்—வணங்கும்படி
திருவிண்ணகர்—திருவிண்ணகரிலே
சேர்ந்த—சேர்ந்த
பிரான்—ஸர்வேஶ்வரனுடைய
வரம்—ஸமாப்யதிகதரித்ரமான ஶ்ரைஷ்ட்யத்தை
கொள்—உடைய
பாதம்—திருவடிகள்
அல்லால்—ஒழிய
யாவர்க்கும்—ஸர்வசேதநர்க்கும்
வன்—அபய ஸ்த்தலமாம்படி ப்ரபலமான
சரண்—புகலிடம்
இல்லை—வேறில்லை (௭)

ஆறு ;—(பாஞ்சுடர்) - நிரவதிக தேஜோமய திவ்யரூபனாய், ஸமஸ்தஹேயாஸ்பத ஸர்வஜகச்சரீரனாய், ஸமஸ்தஹேயரஹிதனாய், துர்விஜ்ஞேயனாய் ஆஶ்ரிதார்த்தமாகப் பிறந்தருளியும் அவர்களோடு ஸம்ஶ்லேஷித்தும் ப்ரதிகூலர்க்குக் கைதவம்செய்தும், விண்ணோர் சிரங்களால் வணங்கும் திருவிண்ணகர்சேர்ந்த பிரானுடைய திருவடிகளல்லது ஒருவர்க்கும் ஆத்மரக்ஷகமில்லையென்கிறார். (௭)

ஈடு; அ;—எட்டாம்பாட்டு. எனக்குப் புகலான மாத்ர மன்றிக்கே மற்றுமெல்லாம் திருவிண்ணகர்சேர்ந்தபிரா னென்கிறார். (எல்லார்க்கும் புகலென்றமாத்ரமன்றிக்கே, எனக்கு விசேஷித்துப் புகலென்கிறு ராகவுமாம்.)

வன்சரண்சுரர்க்காயசுரர்க்குவெங்கூற்றமுமாய் *
தன்சரண் நிழற்கீழுலகம் வைத்தும் வையாதும் *
தென்சரண்திசைக்குத் திருவிண்ணகர் சேர்ந்தபிரான் *
என்சரணென்கண்ணனென்னையாளுடையென்னப்பனே. (அ)

ப.—அநந்தரம். அநுகூல ப்ரதிகூல விஷயங்களை ஸ்வபாவங்களையுடைய ஸர்வேஶ்வரனாய் ஆஶ்ரிதபவ்யனான க்ருஷ்ணன் எனக்கு அஸாதாரணமான புகலிடமென்கிறார்,

சுரர்க்கு—அநுகூலரான தேவர்களுக்கு
வன்—அப்ரதிஹதமான
சரண்—புகலிடம்
ஆய்—ஆய்
அசுரர்க்கு—ப்ரதிகூலரான அசுரர்களுக்கு
வெம்—க்ரூரமான
கூற்றமும்—ம்ருத்யுவும்
ஆய்—ஆய்
உலகம்—தாத்ருஶ விபாகத்தையுடைய லௌகிகரை
தன்—தன்
சரண்நிழல்கீழ்—பாதச்சாயையிலே
வைத்தும்—ஒதுக்கியும்
வையாதும்—ஒதுக்காதும்
ஆய்—இருப்பானாய்
தென்திசைக்கு—தெற்குத் திக்குக்கு
சரண்—புகலிடமான
திருவிண்ணகர்—திருவிண்ணகரிலே
சேர்ந்த—சேர்ந்த
பிரான்—ஸர்வேஶ்வரனாய்
என்—என்னை யங்கீகரிக்கைக்காக
கண்ணன்—க்ருஷ்ணனாய்
என்னை ஆளுடை—என்னை யடிமை கொண்ட
என்னப்பன்—ஸ்வாமியானவன், (ஸர்வப்ரகாரத்தாலும்)
என்—எனக்கு
சரண்—அஸாதாரணமான புகலிடம்.

ஆறு ;—(வன்சரண்.) - தன் திருவடிகளை ப்ராபிக்கைக்கு விரோதியான ஸமஸ்த பாபங்களையும் போக்கி ஆஶ்ரிதரைத் தன் திருவடிகளின் நிழலிலே வைத்தருளும் ஸ்வபாவனாய் ஆஶ்ரிதவிரோதிகளைத் தன் திருவடிகளிற் சேராதே அவர்களுக்கு அதிபயங்கர ம்ருத்யுபூதனாயிருந்த எம்பெருமான், தென்திசைக்குப் புகலிடமாகத் திருவிண்ணகரிலே புகுந்தருளியிருந்து எனக்கு ப்ராப்யமாய், எனக்கு த்ருஷ்டியாய் என்னைக்கொண்டு ஸர்வஶேஷவ்ருத்தியுங் கொண்டருளி எனக்கு ஸ்வாமியானான் என்கிறார். (அ)

ஈடு; அவ;—ஒன்பதாம்பாட்டு எனக்குஶரணமான மாத்ரமல்ல, மற்றுமெல்லாம் அவனையென்கிறார். எனக்கு ஸர்வப்ரகாரத்தாலும் உபகாரகனாய், தன் பாதச்சாயையை, "அல்லேன்" என்ன, வலிய எனக்குத் தந்தானென்கிறார்.

என்னப்பனெனக்காயிகுளாயென்னைப்பெற்றவளாய் *
பொன்னப்பன்மணியப்பன் முத்தப்பனென்னப்பனுமாய் *
மின்னப்பொன்மதிள்சூழ் திருவிண்ணகர்சேர்ந்தவப்பன் *
தன்னொப்பாரில்லப்பன் தந்தனன்தனதாள்நிழலே. (௯)

ப.—அநந்தரம், பரஸ்பரவிருத்தாகாரமானபந்துவர்க்கமும் ஸ்ப்ருஹணீய வஸ்துக்களும் தனக்கு ப்ரகாரமாக வுடையனென தன்னுடைய உபகாரகத்வத்துக்கு ஒப்பில்லாத ஸர்வேஸ்வரன், தன்னுடைய பாதச்சாயையை எனக்குத் தந்தருளினானென்கிறார்.

எனக்கு—எனக்கு அஸாதாரணனாய்
என்—ஸத்தாஹேதுவாயிருந்துள்ள
அப்பன்—பிதா
ஆய்—ஆய்
இருள்—அந்தபும்ஸ்த்வத்துக்கு விருத்தமான ஸ்த்ரீத்வத்தையுடைய செவிலித்தாயானவள்
ஆய்—ஆய்
என்னைப் பெற்றவள் ஆய்—அவளைப் போலேவளர்த்து விடுகையன்றிக்கே பெற்றவளான வேறுபாட்டையுடைய நற்றாயாய்
பொன் அப்பன்—பொன்போலே தன்னுடையஸ்ப்ருஹணீயதையை ப்ரகாசிப்பித்தும்
மணி அப்பன்—(அதிற்காட்டில் ஔஜ்ஜ்வல்யத்தாலும் மஹார்ஹதையாலும் வேறுபட்ட) ரத்நம் போலே தன்னுடைய தேஜஸ்விதையை ப்ரகாசிப்பித்தும்
முத்து அப்பன்—(அதிற்காட்டில் சீர்மையாலும குளிர்த்தியாலும் வ்யாவ்ருத்தமான) முத்துப்போலே தன் ஸ்ரீதளமான சீர்மையை ப்ரகாசிப்பித்தும்
என் அப்பன் உம்—(இப்படி பஹுமுகமாக) எனக்குபகாரகனும்
ஆய்—ஆய்
மின்ன—ஒளிவிடும்படி
பொன—பொன்னான
மதிள்—மதிளாலே
சூழ்—சூழப்பட்ட
திருவிண்ணகர்—திருவிண்ணகரிலே
சேர்ந்த—வர்த்திக்கிற
அப்பன்—ஸர்வஸ்வாமியாய், (இப்படி ஸர்வப்ரகாரோபகாரகத்வத்துக்கு)
தன்—தனக்கு
ஒப்பாரில்—ஒப்பில்லாத
அப்பன்—மஹோபகாரகனானவன்
தன்—தன்
தாள்—திருவடிகளின்
நிழல்—நிழலை
தந்தனன்—எனக்குத்தந்தருளினான் (கூ)

ஆறு ;—(என்னப்பன்.) - *சுட்டுரைத்த நன்பொன்னொளியையும் அத்யுஜ்ஜ்வலமான ரத்நத்தினொளியையுமுடைத்தான திருவுடம்பை யுடையனாய், அழகியனாய்த் தன்னொப்பாரின்றியே யிருந்த திருவிண்ணகர் சேர்ந்த அப்பன், தன்னழகாலே எனக்கு ஸ்வாமியாய், தன்னுடைய ஸௌஸீல்யத்தாலே பெற்றதாயும் வளர்த்த தாயும் பண்ணக்கடவ ஸ்நேஹத்தை என்பக்கலிலே பண்ணி, ஸ்வவிஸ்லேஷஜநிதமான என்னுடைய நிரவதிக ஸந்தாபமெல்லாம்

போம்படி அதிஶீதளமாய் ம்ருதஸஞ்ஜீவநமான தன் திருவடிகளின் நிழலை எனக்குத் தந்தருளினானென்கிறார். (௯)

ஈடு; அவ;—பத்தாம்பாட்டு; அவன்திருவடிகளல்லது மற்று ரக்ஷகமில்லை யென்னுமிடத்தை புத்திபண்ணுங்கோ ளென்கிறார்.

நிழல்வெய்யில்சிறுமைபெருமைகுறுமைநெடுமையுமாய் *
சுழல்வனநிற்பனமற்றுமாயவையல்லனுமாய் *
மழலைவாய்வண்டுவாழ்திருவிண்ணகர்மன்னுபிரான் *
கழல்களன்றிமற்றோர்களைகணிலங்காண்மின்களே. (௧௦)

ப—அநந்தரம், இப்படி பரஸ்பரவிருத்தாகாரமான ஸகலசராசரங்களையும் விபூதியாகவுடைய ஸர்வேஶ்வரன் திருவடிகளல்லது வேறாரக்ஷகமுடையோ மல்லோம்; இத்தை நிரூபித்துக்கொள்ளுங்கோ ளென்று உபதேசித்து முடிக்கிறார்.

நிழல்—தாபஶாந்திகரமானசாயையும்
வெய்யில்—தாபகரமானவாதபமும்
சிறுமை—சிறுமைக்கெல்லையான அணுத்வமும்
பெருமை—பெருமைக்கெல்லையான மஹத்த்வமும், (மத்யமபரிமாணங்களிலுண்டான)
குறுமை—ஹ்ரஸ்வத்வமும்
நெடுமையும்—தீர்க்கத்வமும்
ஆய்—
சுழல்வனநிற்பன—சராசராத்மகமான
மற்றும்—மற்றுமுள்ள பதார்த்தங்களும்
ஆய்—ஆய், (இப்படி ஸர்வஶரீரியாகா நிற்கச்செய்தே)
அவை—அவற்றினுடைய ஸ்வபாவத்தை
அல்லனும்—உடையவனல்லாதவனும்
ஆய்—
மழலை—முக்தமான
வாய்—வாக்வ்யவஹாரத்தையுடைய
வண்டு—வண்டுகள்
வாழ்—ஸ்வபோக்யலாபத்தாலே வாழும்படியான
திருவிண்ணகர்—திருவிண்ணகரிலே
மன்னு—நித்யவாஸம்பண்ணுகிற
பிரான்—ஸர்வேஶ்வரனுடைய
கழல்கள்—திருவடிகளை
அன்றி—ஒழிய
மற்று—வேறு
ஓர்—ஒரு
களைகண்—ரக்ஷகவஸ்துவை
இலம்—உடையோமல்லோம்;
காண்மின்கள்—(இது) நிரூபித்துக் கொள்ளுங்கோள். (௧௦)

ஆறு;—(நிழல்.)-சாயாதப அல்பமஹத்வ தீர்க்கஹ்ரஸ்வ சராசரங்களை ப்ரகாரமாகவுடையனாய், மதுரமாகப்பாடுகிற வண்டுகள் வாழுகிற திருவிண்ணகர் என்னோடு ஸம்ஶ்லேஷிக்கப்பெற்ற தேச

மாகையாலே "இனி ஆத்மாந்தமாக இவ்விடத்தைவிடேன்" என்று எழுந்தருளியிருந்த எம்பெருமானுடைய திருவடிகளல்லது நமக்கு மற்றொருகதியில்லை, அவனுடையகடாக்ஷம் பெறுவதற்கு முன்பு என்னுடைய ஸத்தை யில்லாமையாலும். அவன்கடாக்ஷித்தருளின வாறே நானுளனானகையாலும், நமக்கு அவனல்லது கதியில்லை என்னு மிடம் எல்லார்க்கும் ப்ரத்யக்ஷிக்கலாமென்கிறார். (௧௦)

ஈடு ;—நிகமத்தில் - இத்திருவாய்மொழிவல்லார் நித்யஸூரி களுக்கு நாள் தோறும் கௌரவ்யராவரென்கிறார்.

காண்மின்களுலகீரென்று கண்முகப்பே நிமிர்ந்த *
தாளிணையன் தன்னைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன *
ஆணையாயிரத்துத் திருவிண்ணகர்ப்பத்தும்வல்லார் *
கோணையின்றிவிண்ணோர்க்கென்றுமாவர்குரவர்களே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லவர்கள் ஸூரி களுக்கு நித்யகௌரவ்யராவர்களென்றுபலத்தை யருளிச்செய்கிறார்

உலகீர்—லோகத்தீர்!
காண்மின்கள்—இத்தைக்காணுங் கோள்
என்று—என்று
கண்முகப்பே—பரஸ்பர விருத்தரான வர்கள் கண்ணெதிரே
நிமிர்ந்த—வளர்ந்த
தாளிணையன் தன்னை—திருவடிகளை யுடைய த்ரிவிக்ரமாபதாநத்திற் போலே பரஸ்பரவிருத்த பதார்த் தங்களிலே பலவகையும் பரந்த ஸர்வேஶ்வரனை
குருகூர்—திருநகரிக்கு நிர்வாஹகரான
சடகோபன்—ஆழ்வார்
சொன்ன—அருளிச்செய்ததாய்
ஆணை—பகவதாஜ்ஞாரூபமாயிருக்கிற
ஆயிரத்து—ஆயிரத்தில்
திருவிண்ணகர்—திருவிண்ணகர் விஷயமான
பத்தும்—பத்தையும்
வல்லார்—வல்லவர்கள்
கோணை—ஒருமிறுக்கு
இன்றி—அற
விண்ணோர்க்கு—நித்யஸூரிகளுக்கு
என்றும்—என்றும்
குரவர்கள்—கௌரவ்யர்
ஆவர்—ஆவர்கள்
இது—கலிவிருத்தம் (௧௧)

ஆறு ;—(காண்மின்கள்.) - ஆஶ்ரிதாநாஶ்ரிதவிபாக மின்றியே ஸர்வாத்மாக்களுங்கண்டு வாழுங்கோளென்று அவர்கள் கண்முகப்

பே நிமிர்ந்த தாளிணையன்தன்னைக் குருகூர்ச்சடகோபன் சொன்ன ஆயிரத்துள் எம்பெருமானுடைய ஸர்வநியந்த்ருத்வத்தைச் சொன்ன இத்திருவாய்மொழியை வல்லார் * அயர்வறுமமரர்களுக்கு நிஸ்ஸம்ஶயமாக ப்ரதமபூஜ்யராவரென்கிறார். (௧௧)

திருவாய்மொழி ஆறும்பத்து மூன்றாந்திருவாய்மொழி

வ்யாக்யாநங்கள் முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

நான்காந்திருவாய்மொழி—குரவைப்ரவேசங்கள்.

ஆறு ;—(குரவை.) இப்படி திருவிண்ணகரில் எம்பெருமானைக் கண்டு, அவனுடைய ஸர்வநியந்த்ருத்வ ஸௌசீல்ய ஸௌந்தர்யாதி கல்யாணகுணங்களை அநுபவித்து நிரதிசய ப்ரீதியுக்தராய் ஸம்ப்ராந்தரான ஆழ்வாரைக்கண்டு எம்பெருமான் ப்ரீதனாய் *பிறந்தவாற்றில் இவருடைய இழவெல்லாந் தீரும்படி, தன்னுடைய திவ்யாவதாரந் தொடங்கித் திருநாட்டில் எழுந்தருளுகை பர்யந்தமாக நடுவுள்ள ஸர்வதிவ்யசேஷ்டிதங்களையுங் காட்டியருளக் கண்டநுபவித்து, ததநுபவஜநித நிரவதிகநிர்வ்ருதியாலே, பரிபூர்ண மநோரதனானே னென்கிறார். *

பு.—நாலாந் திருவாய்மொழியில், கீழ்-விருவித்தபூதியோகத்தாலே தன் அகடிதகடநாசக்தியைக்காட்டி "பலப்ரதாநஸமர்த்தன்" என்கிற ப்ரதிபத்தியைப்பிறப்பித்த ஸர்வஸ்மாத்பரனுடைய ஸுகமத்வஸூசநார்த்தமாக அவனுடைய அநந்தசாயித்வத்தையும், ஆச்சர்யாகாரவத்தையையும், அதிசயிதௌஜ்ஜ்வல்யத்தையும், அப்ராக்ருதவிக்ரஹவத்தையையும், அர்த்திகளுக்கபேக்ஷிதகரத்வத்தையும், அந்யாபிமாந நிவர்த்தகத்வத்தையும், அதிசயிதபோக்யாகாரத்தையும், அர்த்தியாயும் அபேக்ஷிதந்தலைக்கட்டிக் கொள்ளும்படியையும், அஸாதாரணசிஹ்நயோகத்தையும், பரஞ்ஜ்யோதிஸ் ஸ்வரூபவத்தையையும் அநுஸந்தித்து, 'ஏவம்ப்ரகாரனான க்ருஷ்ணனுடைய மநோஹாரியான அகிலசேஷ்டிதங்களையும் இங்கேயிருந்து அநவரதாநுபவம் பண்ணப்பெற்ற எனக்கு ஆர் இனி நிகராவர்?' என்று ஹ்ருஷ்டராய்க்கொண்டு, அவனுடைய ஸுலபத்வத்தை ப்ரதிபாதித்தருளுகிறார். *

ஈடு ;—இத்திருவாய்மொழியில் ஆழ்வார் ஸ்ரீவால்மீகிபகவானோடொப்பர். அவனும் ராமாவதாரமல்லது போக்கியறியான் ; அவனுடைய ப்ரபந்தமும் அப்படியே ; இவரும் க்ருஷ்ணாவதாரமல்லதறியார் ; இத்திருவாய்மொழி - க்ருஷ்ண வ்ருத்தாந்தமொழிய வேறொன்றைச் சொல்லாது. (க) "ஹாவொநாநந்த்ருமஹுதி - பாவோநாந்யத்ரகச்சதி" என்றுகொண்டு "பரதசையுங் கூட வேண்டேன்" என்ற திருவடியைப் போலேயாயிற்று இவரும் க்ருஷ்ணாவதாரமொழிய வேறொன்று அறியாதபடி.

(க) ரா-உத்தர-

“சேணுயர் வானத்திருக்கும் தேவபிரான்” என்கிறபடியே கிட்டிநின்று அநுபவிக்கப் பெற்றிலோமென்கிற இழவுதீர, பூமியிலேயாகப் பெற்றது; “தொல்லருள்நல்வினையால் சொலக்கூடுங்கொல்?” என்றிறே இவர் ஆசைப்பட்டது; அதாவது - நா நீர்வந்து திருநாமம்சொல்லுகையாகிறது ஸுக்ருதபலமிறே. *பிறந்தவாற்றில் இவர்க்கு உண்டான இழவெல்லாம் தீரும்படி ஸ்ரீப்ருந்தாவநவ்ருத்தாந்தத்தைக் காட்டிக் கொடுக்கக் கண்டு, அது பூதகாலமாய்த் தோற்றுகையன்றிக்கே ஸமகாலம்போலே கிட்டிநின்றநுபவிக்கிறார்.

*மின்னிடைமடவாரிலே-“அல்லோம்” என்று அகன்று முடிந்து போகப்புக்க தம்மை “ஆவோம்” என்னப்பண்ணிச் சேரவிட்டுக்கொண்டபடியை யநுஸந்தித்து, இப்படி வல்லார் இவனல்லதில்லையென்று தலைக்கட்டுகிறாராயிருக்கிறது. *சன்மம்பலபலவிலும் இப்படி யிருப்பதொரு ஹர்ஷமுண்டே; அதில்இதுக்கு வாசியென்? என்னில் - அங்கு - இதர வ்யாருத்தி மாத்ரத்தால் உண்டான ஜ்ஞாநலாபத்தால் வந்த ஹர்ஷம்; இங்கு - அவன் தன் குணங்களை நேரே இவரை நெருக்கியநுபவிப்பிக்க, ஸ்வவஶரல்லாதபடி அநுபவித்து ஹ்ருஷ்டராய் வாய்விடுகிறார் *

ஈடு ; அவ ;—முதற்பாட்டு, அஹோராத்ரம் க்ருஷ்ணகுணங்களை ப்ரீதிபூர்வகமாக அநுபவிக்கப்பெற்ற எனக்கு இனி ஒரு குறையில்லை என்கிறார்.

குரவையாய்ச்சியரோடுகோத்ததும் குன்றமொன்றேந்தியதும் *
உரவுநீர்ப்பொய்கை நாகங்காய்ந்ததுமுள்பட மற்றும்பல *
அரவில் பள்ளிப்பிரான்தன் மாயவினைகளையேயலற்றி *
இரவும்நன்பகலுந் தவிர்கிலமென்னகுறையெனக்கே (க)

ப. முதற்பாட்டில், ‘அவதாரகந்தமான அநந்தஶாயித்வத்தை யுடையனான க்ருஷ்ணனுடைய ஆஶ்சர்யசேஷ்டிதங்களை ப்ரீதிப்ரேரிதராய்க் கொண்டு சொல்லி அவிச்சிந்நமாக நடக்கப்பெற்றோம்; நமக்கென்ன குறை உண்டு?’’ என்கிறார்.

ஆய்ச்சியரோடு—ஆய்ச்சியரோடே கூட
குரவை—திருக்குரவையிலே,
கோத்ததும்—(எல்லாப்பெண்களும் தன்னைகோத்தாராம்படி வகை மாலைபோலே இடையிடையே தன்னைக்கலந்து) கோத்ததும் இந்தப்பெண்களோட்டை ரஸத்துக்கு விலக்காக வந்த மழையைத் தடுக்கைக்காக)
ஒன்று—ஒரு
குன்றம்—மலையை
ஏந்தியதும்—எடுத்துஏழுநாள் அநாயாஸேநதரித்துக்கொண்டு நின்றதும்
உரவு—முதிர்ந்த
நீர்—ஜலத்தையுடைத்தான
பொய்கை—பொய்கையில்
நாகம் — காளியனை
காய்ந்ததும்—முனிந்து நியமித்தப்ரகாரமும்
உள்பட—முதலாக
மற்றும்—மற்றும்
பல—பலவாய் (க) "[illegible]-நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய" என்கிறபடியே அவதாரார்த்தமாக)
அரவில்பள்ளி—கண்வளர்ந்தருளின நாகபர்யங்கத்தை
பிரான்தன்—விட்டுவந்த உபகாரகனை க்ருஷ்ணனுடைய
மாயம் —ஆஸ்சர்யங்களான
வினைகளையே—சேஷ்டிதங்களையே
அலற்றி—ப்ரீதிபரவசனாய்க்கொண்டு சொல்லி
நன்—குணகதநத்துக்கு உறுப்பான நன்மையையுடைய
இரவும்—இரவும்
பகலும்—பகலும்
தவிர்கிலம்—ஓய்கிறிலோம் ;
நமக்கு—நமக்கு
என்ன—என்ன
குறை—குறைவு
உண்டு—;
அநுபாவ்யஸங்கோசத்தால் வரும் குறையுண்டோ? அநுபவவிச்சேதத்தால் வரும் குறையுண்டோவென்று கருத்து. "தவிர்கிலனென்னகுறைவெனக்கு" என்றும் பாடஞ்சொல்லுவர்.

ஆறு ;—நாகபர்யங்கஶாயியான பரமபுருஷன் ஸ்ரீவஸுதேவர் திருமகனாய்வந்து பிறந்தருளி, ப்ரணயிஜநஸம்ஶ்லேஷைகபோகனாகையாலே திருவாய்ப்பாடியிற் பெண்பிள்ளைகளோடே திருக்குரவைகோத்து ஸம்ஶ்லேஷித்தருளினபடியையும், ப்ரணயிஜந பரித்ராணார்த்தமாகையாலே தத்ஸம்ஶ்லேஷத்திற்காட்டிலும் தனக்கு போக்யமான கோவர்த்தநமஹாகிரி ஸமுத்தரணமும், விஷாநலஜ்வாலாநபிபவநீய மஹாஹ்ரத நிவாஸி காளிய நிரஸநப்ரப்ருத்யாஸ்சர்ய ஸர்வதிவ்ய சேஷ்டிதங்களையும அநுபவித்து, அவ்வநுபவஜநிதப்ரீதியாலே அப்ரக்ருதிக்கதனைப் அவற்றையேயலற்றி இரவு

நன்பகலும் நான்தவிர்கிலன்; எனக்கு இனி என்னகுறை யுண்டு என்கிறார். (க)

ஈடு; அவ;—இரண்டாம்பாட்டு, "தொல்லருள் நல்வினையால் சொலக்கூடுங்கொல்" என்று ப்ரார்த்தித்தபடியே பெறுகையாலே திருநாட்டிலேதான் என்னோடொப்பாருண்டோ? என்கிறார்.

கேயத்தீங்குழலூதிற்றும்நிரைமேய்த்ததும்கெண்டையொண்கண் *
வாசப்பூங்குழல்பின்னைதோள்கள்மணந்ததும் மற்றும்பல *
மாயக்கோலப்பிரான்தன் செய்கைநினைந்துமனம்குழைந்து *
நேயத்தோடுகழிந்தபோதெனக்கெவ்வுலகம்நிகரே? (உ)

ப—அநந்தரம் ஆஸ்சர்யமான ஆகாரத்தையுடையனான க்ருஷ்ணனுடைய நினைத்தார்நெஞ்சை நெகிழப்பண்ணும் சேஷ்டிதங்களை ஸ்னேஹாநுஸந்தாநம்பண்ணிக் காலமெல்லாம்போகாநின்றது; நித்யாநுபவம்பண்ணுகிற விலக்ஷணதேஶம் எனக்குஸத்ருஶமோ? என்கிறார்.

(பெண்கள்நெஞ்சு வஶீக்ருதமாகைக்காக)
கேயம்—(தாழ்ச்சிதோற்றின) கேயங்களைவைத்து
தீம்—இனிதாம்படி
குழல்—குழல்
ஊதிற்றும்—ஊதினதும். (அக்குழல்வழியே பெண்கள்வருமோபாதி பசுக்களும்வரும்படியக்குழலூதி)
நிரை—நிரை
மேய்த்ததும்—மேய்த்ததும்
கெண்டை—கெண்டைபோலே
ஒண்—முக்தமான
கண்—கண்ணையுடையளாய்
வாசம்—பரிமளப்ரசுரமான
பூ—பூவையுடைத்தான
குழல்—திருக்குழல்களையுடைய
பின்னைதோள்கள்—நப்பின்னைப்பிராட்டி திருத்தோளோடே
மணந்தும்—ஸம்ஶ்லேஷித்த இதுவும்
மற்றும—பின்னையும்
பல—ஏறருத்யமாய்க்கொண்டு பலவாயிருப்பனவான
மாயம்கோலம்—ஆஸ்சர்யரூபத்தையுடையவனான
பிரான்தன்—க்ருஷ்ணனுடைய
செய்கை—நித்யாநுபாவ்யசேஷ்டிதங்களை
நினைந்து—நினைத்து
மனம்—நெஞ்சு
குழைந்து—நெகிழ்ந்து
நேயத்தோடு—ஸ்நேஹத்தோடே
போது—போதுகள்
கழிந்த—போகாநின்றன;
எனக்கு—எனக்கு
எ—எந்த
உலகம்—லோகந்தான்
நிகர்—ஒப்பு ஆவது?
பரமபதந்தான் ஒப்போ? என்று கருத்து (உ)

ஆறு ;—(கேயத்தீங்குழல்.)—சேதநாசேதநஸமஸ்தவஸ்துக்களும் நீராயுருகும்படி குழலூதிக்கொண்டு, * திவத்திலும் பசுநிரைமேய்ப்பு உகந்து நிரைமேய்த்தருளினபடியையும், பசுமேய்க்க எழுந்தருளின ஆயாஸத்தால் வந்த ச்ரமமும் நப்பின்னைப் பிராட்டியைப் பிரிகையால்வந்த ஸந்தாபமும் தீருகைக்கு சிசிரோபசாரமாக அவளுடைய நிரதிசய ப்ரேமகர்ப்பார்த்ர ஸீதள திவ்யாவலோகநாம்ருத வர்ஷாபிஷிக்தனாய் ததீய புண்யகந்தவாஸிதாநந்ததிகந்தராள கபரீபரிமளாநுபவநிரதனாய்க்கொண்டு அவளுடைய நிரதிசய ஸுகஸ்பர்சமான திருத்தோள்களோடே புணர்ந்ததும் உள்பட மற்றுமுள்ள ஸர்வதிவ்யசேஷ்டிதங்களையும் நினைந்து மனங்குழைந்து இப்படி ஸ்நேஹத்தோடே காலத்தைப்போக்கப்பெற்ற எனக்குத் திருநாட்டிலேதான் ஸத்ருசருளரோ ? என்கிறார். (உ)

ஈடு ; அவ ;—மூன்றாம் பாட்டு. க்ருஷ்ணசேஷ்டிதங்களையே அநுபவித்துக்கொண்டு காலம் போக்கப்பெற்ற எனக்கு "இன்னது பெற்றிலேன்" என்று நோவவேண்டுவதில்லை யென்கிறார்.

நிகரில்மல்லரைச்செற்றதும் நிரைமேய்த்ததும், நீணெடுங்கை *
சிகரமாகளிறட்டதுமிவைபோல்வனவும்பிறவும் *
புகர்கொள்சோதிப்பிரான்தன் செய்கைநினைந்துபுலம்பிஎன்றும் *
நுகரவைகல்வைகப்பெற்றேனெனக்கென்னினிநோவதுவே. (௩)

ப.—அநந்தரம், நிரதிசயௌஜ்ஜ்வல்யவிசிஷ்டனான க்ருஷ்ணனுடைய நித்யாநுபாவ்யசேஷ்டிதங்களை அநுபவிக்கைக்கு உறுப்பாகக் காலம் நெடுகப் பெற்றேன் ; எனக்குஎதுக்கு நோவுபடவேணு மென்கிறார்.

(மிடுக்குக்கு)
நிகர்—ஒப்பு
இல்—இல்லாத
மல்லரை—மல்லரை
செற்றதும்—கொன்றதுவும் (விரோதிகள் தன்னை "எளியன்" என்று நினைத்திருக்கும்படி)
நிரை—பசுவின்பின்னே
மேய்த்ததும்—கோல்கொண்டுபோய் மேய்த்ததுவும், (அந்தகோபால தசையிலே)
நீள்—உத்துங்கமாயிருப்பதாய்
நெடு—நெடிய
கை—கையையுமுடைத்தாய்
சிகரம்—பர்வதசிகரம்போலே ப்ரபலமாய்
மா—(ஆகாரத்திற்பிறப்பாலே) ச்லாக்யமான
களிறு—யானையை
அட்டதும்—அழித்ததுவும்
இவைபோல்வனவும்—இவைபோலே யநுபாவ்யமுமாய்

பிறவும்—மற்றும் பலவாயிருப்பனவு மாய்
புகர்கொள் சோதி—அத்யுஜ்ஜ்வலதேஜோரூபனான
பிரான் தன்—க்ருஷ்ணனுடையதான
செய்கை—சேஷ்டிதங்களை
நினைந்து—அநுஸந்தித்து
புலம்பி—வாய்விட்டலற்றி
என்றும்—நாடோறும்
நுகர—புஜிக்கும்படியாக

வைகல்—காலம்
வைக—மிகவும் நெடுக
பெற்றேன்—;
இனி—இனி
எனக்கு—எனக்கு
என்—எதுக்கு
நோவது—நோவவேணும்?
அநுபவகாலமில்லாமல்நோகிறேனோ? அநுபவம் ஸாஸயல்லாமல்நோகிறேனோ? என்று கருத்து. (ங)

ஆறு ;—(நிகரில்.) பசு மேய்த்தருளி விளையாடினாற் போலே அநாயாஸேந செய்தருளின அதிபலபராக்ரம மல்ல கிரிவரஸத்ருஸ நிரவதிகபல குவலயாபீட ப்ரபருதி ப்ரதிகூலநிரஸந ஸ்வரூப ஸர்வதிவ்ய சேஷ்டிதங்களையும் அநுஸந்தித்து, அவ்வநுஸந்தாந ப்ரீதியாலே அப்ராக்ருதிங்கதனைப்கொண்டு அலற்றி அநுபவிக்கப் பெற்ற வெனக்கு இனி ஒருநோவுமில்லை யென்கிறார். (ச)

ஈடு ; அவ ;—நான்காம்பாட்டு. ஆஸ்ரிதபவ்யனான இருப்பிலே ப்ரதிகூலரை மாய்த்த க்ருஷ்ணனையநுபவிக்கப் பெற்ற எனக்கு அவாப்தவ்யமுண்டோ? என்கிறார்.

நோவவாய்ச்சியுரலோடார்க்கவிரங்கிற்றும் வஞ்சப்பெண்ணை *
சாவப்பாலுண்டதூர்சகடமிறச்சாடியதும் *
தேவக்கோலப்பிரான் தன் செய்கைநினைந்து மனங்குழைந்து *
மேவக்காலங்கள்கூடினேனெனக்கென்னினி வேண்டுவதே? (ச)

ப—அநந்தரம், அப்ராக்ருதவிக்ரஹனான க்ருஷ்ணனுடைய பாலசேஷ்டிதங்களை அநுபவிக்கைக்குக் காலங்கூடப்பெற்றேன் ; எனக்கு இனி அபேக்ஷிதமுண்டோ? என்கிறார்.

நோவ—நோம்படியாக
ஆய்ச்சி—ஆய்ச்சியானவள்
உரலோடு—உரலோடு
ஆர்க்க—இறுகக்கட்ட
இரங்கிற்றும்—அதுக்கு ஈடுபட்டிருந்ததுவும்

வஞ்சம்—(தாய்வடிவுகொண்டு) வஞ்சகையாய்வந்த
பெண்ணை—பேய்ச்சியை
சாவ—சாமபடியாக
பால்—முலைப்பால்
உண்டதும்—அமுதுசெய்ததுவும்

ஊர்—அஸுராவேஶத்தாலே ஊர்ந்து வருகிற
சகடம்—சகடமானது
இற—முறியும்படி
சாடியதும்—திருவடிகளாலே பாய்ந்ததுவுமாயுள்ள
தேவக்கோலம்—அப்ராக்ருத விக்ரஹயுக்தனான
பிரான்தன்—க்ருஷ்ணனுடைய
செய்கை—சேஷ்டிதங்களை
நினைந்து—அநுஸந்தித்து
மனம்—நெஞ்சு
குழைந்து—நெகிழ்ந்து
மேவ—பொருந்தும்படியாக
காலங்கள்—காலங்கள்
கூடினேன்—ஸித்திக்கப்பெற்றேன்;
எனக்கு—எனக்கு
என்—எது
இனி—இனி
வேண்டுவது—அபேக்ஷிதமாக உண்டு? நித்யாநுபவமே புருஷார்த்தம் என்று கருத்து. (௪)

ஆறு ;—(நோவவாய்ச்சி.) - உரலோடே கட்டிவைக்கலாம்படி ஆஶ்ரிதர்க்குப்பரமஸுலபனான படியும், தத்விரோதி பூதநா ஶகட நிரஸநம் பண்ணினபடியையும், அது தொடக்கமாகவுள்ள திவ்ய சேஷ்டிதங்களை ஸ்நேஹத்தோடே அநுபவிக்கப்பெற்ற வெனக்கு இனி வேண்டுவதுஉண்டோ? என்கிறார். (௪)

---

௫ ; அவ ;—அஞ்சாம்பாட்டு. அவதரித்து கம்ஸனையறியாதபடி வளர்ந்து கம்ஸனை மாய்த்தபடியை இன்று இருந்தநுபவிக்கப் பெற்ற வெனக்கு ஓரெதிரில்லை யென்கிறார்.

வேண்டித்தேவரிரக்கவந்துபிறந்ததும் வீங்கிருள்வாய்பூண்டு *
அன்றன்னைபுலம்பப்போயங்கோராய்க்குலம்புக்கதும் *
காண்டலின்றிவளர்ந்து கஞ்சனைத்துஞ்சவஞ்சஞ்செய்ததும் *
ஈண்டுநானலற்றப்பெற்றேனெனக்கென்னவிகலுளதே ? (௫)

ப.—அநந்தரம், அர்த்திநார்த்தகரான க்ருஷ்ணனுடைய அவதாரப்ரமுககம்ஸவதபர்யந்த சேஷ்டிதங்களை இங்கே அநுபவிக்கப்பெற்ற எனக்கு என்ன விரோதம் உண்டென்கிறார்.

தேவர்—தேவர்கள்
இரக்க—இரக்க
வேண்டி—தன்னிச்சையாலே
வந்து—(க்ஷீரார்ணவத்தில் நின்றும்) வந்து
பிறந்ததும்—அவதரித்ததுவும்
அன்று—அப்போதே
அன்னை—பெற்றதாயாரான தேவகியானவள்
பூண்டு—(கம்ஸ பயத்தாலே) எடுத்தணைத்து
புலம்ப—கூப்பிட
வீங்கு—செறிந்த
இருள்வாய்—இருளிடத்திலே

போய்—
அங்கு—கம்ஸவிஷயமானதேசந் தன்னிலே
ஓர்—(அவனுக்கு அஞ்சாமல் மறைத்து வைத்துநோக்கும் படி) அத்விதீயமான
ஆய்க்குலம்—இடைக்குலத்திலே
புக்கதும்—ப்ரவேசித்ததுவும்
காண்டல்—அந்தக்கம்ஸனுடைய காட்சி
இன்றி—இல்லாதபடி
வளர்ந்து—
கஞ்சன்—கம்ஸன்
துஞ்ச—முடியும்படியாக
வஞ்சம்—வஞ்சனை
செய்ததும்—செய்ததுவும்
ஈண்டு—இங்கேயிருந்து
நான்—நான்
அலற்ற—வாய்விட்டுச்சொல்ல
பெற்றேன்—பெற்றேன்;
எனக்கு—எனக்கு
என்ன—என்ன
இகல்—விரோதம்
உளது—உண்டு? உண்டாகில் கம்ஸன்பட்டது படுமென்று கருத்து. (௫)

ஆறு;—(வேண்டி) - பூபாரநிர்ஹரணார்த்தமாக பூமியிலே வந்து திருவவதாரம் பண்ணியருளவேணுமென்று தேவர்கள் அர்த்திக்கத் தான் ஆசைப்பட்டுக்கொண்டு ஸ்ரீவஸுதேவர் திருமாளிகையிலேவந்து பிறந்தருளினபடியையும், "துராத்மாவான கம்ஸன் காணிற்செய்வதென்?" என்று ஸ்ரீவஸுதேவரும் தேவகிப்பிராட்டியும் பயப்பட்டு அலற்ற அவர்களுடைய பயம்போம் படியாக அதிபஹுளதம: பூர்ணமான மத்யராத்ரத்திலே தன்னுடைய சதுர்ப்புஜ திவ்யரூப திரஸ்காரபூர்வகமாகத் திருவாய்ப்பாடியிலே யெழுந்தருளினபடியும், அங்கே கம்ஸப்ரப்ருதி ப்ரதிகூலர் அறியாதபடி வளர்ந்தருளிக் கஞ்சனைத்துஞ்ச வஞ்சஞ்செய்ததும், இவையெல்லாவற்றையும் இங்கேயலற்றப்பெற்றேன்; எனக்கு இனி ஒரு து:க்கமுண்டோ வென்கிறார். (௫)

ஈடு; அவ;—ஆறும்பாட்டு. க்ருஷ்ணனுடைய ப்ரதிகூல நிரஸந பரம்பரையை அநுபவிக்கப்பெற்ற எனக்கு ஒரு மநோது:க்கமில்லை யென்கிறார்.

இகல்கொள்புள்ளைப்பிளந்ததும்இமிலேறுகள்செற்றதுவும் *
உயர்கொள்சோலைக்குருந்தொசித்ததுமுட்டடமற்றும்பல *
அகல்கொள்வையமளந்தமாயனென்னப்பன் தன்மாயங்களே *
பகலிராப்பரவப்பெற்றேனெனக்கென்னமனப்பரிப்பே? (௬)

ப—அநந்தரம், பூர்வாவதாரத்திலே அந்யாபிமாந நிவர்த்தகமான த்ரைவிக்ரமத்தைப் பண்ணின க்ருஷ்ணனுடைய விரோதிநிரஸந வ்யாபாரங்களை அஹோராத்ர விபாகமற அநுபவிக்கப்பெற்றேன்; எனக்கு என்ன மநோது:க்கமுண்டென்கிறார்.

இகல்—யுத்தத்திலே
கொள்—ஒருப்பட்டுவந்த
புள்ளை—பகாஸுரனை
பிளந்ததும்—வாயைக்கிழித்ததுவும்
இமில்—(செருக்குக்கடியான) பிசலையுடைய
ஏறுகள்—ஏறுகளை
செற்றதுவும்—செறுத்துக் கொன்றதுவும்
உயர்—உயர்த்தியை
கொள்—உடைத்தாய்
சோலை—தழைத்த
குருந்து—குருந்தை
ஒசித்ததும்—முறித்ததுவும்
உட்பட—முதலாக
மற்றும்—பின்னும்
பல—விரோதிநிரஸநரூபமாய்க் கொண்டு பலவாயுள்ளனவாய்
அகல்—விஸ்தாரத்தை
கொள்—உடைய
வையம்—பூமியை
அளந்த—அளந்து மஹாபலியபிமானத்தை யழித்துக்கொடுத்த
மாயன்—ஆஶ்சர்யபூதனான த்ரிவிக்ரமனாய்
என்—அவ்வவதாரத்தோடுண்டான ஐக்யத்தை யெனக்கு ப்ரகாஶிப்பித்த
அப்பன்தன்—மஹோபகாரகனான க்ருஷ்ணனுடைய
மாயங்கள்—ஆஶ்சர்யசேஷ்டிதங்களை:
பகல்இரா—பகலோடிரவோடு வாசியற
பரவ—ஸ்துதிக்க
பெற்றேன்—பெற்றேன்;
எனக்கு—எனக்கு
என்ன—என்ன
மனப்பரிப்பு—மநோது:க்கம் உண்டு? பகவதநுபவகாலம் பழுதுபோகிறதே மநோது:க்கமுள்ளதென்று கருத்து. (௬)

ஆறு;—(இகல்கொள்.) - கம்ஸப்ரேரித ப்ரதிகூல விஹங்க விஶேஷ துர்த்தமவ்ருஷ குந்தரூபாஸுரநிரஸந ப்ரப்ருதி பரமபுருஷ திவ்யசேஷ்டிதங்களை ஸர்வகாலமும் ஏத்தப்பெற்ற நான் அவாப்தஸமஸ்தமநோரதனானேனென்கிறார். (௬)

ஏழு; அவ;—ஏழாம்பாட்டு. ப்ரதிகூலர் ஆஶ்ரிதரை நலியுமது பொறுக்கமாட்டாமை அவதரித்து அவர்களை யழியச்செய்யும் சேஷ்டிதங்களை நினைக்கும் நெஞ்சுடைய எனக்கு பூமியில் நிகரில்லையென்கிறார்.

மணப்பரிப்போடழுக்குமானிடசாதியில்தான்பிறந்து *
தனக்குவேண்டுருக்கொண்டு தான்தனசீற்றத்தினைமுடிக்கும் *
புனத்துழாய்முடிமாலைமார்பனென்னப்பன்தன்மாயங்களே *
நினைக்கும்நெஞ்சுடையேனெனக்கினியார்நிகர்நீணிலத்தே? (௭)

ப—அநந்தரம், அதிஶயித போக்யாகாரனான க்ருஷ்ணனுடைய ஆஶ்ரிதவிரோதிநிரஸநார்த்தமான அவதாரவைலக்ஷண்யத்தை அநுஸந்திக்கும் நெஞ்சையுடைய வெனக்கு பூமியில் ஸத்ருஶருண்டோ வென்கிறார்.

(௧) ஹ்ருஶம்ஸவதீஉ-ஷ: வித: - ப்ருஶம்பவதி து:கித:” என்கிற படியே ஸம்ஸாரிகள் படுகிற து:க்கத்தைக்கண்டு பரது:காஸஹிஷ்ணுத்வரூபமான
மனம்பரிப்போடு—நெஞ்சில் து:க்கத்தோடே
அழுக்கு—ஹேயமான
மானிடசாதியில்—மநுஷ்யஜாதியிலே
தான்—(ஹேயப்ரத்யநீகனான) தான்
பிறந்து—தத்ஸஜாதீயனாய்ப் பிறந்தவிடத்திலும்
தனக்கு வேண்டு—தன் இச்சாநுரூபமான
உரு—அபிமதவிக்ரஹங்களை
கொண்டு—பரிக்ரஹித்து
தான்—(ஆஶ்ரிதவாத்ஸல்யத்தை யுடைய தான்
(ஆஶ்ரிதவிரோதி நிரஸநத்தாலே)
தன்—தன்
சீற்றத்தினை—சீற்றம்
முடிக்கும்—முடிப்பானாயிருப்பானாய்
புனம்—தன்னிலத்திலே நின்றாற் போலே செவ்விபெற்ற
துழாய்—திருத்துழாய் மாலையையுடைத்தான
முடி—திருமுடியையும்
மாலை—அந்தத்திருமாலையையுடைத்தான
மார்பன்—திருமார்பையுமுடையனாய்
என்—அவ்வழகையெனக்கு ப்ரகாஶிப்பித்த
அப்பன்தன்—உபகாரகனானவனுடைய
மாயங்கள்—ஆஶ்சர்யசேஷ்டிதங்களை
நினைக்கும்—நினைக்கும்படி விதேயமான
நெஞ்சு—நெஞ்சை
உடையேன்—அஸாதாரணமாகவுடையேனான
எனக்கு—எனக்கு
இனி—இனி
நீணிலத்து—இந்தமஹாப்ருதிவியில்
நிகர்—ஒப்பார்
யார்—ஆர்? (௭)

ஆறு;—(மனப்பரிப்போடு.) - ப்ரணதஜநஸமீஹித நிர்வர்த்தநவிஷய மநோரதனாய்க்கொண்டு, அஶேஷதோஷாஸ்பத மநுஷ்ய ஜாதியிலே ஸ்வாஸாதாரண திவ்யரூபத்தோடே வந்துபிறந்தருளி,

(௧) ரா-அயோ-உ-சக.

ஸ்வாபிமத த்விபுஜ சதுர்ப்புஜாதிரூபங்களை யாஸ்த்தாநம்பண்ணிக் கொண்டு விரோதிநிரஸநம்பண்ணி பரிபூர்ண மநோரதனுகையாலே, அதிபரிமள துலஸீமாலாலங்க்ருதனுயிருந்த எம்பெருமானுடைய ஆஸ்சர்ய திவ்யசேஷ்டிதங்களையே நினைக்கும் நெஞ்சாகிற மஹா நிதியையுடையனுன என்னேடொக்க இந்த லோகத்தில் தந்யனுண்டோ? என்கிறர் (௭)

---

௮ ; அவ ;—எட்டாம்பாட்டு. பாணவிஜயப்ரமுகமான க்ருஷ்ணசேஷ்டிதங்களையே அநுஸந்திக்கும் நெஞ்சையுடைய எனக்கு ஒரு கலக்கமில்லை யென்கிறர்.

நீணிலத்தொடுவான்வியப்ப நிறைபெரும்போர்கள்செய்து *
வாணனுயிரந்தோள் துணித்ததுமுட்படமற்றும்பல *
மாணியாய்நிலங்கொண்டமாயனென்னப்பன்தன்மாயங்களே *
காணும்நெஞ்சுடையேனெனக்கினியென்னகலக்கமுண்டே? (௮)

ப —அநந்தரம்; அர்த்தியாயும் அபேக்ஷிதந்தலைக்கட்டிக்கொள்ளுமவனுடைய பாணயுத்தப்ரமுகசேஷ்டிதங்களை அநுஸந்திக்கும் நெஞ்சையுடைய எனக்கு ஒரு கலக்கமுண்டோ? என்கிறர்.

நீள்—பெரிய
நிலத்தொடு—பூமியோடே
வான்—ஆகாசமும்
வியப்ப—விஸ்மயப்படும்படியாக
நிறை—(வாணனொருவனுமே யெதிராயிருக்கப் படைத்துணைக்கு வந்த தனித்தனியே ப்ரதாநரான ருத்ரஸுப்ரஹ்மண்யாதிகளோடேகூட) பஹுபரிகர பூர்ணமான
பெரும்போர்கள்—மஹாயுத்தங்களை
செய்து—பண்ணி
வாணன்—பாணனுடைய
ஆயிரந்தோள்—(யுத்தகண்டூதிப்ரசுரமான) ஆயிரந்தோள்களையும்
துணித்ததும்—துணித்ததுவும்
உட்பட—முதலாக
மற்றும்—
பல—பலவாயுள்ளவையாய்
மாணியாய்—(அர்த்தியான) ப்ரஹ்மசாரியாய்
நிலம்—பூமியை
கொண்ட—பர்க்ரஹித்த
மாயன்—க்ருத்ரிமனுய்
என்—அந்தக்ருத்ரிமத்தை யெனக்கு ப்ரகாசிப்பித்த
அப்பன்தன்—உபகாரகனுன க்ருஷ்ணனுடையதான
மாயங்கள்—ஆஸ்சர்யசேஷ்டிதங்களை
காணும்—அபரோக்ஷித்தநுபவிக்கும்
நெஞ்சு—நெஞ்சை
உடையேன்—

இனி— அவிதேயசித்தர்க்கிறே ஸ்வர
எனக்கு— க்ஷணே ஸ்வாந்வய அந்யாக்ஷ்யத்
என்ன— வாதிகளாலுள்ள கலக்க
கலக்கம்— முள்ளது
உண்டு—உண்டு? (அ)

ஆறு ;—(நீள்நிலத்தொடு.) - பாணவிஜய ப்ரமுகமான க்ருஷ்ணசேஷ்டிதங்களையும், மற்றும் ஸ்ரீவாமநனுடைய ஆஶ்சர்யசேஷ்டிதங்களையுமே யநுஸந்திக்கும் நெஞ்சுடையேனான எனக்கு இனி கலக்கமுண்டோ? என்கிறார்.

ஈடு ; அவ ;—ஒன்பதாம்பாட்டு. வைதிகபுத்ராநயநம்முதலான அபதாநங்களையுடைய ஸர்வேஶ்வரனை மலக்கும் நாவீறுடைய என்னோடு ஒப்பாருண்டோ? என்கிறார்.

கலக்கவேழ்கடலேழ்மலையுலகேழுங் கழியக்கடாய் *
உலக்கத்தேர்கொடு சென்றமாயமு முட்படமற்றும்பல *
வலக்கையாழிஇடக்கைச்சங்க மிவையுடைமால்வண்ணனை *
மலக்குநாவுடையேற்கு மாறுளதோவிம்மண்ணின்மிசையே? (௯)

ப —அநந்தரம், பரத்வாஸாதாரணசிஹ்ந யுக்தனான க்ருஷ்ணனுடைய வைதிகபுத்ராநயந ப்ரமுகமான அதிமாநுஷசேஷ்டிதங்களை ஸ்துதிக்கும் நாவையுடைய எனக்கு இப்பூமியில் எதிராவாரார்? என்கிறார்.

ஏழ்—ஏழு
கடல்—கடலையும்
ஏழ்—ஏழு
மலை—மலையையும்
ஏழ்—ஏழு
உலகும்—லோகத்தையும்
கலக்க—(ஜலஸ்தலவிபாகம் தெரியாதபடி) பொருந்தும்படியாக
கழிய—அண்டகபாலத்துக்கவ்வருகே போம்படியாக
கடாய்—நடத்தி. (காரணமான அவ்யக்தபர்யந்தமாக)

தேர்—கார்யைகதேசமான தேரை
கொடு—கொண்டு
உலக்க—முடிய
சென்ற—சென்ற
மாயமும்—ஆஶ்சர்யமும்
உட்பட—முதலாக
மற்றும்—மற்றும்
பல—(வைதிகபுத்ரர்களுடைய ஸஶரீராநயநாவிஷ்பாகமாக ரூபமான) பல சேஷ்டிதங்களையும்
(பரத்வசிஹ்நமான)

வலக்கை யாழி இடக்கை சங்கம் இவை—வலக்கையில் திருவாழியும் இடக்கையில் திருச்சங்கமுமாகிற இவ்வஸாதாரண சிஹ்நங்களையும்
உடை—உடைய
மால்வண்ணனை—ஶ்யாமளவிக்ரஹயுக்தனை
மலக்கும்—ஹர்ஷப்ரகர்ஷத்தாலே யலமாக்கும்படி பண்ணும்
நா—நாவீறு
உடையேற்கு—உடைய எனக்கு
இ—இந்த
மண்ணின்—பூமியின்
மிசை—மேலே
மாறு—எதிர்
உளதோ—உண்டோ?
ஈஶ்வரனுக்கு மநோஹாரியானவாக்கையுடையார் வேறுபூமியிலில்லையென்று கருத்து. (அ)

ஆறு ;—(கலக்க) - வைதிகபுத்ராநயநார்த்தமாக எழுந்தருளுகிற படியைக் கண்டு ப்ரீத்யதிஶயத்தாலே சேதநாசேதந ஸமஸ்த வஸ்துக்களும் க்ஷுபிதமாம்படி, ஸர்வலோகங்களையுங் கழிய அநாயாஸேந திருத்தேரைத் திருநாட்டிலே செல்லக்கடாவியருளின ஆஶ்சர்யமுட்பட மற்றுமுள்ள ஸர்வதிவ்யசேஷ்டிதங்களையும், ஆஶ்ரிதவாத்ஸல்யைக ஸ்வபாவனுகையாலே தத்விரோதி நிரஸநார்த்தமாக சங்க சக்ராதி ஸர்வதிவ்யாயுதங்களையும் ஏந்திக்கொண்டிருக்கிற அழகையும், எம்பெருமானையுங்கூட ஈடழிக்கும் படி †செவிக்கினிய செஞ்சொல்லால் ஏத்தப்பெற்ற என்னோடு ஒப்பாருளரோ இந்த லோகத்தில்? என்கிறார். (௯)

ஈடு ; அவ ;—பத்தாம்பாட்டு. அபாயபஹுளமான ஸம்ஸாரத்திலே வந்தவதரித்து, நிரபாயமாகப் பரமபதத்திலேபோய்ப் புக்க படியை யநுபவிக்கப்பெற்ற எனக்கு வேறே சிலர் நிர்வாஹகர் வேண்டும்படி குறையுடையவனோநானென்கிறார்.

மண்மிசைப்பெரும்பாரம்நீங்கவோர்பாரதமாபெரும்போர்பண்ணி *
மாயங்கள்செய்து சேனையைப்பாழ்படநூற்றிட்டுப்போய் *
விண்மிசைத்தனதாமமேபுக மேவியசோதிதன்தாள் *
நண்ணிநான்வணங்கப்பெற்றேனெனக்கார்பிறர்நாயகரே ? (௧௦)

ப.—அநந்தரம், பூபாரநிர்ஹரணார்த்தமாக பாரதஸமரத்தைப் பண்ணிப்போய் ஸ்வாஸாதாரண தாமத்தை ப்ரவேஶித்த பரஞ்ஜ்யோதிஸ்ஸ்வரூபனான க்ருஷ்ணன் திருவடியைக்கிட்டி யநுபவிக்கப்பெற்றேன் ; எனக்கு வேறு நியாமகருண்டோ ? என்கிறார்.

மண்—பூமியின்
மிசை—மேலே
பெரு—(விஶ்வம்பரையானவளுக்கும் பொறுக்க அரிதாம்படி) பெரிதான
பாரம்—பாரம்
நீங்க—நீங்கும்படியாக
ஓர்—அத்விதீயமான
பாரதம்—பாரதம்
ஆ—ஆகிற
பெரு—பெரிய
போர்—யுத்தத்தை
பண்ணி—உண்டாக்கி
மாயங்கள்—(ஸங்கல்பம்குலைந்து ஆயுத மெடுக்கை பகலையிரவாக்குகை தொடக்கமான) ஆஶ்சர்யசேஷ்டி தங்களை
செய்து—செய்து
சேனையை—எல்லாச்சேனையும்
பாழ்பட—பாழ்படும்படிக்கீடாக
நூற்றிட்டு—சூழ்ந்து முடித்து
போய்—வந்தகார்யம் சமைந்தவாறே யெழுந்தருளி
விண்மிசை—பரமாகாசத்திலே
தன—தனக்கஸாதாரணமான
தாமமே—வாஸஸ்தாநத்திலே
புக மேவிய [மேவி—புக்க] சென்று ப்ரவேசித்த
சோதி தன்—ஜ்யோதிஸ்ஸ்வரூபனான க்ருஷ்ணனுடைய
தாள்—திருவடிகளை
நண்ணி—கிட்டி
நான்—
வணங்க—ஶேஷவ்ருத்திபண்ண
பெற்றேன்—பெற்றேன்;
எனக்கு—(இப்படி கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தைப்பெற்று * ஸ்வராட்டான) எனக்கு
பிறர்—வேறு
நாயகர்—நியாமகர்
ஆர்—ஆர்?
நான் * அநந்யாதிபதியன்றோவென்று கருத்து. (௧௦)

ஆறு ;—(மண்மிசை.)—பூபாராவதரணார்த்தமாக ஸாந்தர்ஶநோநபாஸ்கராச்சாதநாதிகளைப் பண்ணியருளி மஹாபாரதயுத்தத்தைப் பண்ணுவித்து ஸர்வஸேனையையும் நசிப்பித்து ப்ரதிகூலவிஜய ஜநிதநிரதிஶய தேஜ:பரிவ்ருதனாய்க்கொண்டு ஸ்வகீய திவ்யபரம வ்யோமத்திலே எழுந்தருளின எம்பெருமானுடைய ஸர்வதிவ்யாவதாரங்களையும் ஸர்வ திவ்யசேஷ்டிதங்களையும் ஸர்வதிவ்யகல்யாணகுணங்களையும் ஸர்வகாலமும் அநுபவிக்கப்பெற்ற என்னில் மேற்பட்டாருண்டோ? என்கிறார். (௧௦)

ஈடு; அவ ;—நிகமத்தில் - க்ருஷ்ண சேஷ்டிதங்களைப் பேசின இப்பத்தும் கற்றார், தம்மைப்போலே கிருஷ்ணபக்தராவரென்கிறார்.

நாயகன்முழுவேழுலகுக்குமாய் முழுவேழுலகும் *
தன்வாயகம் புகவைத்துமிழ்ந்தவையாயவையல்லனுமாம் *
கேசவனடியிணைமிசைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன *
தூயவாயிரத்திப்பத்தால் பத்தராவர்துவளின்றியே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப — அநந்தரம், இத்திருவாய்மொழியின் ஸம்பந்தத்தாலே பகவதநந்ய பக்தியுக்தராவரென்று பலத்தை யருளிச்செய்கிறார்.

முழுவேழுலகுக்கும்—ஸமஸ்த லோகங்களுக்கும்
நாயகன்—நிர்வாஹகன்
ஆய் — ஆய்
முழுவேழுலகும்—நிர்வாஹ்யமான லோகத்தை, (ப்ரளயங்கொள்ளாதபடி)
தன்—தன்
வாயகம்—வாய்க்குள்ளே
புக—புக
வைத்து—வைத்து
உமிழ்ந்து—உமிழ்ந்து (அவற்றுக்கந்தராத்மாவாய்க்கொண்டு)
அவையாய்—தத்ஸ்வரூபனாய்
அவையல்லனும்—தத்கததோஷாஸம்ஸ்ப்ருஷ்டனும்
ஆம்—ஆன
கேசவன்—கேசிஹந்தாவாயுள்ள க்ருஷ்ணன்
அடியிணைமிசை—திருவடிகள் விஷயமாக
குருகூர்ச்சடகோபன்—ஆழ்வார்
சொன்ன—அருளிச்செய்த
தூய—நிரவத்யமான
ஆயிரத்து—ஆயிரத்து
இப்பத்தால்—(அவதாரசரித ப்ரகாசக மான) இப்பத்தால்
துவளின்றிப்பத்தராவர்—(க்ருஷ்ணன் விஷயத்தில்) அநந்யப்ரயோஜந பக்தியுக்தராவர்
துவளின்றி—குற்றமின்றி. இது—அறுசீராசிரியவிருத்தம். (௧௧)

ஆறு ;—(நாயகன்.)—கீழ்இரண்டு திருவாய்மொழியாலும்சொன்ன அர்த்தத்தை நிகமிக்கிறது.

நிகிலபுவநநிகரணோத்கிரணநியந்த்ருத்வ நிர்த்தோஷத்வாதிகளாலே அவகதஸர்வேஶ்வரத்வத்தையுடையனாய், ப்ரணதபோக்ய பூதாஸங்க்யேய திவ்யாவதார திவ்யசேஷ்டிதவிஶிஷ்டனான எம்பெருமானைச்சொன்ன ஆயிரத்துள் இத்திருவாய்மொழி வல்லவர்களே, இத்திருவாய்மொழிதானே நிகிலப்ரதிபந்தக நிரஸநபூர்வகமாகப் பரமபுருஷ சரணாரவிந்தவிஷயாநந்யப்ரயோஜந நித்யஸித்த நிரவதிக பக்தியுக்தராக்கு மென்கிறார். (௧௧)

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஐந்தாந்திருவாய்மொழி—துவளில் - ப்ரவேஶங்கள்.

ஆறு ;—(துவளில்.) - இப்படி எம்பெருமான் திருவிண்ணகர் தொடக்கமாகவுள்ள திருநகரிகளிலே எழுந்தருளியிருந்த விருப்பையும், அவனுடைய திவ்யாவதாரங்களையும், திவ்யசேஷ்டிதங்களையும், ஸௌந்தர்யாதி ஸர்வகல்யாணகுணங்களையும் அநுஸந்தித்தப்ரீதியையும், அவனோடு பாஹ்யஸம்ஶ்லேஷம்பெறாமையாலே வந்தநிரவதிக வ்யஸநத்தையும் அந்யாபதேசத்தாலே அருளிச்செய்கிறார்.

ஒருபெண்பிள்ளை "திருத்தொலைவில்லி மங்கலத்தில் எம்பெருமானைக்காணவேணும்" என்று ஆசைப்பட்டுப் பெறாமையாலே அத்யந்தம் அவஸந்நையாய், அவனுடைய ஸௌந்தர்யாதி குணங்களையும் திவ்யசிஹ்நங்களையும் திவ்யசேஷ்டிதங்களையும் திருத்தொலைவில்லி மங்கலத்தையும் சொல்லி அலற்றுகிறபடியைக்கண்டு இவளுடைய திருத்தாயாரும் பந்துக்களும் "இவளையிழக்கிறோம்" என்னும் பயத்தாலே "இவளுக்கு அவன்பக்கலுள்ள அபிநிவேஶத்தை நிவர்த்திப்பிக்கவேணும்" என்று இவளுடையதோழியை அபேக்ஷிக்க, இவளும் அவர்களை நோக்கி.

ப.—அஞ்சாந்திருவாய்மொழியில், கீழே-இப்படி க்ருஷ்ணசேஷ்டிதங்களிலே அவகாஹித்து அத்யந்தம் ஹ்ருஷ்டரான இவ்வாழ்வாருடைய மாநஸாநுபவம் முதிர்ந்து பாஹ்யஸம்ஶ்லேஷாபிநிவேஶத்தைப் பிறப்பிக்க, அபிநிவேஶாநுரூபாநுபவாலாபத்தாலே அவஸந்நராய், பூர்வாநுபூதமான ஸர்வேஶ்வரனுடைய அஸாதாரண சிஹ்நயோகத்தையும், விலக்ஷணாநுபாவ்யத்வத்தையும், ரக்ஷணார்த்தப்ரவ்ருத்திகளையும் தர்ஶநீயவிக்ரஹயோகத்தையும், ஆபரணௌஜ்ஜ்வல்யாதிகளையும், ஸுக்ரஹஸௌந்தர்யத்தையும், உதாரஸ்வபாவத்தையும், ஆதிக்யஸூசகமான அரவிந்தாக்ஷத்வத்தையும் விரோதி நிவர்த்தகத்வத்தையும், வ்யாமோஹாதிசயத்தையும் அநுஸந்தித்து, ஏவம்விதஸ்வபாவனானவன்விஷயத்திலே அத்யந்தப்ரவணரான இவருடையநிலையை, பூர்வாநுபவப்ரவர்த்தகரான பரிவர்தாங்களே அவஸாத பரிஹாரார்த்தமாக நிஷேதிக்கத்தேட, இவருடைய ப்ரக்ருதியறிந்த ஸுஹ்ருத்பூதரானவர்கள் "அடியில் ப்ரவர்த்தகரான நீங்கள் நிவர்த்தகரானால் இவர்க்கு அஹ்ருத்யகரமாவதே பலம்" என்றுசொல்லி, அதுக்கடியான இவருடைய பகவத்ப்ராவண்யாதிஶயவிகாரங்களை யறிவித்த ப்ரகாரத்தை, திருத்தொலைவில்லிமங்கலத்திலே தேவபிரானை

அநுபவித்து ஈடுபட்டாளொருநாயகியினுடைய ஈடுபாட்டைக்கண்டு, அடியிற் கூடக்கொண்டுபோய்த் திருவடிதொழுவித்த தாய்மார் இவளீடுபாடு ஸமிக்கைக்காக இவள்நிலைவை நிஷேதிக்கத்தேட, இவள் நெஞ்சறிந்த தோழியானவள் "அடியிலே இவளைமூட்டினபோதே ஆசையற்று மூட்டினிகோளன்றோ ? இனி இவள்பக்கல் ஸங்கத்தை விடுங்கோள்" என்றுசொல்லி இவளுடைய ப்ராவண்யவிகாரப்ரகாரங்களை யறிவித்த பாசுரத்தாலே அருளிச்செய்கிறார்.

ஈடு ;—இத்திருவாய்மொழிக்குக் கீழும்மேலுமெல்லாம் எம்பெருமானைக் கவிபாடினார் ; இத்திருவாய்மொழியில் தம்படி சொல்லுகிறார். ஸிம்ஹாவலோகந ந்யாயத்தாலே * பொய்ந்நின்றஞானந் தொடங்கி இவ்வளவும்வர தமக்கு பகவத்விஷயத்திலுண்டான ப்ராவண்யாதிஶயத்தை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். இத்திருவாய்மொழி - ஆழ்வார் ப்ரக்ருதிசொல்லுகிறது" என்று நம்முதலிகளெல்லாரும் போர விரும்பி யிருப்பர்கள்; பகவத்ப்ரஸாதத்தாலே லப்தஜ்ஞாநராய் (க) " யதோவாசோ நிவர்த்தந்தே - யதோவா சோநிவர்த்தந்தே" என்கிற விஷயத்தை மறுபாடுருவப்பேசின தாமே வேணுமாகாதே தம்படி பேசும் போதும்.

ஸ்ரீஜநகராஜன்திருமகள் பிறந்த ஸமயத்திலே ஜ்யோதிர்வித்துக்களையழைத்து, "இவள் ஜீவிக்கும்படிகளென்?" என்றுகேட்க "இவள் ஜீவிக்கும்படிகளில் ஒருகுறையில்லை ; ஸார்வபௌமனாயிருப்பானொருவனைக் கைப்பிடிக்கவுங்கடவள் ; இங்ஙனே யிருக்கச்செய்தேயும் வநவாஸரஸம் அநுபவிக்கக்கடவள்" என்றார்கள் ; அப்படியே இப்பெண்பிள்ளை பிறந்தபோது இவள் திருத்தாயாருள்ளிட்டார் ந்தாநஜ்ஞராயிருப்பாரையழைத்து, "இவள் ஜீவிக்கும்படிகளெங்ஙனே ?" என்று கேட்க, "எல்லாம் நன்றாய்த் தலைக்கட்டக்கடவது ' ஆனாலும் இவளுக்கோர் அபம்ருத்யுவுண்டு; அது தப்பினாளாகில் ஸுகமேஜீவிக்கும் அதாவது-திருத்தொலைவில்லிமங்கலத்திற் கொடுபோகாதே ஒழியப்பெறில் இவளைக்கிடைக்கும்" என்றார்கள். இவள்ஜீவியாதொழியிலும் திருத்தொலைவில்லிமங்கலத்தில் கொடுபோகாதொழியவல்ல குடியன்றே ; " இவளங்கேபுக்கு முடியவமையும்" என்றிருப்பார் சிலரிறே ; பிராட்டி வநவாஸரஸம் அநுபவியாத வன்றிறே இவள் திருத்தொலைவில்லிமங்கலத்தில் புகாதொழியவல்லளாவது.

(க) தை-ஆந-சு-

ஸ்ரீநளர் வார்த்தையைநினைப்பது (†ஸ்ரீவாநரவீரர்கள், "மலையைக்கொண்டு கடலையணைசெய்கை ஸம்பாவிதமோ" என்ன :—) ஸ்ரீநளர், "பெருமாள் காடேற வெழுந்தருளுகையும், பிராட்டியை ராக்ஷஸ் அபஹரிக்கையும், பெருமாள் சோகிக்கையும் ஸம்பாவிதமோ? ஏதாகிலும் வருமவை தப்பாதிறே" என்றார். இது ஸ்ரீராமாயணத்திலுண்டானவிடத்தே கண்டுகொள்வது.) தேஹாத்மாபிமாநிகளாயிருப்பார்க்கு எத்தனையேனும் அறிவு பிறந்தாலும் "ஸூ-ஹ்ரோ ஹம் க்ரூரோ ஹ - ஸ்த்ரோலாஹம், க்ருசோஹம்" என்கிற நிலை மாற்றப்போகாதாற்போலே, இவரையும் ஸர்வப்ரகாரத்தாலும் உகந்தருளின நிலங்களிலேநின்றும் த்ருஷ்டத்தில் குறைசொல்லி மீட்கப்போகாது. க்ஷுத்ரவிஷயப்ரவணராயிருப்பார் "அதர்மம்" என்றும், "பழி" என்றும், "மேல்நரகம்" என்றும் சொன்னால் மீளார்களிறே. இங்கு குணாதிகவிஷயமாகையாலே ஒருகுறைசொல்லி மீட்கப்போகாதே. "குறைசொல்லுவோம்" என்று நினைக்கிலும் குணாதிக்யத்தைச்சொல்லுமத்தனையிறே. அது பின்னை ப்ராவண்யத்துக் குடலா மத்தனையிறே. பழியுமுண்டாயிடுக, மதிப்புக்கேடும்வருக; ஆனாலும் அது கண்டு மீளமாட்டாத அத்யவஸாயமிறே இவளது. அங்ஙனேயாகிலும், இவர்கள் இவ்விஷயத்தில் நின்றும் இவளை மீட்கப் பார்க்கிறது என்னென்னில்,—" பருவம்நிரம்பாதிருக்கச்செய்தேயும் நம்மளவல்லாத அதிமாத்ரப்ராவண்யம் இவளுக்கு விளையாநின்றது; அது இவளையிழக்கவரிற்செய்வதென்?" என்னும் அச்சமாயிற்று இவர்களுக்கு ஓடுகிறது.

இனித்தான் அதிமாத்ரப்ராவண்யம் ஸாதகர்கையிலே கிடக்கக்காண்கையாலே "இவள் ஸாதநபுத்த்யாப்ரவர்த்திக்கிற்செய்வதென்?" என்னும்பயத்தாலே மீட்கவும்பார்ப்பரே: "இப்ராவண்யம் ஸ்வரூபாதிரேகியாகிலிறே ஸாதநத்தில் அந்வயிப்பது" என்றிறேயிருப்பதிவள் "ஸ்வரூபபேதத்துக்கு இசைந்தால் ஸ்வரூபாநுரூபமான கார்யங்களுக்கு இசையவேண்டாவோ?" என்றுகாணும் இவள் கருத்து. மோக்ஷத்துக்கு உபாயபாவம் ஸ்வரூபாநுபந்தியான பின்பு, மோக்ஷபூதனுக்கும் ப்ராவண்யம் ஸ்வரூபாநுபந்தியாகக்கடவதிறே.

இனித்தான் கீழில் திருவாய்மொழியோடு இத்திருவாய்மொழி ஸங்கதமானபடி யென்னென்னில்:—க்ருஷ்ண குணாநுபவத்தைப் பண்ணாநிற்கச்செய்தே, குடிக்கிற தண்ணீர் விக்கி அதுதானே பாரவச்யத்தை விளைப்பிக்குமாபோலே, அவ்வநுபவந்தானே ரஸாந்தரத்தேமூட்டத் தமக்குப்பிறந்த அவஸாதத்தை யந்யாபதேசத்தாலே பேசுகிறார். அதாவது - *பொய்ந்நின்றஞானந்தொடங்கி இவ்வளவும்வர, பகவத்விஷயத்தில் பூர்ணாநுபவமின்றிக்கே யிருக்கையாலே, தமக்குப்பிறந்த ப்ராவண்யாதிசயத்தை அருளிச்செய்கிறார். அன்றிக்கே, கீழநுபவித்த அநுபவந்தான் மாநஸாநுபவமாத்ரமாய், பாஹ்யஸம்ஶ்லேஷாபேக்ஷைபிறந்து, அது பெறாமையால்வந்த கலக்கத்தையந்யாபதேசத்தாலே பேசுகிறாரென்றுமாம்.

இப்பெண்பிள்ளை ப்ரக்ருதியறியச்செய்தேயும் தாய்மார்விழுக்காடறியாமையாலே திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொடுபுக, அவள் “அரவிந்தலோசந” என்பது, “தேவபிரான்” என்பது: நீர்மையைச்சொல்லுவது, மேன்மையைச்சொல்லுவது, ஒப்பனைவாசியறிந்தமைதோற்றச்சொல்லுவதாய் வாய்வெருவ, இவள் நிலையிருந்தபடியால் “இவளைக் கிடைக்கமாட்டாதாகாதே” என்று தாய்மார் வெருத்துத் தோழிபாடேவந்து, “இவள்படி உனக்குத்தெரியாமையில்லை: இவளைமீட்கலாம் விரகுசொல்லவேணும்” என்ன ; தோழி, “நீங்களே இவளுக்கு ப்ராவண்யத்தையுண்டாக்கி இப்போதாக இவளைமீட்க ஆசைப்படுகிற வித்தால் ப்ரயோஜநமென்? ஏற்கவே பரிஹரிக்கப் பெற்றதில்லை ; இனி இவள்பக்கல் நசையறுங்கோள் ; இவளை நிஷேதிக்கப்பாராதே நீங்களும் ஸஹகரித்து இவள் உஜ்ஜீவிக்கும்படி பண்ணப்பாருங்கோள் !” என்கிறாள். தாய்மார்கேட்கத் தோழியிறேசொல்லுகிறாள்.

பகவத்விஷயத்துக்கு “பழையார், புதியார்” என்றில்லை ; தேசிகர்சொல்ல ஆதரமுடையார் கேட்குமித்தனை. (க) “[illegible] - ஆசசக்ஷேஸத்பாவம் லக்ஷ்மணஸ்யமஹாத்மந:” என்று இளையபெருமாள்படியை ஸ்ரீபரதாழ்வானுக்கு ஸ்ரீகுஹப்பெருமாளிறேசொல்லுகிறார். [ஆசசக்ஷே]-வாகிந்திரியத்துக்கு நிலமல்லாததும் சொல்லலாமாகாதே.

(க) ரா-அயோ-அசு-க.

[அத] ஸ்ரீபரதாழ்வான் ஸ்வபாவம் அறிந்தபின்பு. [ஸத்பாவம்]- (க) ‘ 𑌬𑌾𑌲𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌿 𑌸𑍁𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧𑌃 - பால்யாத்ப்ரப்ருதி ஸுஸ்நிக்த:’’ என்றும், (உ) ‘‘ 𑌪𑌰𑌵𑌾𑌨𑌸𑍍𑌮𑌿 - பரவாநஸ்மி ’’ என்றும், ஸத்தையோடு வ்யாப்தமான ஸ்வபாவத்தைச் சொன்னான். [லக்ஷ்மணஸ்யமஹாத்மந:] கடலைக் கையாலேயிறைக்கத்தொடங்கினான். [𑌭𑌰𑌤𑌾𑌯𑌾𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌾𑌯 - பரதாயாப்ரமேயாய] - ‘‘இன்னாரின்னார்க்குபதேசிக்க’’ என்றில்லையாகாதே [𑌗𑍁𑌹𑍇𑌨 𑌗𑌹𑌨𑌗𑍋𑌚𑌰𑌃- குஹேந கஹநகோசர:] காட்டில்மரங்களில் வாசியறியுமவர் இவர்கள் நிலையறியும்படி நிலவரானார். அன்றிக்கே, ராமவிரஹத்தாலே ஒரு தூற்றடியிலே கிடந்தவன், தேசிகரைப்பெற்றவாறே தலையெடுத்துப்புறப்பட்டானென்றுமாம்.

†(‘‘ப்ராப்யத்வரையினுடைய முறுகுதலுக்கடியான அதிமாத்ரப்ராவண்யம், ஆஸ்ரயமழியும்படிவருதல் உபாயத்திலே முதலிடுதல் செய்யுமாகில் அவத்யகரமாய்முடியும்’’ என்றுபார்த்து, ‘‘இத்தை உபாயாத்யவஸாயாநுகுணமாக அமைத்து நடத்தவேணும்’’ என்றுகருதி ஸம்பந்தஜ்ஞாநத் தோடேசேர்ந்த உபாயாத்யவஸாயம் பார்த்தவிடத்து முதலிலே ப்ராப்யத்வராஸஹிதமாக குணாதிகவிஷயத்திலே யவகாஹித்து அத்த்வரைதன்னை இவ்வவஸ்த்தாபந்நை யாக்கினபின்பு, உபாயாத்யவஸாயத்தின்கீழ் இத்தை யமைக்கப்போகாது; இனித்தான் ப்ராப்தவிஷய ப்ராவண்யம் ஸ்வரூபமாகையாலே அவத்யகரமன்று: ஸ்லாக்யமாமித்தனை’’ என்று தாம அநுஸந்தித்தருளினார்.)

ஈடு; அவ.—முதற்பாட்டு. இவள் ப்ரக்ருதியறியாதே திருத்தொலைவில்லிமங்கலத்தைக் காட்டினபின்பு உங்கள் ஹிதவசநத்துக்கு இவள் மீளுமோவென்கிறாள்.

துவளில்மாமணிமாடமோங்குதொலைவில்லிமங்கலந்தொழுமிவளை *
நீரினியன்னைமீர்உமக்காசையில்லைவிடுமினோ *
தவளவொண்சங்குசக்கரமென்றும் தாமரைத்தடங்கணென்றும் *
குவளையொண்மலர்க்கண்கள்நீர்மல்க நின்றுநின்று குமுறுமே (க)

ப —முதற்பாட்டில், அரவிந்தலோசநன் எழுந்தருளியிருக்கிற திருத்தொலைவில்லிமங்கலத்தை அநுபவித்து, அவனுடைய அஸாதாரணசிஹ்நங்களிலே யகப்பட்ட இவளை இனி யாசைப்படவேண்டுவதில்லை, விடுங்கோளென்று தாய்மாரைக்குறித்துத்தோழி சொல்லுகிறாள்.

(க) ரா-பா-கஅ-உஎ. (உ) ரா-ஆ-கரு-எ.

துவள் இல்—நிர்த்தோஷங்களாய்
மா—மஹார்க்கங்களான
மணி—மாணிக்கங்களாலே சமைந்த
மாடம்—மாடங்களானவை
ஓங்கு—உயர்ந்திருக்கிற
தொலைவில்லிமங்கலம்—திருத்தொலை வில்லிமங்கலத்தை
தொழும்—தொழாநிற்கிற
இவளை—இவளை
நீர்—அடியிலே கொடுபோய்க்காட்டின நீங்கள்
இனி—இவள் அதிமாத்ர ப்ராவண்யானபின்பு
அன்னைமீர்—"பெற்றவர்களான நமக்கு நியமிக்கலாம்" என்றிருக்கிற
உமக்கு—உங்களுக்கு
ஆசை—நியமநத்திலாசைப்படுகை
இல்லை—இல்லை;
விடுமின்—"விதேயை"? என்றிருக்கிறத்தை விடுங்கோள்;
(அதுக்கடியென்? என்னில்)
தவளம்—வெளுத்த நிறத்தை யுடைத்தாய்
ஒண்—தர்சநீயமான
சங்கு—திருச்சங்கு
சக்கரம்—திருவாழி
என்றும்—என்றும்
தாமரை—தாமரைபோலேயாய்
தடம்—அத்யந்த விசாலமான
கண்—திருக்கண்கள்
என்றும்—என்றும், (அர்த்தோக்திய ளவிலே)
குவளை—நெய்தலினுடைய
ஒண்—அழகிய
மலர்—பூப்போலேயிருக்கிற
கண்கள்—கண்களானவை
நீர்—நீர்
மல்க—விஞ்சும்படி (தளர்த்தியாலே)
நின்று நின்று—(ப்ரதிக்ஷணம் ஆத்ம தாரணம்பண்ணி) நின்று நின்று
குமுறும்—நெஞ்சில் நினைவை வாய் விட்டுச் சொல்லமாட்டாதவார்த்தியாலே உள்ளே குமுறாநிற்கும்.

"உகும், இறும்" என்று †பதவ்யாஸமாய், "த்ரவத்ரவ்யமாய் தளர்ந்து விழாநிற்கும்" என்றும் சொல்லுவர். தவளவொண் சங்குசக்கரமென்று—வெளுப்பும் ஒண்மையும், சங்குக்கும், சக்கரத்துக்கும் அடையாகவுமாம். குவளை—நெய்தல். (க)

ஆறு;—நிரவத்ய நிரதிசய விவிதமணிவர நிகர விரசித ஸௌதோபேதமான திருத்தொலைவில்லிமங்கலத்தைத் தொழுகையே ஸ்வபாவமாயிருக்கிற இவள், அவனுடைய அதிநிர்மலமாய் அதிரமணீயமாயிருந்த திருச்சங்கு திருவாழியாகிற திவ்யசிஹ்நங்களையும், புண்டரீகலோசநங்களையும் சொல்லி யலற்றி, அத்தாமரைகளின்நிழலிலே வளரக்கடவ குவளைபோலேயிருந்த அழகியகண்கள் நீர்மல்க நின்றுநின்று குமுறாநிற்கும்; இவளை யாசைப்படவேண்டாவென்கிறாள். (க)

ஈடு; அவ.—இரண்டாம்பாட்டு. அவ்வூரில் கொடுபுகவேண்டினால், திருநாளிலே கொடுபுகுவாருண்டோ? என்கிறாள்.

குமிறுமோசைவிழவொலித் தொலைவில்லிமங்கலங்கொண்டுபுக்கு
அமுதமென்மொழியாளை நீருமக்காசையின்றியகற்றினீர் *
திமிர்கொண்டாலொத்துநிற்கும்மற்றிவள்தேவதேவபிரானென்றே
நிமியும்வாயொடுகண்கள்நீர்மல்க நெக்கொசிந்துகரையுமே. (உ

ப—அநந்தரம், நித்யஸூரிகளுக்கு அநுபாவ்யனான தேவபிரானெழுந்தருளியிருக்கிற திருத்தொலைவில்லிமங்கலத்திலே மஹோத்ஸவத்திலே கொண்டுபுக்கு இவளை யகலும்படி பண்ணினீர்கோளென்கிறாள்.

குமிறும்—கம்பீரமான
ஓசை—நாநாவிதகோஷத்தையுடைய
விழவொலி—உத்ஸவகோலாஹலத்தையுடைத்தான
தொலைவில்லிமங்கலம்—திருத்தொலைவில்லி மங்கலத்திலே
கொண்டு—கொண்டு
புக்கு—புக்கு
அமுதம்—அம்ருதம்போலே ஸரஸமாய்
மென்—ம்ருதுவான
மொழியாளை—பாஷணத்தையுடைய இவளை
நீர்—(இவள்வார்த்தையினிமையறிந்து போந்த) நீங்கள்
உமக்கு—உங்களுக்கு
ஆசை—(அதில்)ஆசை
இன்றி—இல்லாமையாலே
அகற்றினீர்—(உங்களோடு) உறவற்றகலும்படி பண்ணினீர்கோள்; இவள் உறவறுதியறிந்தபடியென்? என்னில்;
இவள்—இவள்
திமிர்கொண்டாலொத்து—திமிர்கொண்டாற்போலேயாய்
நிற்கும்—பேசாதேநில்லாநிற்கும்;
மற்று—மற்று, (இவள்வார்த்தை சொல்லில்)
தேவர்—தேவர்களான நித்யஸூரிகளுக்கும்
தேவர்—தேவர்களான விஷ்வக்ஸேநாதிகளுக்கும்
பிரான்—தன்னை யநுபவிப்பித்துக்கொண்டிருக்கிற மஹோபகாரகன்
என்றே—என்கிற அர்த்தோக்திமாத்ரத்திலே
நிமியும்—நெளிந்த
வாயொடு—வாயையுடையளாய்
கண்கள்—கண்கள்
நீர்—நீர்
மல்க—மல்கும்படியாக
நெக்கு—கட்டுக்குலைந்து
ஒசிந்து—தளர்ந்து
கரையும்—நீர்ப்பண்டமாகாநின்றாள்.
நிமிதல்—நெளிதல். (உ)

ஆறு;—(குமிறும்.) - கம்பீர விவித மங்களவாத்ய ப்ரமுதித ஜநகோஷத்தையுடைத்தான மஹோத்ஸவம் செல்லாநிற்கத் திருத்தொலைவில்லிமங்கலத்திலேகொண்டு புக்கீர்கோள்; அன்றுதொட

ங்கி விரஹவ்யஸநத்தாலே சித்ரார்ப்பிதையைப்போலே ஒரு சேஷ்டிதக்ஷமையன்றியேநின்று, அதிமதுர ஸ்வரமாக, தேவதேவபிரானென்றே சொல்லிச்சொல்லிக்கொண்டு அழுதுநெக்கொசிந்து நீராயுருகாநிற்கும்; ஆதலால் அங்கேகொண்டு புக்கு வலிய இழந்திர்கோள்; இனி இவளை யாசைப்பட்டால் கிடைக்குமோ? என்கிறாள்.

ஈடு; அவ;—மூன்றும்பாட்டு. திருநாளிலே தான் கொண்டு போகவேண்டிறல், திருச்சோலையுள்ளிட்டுக் கொடுபுகுவாருண்டோ வென்கிறாள்.

கரைகொள்பைம்பொழில்தண்பணைத் தொலைவில்லிமங்கலங்கொண்டுபுக்கு *
உரைகொளின்மொழியாளைநீருமக்காசையின்றியகற்றினீர் *
திரைகொள்பௌவத்துச்சேர்ந்ததும்திசைஞாலந்தாவியளந்ததும் *
நிரைகள்மேய்த்ததுமேபிதற்றி நெடுங்கண்ணீர்மல்கநிற்குமே. (ங)

ப—அநந்தரம், ரக்ஷணார்த்தமான ப்ரவ்ருத்திகளை யுடைய ஸர்வேஶ்வரன் வர்த்திக்கிற சோலையும் கழனியையுமுடைய தேசத்தைக் காட்டினிகோளென்கிறாள்.

கரை—திருப்பொருநற்கரையை
கொள்—விழுங்கும்படியான
பை—பரந்த
பொழில்—பொழிலையும்
தண்—குளிர்ந்த
பணை—நீர்நிலத்தையுமுடைய
தொலைவில்லிமங்கலம்—திருத்தொலைவில்லிமங்கலத்திலே
கொண்டு—கொண்டு
புக்கு—புக்கு
உரைகொள்—லோகமெல்லாங் கொண்டாடும்படியான
இன்—இனிய
மொழியாளை—மொழியையுடையவளை
நீர்—(இவள்வார்த்தை வாசியறியும்) நீங்கள்
உமக்கு—உங்களுக்கு
ஆசை—அதில் ஆசை
இன்றி—இன்றியே
அகற்றினீர்—தூரஸ்தையாம்படி பண்ணினிகோள்;
(அதுவென்னென்னில், ஆர்த்திகள் கூக்குரல் கேட்கும்படி)
திரை—ஸ்வஸ்பர்ஶத்தாலே கிளம்பினதிரையை
கொள்—உடைய
பௌவத்து—கடலிலே
சேர்ந்ததும்—(அவன் ஆஶ்ரிதரக்ஷணார்த்தமாகக்) கண்வளர்ந்தருளினபடியையும்
திசை—திக்குக்களோடுகூடின
ஞாலம்—பூமியை, (அநாயாஸேந)
தாவி—கவட்டித்து

அளந்ததும்—அளந்துகொண்டு அநந்யார்ஹமாக்கினபடியையும்	நெடு—நெடிய
நிரைகள்—பசுத்திரள்களை	கண்—கண்கள்
மேய்த்ததுமே—மேய்த்தபவ்யதையையுமே	நீர்—நீர்
பிதற்றி—(பரவசையாய்க்கொண்டு) பிதற்றி (தன்னுடைய)	மல்க—மல்கும்படி
	நிற்கும்—ஸ்தப்தையாகாநிற்கும். (௩)

ஆறு ;—(கரைகொள்.) - அதிமநோஹர ஸுமநோபராபிராமாதிசீதள விடப விராஜித வகுள சம்பகாதி தருநிகர பரிவ்ருத பர்யந்தத்தை யுடைத்தான தொலைவில்லிமங்கலத்திலே கொண்டுபுக்க வன்றுதொடங்கி, அவனைப் பிரிந்த வ்யஸநத்தாலே அப்ரக்ருதிங்கதையாய்க்கொண்டு, அத்யந்த மதுரமான சொற்களாலே, திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினபடியும், இந்தலோகத்தை யளந்தருளினபடியும், பசுமேய்த்தருளினபடியும், முதலாகவுள்ள திவ்ய சேஷ்டிதங்களையே யலற்றித் தன்னுடையதிருக்கண்கள் பரப்புமாறும்படி நீர்மல்கி நிற்கும். ஆதலால், அங்கே கொண்டுபுக்கு இவளை வலிய இழந்தீகோ ளென்கிறாள். (௩)

ஈடு ; அவ ;—நாலாம்பாட்டு. அவ்வூரையும் அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களையும் யாதொருநாள் கண்டாள், அன்றுதொடங்கித் தடைநிற்கை தவிர்ந்தா ளென்கிறாள்.

நிற்கும்நான்மறைவாணர்வாழ் தொலைவில்லிமங்கலங்கண்டபின் *
அறகமொன்றுமறவுறாள் மலிந்தாள்கண்டீரிவளன்னைமீர்! *
கற்குங்கல்வியெல்லாம்கருங்கடல்வண்ணன்கண்ணபிரானென்றே *
ஒற்கமொன்றுமிலளுகந்துகந்துள்மகிழ்ந்துகுழையுமே. (௪)

ப.—அநந்தரம் தர்ஶநீய ஶிக்ஷாவிஶிஷ்டனை க்ருஷ்ணனுடைய விலக்ஷண புருஷாவாஸமான திருத்தொலைவில்லிமங்கலத்தைக் கண்டபின்பு ஒருவர்க்கடங்காதபடி கைவிஞ்சினு ளென்கிறாள்.

நிற்கும்—நித்யமாய்	தொலைவில்லிமங்கலம்—திருத்தொலைவில்லிமங்கலத்தை
நால்—நாலுவகைப்பட்ட	கண்டபின்—கண்டபின்பு
மறை—வேதங்களுக்கு	அற—மிகவும்
வாணர்—நிர்வாஹகரானவர்கள்	அறகம்—அடக்கம்
வாழ்—(பகவதநுபவத்தாலே) வாழாநிற்கிற	ஒன்றும்—ஒன்றும்

உருள்—உருகிறிலள் ;
இவள்—இவள்
மலிந்தாள்—கைகழியவிஞ்சினுள் ;
(இவள் இப்படியாம்படி)
அன்னைமீர்—பெற்றுவளர்த்த நீங்கள்
கண்டீர்—கண்டிகோளிறே ;
கற்கும்—(இவள் அப்யஸிக்கும்
கல்வி—வார்த்தை
எல்லாம்—எல்லாம்
கரு—ஸ்யாமளமான
கடல்—கடல்போலேயிருக்கிற
வண்ணன்—வடிவையுடையவனுய்
கண்ணன்—ஆஸ்ரிதபவ்யனுனக்ருஷ்ணனுகிற
பிரான்—மஹோபகாரகன்
என்றே—என்று, (அவனுடைய ரூப வைலக்ஷண்யத்தையும் ஆத்ம குணத்தையும் சொல்லி)
ஒன்றும்—ஒருப்ரகாரத்தாலும்
ஒற்கம்—ஒடுக்கம்
இலள்—இலளாய்க்கொண்டு
உகந்துகந்து—அந்தகுணநுஸந்தாநத்தாலே மேன்மேலுமுகந்து (அத்தாலே)
உள்—நெஞ்சிலே
மகிழ்ந்து—ஆற்றலாதம் மிக்கு
குழையும்—அது அடியாக ஸிதிலையாகாநிற்கும்,
அற்கம்—அல்குதலாய், அடங்குதலென்றபடி ; ஒற்கம்—ஒல்குதலாய், ஒடுங்குதல் என்றபடி. (௪)

ஆரு ;—(நிற்கும்)-அபௌருஷேய நிர்த்தோஷாஸேஷ வேத வேதார்த்த ப்ரவர்த்தகரான திவ்யஜநங்கள் வேதவேத்யமான பகவத்ஸ்வரூபரூப குணவிபூதிகளை ஸாக்ஷாத்கரித்துக்கொண்டு வாழுகிற திருத்தொலைவில்லிமங்கலத்தைக் கண்டபின், ஸ்த்ரீத்வ ப்ராயுக்தமான மர்யாதையைக்கடந்து ஒருவர்க்கும் விதேயையன்றியே, சொல்லும்சொல்லெல்லாம் கருங்கடல்வண்ணன் கண்ணபிரானென்றே எப்போதும் சொல்லி, ஒரு ஸ்ராந்தியுமின்றியே அவன் திருநாமங்களைச் சொல்லச்சொல்ல மேல்மேல் வந்த ப்ரீதிபரம்பரையாலே அத்யந்தம் அவஸந்நையாகாநின்ருள் ; இப்படி அவன்திறத்தில் அபிநிவிஷ்டையான இவளை என்னுல் நிவர்த்திப்பிக்கவொண்ணுதென்கிருள். (௪)

ஈடு ; அவ ;—அஞ்சாம்பாட்டு. இவள் ஸ்வபாவத்தை யறிந்துவைத்து, தேவபிரானுடைய அழகைக் காட்டிக் கொடுத்திகோளென்கிருள். அன்றியே, அவ்வூரில் வர்த்திப்பார் படியைக் காட்டினுல், இவர்கள் ஜீவநத்தையும் இவளுக்குக் காட்டிக்கொடுக்க வேணுமோ வென்கிரு ளென்றுமாம்.

குழையும்வாள்முகத்தேழையைத் தொலைவில்லிமங்கலங்கொண்டுபுக்கு *
இழைகொள்சோதிச்செந்தாமரைக்கண்பிரானிருந்தமைகாட்டினீர் *
மழைபெய்தாலொக்குங்கண்ணநீரினொடன்றுதொட்டும்மையாந்திவள் *
நுழையுஞ்சிந்தையளன்னைமீர்தொழுமத்திசையுற்றுநோக்கியே. (ரு)

ப—அநந்தரம், திருத்தொலைவில்லிமங்கலத்திலேயிருக்கிற அரவிந்தலோசநனுடைய ஒப்பனையழகைக்காட்டினீர்; அன்றுதொடக்கமாக இவள் விக்ருதையாகாநின்றாளென்கிறாள்.

குழையும்—ஸ்வாபாவிகமான மார்த்தவத்தையுடையளாய்
வாள்—ஒளிவிடுகிற
முகத்து—முகத்தையுடையளாய்
ஏழையை—(அநுபூதவிஷயத்திலே ஆழங்காற்படும் சாபலத்தையுடைய) இவளை
தொலைவில்லிமங்கலம்—திருத்தொலைவில்லிமங்கலத்திலே
கொண்டுபுக்கு—கொண்டுபுக்கு
இழைகொள்—திவ்யாபரணங்களின்காரத்தாலுள்ள
சோதி—ஔஜ்ஜ்வல்யத்தையுடையனாய்
செம்—சிவந்த
தாமரை—தாமரைபோலும்
கண்—கண்ணையுமுடையனாய்
பிரான்—அவ்வழகை ஆஸ்ரிதர்க்கநுபவிப்பிக்கிறவுபகாரகன்
இருந்தமை—இருந்தபடியை
காட்டினீர்—;
அன்னைமீர்—!
அன்றுதொட்டு—அன்றுதொடங்கி
இவள்—
மழைபெய்தாலொக்கும்—மழைபெய்தாற்போலேயிருக்கிற
கண்ணநீரினொடு—கண்ணநீரோடே
மையாந்து—மயங்கி
நுழையும்—அவனழகிலேயுட்புக்க
சிந்தையள்—நெஞ்சையுடையளாய்
அ—அவனிருந்த
திசை—திக்கை
உற்று—செறிய
நோக்கி—
தொழும்—அஞ்ஜலிபண்ணாநிற்கும்.
மையாத்தல்—மயங்குதல். (ரு)

ஆறு;—(குழையும்.) நிரவதிகஸௌந்தர்ய ஸௌகுமார்ய ஸாரஜந்மபூமியான திருமுகத்தையுடையளாய், பண்டு எம்பெருமான் திறத்தில் அதிசபலையாயிருந்த இவளைத் திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொண்டுபுக்கு, தன்னுடைய திவ்யபூஷணங்களினுடைய நிரவதிகதேஜஸ்ஸின்வெள்ள மெல்லாம் தன்னுள்ளேயடங்கும்படி பெருகுகிற நிரவதிகமான ஜ்யோதிஸ்ஸின் வெள்ளத்திலே, பரிபூர்ணமா யலர்ந்ததொரு தாமரைத்தடாகத்தினுடைய குளிர்த்தியையும் அழகையு முடைத்தான திருக்கண்களை யுடையனாயிருந்த எம்

பெருமான் எழுந்தருளியிருந்த இருப்பைக் காட்டினீர்; அன்று தொடங்கி, மழைபெய்தாலொக்கும் கண்ணநீரோடுமயங்கி, அக்கண்களையே நினைத்து அந்தத் திக்கைநோக்கித் தொழாநிற்கும்; இனி இவளை யாசைப்பட்டால் கிடைக்குமோ வென்கிறாள். (௫)

ஈடு ; அவ ;— ஆறும்பாட்டு. தௌர்ப்பல்யத்தாலே முதலிலே பார்க்கமாட்டாள், பார்த்தாளாகில் மற்றோரிடமும் பாரா ளென்கிறாள்.

நோக்கும்பக்கமெல்லாம்கரும்பொடுசெந்நெலோங்குசெந்தாமரை *
வாய்க்கும்தண்பொருநல்வடகரை வண்தொலைவில்லிமங்கலம் *
நோக்குமேலத்திசையல்லால் மறுநோக்கிலள்வைகல்நாடொறும் *
வாய்க்கொள்வாசகமும் மணிவண்ணன்நாமமேஇவளன்னைமீர்! (௬)

ப.— அநந்தரம், ஸமருத்தமான திருத்தொலைவில்லிமங்கலத்தைக் கண்டால் வேறொன்றும் காணமாட்டாதே, எப்போதும் இவள் வாய்விடும் சொல்லெல்லாம் ஸுக்ரஹ ஸௌந்தர்யனனவனுடைய திருநாமங்களேயாய் இரா நின்றதென்கிறாள்.

நோக்கும்பக்கமெல்லாம்— பார்த்தபார்த்தவிடமெல்லாம்
கரும்பொடு— கரும்போடுகூடின
செந்நெல்— செந்நெலும்
ஓங்கு— (அவற்றுக்கு நிழல்செய்யும்படி) ஓங்கின
செந்தாமரை— செந்தாமரையும்
வாய்க்கும்— ஸம்ருத்தமாம்படியான
தண்— குளிர்ந்த
பொருநல்வடகரை— திருப்பொருநல் வடகரையிலே
வண்— நகர ஸம்பத்துக்களால்குறைவற்றிருக்கிற
தொலைவில்லிமங்கலம்— திருத்தொலைவில்லிமங்கலத்தை, (தன்னரதியாலே யொன்றும் பார்க்கமாட்டாதவள்)
நோக்குமேல்— பார்த்தாளாகில்
அ— அந்த
திசை— திக்கு
அல்லால்— ஒழிய
மறுநோக்கிலள்— வேறொன்றும் பார்க்கிறிலள்; (இவள் த்ருஷ்டிவ்யாபாரமேயன்றியே)
வைகல்— எல்லாக்காலத்திலும்
நாடொறும்— ஒருநாளொழியாமல்
இவள்—
வாய்— வாக்கிலே
கொள்— கொள்ளும்
வாசகமும்— வாசகசப்தங்களும்
அன்னைமீர்— (இவளையிப்படியாக்கின) அன்னைமீர்!

மணி—தனக்குமுடிந்தாளலாம்படி ஸாக்ஷமான நீலரத்நம்போலும்
வண்ணம்—வடிவழகை யுடைய வனுடைய
நாமமே—ஸௌலப்யஸௌந்தர்யாதி ப்ரகாசகங்களான நாமங்களேயா யிராநின்றன. (௬)

ஆறு ;—(நோக்கும்) - அம்ருதரஸௌகநிர்பரேக்ஷுகாண்ட, கநகஸத்ருஶ பரிணதசாலி, ஸமுச்ச்ரித ஸமுத்புல்ல மகரந்தபூர பரிபூர்ணாரவிந்த பரிவ்ருதமான பொருநல் வடகரை வண்தொலைவில்லி மங்கலத்திலே கொண்டுபுக்க வன்றுதொடங்கி, கண்களால் அத்திக் கல்லது காணாள் ; வாயால் மணிவண்ணன் நாமமல்லது சொல்லாள்; இனி இவளை நிவர்த்திப்பிக்க முடியுமோ வென்கிறாள். (௬)

ஈடு ; அவ ;—ஏழாம்பாட்டு. அவன் சின்னமும் திருநாமமும் இவள்சொல்லப்புக்கவாறே நிறம்பெற்றன வென்கிறாள்.

அன்னைமீரணிமாமயில்சிறுமானிவள் நம்மைக்கைவலிந்து *
என்னவார்த்தையுங்கேட்குறாள்தொலைவில்லிமங்கலமென்றல்லால் *
முன்னம்நோற்றவிதிகொலோ? முகில்வண்ணன்மாயங்கொலோ *
அவன்சின்னமுந்திருநாமமுமிவள்வாயனகள்திருந்தவே. (எ)

ப—அநந்தரம், மஹோதாரனான ஸர்வேஶ்வரன் இவளுக்குப்பண்ணின அதிஶயமிருந்தபடி, வேறொரு வார்த்தையுங்கேளாதே அவனுடைய திவ்ய சிஹ்நங்களும் திருநாமங்களும் தாம் திருந்தும்படி இவள்வாக்விஷயமாயிற் றென்கிறாள்.

அன்னைமீர்—பெற்றவளாத்த தாய்மாரே !
அணி—அழகிய
மா—நிறத்தையுடைத்தான
மயில்—மயில்போலே அபிரூபையாய்
சிறு—முக்தமான
மான்—மான் போலேயிருக்கிற
இவள்—இச்சிறுப்பெண்பிள்ளை
நமமை—
கைவலிந்து—கைவிஞ்சி
தொலைவில்லிமங்கலம்—திருத்தொலைவில்லிமங்கலம்
என்று—
அல்லால்—ஒழிய
என—ஏதேனுமொரு
வார்த்தையும்—வார்த்தையும்
கேட்க—
உறாள்—உறுகிறிலள்; (இது தான்)
முன்னம்—முன்பு
நோற்ற—பண்ணின
விதிகொலோ—பாக்யமோ?
முகில்—உதாரஸ்வபாவமான முகில்போலே யிருக்கிற

வண்ணன் — வடிவையுடையவன்
பண்ணின
மாயங்கொலோ — ஆஸ்சர்யமோ?
அவன் — அவனுடைய
சின்னமும் — (அஸாதாரணமான சிஹ்நங்களும்
திருநாமமும் — (ஔதார்யாதிவாசகமான) திருநாமங்களும்
திருந்த — திருத்தம்பெறும்படி
இவள்வாயனகள் — இவள்வாயன வாகாநின்றன (௭)

ஆறு;—(அன்னைமீர்.) - நிரதிஸயஸௌந்தர்யமயஸூக்திப்ரக்ரியையாலே, பாலஹரிணமுக்த விலோசனையாயிருந்த இச்சிறுப்பெண்பிள்ளை, நம்முடைய விதி நிஷேதாதிலங்கிநியாய்க்கொண்டு தொலைவில்லிமங்கலமென்னும் சொல்லல்லது மற்றொரு சொல்லும் கேளாள்; வேதங்களும் வேதவித்க்ரேஸரரான ஸநகாதிகளும் வத்திறற்றாலே விஸதமாய் அத்யுஜ்ஜ்வலமாம்படி அவனுடைய திவ்யசிஹ்நங்களையும் ஸௌந்தர்யாதி ஸகல குணங்களையும் அதிமதுரமான சொற்களாலே சொல்லாநிற்கும். இப்படி இவளுக்குத் தேவபிரான்திருவடிகளிலுண்டான அபிநிவேஸம், ஜந்மாந்தரக்ருத பரமபுருஷாநுபவஹேது மஹாபாக்யத்தாலே வந்ததோ! அன்றியே அவனுடைய நிரவதிக ஸௌந்தர்யத்தைக் காண்கையாலே வந்ததோ! என்று விஸ்மிதையாய், இப்படி அபிநிவிஷ்டையான இவள் எனக்குங்கூட விதேயையல்லளென்கிறாள். (௭)

ஈடு; அவ;—எட்டாம்பாட்டு. அவ்வூரைத் தொழுத வன்று தொடங்கி இன்றளவுமுண்டான இவளுடைய ஸைதில்யத்தைச் சொல்லுகிறாள்.

திருந்துவேதமும்வேள்வியுந் திருமாமகளிருந்தாம் *
மலிந்திருந்துவாழ்பொருநல்வடகரைவண்தொலைவில்லிமங்கலம் *
கருந்தடங்கண்ணிகைதொழுதவந்நாள்தொடங்கிஇந்நாள்தொறும் *
இருந்திருந்தரவிந்தலோசநவென்றென்றேநைந்திரங்குமே. (௮)

ப — அநந்தரம், திருத்தொலைவில்லிமங்கலம் திருவடிதொழுத வன்று தொடங்கி யென்றும் அரவிந்தலோசநன் என்கிற திருநாமத்தையேசொல்லி ஸிதிலையாகாநின்றாளென்கிறாள்.

திருந்து — (பகவத்ஸ்வரூப ரூப குண விபூதி ப்ரதிபாதநத்தில்) திருத்தமுடைத்தான
வேதமும் —
வேள்வியும் — (அந்தவேதப்ரதிபாத்யமாய் பகவதாராதநரூபமான) யாகாதிகர்மங்களும்

மா—அதுக்கு அநுரூபஸம்பதபிவர்த்தகையான
திருமகளிரும்—லக்ஷ்மியுமாகிற
தாம்—தாங்கள்
மலிந்து—(பகவத்ஸம்ச்லேஷத்தாலே) அபிவ்ருத்தியையுடையராய்
இருந்து—ப்ரதிஷ்டிதராயிருந்து
வாழ்—வாழுகிற
பொருநல்வடகரை—திருப்பொருநல் வடகரையில்
வண் தொலைவில்லிமங்கலம்—திருத்தொலைவில்லிமங்கலத்தைக்
கரு—கருதி
தடம்—பெருத்த
கண்ணி—கண்ணையுடையவள்

கைதொழுத—
அந்நாள் தொடங்கி—
இ—இவ்வருதுண்டான
நாள்தொறும்—
இருந்திருந்து—(ஆதியாலே தரித்திருக்கமாட்டாதவள் வருந்தி) இருந்திருந்து
அரவிந்தலோசந—அரவிந்தலோசநனே!
என்றென்றே—என்றுஸம்போதித்து (த்தன்றுற்றுமையாலே) பலகாலுமழைத்தே
நைந்து—ஶிதிலையாய்
இரங்கும்—நெஞ்சழியாநின்றாள்.
தாம்என்று—ஈஶ்வரன்தன்னைச் சொல்லவுமாம். (௮)

ஆறு; -திருந்து.) - அவிப்லுதஸ்வரவர்ணக்ரமயான ஸர்வவேதங்களாலும் ஸம்ஸ்துயமாநனாய், தத்ஸமாராதநவேஷ அநபிஸம்ஹிதபலாநுஷ்டித நித்யநைமித்திகாதி ஸர்வகர்மங்களாலே ஸமாராத்யனுமாய்க்கொண்டு, லக்ஷ்மீ பூமி நீளா நாயகனான பரமபுருஷன் திருநாட்டிலே எழுந்தருளியிருக்கிற இருப்பிற்காட்டில் ஸம்ருத்தனாய் எழுந்தருளியிருந்து வாழ்கிற பொருநல் வடகரை வண்தொலைவில்லிமங்கலத்திலே, * இழைகொள்சோதிச் செந்தாமரைக்கட்பிரானிருந்தமையை அலர்ந்தசெதாரு நெய்தல் தடாகம் போலேயிருந்த திருக்கண்களாலே கண்டு கைதொழுதவந்நாள் தொடங்கி இந்நாள் தொறும், இருந்திருந்து அக்கண்களையே நினைத்து, அரவிந்தலோசந! அரவிந்தலோசந? என்றென்றே சொல்லி நைந்து தளராநிற்கும் என்கிறாள். (௮)

ஈடு; அவ;—ஒன்பதாம்பாட்டு. இவள் மநோவாக்காயங்கள் முதலிலே தொடங்கி அவன் பக்கலிலே ப்ரவணமாயிற்றின என்கிறாள்.

இரங்கிநாள்தொறும்வாய்வெரீஇ இவள்கண்ணநீர்களலமர *
மரங்களுமிரங்கும்வகை மணிவண்ணவோவென்று கூவுமால் *
துரங்கமவாய்பிளந்தானுறை தொலைவில்லிமங்கலமென்று *
கரங்கள்கூப்பித்தொழுமவ்வூர்த்திருநாமங்கற்றதற்பின்னையே. (௯)

ப —அநந்தரம், அவனுடைய ஸௌந்தர்யாதிவாசகமான திருநாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டு, விரோதிநிவர்த்தகனானவன் வர்த்திக்கிற திருத்தொலைவில்லிமங்கலத்தைச்சொல்லி அஞ்ஜலிபண்ணாநின்றாளென்கிறாள்.

இவள்நாள் தொறும்—
இரங்கி—நெஞ்சழிந்து
வாய்வெரீஇ—(பாவசையாய்க் கொண்டு வாஸநையாலே) வாய்வெருவி
கண்ண நீர்கள்—
அலமர—பாய்ந்தலமாக்கும்படியாக
மரங்களும்—(அசேதநமான) மரங்களும்
இரங்கும்வகை—இரங்கும்படி
மணி—நீலரத்நம்போலே தர்ஸநீயமான
வண்ணவோ—வடிவையுடையவனே!
என்று—
கூவும்—கூப்பிட்டழையாநின்றாள்;
(அவ்வளவேயன்றியே)
துரங்கம்—குதிரையாய்வந்தகேசியின்
வாய்—வாயை
பிளந்தான்—பிளந்தக்ருஷ்ணன்
உறை—வர்த்திக்கிற
தொலைவில்லிமங்கலம்—திருத்தொலைவில்லிமங்கலம்
என்று
அவ்வூர்த்திருநாமம்—
கற்றதற்பின்னை—கற்றபின்பு, (அவ்வூரைநோக்கி)
தன்கரங்கள்—தன்கைகளை
கூப்பி—
தொழும்—தொழாநிற்கும். (௯)

ஆறு ;—(இரங்கி)-இவளைத் திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொண்டு புக்கு அவ்வூர்த்திருநாமத்தை நீங்கள் கற்பிக்கக் கற்றதற்பின், விஸ்லேஷவ்யஸநத்தாலே அத்யந்தம் அவஸந்நையாய், நாள்தோறும் அவன் திருநாமத்தையே வாய்வெருவி, அசேதநமான மரங்களுங்கூட இரங்கும்படி மஹார்த்தியோடே, மணிவண்ணவோ! என்று கூப்பிட்டழைத்து, துரங்கம்வாய்பிளந்தான் தன்ஸ்ரமமெல்லாம் போம்படி எழுந்தருளியிருந்த தொலைவில்லிமங்கலமென்றுசொல்லி, தன்கைகளைக் கூப்பித்தொழாநிற்கும்; ஆதலால், அவ்வூரிலே கொண்டுபுக்கு அவ்வூர்த் திருநாமத்தைக்கற்பித்துக் கெடுத்தீர்கோள் என்கிறாள். (௯)

௰ ; அவ ;—பக்தாம்பாட்டு; அவனல்லது செல்லாத இவளுடைய ப்ராவண்யாதிஸயத்தைக் கண்டு, பிராட்டிமாரிலே யொருத்தியோ? என்று ஸங்கிக்கிறாள்.

பின்னைகொல் நிலமாமகள்கொல் திருமகள்கொல் பிறந்திட்டாள்
என்னமாயங்கொலோ இவள்நெடுமாலென்றே நின்றுகூவுமால் *
முன்னிவந்தவன்நின்றிருந்துறையுந்தொலைவில்லிமங்கலம்சென்னியால்
அவ்வூர்த்திருநாமங்கேட்பதுசிந்தையே. (க0) [வணங்கும்

ப.— அநந்தரம், அவனுடைய அதிசயித வ்யாமோஹத்தைச் சொல்லிக் கூப்பிடாநின்றுகொண்டு, அவ்வூரைநோக்கி வணங்குவது அவ்வூரின்பேரைப் பிறர்சொல்லக் கேட்க ஆசைப்படுவதாகாநின்றாள்; இவளுடைய அதிப்ராவண்யமிருந்தபடியால் 'இவள் ஸ்ரீபூமிநீளைகளிலே அந்யதமையோ?' என்று அதிசங்கைபண்ணுகிறாள்.

பின்னைகொல்—நிரதிசயபோக்ய பூதையான நப்பின்னைப் பிராட்டியோ?
நிலம்—பூமிக்கு நிர்வாஹிகையாய்
மா—ஸ்லாக்யையான
மகள்கொல்—ஸ்ரீபூமிப்பிராட்டியோ?
திருமகள்கொல்—அவனுக்கு நிரதிசய ஸம்பத்ரூபையானலக்ஷ்மியோ?
பிறந்திட்டாள்—இப்படி பிறந்திருக்கிறவள். (இது)
என்ன—
மாயங்கொலோ—ஆஸ்சர்யமோ!
இவள்—
நெடுமாலென்றே—அவன் வ்யாமோஹாதிசயத்தைச்சொல்லி
நின்று—
கூவும்—அழையா நின்றாள்;
(அவ்வளவேயன்றிக்கே அந்த வ்யாமோஹமடியாக)
அவன்—
முன்னி—முற்பாடனாய்
வந்து—
நின்றிருந்து—நிற்பதிருப்பதாய்
உறையும்—நித்யவாஸம்பண்ணுகிற.
தொலைவில்லிமங்கலம்—திருத்தொலைவில்லிமங்கலத்தை
சென்னியால்—தலையாலே
வணங்கும்—வணங்காநிற்கும்; (தான் சொல்லுமதிலும்)
அவ்வூர்த்திருநாமம்—அவ்வூர்த் திருநாமத்தை
கேட்பதே—பிறர்சொல்லக் கேட்கையே
சிந்தை—நினைவாயிராநின்றாள்! (க0)

ஆறு;—(பின்னைகொல்.) நீங்கள் இவளைத் திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொண்டுபுக்க வன்றுதொடங்கி, அவனுடைய நிரவதிகமான ஆஸ்ரிதவாத்ஸல்யாதி குணங்களையே சொல்லிக் கூப்பிட்டு, தன்னோடு ஸம்ஶ்லேஷிக்கைக்கு ஏற்கத் தான் அவதாரம் பண்ணுவதற்குமுன்னே எம்பெருமான் பலவடிவுகளைக்கொண்டு நின்றிருந்துறைகிற திருத்தொலைவில்லிமங்கலத்தைச் சென்னியால்

வணங்கி, அவ்வூர்த் திருநாமத்தை என்றோ கேட்பது? என்று சிந்தியாநிற்கும்; இப்படி எம்பெருமான்பக்கலுண்டான அபிநிவேஶ வெள்ளத்திலே அழுந்திக்கிடக்கிற இவள், நப்பின்னைப் பிராட்டியோ? பூமிப்பிராட்டியோ? பெரியபிராட்டியோ? அன்று: இவள்தானென்று சொல்லலாமித்தனை; ஏவம் விதமான ப்ரேமாதிஶயம் கண்டும் அறியோம்; இதென்ன ஆஶ்சர்யம்! என்று விஸ்மிதையாய்க்கொண்டு, இப்படி அபிநிவிஷ்டையான இவளை என்றும் நிவர்த்திப்பிக்க முடியாதென்று சொல்லி முடிக்கிறாள். (௧௦)

ஈடு; அவ;—நிகமத்தில், இத்திருவாய்மொழியிற்கருத்தை வ்யக்தமாக்காநின்று கொண்டு, இத்தைக் கற்றவர்கள் இதுக்குஅநுரூபமான கைங்கர்யத்தைப்பண்ணப்பெறுவர் என்கிறார்.

சிந்தையாலுஞ்சொல்லாலுஞ் செய்கையினாலுந்தேவபிரானையே *
தந்தைதாயென்றடைந்த வண்குருகூரவர்சடகோபன் *
முந்தையாயிரத்துளிவை தொலைவில்லிமங்கலத்தைச்சொன்ன *
செந்தமிழ்ப்பத்தும்வல்லாரடிமைசெய்வார் திருமாலுக்கே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லவர்கள் ஶ்ரிய:பதிக்கு நித்யகைங்கர்யபரராவர்கள் என்று பலத்தை அருளிச்செய்கிறார்.

தேவபிரானையே—தேவபிரானையே (ஹிதபரத்வத்தாலும் ப்ரியபரத்வத்தாலும்)
தந்தை—தந்தையும்
தாய்—தாயும்
என்று—என்று அறுதியிட்டு, (இத்திருவாய்மொழியிற்சொன்ன கணக்கிலே)
சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும்—கரணத்ரயத்தாலும்
அடைந்த—ஆஶ்ரயித்தவராய்
வண்—(௧) "அன்னையாயத்தனாய்" என்கிற ஸ்ரீமதுரகவிகளைப் போலே தம்மைப்பற்றியிருக்கிற
குருகூரவர்—திருநகரியிலுள்ளார்க்கு நிர்வாஹகரான
சடகோபன்—ஆழ்வார்
முந்தை—பழையதான வேதார்த்தத்துக்கு ப்ரகாஶகமான
ஆயிரத்துள்—ஆயிரந்திருவாய்மொழியிலும் வைத்துக்கொண்டு

---

(௧) கண்ணி-௧

தொலைவில்லிமங்கலத்தை—திருத்தொலைவில்லி மங்கலத்தைப்பற்ற	இவைபத்தும்—இப்பத்தையும்
	வல்லார்—அப்யஸிக்கவல்லவர்கள்
சொன்ன—அருளிச்செய்த	திருமாலுக்கு—ஸ்ரிய:பதியான ஸர்வேஸ்வரனுக்கு
செம்—அர்த்த ப்ரகாஸநத்தில் ஆர்ஜவத்தையுடைய	அடிமைசெய்வார்—அடிமைசெய்யுமவர்களாவர்
தமிழ்—தமிழான	இது—எழுசீராசிரியவிருத்தம் (கக

ஆறு ;—(சிந்தையாலும்.)-வாங்மந:காயவ்ருத்திகளாலே ஸ்ரீதேவிபிரானையே தந்தைதாயென்றடைந்த குருகூர்ச்சடகோபன் சொன்ன ஸகலவேதஸாரபூதமான ஆயிரந்திருவாய்மொழியிலும் ஸாரபூதமான இத்திருவாய்மொழியை வல்லார், எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் அபிமத ஸர்வஸேஷவ்ருத்தியும் பண்ணுவா ரென்கிறார். (கக)

ஆறும் பத்து அஞ்சாந் திருவாய்மொழி வ்யாக்யாநங்கள் முற்றுப் பெற்றன.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆறாந்திருவாய்மொழி—மாலுக்கு-ப்ரவேசங்கள்.

ஆறு ;—(மாலுக்கு) - இப்படி * மரங்களும் இரங்கும்வகை "மணிவண்ணவோ" என்றுகூப்பிட்டும் அவனைக் காணப் பெறாமையாலே மோஹதசாபந்நையாய், ஆத்மாத்மீயங்களை இழந்து அத்யந்தமவஸந்நையான இவளைக்கண்டு திருத்தாயார் இவளிலும் அதிமாத்ரவ்யஸநியாய் பூதையாய்க்கொண்டு, எம்பெருமானுடைய குணசேஷ்டிதங்களுக்குத் தோற்று இவளிழந்தவற்றைச்சொல்லி அலற்றுகிறாள். *

ப.—ஆறாந்திருவாய்மொழியில் இப்படி கரணத்ரயத்தாலும் பகவத்விஷயத்திலே ப்ரவணரான இவர், ப்ராவண்யஜநகனான அவனுடைய ஆஸ்ரித வ்யாமோஹப்ரகாசகமான ஆகாரவிசேஷங்களையும், அவர்களுக்கு போக்யமான ஆயுதாதிபூர்த்தியையும், ரக்ஷணப்ரகாரத்தையும், ஸர்வப்ரகாரரக்ஷகோபகாரகத்வாதிசயத்தையும், ப்ரமாணப்ரதாநாதி ரக்ஷணப்ரகாரத்தையும், ஆகர்ஷகமான அவயவசோபையையும், அவயவசோபையோடுகூடின ஆபரணசோபையையும், விரோதிநிரஸநஸ்வபாவத்தையும், அபேக்ஷித ஸித்தியால்வந்த அத்யந்தோச்ச்ராயத்தையும், சேஷித்வபோக்யத்வாதியுக்தமான ஸர்வாத்மபாவத்தையும் அநுஸந்தித்து, ஏவம்விதஸ்வபாவனான ஸர்வேஶ்வரன்விஷயத்தில் தமக்குப்பிறந்த நிரவதிகப்ராவண்யக்ருதமான பாரவஶ்யாதிசயத்தாலே ஆத்மீய பதார்த்தங்களெல்லாம் அவனிட்டவழக்காம்படி அவற்றில் ஸ்வாம்யநிவ்ருத்தி தமக்குப் பிறந்தபடியைக்கண்ட பரிவர் வித்தராய்ச் சொன்னபாசுரத்தை, நாயகன்பிரிவாற்றாத நாயகியினுடைய ஆபரணசோபையோடு ஆபிரூப்யத்தோடு ஆத்மகுணத்தோடு வாசியற அழிந்துவருகிறபடியைக்கண்ட செவிலி இரங்கின பாசுரத்தாலே அருளிச்செய்கிறார்.

ஈடு ;—கீழ் இவளுக்குப்பிறந்த தசைமுற்றி வ்யஸநம் அதிசயிக்கையாலே மோஹங்கதையாய்க்கிடக்க, அதுகண்டு ஆற்றாளாய் இவளுடைய தோழியும் மோஹிக்க, இத்தசையிலும் இவளை ஜீவிப்பிக்க விரகுகளை மநோரதிக்கையாலே தரித்திருக்கிற திருத்தாயார் இவளுடைய வலயாதிகள் காணக்காண ஶிதிலமாகிறபடியைக்கண்டு, அவற்றைத் தனித்தனியே சொல்லிக்கூப்பிடுகிறாள். ஓரோநகரபத்தநாதிகள் வேவப்புக்கால், "ஒருமாடம் முறிந்தது, மாளிகை முறிந்தது" என்பாரைப்போலே. (விரஹார்த்தியாலே தன் மகள் இழந்தவற்றைச் சொல்லுகிறாள்).

கீழ்த்திருவாய்மொழியில் அலாபதசையாய், "கிடையாது" என்றாலும் விடமாட்டாதபடி தம்முடைய மநோவாக்காயங்கள் அவ்விஷயத்திலே அதிப்ரவணமானபடி சொல்லிற்று; இதில், அந்த அலாபத்தால் வந்த பாரவஶ்யத்தைச் சொல்லுகிறது. "நெடுமாலென்றே நின்று கூவுமால்" என்று தன் வ்யாமோஹத்தைக் காட்டியாயிற்று இவளையிப்படி விளைத்தது; பெரியவன் தாழநின்றால் பொறுக்கலாயிராதிறே. (௧) "ராவணேணாஸஹயேந த்ருஸங்கத:- ராகவேணோபயேதத்தே ஸங்கத:" என்று இவன் தறைப்படும்படியிறே அவன் வ்யாமோஹம் இருப்பது.

(த்வராநுகுணமான அநுபவாலாபத்தாலே ஆற்றாமைமுறுகி கீழ்ச்சொன்னதைச கலங்கி, ஸம்பந்தஜ்ஞாநமும் தரிப்புக்கு உறுப்பாகையன்றிக்கே தளர்த்திக்கு உறுப்பாய்விட, உபாயாத்யவஸாயமித்தனையும் கலங்காமலிருந்து, ப்ராப்யாலாபநிபந்தநமான பாரவஶ்யத்தாலே, *ஏறாளுமிறையோனில் - தாம் "வேண்டா" என்று உபேக்ஷித்த ஆத்மாத்மீயங்களெல்லாம், தன்னடையே அழிந்து செல்லுகிறபடியை அநுஸந்திக்கிறார்.) *

ஈடு; அவ;—முதற்பாட்டு. இவள் ஸ்ரீவாமநப்ராதுர்ப்பாவத்தில் குணசேஷ்டிதங்களிலேயகப்பட்டு வளையிழந்தாளென்கிறாள்.

மாலுக்கு வையமளந்தமணாளற்கு *
நீலக்கருநிற மேகநியாயற்கு *
கோலச்செந்தாமரைக் கண்ணற்கு *
என்கொங்கலரேலக்குழலி இழந்தது சங்கே. (௧)

ப ;—முதற்பாட்டில். வ்யாமோஹகார்யமான வ்யாபாராதிகளையுடையவனுக்கு நிரதிஶயபோக்யமான வேஷத்தையுடைய பெண்பிள்ளை வளையிழந்தாளென்கிறாள்.

மாலுக்கு—ஆஶ்ரித வ்யாமோஹநிரூபிதஸ்வரூபனாய் அந்தவ்யாமோஹமடியாக)
வையம்—பூமியை
அளந்த—(வேறொருவர் அபிமாநியாதபடி) அளந்து அநந்யார்ஹமாக்கி
மணாளற்கு—அவ்வபதாந ப்ரகாசநத்தாலே தனக்கு போக்தாவாய் (அந்த போகவ்யாமோஹமடியாக)
நீலம்—ஸ்நிக்தமாய்
கரு—கருத்த
நிறம்—நிறத்தையுடைத்தான

---

(௧) ரா-யு ௧.

மேகநியாயற்கு—மேகத்தோடு ஸமா
நந்யாயமான ஆகாரத்தையுடைய
ஞய், (அந்தவ்யாமோஹப்ர
காசகமாய்
கோலம்—தர்ஸநீயாகாரமாய்
செம்—சிவந்த
தாமரை—தாமரைபோலும்
கண்ணற்கு—கண்ணையுடையஞன
வனுக்கு
என்—என்னுடைய
கொங்கு—தேனையுடைத்தாயுள்ள

அலர்—மலரையுடைத்தாய்
ஏலம்—ஏலம்போலே பரமஹாகந்த
மான
குழலி—குழலையுடையவள்
இழந்தது—
சங்கு—சங்குவளை.
பதந்தோறும். அவனுக்கவனுக்
கென்கிறது—தனித்தனியே
அகப்படுத்துந் துறை என்
கைக்காக; இப்படி மேலும்
காண்பது. (க)

ஆறு ;—(மாலுக்கு) - எம்பெருமானுடைய ஆஸ்ரிதவாத்ஸல்யத்துக்கும், ஆஸ்ரிதார்த்தமான த்ரைலோக்யவிக்ரமணரூப திவ்ய சேஷ்டிதத்துக்கும், ஸ்நிக்தமாய கம்பீரமாய் வார்ஷிகமான காளமேகத்தினுடைய நிறத்தையும் குளிர்த்தியையும் பெருமையையும் அழகையுமுடைத்தான திருமேனிக்கும், மேகத்திலே அழகியதொரு தாமரைத் தடாகம்போலேயிருந்த திருக்கண்களுக்கும் தோற்று. அந்தநிரவதிகஸௌந்தர்யத்தையுடையஞன எம்பெருமானையுங்கூடத்தோற்பிக்கும் திருக்குழலழகையுடையளான என் பெண்பிள்ளை, தன்னுடைய சங்கு இழந்தாளென்கிறுள். (க)

ஈடு ; அவ ;—இரண்டாம்பாட்டு. திருவுலகளந்தருளினபோதை திவ்யாயுதாதிகளில் அழகிலேயகப்பட்டுத் தன்னுடைய அழகிய நிறத்தை யிழந்தாளென்கிறுள்.

சங்குவில்வாள்தண்டு சக்கரக்கையற்கு *
செங்கனிவாய்ச் செய்யதாமரைக்கண்ணற்கு *
கொங்கலர்தண்ணந்துழாய் முடியானுக்கு *
என் மங்கையிழந்தது மாமைநிறமே. (௨)

ப —அநந்தரம், போக்யமான ஆயுதாதிபூர்த்திகளையுடையவனுக்குத் தன் நிறத்தையிழந்தாளென்கிறுள்.

சங்கு வில் வாள் தண்டு சக்கரம்—
த்ரைவிக்ரமாபதாநத்தில் உச்சரி
தமாய்த் தோன்றின ஸ்ரீபஞ்சா
யுதத்தையுடைய

கையற்கு—திருக்கையையுடையஞய்
(தாத்காலிகபோக்தாக்களுக்கு
அநுபாவ்யமாய்)
செம்—சிவந்த

கனி—கனிபோலேயிருக்கிற
வாய்—திருவதரத்தையும்
செய்ய—சிவந்த
தாமரை—தாமரைபோலும்
கண்ணற்கு—கண்ணையுமுடையனாய்
கொங்கு அலர்—பரிமளவிகாஸியாய்
தண்—ஸ்ரமஹரமாய்
அம்—தர்ஸநீயமான
துழாய்—திருத்துழாயாலே யலங்க்ருதமான
முடியானுக்கு—திருமுடியை யுடையனானவனுக்கு
என் மங்கை—அவன் ஈடுபடும் பருவத்தையுடைய என்பெண்பிள்ளை
இழந்தது—இழந்தது
மாமைநிறம்—பெண்மைக்கு அஸாதாரணமான மாமைநிறத்தை
கொங்கு-தேனுமல்; பரிமளமாதல் (உ

ஆறு ;—(சங்கு.) - அளந்தருளுகிறபோது வளர்ந்த ரதாங்க ஸங்கசார்ங்காதி திவ்யாயுதங்களை ஏந்தின அழகுக்கும், ஸ்வசரணநளின யுகளஸம்ஸ்பர்ஸோஜ்ஜீவிதமான ஸர்வாத்மாக்களையுங் கண்ட ஹர்ஷத்தாலே புதுக்கணித்த திருப்பவளத்துக்கும் திருக்கண்களுக்கும், த்ரைலோக்யவிக்ரமணோபாஸஜநிதஸ்ரமாபநோதநார்த்தமாக *அயர் வறுமமரர்கள் அதிபரிமளதுலஸீமாலைகளைக் கொண்டுசாத்தியருளின அழகுக்குந்தோற்று, என்மங்கை மாமை நிறமிழந்தா ளென்கிறாள். (உ)

ஈடு ; அவ ;—மூன்றாம்பாட்டு வடதளஸாயிபடிகளிலே அகப்பட்டு இவள் தன் பெருமையை யிழந்தாளென்கிறாள்.

நிறங்கரியானுக்கு நீடுலகுண்ட *
திறங்கிளர்வாய்ச் சிறுக்கள்வனவர்க்கு *
கறங்கியசக்கரக் கையவனுக்கு *
என் பிறங்கிருங்கூந்தலிழந்ததுபீடே. (௩)

ப—அநந்தரம், வடதளஸாயித்வப்ரமுக ரக்ஷணப்ரகாரத்தை யுடையவனுக்குத் தன் பெருமையை யிழந்தாளென்கிறாள்.

(வடதளத்திலே கண்வளரும்போது)
நிறம்கரியானுக்கு—ஸ்யாமளமான வடிவையுடையனாய்
நீடுஉலகு—மஹாலோகங்களை
உண்ட—அமுதுசெய்த
திறம்—ப்ரகாரம்
கிளர்—தோற்றுகிற
வாய்—திருப்பவளத்தை யுடையனாய்க்கொண்டு
சிறு—சிறுவடிவிலே
கள்வனவற்கு—பெரியலோகத்தை மறைத்து வைத்தவனாய்
இப்படி ப்ரளயாபத்தில் ரக்ஷித்தாற் போலே ப்ரளயங்கழிந்து வெளிநாடு கண்டவளவிலும்

கரங்கிய—(ஜகத்விரோதிகளை யழிக்கையிலுண்டான உத்யோகத்தாலே) சுழன்றுவருகிற
சக்கரம்—திருவாழியையுடைய
கையவனுக்கு—கையை யுடையவனுக்கு

என் பிறங்கு இருங்கூந்தல்—வளர்ந்து கதிர்த்த மயிர்முடியை† யுடைய என் பெண்பிள்ளை
இழந்தது—
பீடு—பெருமை.
பீடென்று—பெருமையாய், மதிப்பைச் செல்லுகிறது. (௩)

ஆறு ;—(நிறங்கரியானுக்கு.)-ஸர்வலோகங்களையும் அமுதுசெய்தருளின சுவடுகாணலாயிருந்த திருப்பவளத்தில் அழகுக்கும், ஸகலஜந மநோநயநஹாரியான அந்தச்சிறிய வடிவு தனக்கும், திருவடிவினுடைய நீலவர்ண்போலே யிருந்த நிறத்துக்கும், ப்ரணத பரித்ராண தத்விரோதிநிரஸநங்களிலே எப்போதும் ஸத்வரமான திருவாழியை ஏந்தின திருக்கையினழகுக்குந் தோற்று, நீலரத்நங்களுடைய ஒளிகள் திரண்டாற்போலே விளங்குகிற திருக்குழலை யுடையவளான என்பெண்பிள்ளை, தன்பெருமையை யிழந்தாளென்கிறாள். (௩)

ஈடு ; அவ ;—நாலாம்பாட்டு. சதுர்முக ஸ்ரஷ்டாவானமேன்மையைப் பாராதே ஆஸ்ரிதார்த்தமான மஹாகுணத்தை யுடையவனுக்கு இவள் நீர்மையை யிழந்தாளென்கிறாள்.

பீடுடைநான் முகனைப் படைத்தானுக்கு *
மாடுடை வையமளந்த மணாளற்கு *
நாடுடைமன்னர்க்குத் ‡ தூதுசெல்நம்பிக்கு * என்
பாடுடையல்குலிழந்தது பண்பே. (௪)

ப —அநந்தரம், ஸ்ரஷ்ட்ருத்வாதிகளான ஸர்வப்ரகாரோபகாரகத்வத்தை யுடையவனுக்குத் தன்னுடைய அஸாதாரணஸ்வபாவத்தை யிழந்தாளென்கிறாள்.

பீடு—ஸ்ரஷ்ட்ருத்வாநுரூபமான ஜ்ஞாநாதிகுண வைபவத்தை
உடை—உடைய
நான்முகனை—சதுர்முகனை
படைத்தானுக்கு—ஸ்ருஷ்டித்தவனாய்
மாடுடை—வஸ்துமதியான
வையம்—பூமியை
அளந்த—அளந்த அபதாநத்தாலே

மணாளற்கு—தன்னை யநந்யார்ஹையாக்கும் போக்தாவாய்
நாடு—நாட்டுக்கு
உடை—கடவ
மன்னர்க்கு—ராஜாக்களான பாண்டவர்களுக்கு
தூது—தூதக்ருத்யத்தை
செய்—அநுஷ்டித்து

நம்பிக்கு—அத்தாலே பரிபூர்ணனானவனுக்கு
என் பாடு உடை அல்குல்—விஸ்தாரத்தையுடைத்தான அல்குலையுடைய என் பெண்பிள்ளை
இழந்தது—
பண்பு—தன்னஸாதாரண ஸ்வபாவ
மாடு—தநம், பாடு—பரப்பு.
பண்பு—ஸ்பாவம் (௪

ஆறு ;—(பீடிகை.)-நிகிலஜந்துஜாதாபேக்ஷிதாபேக்ஷ புருஷார்த்த ஸாதந பூதகரணகளேபராத்யுபகரண நிர்மாணநுகுண ஜ்ஞாந ஶக்தியுக்த சதுர்முக ஸ்ருஷ்டிஹேது பூத காருண்யத்துக்கும், குணவதகுணவிபாகமின்றிக்கே ஸர்வாத்மாக்களும் தன் திருவடிகளை ஸம்ஸ்பர்ஶித்து நின்ற நின்றவிடங்களிலே கண்டு தங்கள் ராம்படி இந்தலோகத்தை அளந்தருளின ஸௌஶீல்யகுணத்துக்கும், ஸர்வப்ரகார ஸமாஶ்ரிதரான பாண்டவர்கள் ஸார்வபௌமராம்படி அவர்களுக்கு தூத்யம்பண்ணி அதுவே தனக்கு ஏற்றமாயிருக்கிற ஆஶ்ரிதவாத்ஸல்யத்துக்குந் தோற்று, என்பாடுடையல்குல் தன் சீர்மையை யிழந்தாளென்கிறாள். (௪

ஈடு ; அவ ;—அஞ்சாம்பாட்டு. வேதப்ரதாநம் முதலான உபகாரங்களைப் பண்ணினவனுக்கு என்மகள் கற்பிழந்தாளென்கிறாள்.

பண்புடைவேதம் பயந்தபரனுக்கு *
மண்புரைவையமிடந்தவராகற்கு *
தெண்புனற்பள்ளி எம்தேவபிரானுக்கு *
என் கண்புனைகோதை இழந்ததுகற்பே. (௫

ப —அநந்தரம், வேதப்ரதாநாதியான ரக்ஷணப்ரகாரத்தையுடையவனுக்குக் கற்பிழந்தாளென்கிறாள்.

பண்பு—பகவத்ஸ்வரூபாதிகளை யதாவத்ப்ரகாசிப்பிக்கும் ஸ்வபாவத்தை
உடை—உடைய
வேதம்—வேதத்தை
பயந்த—ப்ரஹ்மாதிகளுக்கு உண்டாக்கிக்கொடுப்பானாய்
பரனுக்கு—தத்ப்ரதிபாத்யனான பரனாய்
மண்—மண்ணின்
புரை—மிகுதியையுடைய
வையம்—பூமியை
இடந்த—இடந்தெடுத்த
வராகற்கு—வராஹவேஷத்தையுடையனாய்
தெண்—தெளிந்த
புனல்—புனலையுடைத்தான ஏகார்ணவத்திலே
பள்ளி—ஜகத்ரக்ஷணசிந்தை பண்ணிக்கிடப்பானாய் (அந்த ரக்ஷண சிந்தையாலே

எம்—எம்போல் வாரோடு
தேவர்—ப்ரஹ்மாதிகளோடுவாசியற
பிரானுக்கு—உபகாரகனானவனுக்கு
என்கண்புனைகோதை—கண்டார்கண்களைப்புனைந்துகொள்ளும் மாலையழகையுடைய என் பெண்பிள்ளை
இழந்தது—
கற்பு—தன்னறிவுடைமை.
கற்பு—அறிவுடைமை. (௫)

ஆறு;—(பண்புடை.)-தன்னுடைய ஸ்வரூபரூபகுண ப்ரதிபாதகமானவையாலே தன்னிலுஞ்சீரியதான வேதங்களை ப்ரஹ்மாதிதேவர்களுக்குக் கொடுத்த பரமௌதார்யத்துக்கும், பூமிப்பிராட்டியை எடுத்தருளி அவளோடே ஸம்ஶ்லேஷித்தருளின ஸ்ரீ வராஹமான திருவடிவில் அழகுக்கும், திருநாட்டிலே எழுந்தருளியிருக்கிற இருப்பைக்கண்டு அநுபவிக்கிற * அயர்வறுமமரர்களையுங்கூடத் தோற்பித்து அடிமையாக்கவல்ல திருப்பாற்கடலிலேபிராட்டியோடேகூடக் கண்வளர்ந்தருளுகிற அழகுக்குந் தோற்று, தர்ஶநீயமான திருக்குழலையுடைய என்பெண்பிள்ளை, தன்னுடைய கற்பிழந்தாளென்கிறாள். (௫)

ஈடு; அவ;—ஆறாம்பாட்டு. ஏகார்ணவஶாயியானவனுடைய அவயவஸௌந்தர்யத்திலே அகப்பட்டு இவள் தன்னுடைய மெய் இழந்தாளென்கிறாள்.

கற்பகக்காவன நற்பலதோளற்கு *
பொற்சுடர்க்குன்றன்ன பூந்தண்முடியற்கு *
நற்பலதாமரை நாண்மலர்க்கையற்கு *
என் விற்புருவக்கொடிதோற்றதுமெய்யே. (௬)

ப—அநந்தரம், ஆகர்ஷகமான அவயவஶோபையையுடையவனுக்குத் தன்னுடையஸ்வாதீந ஶரீரத்தையிழந்தாளென்கிறாள்.

கற்பகம் கா அன—கற்பகச்சோலை போலேயாய்
நல்—அதிஶயவிலக்ஷணமாய்
பல—பலவான
தோளற்கு—தோள்களையுடையவனாய்
சுடர்—சுடரையுடைத்தான
பொற்குன்றன்ன—பொற்குன்றை யொத்திருப்பதாய்
பூ—தர்ஶநீயமாய்
தண்—அநுகூலமான
முடியற்கு—திருவபிஷேகத்தையுடையவனாய்
நல்—அழகியதாய்
பல—பலவாய்
தாமரை—தாமரையின்

நாள் மலர்—புதுமலர்போலேயிருக்கிற
கையற்கு—கைகளையுடையவனான
வனுக்கு
என்விற்புருவக்கொடி—வில்போலே
யிருக்கிற புருவத்தையுடையவ

ளாய்க் கொடிபோலே மெல்லி
ளான என்பெண்பிள்ளை
தோற்றது—இழந்தது
மெய்—தனக்கு விதேயமான
ஶரீரத்தை; அவ்விதேயஶரீரை
யானு ளென்று கருத்து. (சு)

ஆறு;—(கற்பகக்காவன.) - திருப்பாற்கடலிலே பிராட்டியோ டே ஸம்ஶ்லேஷித்தருளுகையாலே ஒரு கற்பகச்சோலை தழை தாற்போலே யிருக்கிற திருத்தோள்களின் அழகுக்கும், கற்பகச் சோலையிலே ஒரு தாமரைக்காடு அலர்ந்தாற்போலே யிருந்த திருக் கைகளின் அழகுக்கும், நிரதிஶய தேஜோமய கநக கிரிவரஸத்ருஶ மான திருவபிஷேகத்தில் அழகுக்கும், ஸ்ரீஶார்ங்கம் வளைந்தாற் போலே யிருந்த திருப்புருவத்தையுடையளான இவள், தன்திரு மேனி தோற்றாள் என்கிறாள். (சு)

ஈடு; அவ;—ஏழாம்பாட்டு. க்ஷீரார்ணவஶாயியுடைய ஆப ரணஶோபாதிகளிலே அகப்பட்டு இவள் லாவண்யத்தை யிழந்தா ளென்கிறாள்.

மெய்யமர்பல்கலன் நன்கணிந்தானுக்கு *
பையரவினணைப் பள்ளியினானுக்கு *
கையொடுகால்செய்ய கண்ணபிரானுக்கு *
என் தையலிழந்தது தன்னுடைச்சாயே. (எ)

ப —அநந்தரம், அநந்தஶாயியினுடைய ஆபரணஶோபையிலும் அவயவ ஶோபையிலும் தன்ஸமுதாயசோபையை இழந்தாளென்கிறாள்.

மெய்—திருமேனியோடு
அமர்—பொருந்தின
பல்—அஸங்க்யேயமான
கலன்—ஆபரணங்களை
நன்கு—தர்ஶநீயமாம்படி
அணிந்தானுக்கு—சாத்தினவனாய்
பை—விரிகிறபணங்களையுடைய
அரவின்அணை—திருவரவணையிலே
பள்ளியினானுக்கு—கண்வளர்ந்தருளு
கிறவனாய்
கையொடு—திருக்கைகளோடேகூட

கால்—திருவடிகளும்
செய்ய—சிவந்திருப்பானாய்
கண்ணன்—ஆஶ்ரிதபவ்யனான
பிரானுக்கு—உபகாரகனுக்கு
என்—என்னுடைய
தையல்—விலக்ஷணஸ்வரூபையான
பெண்பிள்ளை
இழந்தது—இழந்தது
தன்னுடைய—தனக்கு அஸாதாரண
மான
சாய்—ஸமுதாயசோபை. (எ)

ஆரு ;—(மெய்யர்.) - அவனுடைய திருமேனியில்தேஜஸ்ஸு பூத்தாற்போலேயிருந்த அஸங்க்யேயமான திருவணிகலன்களாலே ஒப்பித்தருளின அழகுக்கும், திருப்பாற்கடலிலே நிரதிஶய ஸுக ஸ்பர்ஶமான திருவரவணையிலே கண்வளர்ந்தருளுகிற அழகுக்கும், அந்தத்திருவணிகலன்களுடைய நிரவதிகமான தேஜஸ்ஸையும் திருவநந்தாழ்வானுடைய பணாமணிகளில் நிரவதிகமான தேஜஸ்ஸையும் விஞ்சிப்புறப்படா நின்ற ஒளியையுடைய திருக்கைகள் திருவடிகள் திருக்கண்களில் அழகுக்கும் இவள் தோற்று, தன் ஒளி யிழந்தாளென்கிறாள். (எ)

ஈடு ; அவ ;—எட்டாம்பாட்டு. க்ருஷ்ணனுடைய விரோதி நிரஸநத்துக்குத்தோற்று இவள் தன்னுடைய ஸ்த்ரீவத்தை இழந்தாள் என்கிறாள்.

சாயக்குருந்தம் ஒசித்ததமியற்கு *
மாயச்சகடம் உதைத்தமணாளற்கு *
பேயைப்பிணம்படப் பாலுண்பிரானுக்கு *
என் வாசக்குழலி இழந்ததுமாண்பே. (அ)

ப—அநந்தரம், விரோதிநிரஸந ஸ்வபாவனானவனுக்குத் தன் ஸ்த்ரீத்வ வைலக்ஷண்யத்தை யிழந்தாளென்கிறாள்,

குருந்தம்—அஸுராவிஷ்டமான குருந்து
சாய—வேரோடேசாயும்படி
ஒசித்த—முறித்த
தமியற்கு—அஸஹாயவீரனாய்
சகடம்—சகடம்
மாய—மாயும்படியாக
உதைத்த—உதைத்து
மணாளற்கு—அத்தாலே தன்னை யநந்யார்ஹையாக்கிக்கொண்ட போக்தாவானவனாய்
பேயை—பூதனையாகிற பேயை
பிணம்—பிணமாய்
பட—விழும் படியாக
பால்—முலைப்பாலை
உண்—அமுதுசெய்த
பிரானுக்கு—மஹோபகாரகனானவனுக்கு
என்வாசக்குழலி—பரிமளோத்தரமான குழலையுடைய என்பெண்பிள்ளை
இழந்தது—இழந்தது
மாண்பு—மாட்சிமை.
அதாவது—ஸ்த்ரீத்வவைலக்ஷண்யம்.
மாயச்சகடமென்றது—க்ருத்ரிமசகடமென்றுமாம். (அ)

ஆரு ;—(சாயக்குருந்தம்)-திருப்பாற்கடலினின்றும் ஸ்ரீவஸுதேவர் திருமாளிகையிலேவந்து திருவவதாரம் பண்ணியருளி க்ருத்

ரிமசகடபூதநாகுந்தாத்யஸுரநிரஸநாயாஸ ஸ்வேதகணிகாலங்க்ருதமான திருமுகத்தில் அழகுக்குத் தோற்று, தன் அழகு இழந்தாளென்கிறாள். (அ)

ஈடு ; அவ ;—ஒன்பதாம்பாட்டு. ஸ்ரீவாமநாத்யநேகாவதாரங்களிலே யகப்பட்டு இவள் தன்னழகை இழந்தாளென்கிறாள்.

மாண்பமைகோலத்து எம்மாயக்குறளற்கு *
சேண்சுடர்க்குன்றன்ன செஞ்சுடர்மூர்த்திக்கு *
காண்பெருந்தோற்றத்து எங்காகுத்தநம்பிக்கு *
என் பூண்புனைமென்முலை தோற்றதுபொற்பே. (௯)

ப—அநந்தரம், அபேக்ஷிதஸித்தியால்வந்த அத்யந்தோச்ச்ராயத்தையுடைய வாமநாத்யவதாரங்களையுடையவனுக்குத் தன்னழகு இழந்தாளென்கிறாள்.

மாண்பு—அழகு
அமை—அமைந்த
கோலம்—வடிவையுடையனாய் (அதனாலே)
எம்மாயம்—அபேக்ஷிதஸித்த்யர்த்தமாக எங்களோடு மஹாபலியோடு வாசியற வஞ்சித்த
குறளற்கு—வாமநனாய்
சேண்—அபேக்ஷிதஸித்தியாலே உயர்ந்து
சுடர்—தேஜோமயமான
குன்றன்ன—மலைபோலே
செம்—சிவந்த
சுடர்—ஒளியையுடைத்தான
மூர்த்திக்கு—விக்ரஹத்தை யுடையனாய்
காண்—ஸர்வலோகதர்ஶநீயமான
பெரு—அபரிச்சிந்நமாஹாத்ம்யத்தை யுடைய
தோற்றம்—ஆவிர்ப்பாவத்தை யுடையனாய்
எம்—எம் போல்வார்க்கு அநுபாவ்யனாம்படி
காகுத்தன்—சக்ரவர்த்தி திருமகனான
நம்பிக்கு—பூர்த்தியையுடையவனுக்கு
என் பூண்புனை மென்முலை—ஆபரணங்களையணிவதாய் (விரஹாஸஹமான மென்மையையுடைத்தான முலையையுடைய என்பெண் பிள்ளை
தோற்றது—இழந்தது
பொற்பு—அழகு (௯)

ஆறு ;—(மாண்பமை.) "கொள்வனான் - மூவடிதா" என்று இரக்கிற ஸமயத்திலே நிரவதிகஸௌந்தர்யநிவாஸபூதமாய் அஶேஷஜநமநோநயநஹாரியாய் அத்யாஶ்சர்யமான திருவடிவின் அழகுக்கும், அளந்தருளுகைக்காகத் தாமரைக்காடு அலர்ந்தாற்போலே திருமாணிக்கமலைபோலே வளர்ந்தருளின அப்போதையழகுக்கும், (க) "ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு - ஜந்மராமஸ்யஸம்ஹத்" என்னும்படி திவ்யமான ஜந்மத்தையுடையனான தஶரதாத்மஜனுடைய ஸௌஶீல்யஸாமர்த்

த்யாதி கல்யாண குணங்களுக்குந்தோற்று, அஸங்க்யேய திவ்யபூஷணாலங்க்ருதையான இவள், தன்னுடைய லாவண்யமிழந்தாளென்கிறாள். (௯)

ஈடு ; அவ ;—பத்தாம் பாட்டு. பரத்வமென்ன, அவதாரமென்ன, ஜகதாகாரதை யென்ன - இவற்றையடங்கக்காட்டி இவளுடையது எல்லாவற்றையும் கொண்டான் என்கிறாள்.

பொற்பமைநீள்முடிப்பூந்தண்துழாயற்கு *
மற்பொருதோளுடை மாயப்பிரானுக்கு *
நிற்பனபல்லுருவாய் நிற்குமாயற்கு *
என் கற்புடையாட்டி இழந்ததுகட்டே. (௧௦)

ப —அநந்தரம், ஶேஷித்வபோக்யத்வ சிஹ்நங்களையுடையனாய், விரோதி நிவர்த்தகனாய், ஸர்வஶரீரியானவனுக்குத் தன்மர்யாதையை இழந்தாளென்கிறாள்.

பொற்பு—அழகு
அமை—அமைந்து
நீள்—உயர்ந்த
முடி—அபிஷேகத்தையும்
பூ—தர்ஶநீயமாய்
தண்—ஶ்ரமஹரமான
துழாயற்கு—திருத்துழாயையுமுடையனாய், (அந்தபாரத்வபோக்யத்வங்களோடேவந்து)
மல்—ப்ரபலரான மல்லரோடே
பொருதோளுடை—தோளிற்சாந்தழியாதபடி மல்லைப்பொருத
மாயம்—ஆஶ்சர்யபூதனாய்
பிரானுக்கு—ஸ்ரீமதுரையிற்பெண்களுக்கவ்வபூகையுபகரித்தவனாய்
நிற்பன—ப்ரமாணஸித்தஸ்தைர்யத்தையுடைத்தாய்
பல்—பஹுவிதமான
உரு—பதார்த்தங்களை
ஆய்—சரீரமாகவுடையவனாய்
நிற்கும்—தத்கததோஷைரஸம்ஸ்ப்ருஷ்டனாய்நிற்கும்
மாயற்கு—ஆஶ்சர்யத்தையுடையனானவனுக்கு
என்கற்புடையாட்டி—அறிவுடையாளாயிருக்கிற என்பெண்பிள்ளை
இழந்தது—இழந்தது
கட்டு—ஸ்த்ரீத்வமர்யாதை;
கட்டு—மர்யாதை. கட்டடங்கவென்றுமாம். (௧௦)

ஆறு ;—(பொற்பமை.) - அயர்வறுமமரர்களும் ஸ்ரீமாலாகாரனும் குப்ஜையும் தன்னுடைய திவ்யாகார ஸத்ருஶமான திவ்ய மால்யாநுலேபநங்களைக் கொண்டு ஒப்பித்தருளப் பண்ணின அழகுக்கும், அவ்வழகு குறியழியாதபடி மற்பொருதசாதுர்யத்துக்கும், அவனுடைய ஸ்த்தாவர ஜங்கமாத்மகமான ஸர்வஜந்துஜாதத்துக்கும் ஆத்மதயா வ்யவஸ்த்திதனாயிருந்த ஐஶ்வரத்வத்துக்குந்தோ

ற்று, ஸ்த்ரீத்வாதி ஸகலமங்களகுணாவாஸபூதையான என்பெண்பிள்ளை, தன்னையும் தன்னுடைமையையும் கட்டடங்க இழந்தாளென்கிறாள். (௧௦)

ஈடு ; அவ ;—நிகமத்தில் இத்திருவாய்மொழி வல்லவர்கள் நித்யஸூரிகள் போகத்தை புஜிக்கப்பெறுவரென்கிறார்.

கட்டெழில்சோலைநல்வேங்கடவாணனை *
கட்டெழில்தென்குருகூர்ச் சடகோபன்சொல் *
கட்டெழிலாயிரத்து இப்பத்தும்வல்லவர் *
கட்டெழில்வானவர் போகமுண்பாரே. (௧௧)

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லவர்கள் நித்யஸூரிகளுடைய போகத்தை புஜிப்பர்களென்று பலத்தையருளிச்செய்கிறார்.

கட்டு—செறிவினுடைய
எழில்—அழகையுடைத்தாயுள்ள
சோலை—சோலையையுடைத்தாய்
நல்—பகவத்ஸௌலப்யாதி ப்ரகாஶகமான நன்மையையுடைய
வேங்கடம்—திருமலைக்கு
வாணனை—நிர்வாஹகனானவனை
கட்டெழில்—அரணழகையுடைத்தாய்
தென்—தர்ஶநீயமான
குருகூர்—திருநகரிக்குநிர்வாஹகரான
சடகோபன்—ஆழ்வார்
சொல்—அருளிச்செய்த
கட்டெழில்—தொடையழகையுடைத்தான
ஆயிரத்து—ஆயிரத்து
இப்பத்தும்—இப்பத்தையும்
வல்லவர்—அப்யஸிக்கவல்லவர்கள்
கட்டெழில்—ஸ்வச்சந்தாயத்தமான வகுப்பழகையுடைத்தான
வானவர்—நித்யஸூரிகளுடைய
போகம்—போகத்தை
உண்பார்—அநுபவிக்கப்பெறுவர்.

நாலடியிலும் கட்டடங்க எழிலென்றுமாம்.

இது—கலிவிருத்தம். (௧௧)

ஆறா ;—(கட்டெழில்) பரமபுருஷஶேஷதைகரஸாதித்வ லக்ஷ்மீ ஸமாப்ருத திவ்ய நகர நிலயவகுளதர ஸம்ருத்தமான வாணீஸஹஸ்ரத்திலும் வைத்துக்கொண்டு, கார்த்ஸ்ந்யேந ரமணீயமானசோலைகளாலே அலங்க்ருதமான திருமலையிலே நின்றருளின திருவேங்கடமுடையானுடைய கல்யாணகுணசேஷ்டிதங்களையே ப்ரதிபாதிக்கையாலே ஸாகல்யேந கல்யாணமான இத்திருவாய்மொழியைவல்லார் * அயர்வறுமமரர்களுடைய கல்யாணமான ஸம்பத்தையடங்க அநுபவிக்கப்பெறுவர்களென்கிறார். (௧௧)

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஏழாந்திருவாய்மொழி—உண்ணுஞ்சோறு - ப்ரவேஶங்கள்.

ஆறு ;—(உண்ணுஞ்சோறு) - இப்படி எம்பெருமானைப் பிரிந்த வ்யஸநத்தாலே அத்யந்தம் அவஸந்நையாய் மோஹதஶாபந்நையான பிராட்டி, தத்விஷய நிரவதிகாபிநிவேஶ ப்ரேரிதையாய்க்கொண்டு திருக்கோளூரிலே யெழுந்தருள, திருத்தாயார் இவளுடைய நிரவதிக வ்யஸநத்தாலே அத்யந்தம் அவஸந்நையாய் அப்ரக்ருதிஸ்தையாகையாலே இவள் எழுந்தருளுகிற ஸமயத்தில் அவற்றை யநுஸந்திக்க க்ஷமையன்றியே, பின்னை நெடும்போதுகூட ப்ரபுத்தையாய் இவளைக்காணாமையாலே, இவளை இழந்தேனென்கிறாள். *

ப—ஏழாந் திருவாய்மொழியில், கீழ் ஆத்மாத்மீய ஸ்வபாவங்களெல்லாம் ததீநமாம்படி அவற்றில் தமக்கு ஸ்வாம்யநிவ்ருத்தி பிறந்தபடியை அநுஸந்தித்தருளினவர், அத்தலையில் தமக்குப்பிறந்த ப்ராவண்யாதிஶயத்தாலே அதித்வரிதசித்தராய், ஶ்ரிய:பதியான ஸர்வேஶ்வரன் விஷயமாகத் தமக்கு த்வரை பிறக்கைக்கடியான, அவனுடைய தாரக போஷக போக்யத்வாத்யாகாரத்தையும் ஸர்வலோக ப்ரஸித்தமான நாமாதி யோகத்தையும், அத்திருநாமத்தினுடைய ஸர்வோபயோக யோக்யதையையும், ஐஶ்வர்யாதிஶயத்தையும், அத்யந்த விலக்ஷணமான போகஸ்தாநவத்தையையும், ஆகர்ஷகமான அவயவஶோபையையும், அநவதிக வ்யாமோஹத்தையும், அதிஶயித போக்யையான லக்ஷ்மீ விஷயத்தில் அபிமத தமத்வத்தையும், ஆஶ்ரித ஸௌலப்யத்தையும், அகில ஜகத்ஸ்வாமித்வத்தையும் அநுஸந்தித்து, தமக்குப் பிறந்த த்வராதிஶயத்தாலே அவனை ப்ராபிக்கையிலே உத்யோகித்து நடந்த இவருடைய அவஸ்தையை அநுஸந்தித்துப் பரிவரானவர்கள் ஈடுபட்ட ப்ரகாரத்தை நாயகனான ஸர்வேஶ்வரனைப் பிரிந்து ஆற்றாமையாலே அத்யந்தத்வராவிஶிஷ்டையாய்க்கொண்டு, அவனிருந்த திருக்கோளூரை நோக்கி அபிஸாரிகாவ்ருத்தியைப் பண்ணிக் கைகழிந்த தலைவியைப்பற்ற நற்றாய் இரங்கின பாசுரத்தாலே அருளிச்செய்கிறார். *

ஈடு ;—கீழில் திருவாய்மொழியிலே, மோஹித்துக் கிடக்கிற தன் மகளுடைய அவஸாதத்தைக்கண்ட திருத்தாயாரானவள், "அதுபோயிற்றது, இதுபோயிற்றது" என்று அவன் திருநாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டு இவள்தானும் மோஹித்தாள்; திருநாம ப்ரஸங்கத்தாலே பெண்பிள்ளை உணர்ந்தெழுந்திருந்து புறப்பட்டுத்

திருக்கோளூர் ஏறப்போனாள்; திருத்தாயாரும் வாஸனையாலே யுணர்ந்து படுக்கையைப் பார்த்தாள்; வெறும்படுக்கையாய்க் கிடந்தது; இனி, இவள் என் வயிற்றிற்பிறப்பாலும், தன் ப்ரக்ருதியாலும், இங்கிருந்தநாள் தேஹயாத்ரை யிருந்தபடியாலும் இவள் திருக்கோளூரேறப் புறப்பட்டுப்போனாள் என்று அறுதியிடுகிறாள். வலயாதிகளெல்லாம் இழந்தாளாகில் இவள் தன்னை நமக்கிழக்க வேண்டாவிறே என்றிருந்தாள், கீழிற்றிருவாய்மொழியில்: இத்திருவாய்மொழியில், இவள் தன்னையும் இழந்தோமென்று கூப்பிடுகிறாள்.

ஆளவந்தார் கோஷ்டியிலே "*உண்ணுஞ்சோற்றிற் பிராட்டிக்கோ* கள்வன் கொல்லிற் பிராட்டிக்கோ அஞ்சவேண்டுவது?" என்று கேட்க, "இருவராய்ப் போனவர்களுக்கு வயிறெறியவேணுமோ? தனிவழியே போனவளுக்கன்றோ வயிறெறிய வேண்டுவது!" என்றிருக்க முதலிகள் சொல்ல, "அங்ஙனன்று காணுங்கோள்! இருவராய்ப் போனவர்களாகையாலே, இருவர்க்கும் அஞ்சவேணும்; தனியே போனவளுக்கொரு பயமுண்டோ?" என்றருளிச்செய்தார். அதுக்கடி - இருவரும் இருவர்க்கும் ஊமத்தங்காயாய், கடித்ததும் ஊர்ந்ததும் அறியார்கள்: இவளங்கே புக்கல்லது தரியாள் என்று கருத்து. "*அள்ளலம்பூங்கழனி யணியாலிபுகுவர்கொலோ! அன்றியே, லங்காத்வாரத்திலே புகுவர்கொலோ!" என்றிறே அங்கு வயிறுபிடி. ஆனாலும், எங்கேனும்போகிலும் இருவராயல்லது இராது அங்கு; "தனியேபோன இவளென்படுகிறாளோ?" என்று மிகவும் நொந்து கூப்பிடுகிறாள் இவளுடைய திருத்தாயார்.

"அற்பசாரங்களவை சுவைத்தகன்றொழிந்தேன்" என்கிறபடியே "பகவத் கோஷ்டிக்கு இனி ஆளாகமாட்டாராகாதே!" என்னும்படி ஶப்தாதிகளிலே கைகழிந்த இவர் "ஸம்ஸாரிகளுக்கு இனி ஆளாகமாட்டார்" என்னும்படி *நாட்டாரோடு இயல்வொழிந்து *கொள்ள மாளாவின்ப வெள்ளத்தைப் புஜிக்கக் கை கழிந்தபடி சொல்லுகிறது. நரகாவஹமான விஷயத்தைப்பற்றிப் பிறர் அறியாமே போகக்கடவ இவர், ஸ்வரூபாநுரூபமான விஷயத்தைப்பற்றிப் பிறர் அறியாமே போம்படியாய் விழுந்தது, க்ஷுத்ர விஷயத்தைப்பற்றிப் பழிக்கஞ்சாதே போகக்கடவவிவர், குணாதிக

விஷயத்தைப்பற்றிப் பழிக்கஞ்சாதபடியானுர். "என்னுடைமை புக்கவிடத்திலே நானும்போய்ப் புக்கல்லது நில்லேன்" என்கிருள்; (க) "லக்ஷ்மணோ நகதாம் கதிம் - லக்ஷ்மணோநகதாம்கதிம்" என்கிறபடியே. (உ) "ஸர்வாந் போகாந் பரித்யஜ்ய - ஸர்வாந் போகாந் பரித்யஜ்ய" தான் பண்டு விரும்பியிருக்கும் அவற்ருேடு பெற்றவர்களோடு வாசியறப் பொகட்டுப்போனுள். [பரித்யஜ்ய]- "மீண்டும் இவற்றிலே நசைபண்ணும்" என்று தோற்ருதபடிவிட்டாள், [பர்த்ருஸ்நேஹபலாத்க்ருதா - பர்த்ருஸ்நேஹபலாத்க்ருதா]-ஒரு விஷயத்தில் ஸ்நேஹமானது எல்லாவற்றையும் விடப் பண்ணுமாகாதே; ஸ்வவஸத்தாலே போனுளன்றுகிடீர். [அசிந்தயித்வா து:காநி - அசிந்தயித்வாது:காநி] - விட்டவற்றை நினையாவிட்டால், போய்ப்புகுகிறவிடத்தில் மிறுக்கைத்தான் நினையாநின்ருளோ? இவள் பெருமாளையொழியத் தன்னைக்காணிலன்றே து:காநுஸந்தாநம் பண்ணவல்லளாவது. [ப்ரவிஷ்டா நிர்ஜ்ஜநம் வநம் - ப்ரவிஷ்டாநிர்ஜ்ஜநம்வநம்] - "போகத்துக்குஏகாந்தஸ்தலம்" என்னுமதுவேகிடீர் இவள் நெஞ்சில்பட்டது. (ங) [புத்ரத்வயவிஹீநம் தத் - புத்ரத்வயவிஹீநம்தத்] - சக்ரவர்த்தி, பிள்ளைகளிருவரையும் தேடிப்போரநொந்தான். [ஸ்நுஷயா ச விவர்ஜிதம்-ஸ்நுஷயாசவிவர்ஜிதம்] - "மீண்டும் இவ்விடத்தை விரும்புவர்கள்" என்று நினையாதபடி குழை சரக்கறுத்துக்கொண்டு போனபடி [அபஸ்யத் பவநம் ராஜா நஷ்டசந்த்ரமிவாம்பரம் - அபஸ்யத் பவநம்ராஜா நஷ்டசந்த்ரமிவாம்பரம்] - நிலவோடும்நக்ஷத்திர தாராகணங்களோடுங்கூட சந்த்ரன் குடிவாங்கின ஆகாசம்போலே கிடந்தது.

அப்படியேயாயிற்று இத்திருமாளிகை கிடக்கிறது. (க) "நல்லதோர் தாமரைப்பொய்கை" இத்யாதிப் படியேயாயிற்று இவள் திருமாளிகை கிடக்கிறது. திருத்தாயாரும் இம்மாளிகையைக்கண்டு வெறுத்து, 'போகக்கடவதாகத் துணிந்தால் என்னையுங்கூட்டிக் கொண்டு போனுலாகாதோ? தனிவழியே போவதே! நான் கூடப் போகாவிட்டாலவனுடனே கூடப்போகவும் பெருதொழிவதே! இவள் தான் எங்ஙனே போகிருளோ! நாடடங்கவாழ்வித்துக்கொண்டு போகிருளோ! அங்கே புக்காலென்படுகிருளோ! வழியிலுள்

(க) ரா-உத்தர (உ) ரா-ஸு-கசு-கக (ங) ரா-அயோ-சஉ-ங

ளார் என் சொல்லுகிறார்களோ! அங்கே புக்கால் அவ்வூரிற் சோலைகளையும் அங்குள்ள நீர்நிலைகளையும் அவன் குணங்களையுங்கண்டு உகக்கிறாளோ? கண்டு ஸிதிலையாகிறாளோ! இதெல்லாம் தான் அங்கே சென்று புக்காலிறே! என்றாற்போலே மநோரதித்துக்கொண்டு, தன்னைப் பார்த்தல் எங்களைப்பார்த்தல் செய்யாதே, இத்தையெல்லாம் கடலிலே கவிழ்த்துப்போவதே!' என்று திருத்தாயார் இன்னாதாகிறாள்.

ஈடு; அவ;—முதற்பாட்டு, தன்வயிற்றிற்பிறப்பாலும், இவள் தன் ஸ்வபாவத்தாலும் இவள்இங்குநின்றும் போய்ப்புகுமூர் திருக்கோளூர் என்றத்யவஸிக்கிறாள்.

உண்ணுஞ்சோறுபருகுநீர் தின்னும்வெற்றிலையுமெல்லாம் கண்ணன் *
எம்பெருமானென்றென்றே கண்கள்நீர்கள்மல்கி *
மண்ணினுளவன்சீர் வளம்மிக்கவனூர்வினவி *
திண்ணமென்னிளமான்புகுமூர் திருக்கோளூரே. (௧)

ப.—முதற்பாட்டில், தாரகபோஷகபோக்யாதிகளெல்லாம் தானேயாயிருக்கிற க்ருஷ்ணன்வர்த்திக்கிற திருக்கோளூரே, இவள்சென்று புகுமூர் என்று அறுதியிடுகிறாள்.

உண்ணும்—தாரகத்வேந உண்டு கொண்டு நிற்கவேண்டும்படியான
சோறும்—சோறும்
பருகும்—த்ருஷ்ணையாந்திகரமாய்க் கொண்டு போஷகமாகையாலே பாநம்பண்ணி நிற்கவேண்டும்படியான
நீர்—தண்ணீரும்
தின்னும்—ப்ரீதிஹேதுவாய்க் கொண்டு போக்யமாகையாலே தின்னக்கடவ
வெற்றிலையும்—வெற்றிலையும்
எல்லாம்—(இப்படி தாரகாதிகளுக்குறுப்பான) வஸ்துக்களெல்லாம்
கண்ணன்—(௧) "வாஸுதேவஸ்ஸர்வம் - வாஸுதேவஸ்ஸர்வம்" என்கிறபடி வஸுதேவதநயனான க்ருஷ்ணனாய்
எம்—எனக்கு
பெருமான்—ஸ்வாமியான அவன்
என்றென்றே—என்றென்று பல காலுமாவர்த்தித்து, (அவனுடைய அஸந்நிதாநத்தாலே)
கண்கள்—கண்கள்
நீர்கள்—நீர்
மல்கி—மல்கி
மண்ணினுள்—அவன் ஆஸ்ரிதஸந்நிதாநார்த்தமாகவந்த) பூமியிலே

(௧) கீதை ௭ ௧௯.

அவன்—அவனுடைய
சீர்—ஸௌலப்யஸௌந்தர்ய ஸௌசீல்யாதிகுணங்களையும்
வளம்—ப்ரணயித்வஸம்பத்தியால்
மிக்கவன்—பரிபூர்ணனானவனுடைய
ஊர்—ஊரையும்
வினவி—தான் அநுஸந்திக்குமளவன்றியே, (ப்ரணயபாரவஶ்யத்தாலே, அநபிஜ்ஞரையைப்போலே ஸந்நிஹிதரையும்வினவி வழிக்கு தாரகமாக உசாவாநின்று கொண்டு
என்—என் பெண்பிள்ளையாகையாலும்
இளம்—முக்தமான
மான்—மான்போலே பேதைப்பருவமாகையாலும், வேறொரிடத்தில் தூரப்போகவல்லளல்லள்; (அவள்போய்
புகும்—புகும்
ஊர்—ஊர்
திருக்கோளூரே—திருக்கோளூரே;
திண்ணம்—(இது) நிஶ்சிதம். (௧)

ஆறு;—லோகஸித்தமான தாரகபோஷகபோக்யங்களை இவள் "புஜிக்கவேணும்" என்று கொண்டு சொன்னால் அத்தை ஆதரியாதே, எனக்குத்தாரகமும் போஷகமும் போக்யமும் கண்ணன் எம்பெருமான் என்றென்றே சொல்லி, அவனைப் பெறாமையாலே கண்கள் நீர்மல்கியிருந்த என்னுடைய பெண்பிள்ளை, பூமியிலெங்குத்தையிலும் பகவத்குணங்கள் ஸம்ருத்தமாக இவனை வளைத்துக் கிடக்கிற திருக்கோளூரிலே அதிமாத்ராஸக்த மாநஸையாகையாலே, அவ்வூரை வினவி வினவித் தனக்கதுவே பாதேயமாகக்கொண்டு திருக்கோளூரிலே போய்ப்புகும்; இதிலொரு ஸந்தேஹமில்லை. அங்ஙனே கண்கள் நீர்மல்க விருந்த இருப்பையாகிலுங்கண்டிருக்கப் பெறுகிறிலேன்; இழந்தேன் என்று அலற்றுகிறாள். (௧)

ஈடு;—இரண்டாம்பாட்டு. திருக்கோளூர்க்கே போய்ப்புக்க என் பெண்பிள்ளை மீளவருமோ? சொல்லிகோள்! என்று பூவைகளைத் திருத்தாயார் கேட்கிறாள்.

ஊரும் நாடுமுலகமுந் தன்னைப்போல் * அவனுடைய
பேரும் தார்களுமேபிதற்றக் கற்புவானிடறி *
சேரும் நல்வளஞ்சேர் பழனத்திருக்கோளூர்க்கே *
போருங்கொலுரையீர் கொடியேன்கொடிபூவைகளே ! (௨)

ப—அநந்தரம். ஸர்வலோகப்ரஸித்தமாம்படி அவனுடைய நாமாதிகளை ப்ரவர்த்திப்பிக்கும் இவள், நிரதிஶயபோக்யமான திருக்கோளூரிலே போய்ப்

புக்கு மீண்டுபோருமோ? என்று அவளுடைய லீலோபகரணமான பூவை களைக் கேட்கிறாள்.

ஊரும்—(தானிருந்த) ஊரும்
நாடும்—(அத்தோடே சேர்ந்த) நாடும்
உலகமும்—(நாட்டோடணைந்த) லோக மும்
தன்னைப்போல்—தன்னைப்போலே
அவனுடைய—அவனுடைய
பேரும்—பேரையும்
தார்களும்—தாரையும்
பிதற்ற—(பஹுமுகமாகப்) பிதற்றும் படியாக
வான்—ஆகாசவத் அநதிலங்க்யமான
கற்பு—ஸ்த்ரீத்வ மர்யாதையை
இடறி—கடந்து
நல்—விலக்ஷணமான
வளம்—ஸம்ருத்தியோடே
சேர்—சேர்ந்து
பழனம்—நீர்நிலங்களையுடைத்தான
திருக்கோளூர்க்கே—திருக்கோளூருக்கே
சேரும்—சென்று சேருமவளாய்
கொடியேன்—தன்னைப்பிரிகைக்கு ஈடான கொடுமையையுடைய என் பெண்பிள்ளையாய்
கொடி—உபக்நாபேக்ஷமான கொடி போலே அவனைக்கிட்டியல்லது தரிக்கமாட்டாதவள்
போருங்கொல்—மீண்டு போருமோ?
பூவைகளே—பூவைகாள்! (என்னைப் போலன்றே உங்களுக்குச் சொல்லிப் போகக்கூடுமிறே)
உரையீர்—சொல்லுங்கோள், (உ)

ஆறு ;—(ஊரும்நாடும்.) - அவனுடைய கல்யாண குணங்களையும் திவ்ய சிஹ்நங்களையும் நிரவதிகமான ஆர்த்தியோடே கூப்பிடுகிற தன்னுடைய ஆர்த்தஸ்வரத்தைக்கேட்டு ஊரும் நாடும் உலகமுந் தன்னைப்போலே அத்யந்தம் அவஸந்நமாய்க்கொண்டு அத்திருநாமங்களையும் திவ்யசிஹ்நங்களையுமே சொல்லிக் கூப்பிடும்படியாகக் கூப்பிடுகிற இவள், அந்த வ்யஸநம் பொறுக்கமாட்டாமையாலே அதிக்ரமமான தன்னுடைய ஸ்த்ரீத்வத்தை த்ருணவந்மந்யமானையாய்க் கொண்டு போகட்டு நல்வளம்சேர்பழனத் திருக்கோளூர்க்கே போய்ப்புகும் பாக்யஹீனையான என்னுடைய பெண்பிள்ளை உங்களை நினைத்தாகிலும் ஒருகால் வருமேயென்று அவளுடைய பூவைகளைக் கேட்கிறாள். (உ)

ஈடு ; அவ ;—மூன்றும்பாட்டு. திருக்கோளூர் ப்ரத்யாஸந்நமானால் எங்ஙனே உடைகுலைப்படக்கடவள் என்கிறாள்.

பூவைபைங்கிளிகள் பந்துதூதைபூம்புட்டில்கள் *
யாவையுந்திருமால் திருநாமங்களேகூவியெழும் * என்
பாவைபோயினித் தண்பழனத்திருக்கோளூர்க்கே *
கோவைவாய்துடிப்ப மழைக்கண்ணொடென்செய்யுங்கொலோ. (௩)

ப. —அநந்தரம், தன்னுடைய லீலோபகரணங்களாலுள்ள ரஸமெல்லாம் திருநாமோச்சாரணத்தாலே பிறக்கும்படியாயிருக்கிற இவள், திருக்கோளூரிலே புக்கு அவன் தன் நினைவுக்கீடாகப் பரிமாறுமையாலே கண்ணுங்கண்ணீருமாய் எங்ஙனே க்லேசப்படுகிறாளோ ? என்கிறாள்.

(லீலோபகரணமான)
பூவை—பூவைகள்
பை—பசுத்த
கிளிகள்—கிளிகள்
பந்து—பந்து
தூதை—தூதை
பூ—பூவிடும்
புட்டில்கள்—,
யாவையும்—(இவையெல்லாவற்றாலுமுள்ள ரஸம்பிறக்கும்படி)
திருமால்—திருமாலுடைய
திருநாமங்களே—திருநாமங்களேயே
கூவி—உச்சரித்து
எழும்—அத்தாலே யுஜ்ஜீவிக்கும்படியான
என்—என்
பாவை—பெண்பிள்ளையானவள்
இனி—இத்திருநாமோச்சாரண ரஸங்கிடக்கச் செய்தே பின்னையும்
தண்—குளிர்ந்த
பழனம்—பழனங்களையுடைய
திருக்கோளூர்க்கே—திருக்கோளூர்க்கே
போய்—போய். (அவன் எதிர்வந்து ஸ்வாகதாதிகளைப் பண்ண ஆலோகாலாபாலிங்கநாதிகளாலே ஆச்வாஸிப்பியாமையாலே)
கோவை—கோவைப்பழம்போலேயிருக்கிற
வாய்—அதரம்
துடிப்ப—துடிப்ப
மழை—வர்ஷம்போலே தாராளமான நீரையுடைத்தான
கண்ணொடு—கண்களோடே நின்று
என்செய்யுங்கொலோ—என்செய்கிறாளோ?
யாவற்றையும் திருமால் திருநாமங்களைச்சொல்லுமென்றுமாம். (௩)

ஆறு ;—(பூவை) - லீலார்த்தமாகக் கொண்டுவந்த ஸாகஸாரிகாதி லீலோபகரணங்களைக்கண்டால் வரும் லீலாரஸமும், தனக்குப் பிராட்டியோடே ரமமாணனான எம்பெருமானைக் காணுமதுவேயாகையால், அவனை நினைத்துக் காணப்பெறாமையாலே அவன் திருநாமங்களைச் சொல்லிக்கூப்பிடச் சொல்லி அதினுடைய மாதுர்யத்தாலும் குளிர்த்தியாலும் உஜ்ஜீவித்திருக்கிற என் பெண்பிள்ளை

திருக்கோளூரிலே போய்ப்புக்கு, இனித் தன்னுடைய மநோரதமெல்லாம் பரிபூர்ணமாம்படி யிருக்குமோ? அன்றியே, தன்னுடைய கண்ணநீரும் அழுகையுமேயாய் நிற்குமோ என்கிறாள். (௩)

ஈடு ; அவ ;—நாலாம்பாட்டு. இவளைக்கண்ட நாட்டார், குணஹீநையென்பர்களோ? குணாதிகையென்று கொண்டாடுவர்களோ? என்கிறாள்.

கொல்லையென்பர்கொலோ? குணம்மிக்கனளென்பர்கொலோ *
சில்லைவாய்ப்பெண்டுகளயற்சேரியுள்ளாருமெல்லே *
செல்வம்மல்கி அவன்கிடந்த திருக்கோளூர்க்கே *
மெல்லிடைநுடங்கவிளமான்செல்ல மேவினளே. (௪)

ப.—அநந்தரம், நிரதிசயைச்வர்யவிசிஷ்டனானவனுடைய திருக்கோளூர்க்கே போக ஒருப்பட்டுவிட்டாள், இவளை ஊரார் என்ன சொல்லுவர்களோ? என்கிறாள்.

செல்வம்மல்கி - அதிசயிதைச்வர்யத்தையுடையவனாய்க்கொண்டு
அவன்—அவன்
கிடந்த—கண்வளர்ந்தருளின
திருக்கோளூர்க்கே—திருக்கோளூர்க்கே
மெல்—மெல்லிய
இடை—இடை யானது
நுடங்க—நுடங்கும்படி
இள—முக்தமான
மான்—மான்போலேயிருக்கிற இவள் (தன்பலஹாநியையும் பருவத்தையும் பாராதே)
செல்ல—போகையிலே
மேவினள்—நெஞ்சுபொருந்திப்போய் விட்டாள் ;
சில்லை—சிலுகிடுகையே ஸ்வபாவமான
வாய்—வாயையுடையவர்களாய்,
பெண்டுகள்—அஸந்நைகளான பெண்களும்
அயற்சேரி—அயற்சேரியில்
உள்ளாரும்—உள்ளாரும்
கொல்லை—வரம்பழிந்தாள்
என்பர்கொலோ—என்று சர்ஹிப்பர்களோ?
குணம்மிக்கனள்—(அதிசயிதமாய் அநுரூபமான விஷயத்தை யறிந்து மேல்விழும்படியான விலக்ஷண) குணாதிசயத்தை யுடையவள்
என்பர்கொலோ—என்று கொண்டாடுவர்களோ?
எல்லே—எல்லே! இதென்னயிருக்கிறதோ என்று விஷாதஸூசகம். (௪)

ஆறு ; —(கொல்லை.) - ஐச்வர்யத்தால் ஸுஸம்ருத்தமாய்க் கொண்டு அவன் கண்வளர்ந்தருளுகிற திருக்கோளூர்க்கே, முக்தை

யானவிவள் மெல்லிடை நுடங்கப்போனாள்; மர்யாதையைக்கடந்தாளென்று லோகத்தார் இவளுக்குக் குற்றமாகச்சொல்வரோ? அன்றியே திருக்கோளூரிலே ஒருத்திக்குள்ள அபிநிவேசமிருக்கும்படியென்! என்று மஹாகுணமாகச் சொல்வரோ? அங்ஙனே, குணமாகச்சொல்லுகை ஸம்பவிக்குமோ? பரகதமான குணத்தையும் தோஷமாகவே காண்கிற லோகஸ்வபாவமிருந்தபடியென்! என்று இன்னாதாகிறாள். (௪)

ஈடு; அவ;—அஞ்சாம்பாட்டு. திருக்கோளூரில் சோலைகளையும் அங்குள்ள பொய்கைகளையும் அவன்கோயிலையும் கண்டால் எங்ஙனே யுகக்குமோ? என்கிறாள்.

மேவிநைந்துநைந்துவிளையாடலுறாள் என்சிறுத்தேவிபோய் *
இனித்தன்திருமால்திருக்கோளூரில் *
பூவியல்பொழிலுந் தடமுமவன்கோயிலுங்கண்டு *
ஆவியுள்குளிர எங்ஙனேயுகக்குங்கொலின்றே. (௫)

ப—அநந்தரம், ப்ரிய:பதியானவனுடைய விலக்ஷண போகஸ்தாநத்தைக்கண்டெங்ஙனே ப்ரியப்படுகிறாளோ? என்கிறாள்.

மேவி—(அவனுடைய ஸௌந்தர்ய ஶீலாதிகளை) நெஞ்சாலேகிட்டி
நைந்து நைந்து—க்ஷணந்தோறும் ஶிதிலையாய்
விளையாடல்—விளையாடுகையிலும்
உறாள்—பொருந்தமற்றிருப்பாளாய்
என்சிறுத்தேவி—பருவம்நிரம்பாத சிறுமையையுடையளாயிருக்கச் செய்தே வாசியறியும்படியான திவ்ய ஸ்வபாவத்தை யுடையளான என்பெண்பிள்ளை
போய்—இங்குநின்றும்போய்
தன்—தனக்கஸாதாரணனான
திருமால்—ஸ்ரீமானுடைய
திருக்கோளூரில்—திருக்கோளூரில்
பூ—பூவை
இயல்—இயல்பாகவுடைத்தான
பொழிலும்—பொழில்களையும்
தடமும்—(பொழிலுக்குச் செவ்வி கொடுக்கும்) தடாகங்களையும்
அவன்—(லக்ஷ்மியோடே) அவன் வர்த்திக்கிற
கோயிலும்—போகஸ்தாநமான கோயிலையும், (நினைத்து முன்பு ஶிதிலையானவள்)
இனி—இனி
கண்டு—காணப்பெற்று
ஆவி—ப்ராணாஶ்ரயமான
உள்—நெஞ்சு
குளிர—குளிரும்படியாக
இன்று—(தனக்கு நல்விடிவான) இன்று
எங்ஙனே—எங்ஙனே
உகக்குங்கொல்—உகக்கிறாளோ? (௫)

ஆறு ;—(மேவிநைந்து.)-பிள்ளையாய் விளையாடும் பதமானால் பிள்ளைகளோடே விளையாடுகையில் ஆதரமின்றியே, "எம்பெருமானைக் காணவேணும்" என்றாசைப்பட்டுப் பெருமையாலே நைந்து நைந்திருந்த என்சிறுத்தேவி போய் இனித்தன் திருமால் திருக்கோளூரில் பூவியல் பொழிலையும் அதுக்குள்ளே தாமரைத்தடாகங்களையும் அதுக்குள்ளே அவன்கோயிலையுங் கண்டு, தன்னுடைய நிரவதிக ஸந்தாபமெல்லாம் போய் ஆவியுள்குளிர இன்று எங்ஙனே உகக்கிறாளோ ? நான் அந்த ஸம்ருத்தியைக்காணப்பெற்றிலேன் என்கிறாள். (௫)

ஈடு ; அவ ;—ஆறாம்பாட்டு. அவனுடைய ஸ்நேஹபஹுமாநவீக்ஷிதாதிகளைக் கண்டு ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ஶிதிலையாகக்கடவளாகாதே யென்கிறாள். இவள்தான் உகப்பது அங்கேபுக்குத் தரித்துநிற்கவல்லளானாலிறே. "எங்ஙனேயுகக்குங்கொல்" என்றாள் கீழிற்பாட்டில் ; இங்ஙனேயுகக்குமென்கிறாள் - இப்பாட்டில்; மகள் காணப்புகுகிறவிஷயத்தை யநுஸந்திப்பது, தன்மகள்படியை யநுஸந்திப்பதாய்த் திருத்தாயர் படுகிறபாடு என்தான் !

இன்றெனக்குதவாதகன்றவிளமானினிப்போய் *
தென்திசைத்திலதமனைய திருக்கோளூர்க்கே சென்று *
தன்திருமால் திருக்கண்ணுஞ் செவ்வாயுங்கண்டு *
நின்றுநின்றுநையும் நெடுங்கண்கள்பனிமல்கவே. (௬)

ப.—அநந்தரம், அவனுடைய திவ்யாவயவஶோபையை அநுபவித்து ஹர்ஷத்தாலே ஶிதிலையாயிறேயென்கிறாள்.

எனக்கு—(தன்னைப்பிரிந்துநோவுபடுகிற) எனக்கு
இன்று—இப்போது
உதவாது—உதவாதே
அகன்ற—கைகழியப்போன
இளமான்—சிறுப்பெண்பிள்ளையானவள்
போய்—வருந்தி வழிநடந்துபோய்
தென்திசை—தெற்குத்திக்குக்கு
திலதம்அனைய—திலகம்போலேயலங்காரமான
திருக்கோளூர்க்கே—திருக்கோளூரிலே
சென்று—ப்ரவேசித்து
இனி—இனி (புக்கபின்பு)
தன்—(ஸ்வாபிமத ஸம்ஶ்லேஷத்தைத் தனக்கு ப்ரகாசிப்பித்துத்) தன்னையுற்றாரோடு உறவறுத்த

திருமால்—ஸ்ரீமானுடைய
திரு—ஸாதராபிவீக்ஷணம்பண்ணுகிற
கண்ணும்—கண்களையும்
செம்—ஸாநுநயமான ஸ்வாகதாதி
வசநத்தாலே உஜ்ஜ்வலரூபமான
வாயும்—அதரத்தையும்
கண்டு—கண்டு, (தன்னுடைய)

நெடு—நெடிதான
கண்கள்—கண்களானவை
பனிமல்க—ஆநந்தாஸ்ருபூர்ணமாம்படி
ஹர்ஷாதிஶயத்தாலே
நின்றுநின்று—ப்ரதிக்ஷணம்
நையும்—ஶிதிலையாகாநிற்குமிறே. (௬)

ஆறு ;—(இன்றுஎனக்கு.)-இன்று தன்னைப்பிரிந்து வ்யஸநப் படுகிற எனக்குத் துணையாகாதே என்னைப்பொகட்டுப்போன என் இளமான், இனிப்போய்த் தென்திசைத் திலதமனைய திருக்கோளூர்க்கே சென்று அவன் கோயிலுள்ளேபோய், தனக்குப்பிராட்டியோடுள்ள ஸம்ஶ்லேஷத்தாலே புதுக்கணித்த திருக்கண்களையும் திருப்பவளத்தையுங்கண்டு நிரவதிகப்ரீதியாலே விகஸிதமான இவளுடைய கண்களையும் ஆநந்தஜமான கண்ணநீரையும் ஆநந்தாகதமான ஶைதில்ய பரம்பரையையும் காணப்பெற்றிலேனென்கிறாள்.

ஈடு ; அவ ;—ஏழாம்பாட்டு, இவள் ப்ரக்ருதிமார்த்தவத்தையும் பிரிவில்வந்த ஶைதில்யத்தையும் அநுஸந்தித்து, இவையெல்லாம் அவ்வளவும் செல்லப்போகவல்லளானாலிறே யென்கிறாள். நாம் இலையகலப்படுக்கிறோமத்தனையொழிய, இவள் போய்முடியப் புகாநின்றாளோ ?

மல்குநீர்க்கண்ணொடு மையலுற்றமனத்தனளாய் *
அல்லும்நன்பகலும்நெடுமாலென்றழைத்தினிப்போய் *
செல்வம்மல்கி அவன்கிடந்ததிருக்கோளூர்க்கே *
ஒல்கியொல்கிநடந்தெங்ஙனேபுகுங்கொலோசிந்தே ? (௭)

ப—அநந்தரம், இவள்காண்கைக்கும் உகக்கைக்கும் அடியான அதிஶயிதவ்யாமோஹத்தையுடையவளை வாய்புலற்றிக்கொண்டு வருந்தி நடந்துபோய் எங்ஙனே அவ்வூரிலே புகுவது ? என்கிறாள்

மல்கு—(விரஹத்தாலே) மிக்க
நீர்—நீரையுடைத்தான
கண்ணொடு—கண்களோடே
மையல்—ப்ரமத்தை
உற்ற—அடைந்த

மனத்தனள் ஆய்—நெஞ்சையுடையளாய், (இப்படி பாஹ்யாப்யந்தர கரணங்கள் அவிதேயமாயிருக்க ப்ராவண்யவாஸநாதிஶயத்தாலே,

நன்—(அவனைச் சொல்லுகைக் குறுப்பான நன்மையை யுடைய
அல்லும்—இரவும்
பகலும்—பகலும்
நெடுமால்—அதிப்ரயிதவ்யா மோஹத்தை யுடையவனே!
என்று—என்று
அழைத்து—கூப்பிட்டு
இனி—அவ்வார்த்திக்குமேலே
ஒல்கி—ஒடுங்கி
ஒல்கி—அசைந்து
நடந்து—நடந்து
ஒசிந்து—தளர்ந்து
போய்—போய்
செல்வம்மல்கி—அபிவ்ருத்தைஸ்வர்யனாய்க்கொண்டு
அவன்—அவன்
கிடந்த—கண்வளர்ந்தருளின
திருக்கோளூர்க்கே—திருக்கோளூர்க்கே
எங்ஙனே—எங்ஙனே
புகுங்கொல்—புகக்கடவளோ ?
ஒசிவு—தளர்த்தி
ஒல்குதல்—ஒடுக்கமாய், அசைதல் (எ)

ஆறு ;—(மல்குநீர்.) - எம்பெருமானைக்கண்டு ஸம்ஶ்லேஷிக்கைக்காக க்லுப்தமாக வரும் அந்தகாலமெல்லாம் அவனோடு ஸம்ஶ்லேஷிக்கப் பெறாமையாலே கண்ணநீர் மல்கி, நெடுமால்! நெடுமால்! என்றழைத்து, இனி, இவள் தன்னுடைய விரஹவ்யஸநத்தாலும் ஸௌகுமார்யத்தாலும் அதிமாத்ரம் அவஸந்நையாய் பரிம்லாநையாய்க்கொண்டு, செல்வம்மல்கி அவன்கிடந்த திருக்கோளூர்க்கே நடந்துபோய்ப் புகும்படியைக் காணப்பெற்றிலேன் என்கிறாள். (எ)

ஈடு ; அவ ;—எட்டாம்பாட்டு. திருக்கோளூரில் ஸங்கத்தாலே என்னைப்பொகட்டுப்போன என்பெண்பிள்ளை, அஸ்ஸங்கமே துணையாகப் போய்ப் புகவல்லளேயோ வென்கிறாள்.

ஒசிந்தநுண்ணிடைமேல் கையைவைத்துநொந்துநொந்து *
கசிந்தநெஞ்சினளாய்க் கண்ணநீர்துளும்பச்செல்லுங்கொல் *
ஒசிந்தவொண்மலராள்கொழுநன் திருக்கோளூர்க்கே *
கசிந்தநெஞ்சினளாய் எம்மைநீத்தவெம்காரிகையே. (அ)

ப.—அநந்தரம், நிரதிஶயபோக்யபூதையான லக்ஷ்மிக்கு நித்யாபிமதனானவனுடைய ஊரிலே ஸக்தையாய் என்னைவிட்டவள், தத்ஸங்கமே தாரகமாக அங்கேசென்று புகவல்லளோ ? என்கிறாள்,

ஒசிந்த—(ரஸிகப்ரமரோபபுக்தையான புஷ்பாவளிபோலே போகத்தாலே) துவண்ட
ஒண்—வைலக்ஷண்யத்தையுடைய
மலராள்—பத்மாவாஸிநிக்கு (னுடைய
கொழுநன்—(அபிமததமனான) நாயக

திருக்கோளூர்க்கே—திருக்கோளூர்க்கே	கையை—கையை
கசிந்தநெஞ்சினளாய்—ஆர்த்ரசித்தையாய்	வைத்து—வைத்து, (அதுதானே யடியாக)
எம்மை—என்னை	நொந்துநொந்து—மேன்மேலும் நொந்து
நீத்த—விட்ட	கசிந்தநெஞ்சினளாய்—நெஞ்சிலீரப்பாடே துணையாகவுடையளாய்
எம்காரிகை—அபிரூபையான என் பெண்பிள்ளை	கண்ணீர்—கண்ணீர்
ஒசிந்த—பண்பட்டதளர்ந்த	துளும்ப—அலையும்படி
நுண்—மெல்லிய	செல்லுங்கொல்—சென்றுவிடக்கூடுமோ? (அ)
இடைமேல்—இடையின்மேலே (தன் இளைப்பாலே)	

ஆறு;—(ஒசிந்த.) - வண்டாலே துகையுண்ட பூமாலைபோலே எம்பெருமானோடுள்ள கலவியாலே ஒசிந்ததிருமேனியையுடைய பிராட்டியோடே திருக்கோளூரிலே அவன் கண்வளர்ந்தருளுகிற படியைக் காணவேணுமென்னும் ஆசையாலே என்னைப் பொகட்டுப் போன என் காரிகை, வ்யஸநத்தாலே மெலிந்தநுண்ணிடைமேலே ஸம்ரமாதிசயத்தாலே கையைவைத்து நொந்துநொந்து கண்ணீர் துளும்ப, அவ்வழிநிவேசமே துணையாக, அவ்வூரிலேபுக்குமுடியவல்லளேயோ? என்கிறாள். (அ)

ஈடு; அவ;—ஒன்பதாம்பாட்டு. அவன் பக்கலிலே அத்யந்த ப்ரவணையாயிருக்கிற இவள், சேரியிலுள்ளார் சொல்லும்பழியே பாதேயமாகத் திருக்கோளூர்க்கே போனாளென்கிறாள்.

காரியம்நல்லனகளவைகாணி லென்கண்ணனுக்கென்று *
ஈரியாயிருப்பாளிதெல்லாங்கிடக்க இனிப்போய் *
சேரியல்பழிதூயிரைப்பத் திருக்கோளூர்க்கே *
நேரிழை நடந்தாளெம்மையொன்றும்நினைத்திலளே. (கூ)

ப.—அநந்தரம். நல்லது கண்டால் தனக்கு ஸ்வலபனான க்ருஷ்ணனுக்கு என்றிருக்குமவள், ஊரார்சொல்லும் பழியை மதியாதேபோனாளென்கிறாள்.

நல்லனகள்—நன்றாய்	காணில்—காணில்
காரியம்—செய்திப்பாட்டையுடைத்தான	என்—எனக்குபவ்யனான
அவை—பதார்த்தங்களானவற்றை	கண்ணனுக்கு—க்ருஷ்ணனுக்கு
	என்று—என்று

ஈரியாய்—ஆர்த்ரஸ்வபாவையாய்
இருப்பாள்—இருப்பாளாய்
நேர்—மெல்லிய (இவள்
இழை—ஆபரணத்தையுடையவளான
இது—தத்தர்த்தமாகத் தான் ஸங்கல்பித்த இவ்விபூதி
எல்லாம்—எல்லாம்
கிடக்க—கிடக்க
இனி—பின்னையும்
போய்—விட்டுப்போய்
சேரி—சேரியில்உள்ளார்
பல—பலவகையும்
பழி—பழி
தூஉய்—தூற்றி
இரைப்ப—கோஷியாநிற்க
திருக்கோளூர்க்கே—திருக்கோளூர்க்கே
நடந்தாள்—நடந்துசென்றாள்;
எம்மை—என்னையும்
ஒன்றும்—ஒருபடியும்
நினைத்திலள்—நினைத்திலள்;
ஊராராகவும் நினைத்திலள்; உடன்பாடையாகவும் நினைத்திலள் என்று கருத்து. (௯)

ஆறு;—(காரியம்) - அதிமநோஹரமான போக்யவஸ்துக்களைக் காணில், இவையெல்லாம் என்கண்ணனுக்கென்று சொல்லாநிற்கும் இப்பெண்பிள்ளை, தனக்காக நாங்கள் கொண்டுவந்த போக்யபதார்த் தங்களையும் எங்களையும் ஒரு த்ருணமாக நினையாதே பொகட்டு, லோகமெல்லாம் "இவள் தனியேபோனாளே" என்று பழிசொல்லி இரைக்கும்படியாகத் திருக்கோளூரிலே போனாள் என்கிறாள். (௯)

ஈடு; அவ;—பத்தாம்பாட்டு. இக்குடிக்குவரும் பெரும்பழியை நினையாதே, திருக்கோளூரிலேபுக்கு அவனையொருகாலும் விடு கிறிலளென்கிறாள்.

நினைக்கிலேன்தெய்வங்காள்! நெடுங்கணிளமானினிப்போய் *
அனைத்துலகுமுடைய வரவிந்தலோசனனை *
தினைத்தனையும்விடா ளவன்சேர்திருக்கோளூர்க்கே *
மனைக்குவான்பழியும்நினையாள் செல்லவைத்தனளே. (௧௦)

ப.—அநந்தரம், அகிலஜகத்ஸ்வாமியான அரவிந்தலோசநனை ஏகதேசமும் விடாளாகக்கொண்டு குடிப்பழியும்பாராதே அவ்வூரிலே புக்குவிட்டாளென்கிறாள்.

தெய்வங்காள்—தெய்வங்காள்!
நினைக்கிலேன்—(இவளுடைய அதிப்ரவ்ருத்தி) நினைக்கமாட்டுகிறிலேன்;
நெடு—அவன்பெருமையை எல்லாம் தன்னகவாயிலேயாக்கும்படி) பெரிய
கண்—கண்ணையுடையளாய், (பருவத்தைப்பார்த்தால்)

இளம்—முக்தமான
மான்—மான்போலேயிருக்கிற இவள்
இனி—(தன்கண்ணழகு தனக்குண்டாயிருக்கப்) பின்னையும்
போய்—போய்
அனைத்துலகும்—ஸர்வலோகத்துக்கும்
உடைய—ஸ்வாமியானமைக்குத் தகுதியான
அரவிந்தலோசநனை—அரவிந்தலோசநனை
தினைத்தனையும்—சிறிதுபோதும்
விடாள்—விடாளாய்க்கொண்டு

அவன்—அவன்
சேர்—வர்த்திக்கிற
திருக்கோளூர்க்கே—திருக்கோளூர்க்கே
செல்லவைத்தனள்—சடக்கெனச்சென்றாள்; (தான் செல்லுகை)
மனைக்கு—குடிக்கு
வான்—மிக்க
பழி—பழியென்றும்
நினையாள்—நினைக்கிறிலள்.
"செல்லவைத்தனள்" என்று லோகோக்தியாலே கடுகச்சென்றாள் என்று கருத்து. (௧௦)

ஆறு;—(நினைக்கிலேன்.) - தன் திருக்கண்களின் அழகாலே ஸர்வலோகங்களையுந்தோற்பித்து அடிமையாக்கிக்கொண்டிருக்கிறவனுடைய திருக்கண்களைக் கண்டல்லது ஒரு க்ஷணமாத்ரமும் தரிக்கமாட்டாதிருக்கிற நெடுங்கண் இளமான், இனி இது குடிப்பழி என்னுமிடமொன்றும் நினையாதே, அவன்சேர் திருக்கோளூர்க்கே போய்ப்புக்காள்; இவளைப்பிரிந்த வ்யஸநாதிஶயம் நினைக்கவும் கூடுகிறதில்லையென்று சொல்லி, பின்னையும் தன்செயலறுதியாலே தெய்வங்காள்! என்று கூப்பிடுகிறாள். (௧௦)

ஈடு; அவ;—நிகமத்தில் இப்பத்தும் கற்றார் இட்டவழக்கு திருநாடு என்கிறார்.

வைத்தமாநிதியாம்மதுசூதனையேயலற்றி *
கொத்தலர்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன்சொன்ன *
பத்துநூற்றிளிப்பத்தவன்சேர்திருக்கோளூர்க்கே *
சித்தம்வைத்துரைப்பார் திகழ்பொன்னுலகாள்வாரே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை ஸஹ்ருதயமாகச் சொல்ல வல்லவர்கள், பரமபதத்துக்கு நிர்வாஹகராவரென்று பலத்தை அருளிச்செய்கிறார்.

வைத்த—சேமித்துவைத்த
மாநிதியாம்—மஹாநிதிபோலே, (நிரதிஶயப்ராப்யபூதனாய்)
மதுசூதனை—போகப்ரதிபந்தகவிரோதிநிரஸநஶீலனானவனை

அலற்றி—(அலாபநிபந்தநமான) ஆர்த்தியாலேயலற்றி
கொத்து—பூங்கொத்து
அலர்—அலருகிற
பொழில்—சோலையாலே

சூழ்—சூழப்பட்ட
குருகூர்—திருநகரிக்கு நிர்வாஹகரான
சடகோபன்—ஆழ்வார்
சொன்ன—அருளிச்செய்த
பத்து—(ஒரோ அர்த்தவிசேஷங்களுக்கு வாசகமான) பத்தான
நூற்றுள்—நூற்றினுள்ளும்
இப்பத்து—ப்ராப்யத்வாப்ரகாசகமானவிப்பத்தை
அவன்—அவன்
சேர்—வர்த்திக்கிற
திருக்கோளூர்க்கே—திருக்கோளூர்க்கே
சித்தம்—நெஞ்சை
வைத்து—வைத்து
உரைப்பார்—சொல்லவல்லார்
திகழ்—பகவதநுபவௌஜ்ஜ்வல்யத்தையுடைத்தாய்
பொன்—ஶ்லாக்யமான
உலகு—பரமபதத்தை
ஆள்வார்—தாங்கள் நினைத்தபடி நிர்வஹிக்கப்பெறுவர்கள்.
இது—கலித்துறை (௧௧)

ஆறு ;—(வைத்தமாநிதி) - ஆழ்வார், விஶ்லேஷமாகிற ஆபத்துக்குத் தமக்கு வைப்பாகவைத்த மஹாநிதியாயிருந்த எம்பெருமானையே அலற்றிச்சொன்ன இத்திருவாய்மொழியை, திருக்கோளூர்க்கே ப்ரவணமான மநஸ்ஸையுடையராய்க்கொண்டு சொல்லுவாரிட்ட வழக்காம் திருநாடு என்கிறார். (௧௧)

ஆறும்பத்து ஏழாந்திருவாய்மொழி வ்யாக்யானம் முற்றுப்பெற்றன.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

எட்டாந்திருவாய்மொழி — பொன்னுலகு ப்ரவேசங்கள்.

ஆறு ;—(பொன்னுலகாளீரோ.) - திருக்கோளூரிலே போய்ப் புக்கு எம்பெருமானோடு ஸம்ச்லேஷித்ததெல்லாம் மநோரதமாத்ரமாய், பழையபடியே எம்பெருமானைக் காணப்பெறாமையாலே தத்விரஹஸஹமாநராய், அந்யாபதேசத்தாலே ஒரு பிராட்டியாய் அவனைக்குறித்து தூதப்ரேஷணம்பண்ணுகிறார் ; இப்படித் திருக்கோளூரிலே எழுந்தருளின பிராட்டியோடுள்ள சிரகால ஸம்ச்லேஷ ஜநிதாநவதிகாநந்த மஹார்ணவாந்தர்நிமக்நனான எம்பெருமான், அந்த வாநந்தவெள்ளம் தனக்கு அஸாத்ம்யமானவாறே அது ஸாத்மிக்கைக்காக விச்லேஷித்து நெடுங்காலமெழுந்தருளாதிருந்தவாறே, தத்விச்லேஷத்தாலே அத்யந்தம் அவஸந்நையானபிராட்டி, தன்னுடைய ஆற்றாமையாலே அவனைக்குறித்துச் சிலபக்ஷிகளைத் தூதாகவிடுகிறாளென்றுமாம். "திருக்கோளூரிலே போய்ப் புகவேணும்" என்று புறப்பட்டப்பிராட்டி, தன்னுடைய அவஸாதத்தாலே பின்னைப்போக க்ஷமையன்றியே, அங்கே உத்யாநத்திலேயிருந்து எம்பெருமானைக்குறித்து தூதப்ரேஷணம்பண்ணுகிறாளென்றுமாம். *

ப — எட்டாந்திருவாய்மொழியில், கீழ்-ப்ராப்யவிஷயத்தில் அதித்வரிதரான இவர்க்கு, த்வராநுரூபமான ப்ரவ்ருத்தியில் யோக்யதையில்லாமையாலே கடகமுகத்தாலே ப்ராபிக்கையிலே அபேக்ஷைபிறந்து, கடநாநுரூபமான அவனுடைய ஸ்ருஷ்ட்ருத்வாத்யாகாரத்தையும், அநுபாவ்யமான அஸாதாரண சிஹ்நத்தையும், ஆச்ரித விரோதிநிவர்த்தநத்தையும், அதிசயிதபுருஷாநுபாவ்யமான போக்யதாவைலக்ஷண்யத்தையும், ஔதார்யஸ்வபாவத்தையும், அத்யந்தபவ்யதையையும் அபிரூபனாய் அகிலாத்மபூதனானவனுடைய அநிஷ்டநிவர்த்தகத்வத்தையும், ஸர்வாநுகத்வத்தையும், அந்த பாத்வத்தோடுகூடின ஸௌலப்யாதிசயத்தையும், உபயப்ரகாசகமான ச்ரிய:பதித்வத்தையும் அநுஸந்தித்து, 'ஏவம்விதஸ்வபாவனான ஸர்வேச்வரனைக் கடிப்பித்த மஹோபகாரத்தின் ப்ரீத்யதிசயத்தாலே ஐஹிகாமுஷ்மிக ஸகலபதார்த்தங்களும் கடகருக்கு ஸமர்ப்பணீயம்" என்கிற அதிசயிதார்த்தத்தை, நாயகனான ஈச்வரனைப்பிரிந்து ஆற்றாமையாலே தூதுவிடத்தேடின நாயகி, தூதுபோகிற பக்ஷிகளைக்குறித்து ப்ரத்யுபகார ப்ரதர்சநம்பண்ணின பாசுரத்தாலே அருளிச்செய்கிறார். *

ஈடு ;—கீழில் திருவாய்மொழி இரண்டும் மோஹமும் உணர்த்தியுமாய், இதில், தூதப்ரேஷணமாயிறே யிருக்கிறது ; * மயர்வற மதிநலம் அருளப்பெற்ற இவர்க்கு (க) ‘‘[illegible]-மாணுபார்த்தஸம்பத்தி:’’ என்னும் மோஹமில்லையே ; இனி இவர்க்கு மோஹமாவது - பாஹ்யபதார்த்தாநுஸந்தாநக்ஷமரன்றிக்கே விஷயங்களில்நின்றும் அந்தஃகரணம் நிவ்ருத்தமாய், மநஸ்ஸுக்கு அவனே விஷயமாய், அவன் குணங்களையே அநுபவிக்கை: அதாவது - ஶரீரியானவவனே ஜ்ஞாநத்துக்கு விஷயமாய்த் தன்னை மறக்கை.

(உ) கீழ் - ‘‘अहं मनुरभवं - அஹம்மநுரபவம்’’ என்றும், (ங) ‘‘सर्वगत्वादनन्तस्य - ஸர்வகத்வாதநந்தஸ்ய’’ என்றும் சொல்லுகிற நிலைபோலே. உணர்த்தியாவது - (ச) ‘‘प्रह्लादोऽस्मीति सस्मार - ப்ரஹ்லாதோஸ்மீதிஸஸ்மார’’ என்கிற ஸ்ரீப்ரஹ்லாதனைப்போலே தம்மையுமுணர க்ஷமராய் ஜகத்வ்ருத்தாந்தத்தையும் அநுஸந்திக்க க்ஷமராகை. நிர்க்குணமான விஷயத்திலேயன்றே இவர் அவகாஹித்தது ; குணிகவிஷயத்திலேயிறே. ஶேஷிபக்கலிலே அநுஸந்தாநமானால் ஶேஷபூதனான தன்னையும் காணுமிறே. கீழ், நெடும்போது அவன் குணங்களை அநுஸந்திக்கையாலே தரித்து பலஹாநிநீங்கி பாஹ்யபதார்த்தாநுஸந்தாந க்ஷமரானார் ; அவ்வளவிலே, இவர் தரித்தவாறேபழைய அலாபமே தலையெடுத்து ஒரு பிராட்டி தஶையைப் ப்ராப்தராய் அந்யாபதேஶத்தாலே பேசுகிறார்.

கீழில் திருவாய்மொழியில், திருத்தாயார் ‘‘எங்ஙனே புகுங்கொல்?’’ என்று நொந்ததுவேபலித்து, தன் சாபலத்தாலே புறப்பட்டாள் ; முடியப்போய்ப்புகமாட்டாமை தன்னுடைய நகரோபவநத்திலே விழுந்து கிடந்து, அவ்வளவிலும் அவன் வரக்காணாமையாலே, கண்ட பக்ஷிகளைத் தூதுவிடுகிறாள். (‘‘செல்ல வைத்தனளே’ என்றது - செல்லுகையிலே யொருப்பட்டாளென்றதாய், முட்டப்போகாமல்கிடந்து ஹகரஸ்யம் பற்றாசாகத் தூதுவிடுகிறாள்’’ என்று பட்டர்.) தனிவழியே புறப்பட்டுப்போம்படியாய் விழுந்தவிவளுக்குத் தூதுபோவாரில்லையே ; உண்டானாலும் இவள் தனக்கு முன்னே ஈடுபட்டுக்கிடப்பர்களே ; இனித் தன்பரிஸரத்தில்

(க) ஶ்ரீபாஷ்யம்-ங-உ-கo.
(உ) ப்ருஹ-உ-ங-ச.
(ங) வி-பு-க-கசு-அ௫.
(ச) வி-பு-க உo எ.

வர்த்திக்கிற பக்ஷிகளுக்கு மேற்படக் கால்நடை தந்துபோக வல்லாரில்லையே; இவ்வளவில் நீங்கள் என் தசையை அறிவிக்கவேணுமென்று அவற்றின் காலிலேவிழுகிறாள்.

* அஞ்சிறைய மடநாரையில்—என்னை நினைத்தானத்தனை, தன்னை மறந்தானென்றாள்; இத்தலையில் அபராதம் பாராதே, அத்தலையில் அபராத ஸஹத்வம் பற்றாசாக, அபராத ஸஹத்வத்தைப் பார்த்து வருவதென்று ஆள்விட்டாள். வைகல் பூங்கழிவாயில் - இருவரையும் அவ்வூரில் போக்யதை மறக்கப்பண்ணிற்று என்றாள்; விரோதிஜ்ஞையாலே ஆர்த்தியை அறிவிக்கவருமென்று ஆர்த்தரக்ஷணம் பற்றாசாகத் தூதுவிட்டாள். இத்திருவாய்மொழியில்- வாராமைக்குஅடி பரப்பணாகையென்று பார்த்தாள்; "தன்மன்னு நீள்கழல்மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான்" என்கிறபடியே அஸாதாரணமானதன்றிறே வடிவு; ஆச்ரிதரோடு ஏகரஸனாகையிறே என்று பார்த்து ஐகரஸ்யம் பற்றாசாகத் தூதுவிடுகிறாள்.

பலபாட்டுக்களிலும் "இதுவோ தக்கவாறு" என்கையாலே, ஆந்ருசம்ஸ்யம் பற்றாசாகத் தூதுவிடுகிறாள்" என்று பிள்ளான் பணிக்கும்படி. (க) 'ஸம்ஜா நாகோ நஷ்டாந் ஹோமாந் ஸவ்யகாகேஸ்ருஜிந் | ஸகோ உபாகஸ தத்ராஹம் - புஞ்ஜாநாமாநுஷாந் போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ | ஸமாத்வா தஸ தத்ராஹம்" என்கிறபடியே பன்னிரண்டாண்டு தண்ணீர்த்துரும்பறக்கலந்து பிரிந்த பிராட்டியைப்போலே, அங்கேபுக்கு நெடுங்காலம் அவனை யநுபவித்துப் பிரிந்து தூதுவிடுகிறாள்' என்று பிள்ளான். "புறப்பட்டவள் முடியப்போகமாட்டாமே நகரோபவநத்திலே கிடந்து தூதுவிடுகிறாள்" என்று பட்டர் அருளிச்செய்யும்படி. (உ) "ஜீவந்தீம் ... - ஜீவந்தீம்மாம்யதாராமஸ் ஸம்பாவயதிகீர்த்திமாந்" - பரபரிபவம் பொறாதகுடிப்பிறப்புடையவரிறே. அதிலே தமக்குவந்த வசஂயம் பரிஹரிக்கச் சொல்லவேண்டாவே. கடலையணைசெய்து ராவணாதிகளைநிரஸித்துத் தாம் வரக்கொள்ள, இத்தலை வெறுந்தரையாய்க் கிடவாமேசெய்ய நினைத்தாராகில், ஏற்கவே பரிஹரித்துத் தம்புகழைநோக்கிக்கொள்ளச்சொல்லலென்று சொன்னாளிறே. அப்படியே இவளும் தன்தசையையறிவித்து விடுகிறாளாயிருக்கிறது.

(க) ரா-ஸு-ருரு-கஅ. (உ) ரா-ஸு-ரு௬-க0

ஈடு ; அவ ;—முதற்பாட்டு. சில புள்ளினங்களைக் குறித்து, எம்பெருமானுக்கு என் தசையை அறிவித்து விபூதித்வயத்தையும் நான்தர நீங்கள் ஆளவேணுமென்று இரக்கிறாள்.

பொன்னுலகாளீரோ புவனிமுழுதாளீரோ ? *
நன்னலப்புள்ளினங்காள் வினையாட்டியேன் நானிரந்தேன் *
முன்னுலகங்களெல்லாம்படைத்த முகில்வண்ணன்கண்ணன் *
என்னலங்கொண்டபிரான் தனக் கென்நிலைமையுரைத்தே. (௧)

ப—முதற்பாட்டில், தன்னுடைய காரணத்வாதி ஸ்வபாவங்களைக்காட்டி என்னைவசீகரித்துக்கொண்டவனுக்கு என்னுடைய அவஸ்தையைச்சொல்லி அதுக்குப் பரிசிலாக உபயவிபூதியும் நீங்களிட்டவழக்காம்படி நிர்வஹிக்க வேணுமென்று சில புள்ளினங்களைச் சொல்லுகிறாள்.

நன்னலம்—* அர்த்திக்தார்க்குக் காரியஞ்செய்கைக்கடியான விலக்ஷணஸ்நேஹாதியுக்தங்களாய்
புள்ளினங்காள்—(ப்ரவ்ருத்திஹேதுவானபக்ஷத்வயாந்வயத்தையுடைய) புள்ளினங்காள்!
வினையாட்டியேன்—பிரிந்து தூதுவிடுகைக்கடியான பாபத்தையுடைய
நான்—நான்
இரந்தேன்—அவன் விஷயத்திலாப்தர்பண்ணும்ப்ரார்த்தனையை உங்களிகள்பக்கலிலே பண்ணினேன் ; (எதுக்காக என்னில்?)—
முன்—ப்ரதமத்திலே
உலகங்கள்—லோகத்தை
எல்லாம்—எல்லாம்
படைத்த—ஸ்ருஷ்டித்து, (ஸ்ருஷ்டமானலோகத்துக்கு ரக்ஷகமாய்)
முகில்—காளமேகநிபமான
வண்ணன்—திருமேனியையுடையனாய்
கண்ணன்—ஆஸ்ரிதர்க்கு ஸுலபனாய், (அந்தஆகாரங்களாலே)
என்—என்னுடைய
நலம்—விலக்ஷணாகாரங்களை யடங்க
கொண்ட—ஸ்வாதீனமாக்கிக்கொண்ட
பிரான் தனக்கு—உபகாரகனுக்கு
என்—என்னுடைய
நிலைமை—அவஸ்தையை
உரைத்து—சொல்லி (அதமயாகச் சேர்ந்திருக்கிற நாங்களிருவரும் பரிசிலாகத்தந்த)
பொன்—நித்யஸ்ப்ருஹணீயமான
உலகு—பரமபதத்தையும்
ஆளீரோ ?
புவனி—பூம்யுபலக்ஷிதமான
முழுது—ஸகல லீலாவிபூதியையும்
ஆளீரோ—ஆளுங்கோள்.

பின்பு இவ்விபூதித்வயமும் நீங்களிட்டவழக்கன்றோ வென்று கருத்து. இனங்காளென்றது - ஸங்கபாஹுள்யமும் கார்யோபயுக்தமென்றிருந்தபடி.

ஆறு ;—மத்ஸம்ஸ்லேஷைக தாரகபோஷக போக்யனாய் மத நீஸ்வரூபரூப விபவைஸ்வர்யனாய்க்கொண்டு என்னோடு ஸம்ஸ்லே ஷித்து விஸ்லேஷிக்கிறான் என்னுடைய ஸர்வஸ்வத்தையும் அப ஹரித்துக்கொண்டு என்னைத்தோற்பித்துத் தனக்கடிமையாக்கிக் கொண்ட எம்பெருமான் தன்னைப்பிரிந்து நான் படுகிற வ்யஸநத் தைச்சென்று சொல்லவேணுமென்று புள்ளினங்களைக் குறித்துச் சொல்ல, அவை பின்னையும் போகாதிருந்தவாறே, "அவன் நம் முடைய அபேக்ஷிதஞ்செய்யாதொழியிற் செய்வதென்?" என்று போகாதிருந்தனவாகக்கொண்டு அவன் பரமகாருணிகனாகையாலும் ஆஸ்ரிதவத்ஸலனாகையாலும் நம் அபேக்ஷிதஞ் செய்தருளும்; ஆத லால் என்னுடைய தசையைச் சொல்லவேணுமென்று சொல்லி, அவற்றின்பக்கலுள்ள ப்ரீத்யதிஸயத்தாலே, திருநாட்டையும் லீலோ பகரணமான அண்டங்களையுமடங்க இவைசெய்கிற உபகாரத்துக் குக் கைம்மாறாகக்கொடுத்து, பின்னையும் நிரூபித்து 'இவைசெய்கிற மஹோபகாரத்துக்குக் கைம்மாறாகப்போராது" என்று பார்த்து, பரமதயாளுக்களான உங்களுடைய நிரவதிக தயையாலே, துஃக்க ஸாகரநிமக்நையான என்னுடைய தசையைச்சென்று சொல்ல வேணுமென்று ப்ரார்த்திக்கிறாள். (க)

ஈடு ; அவ ;—இரண்டாம்பாட்டு. சிலகிளிகளைக்குறித்து, என் ஆற்றாமையை அவனுக்கு அறிவித்துவந்து, நானும் என்தோழிமா ருங் கொண்டாட அத்தை அங்கீகரிக்கவேணும் என்கிறாள்.

[மையமர் இத்யாதி]-முதற்பாட்டில், அவன்பதங்கொடுத்தாள், அதுக்குமேலே ஒருபதந்தேடிக்கொடுக்கிறாள் இப்பாட்டில். அவன் பதமாகிறது-உபயவிபூதியையுங் கொடுக்கையிறே; அதுக்குமேலான பதமாகிறது - அவனாலே விரும்பப்படும் தன்னைக்கொடுக்கை. தன் னைக்கொடுக்குமிடத்திலும், "பின்னை முன்னே" என்னாதே, எல் லாருங்காணக் கைமேலேயிறே கொடுக்கப்புகுகிறது.

மையமர்வாள்நெடுங்கண் மங்கைமார்முன்பென்கையிருந்து *
நெய்யமரின்னடிசில் நிச்சல்பாலொடுமேவீரோ? *
கையமர்சக்கரத்தென்கனிவாய்ப் பெருமானைக்கண்டு *
மெய்யமர்காதல்சொல்லிக் கிளிகாள்! விரைந்தோடிவந்தே. (உ)

ப—அநந்தரம். அநுபாவ்யசிஹ்நயுக்தனானவனுக்கு என்னுற்றாமையை யறிவித்துவந்து என்தோழிமாரெதிரே நான் உங்களைப்பண்ணும் ஆதரத்தை யங்கீகரிக்கவேணுமென்று. சில கிளிகளைப்பார்த்துச் சொல்லுகிறாள்.

கிளிகாள்—(வடிவழகாலும் வார்த்தை யினிமையாலும் இரண்டுதலைக்கும் ஆதரணீயமான) கிளிகாள்!
கையமர்சக்கரம்—கையுந்திருவாழியுமான சேர்த்தியையுடையனாய்
கனி—பக்வபலம்போலே போக்யமான
வாய்—அதரசோபையை யுடையனாய்
என் பெருமானை—என்னையடிமை கொண்ட ஸ்வாமியானவனை
கண்டு—(முற்பாடு காணப்பேறுடைய நீங்கள்) கண்டு (* குணம்பாடி. ஆவி காத்திருக்குமளவன்றியே)
மெய்—உடம்போடே
அமர்—செறியவேண்டும்
காதல்—அபிநிவேசத்தை
சொல்லி—சொல்லி (அவன் ஆதரித்தான் என்று கூடவாகினையாகே)
விரைந்து—ஸத்வா சித்தராய்
ஓடிவந்து—சடக்கென வந்து (உங்கள் வார்த்தைக்கு அநந்தரம் அவன் வரவறுதியாகையாலே என்புதுக் கணிப்புக்கண்டு தங்களையொப்பித்து நிற்கையாலே)
மை—மை
அமர்—பொருந்தி
வாள்—ஒளியையுடைத்தான
நெடு—நெடிய
கண்—கண்ணையுடையராய்
மங்கைமார்முன்பு—(பருவத்தாலுமொத்திருக்கிற) தோழிமார் ஸந்நிதியிலே, (அவர்கள் தாங்கள் ஆதரிக்கக்கண்டிருக்கையன்றிக்கே அவன்கையாலே பிடித்த)
என்—என்
கை—கை, (உங்களுக்குப் பாதபீடமாம்படி)
இருந்து—இருந்து
நெய்—நெய்யோடே
அமர்—சேர்ந்த
இன்—மதுரமான
அடிசில்—அடிசிலை
பாலொடு—பாலோடுங்கூட
நிச்சல்—நித்யமாக
மேவீர்—ஸ்வீகரிக்கவேணும் (உ)

ஆறு;—(மையமர்.)-ஒரு தாமரையிலே ஒருதாமரை பூத்தாற்போலே திருக்கையும் திருவாழியும்சேர்ந்திருக்கிற அழகாலும், திருவாழியைக்கண்ட ப்ரீதியாலேபுதுக்கணித்த திருப்பவளத்தின் அழகாலும் என்னை யடிமையாக்கினவனுடைய அழகைக்கண்டு, நீங்கள் ஸம்ருத்தராய், பின்னை அவளுக்கு உன்பக்கலுள்ள ஸ்நேஹம் மெய்யானஸ்நேஹமென்று அவனுக்குச்சொல்லி, அவன் அருளிச்செய்யும் வார்த்தைகளை நான்முடிவதற்கு முன்னே விரைந்தோடிவந்து என

க்குச்சொல்லி என்னை தரிப்பித்து, என்னுடைய தோழிமாரெல்லாரும் உங்களுடைய ஸம்ருத்தியைக்கண்டு ஆசைப்படும்படி என் கையிலேயிருந்து அவன் திருநாமங்களை நான் கற்பிக்கக் கற்று வாழிகோளென்று தன் கிளிகளை நோக்கிச் சொல்லுகிறாள். (௨

ஈடு ; அவ ;—மூன்றாம்பாட்டு. சிலவண்டுகளைக்குறித்து, அவனுக்கு என்தசையை அறிவித்துவந்து என்தலைமேலே வர்த்தியுங்கோள் என்கிறாள்.

ஓடிவந்தென்குழன்மே லொளிமாமலரூதீரோ? *
கூடியவண்டினங்காள்! குருநாடுடையைவர்கட்காய் *
ஆடியமாநெடுந்தேர்ப்படை நீறெழச்செற்றபிரான் *
சூடியதண்டுளபமுண்ட தூமதுவாய்கள்கொண்டே. (௩)

ப —அநந்தரம், என்பக்கலினின்றும்செல்லுகையாலே ஆஶ்ரிதவிரோதிநிவர்த்தகனான க்ருஷ்ணன் ப்ரஸாவஹித்த புதுக்கணிப்போடேவந்து, "அவன் வருகிறான்" என்றலங்கரித்திருக்கிற என்குழலிற்பூவை யூதுங்கோளென்று சிலவண்டினங்களைப்பார்த்துச் சொல்லுகிறாள்.

கூடிய—பரஸ்பரம்செறிந்த
வண்டினங்காள்—வண்டினங்காள்!
குருநாடுடை—குருக்ஷேத்ரநிர்வாஹகரான
ஐவர்கட்குஆய்—பாண்டவர்கள்ஐவர்க்குமாக
ஆடிய—தர்ஶநீயகதியான
மா—குதிரைகளையும்
நெடு—ஓங்கின
தேர்—தேர்களையும்
படை—ஸேநையையும்
நீறுஎழ—தூளிசேஷமாம்படி
செற்ற—அழித்த
பிரான்—மஹோபகாரகனானக்ருஷ்ணன்
சூடிய—திருக்குழலில்சாத்தின

தண்—ஶ்ரமஹரமான
துளபம்—திருத்துழாயிலேயிருந்து
உண்ட—பானம்பண்ணின
தூ—தெளிந்த
மது—மதுவையுடைத்தான
வாய்கள்—வாயை
கொண்டு—உடையீர்களாய்க்கொண்டு
ஓடிவந்து—சடக்கெனவந்து, (அவனுக்கு ஸர்வப்ரகாரபோக்யமான)
என்—என்
குழல்மேல்—குழலின்மேலில்
ஒளி—செவ்வியையுடைத்தாய்
மா—ஶ்லாக்யமான
மலர்—பூவில்
ஊதீர்—மதுபாநோத்யோகந்தோன்றும்படி ஊதவேணும். (௩)

ஆறு ;—(ஓடிவந்து.) - ராஜ்யப்ராப்தராய் ஸமாஶ்ரிதருமான பாண்டவர்கள் பக்கலுள்ள வாத்ஸல்யத்தாலே, த்ரைலோக்யவிஜயோபகரணபூதமாய் அத்யுந்நதமாயிருந்த திருத்தேரிலேநின்று அவர்களுக்கு ஸாரத்யம்பண்ணி தத்விரோதிகளை நிரஸித்தருளின ஸமயத்திலே, பரமபக்தியுக்தரான திவ்யஜநங்கள் ஶிஶிரோபசாரமாகச் சாத்தியருளப்பண்ணின திவ்யகந்தமான திருத்துழாய்மதுவைப் பாநம்பண்ணி, அத்தூமதுவாய்களைக் கொண்டோடிவந்து, அம்மதுவையும் அதிஶீதளமான திவ்யகந்தத்தையும் என் குழல்மேல் ஒளிமாமலர்களிலே வர்ஷிக்கவேணும்; வர்ஷிக்கவே, அம்மலர்களும் அலர்ந்து புதுக்கணிக்கும்; * என்னிறம் பண்டுபண்டு போலொக்கும், கெண்டையொண்கணுந்துயிலுமென்று, பரஸ்பர ஸம்ஶ்லேஷைகபோகமான வண்டுகளைநோக்கிச் சொல்லுகிறாள். (௩)

ஈடு; அவ ;—நாலாம்பாட்டு. என்னை நோவுபடுத்திப்போய் எட்டாநிலத்திலே ஒலக்கமிருக்கை தக்கோர்மையோவென்று திருநாட்டிலேசென்று சொல்லுங்கோளென்று சில தும்பிகளைக்குறித்துச் சொல்லுகிறாள்.

தூமதுவாய்கள்கொண்டுவந்து என் முல்லைகள்மேல்தும்பிகாள் *
பூமதுவுண்ணச்செல்லில் வினையேனைப்பொய்செய்தகன்ற *
மாமதுவார்தண்டுழாய்முடி வானவர்கோனைக்கண்டு *
யாமிதுவோதக்கவாறு ? என்னவேண்டுங்கண்டீர்நுங்கட்கே. (௪)

ப —அநந்தரம், ஸூரிபோக்யமான வைலக்ஷண்யத்தையுடையவனைக் கண்டு, உர்முடைய தகவுடைமையிதுவோ ? என்று சொல்லவேணும் என்று சிலதும்பிகளைக்குறித்துச் சொல்லுகிறாள்

என் — நான்வளர்த்துப்போருகிற
முல்லைகள்—முல்லைகளின்
மேல்—மேலே வர்த்திக்கிற
தும்பிகாள் — தும்பிகாள் !
தூ—தூய
மது—மதுவை நிரூபகமாகவுடைத்தான
வாய்கள்—வாய்களை
கொண்டு — கொண்டு
வந்து—வந்து

பூ—(அம்முல்லைகளில்) பூவின்
மது—மதுவை
உண்ண— உண்ண
செல்லில்—செல்ல நினைத்திகோளாகில், (அவைவாடிக்கிடக்கிற அவஸ்த்தையிற் செல்லாதே)
வினையேனை—விஶ்லேஷஹேதுவான பாபத்தையுடையேனான என்னை

பொய்—க்ருத்ரிமஸம்ஶ்லேஷத்தை
செய்து—பண்ணி
அகன்ற—அகன்றவனாய், (இப்பிரிவு தானே செந்தலிப்புக்கு உறுப்பெ ன்னலாம்படி)
மா—பெருவெள்ளமான
மது—மது
வார்—ஒழுகுகிற
தண்—குளிர்ந்த
துழாய்—திருத்துழாயாலே யலங்க்ருதமான
முடி—திருமுடியையுடையனாய்க் கொண்டு
வானவர்—நித்யஸூரிகளுக்கு
கோனை—நிர்வாஹகனாயிருக்கிறவனை
கண்டு—கண்டு
நுங்கட்கு—(இவ்வவஸ்தையிலே ஸந்நிஹிதங்களான) உங்களுக்கு, (அவனுடைய மேன்மைக்குத் தகுதியாம்படி ஸோபசாரமாக)
யாம்—நாம்
இதுவோ—இம்மேன்மைகொண்டாடியிருக்குமதுவோ
தக்கவாறு—தகவுடையோமானபடி ?
என்னவேண்டுங்கண்டீர்—என்று சொல்லவேணுங் காணுங்கோள்.
அப்போதிறே, என்னோபாதி இம் முல்லையும் செந்தலித்து மதுபாநம் பண்ணலாவது என்று கருத்து (சு)

ஆறு ;—(தூமதுவாய்கள்)-நீங்கள் பூமதுவுண்ணச் செல்லில், பாக்யஹீநையான எனக்கு "ஸம்ஶ்லேஷம்" என்றோர் இந்த்ரஜாலத்தைக்காட்டி, என்னை யகன்று திருநாட்டிலே திருமாமணிமண்டபத்திலே, * அயர்வறுமமரர்கள் திவ்யபரிஷத்திலே, * குணைர்தாஸ்யமுபாகதராயிருந்த அவர்களாலே யலங்க்ருதனாயிருந்த அவனைக்கண்டு, அவன் திருக்குழலில் திருத்துழாயின் மதுவெள்ளத்தை உங்கள் தூமதுவாய்கள் கொண்டுபருகிப்பின்னை ' உம்மையொருத்தி இன்று ஆசைப்பட்டுக்கூப்பிடாநிற்க, அவளை நினையாதிருக்குமிதுவோ உம்முடைய க்ருபையாவது?' என்று அவன் ஸந்நிதியிலேசொல்லவேணுமென்று, தனக்குப் பரமஸுஹ்ருத்துக்களாய்த் தன் முல்லைகளிலே வந்திருந்த தும்பிகளை நோக்கிச்சொல்லுகிறாள்.

ஈடு ; அவ ;—அஞ்சாம்பாட்டு. தன்னுடைய கிளிகளைக்குறித்து எங்கேனும் போயாகிலும் அவனைக்கண்டு இதுவோ உம்முடைய தக்கோர்மையிருக்கும்படி யென்னுங்கோளென்கிறாள்.

நுங்கட்குயானுரைக்கேன் வம்மின்யான்வளர்த்தகிளிகாள் *
வெங்கண்புள்ளூர்ந்துவந்து வினையேனைநெஞ்சங்கவர்ந்த *
செங்கண்கருமுகிலைச்செய்ய வாய்ச்செழுங்கற்பகத்தை *
எங்குச்சென்றாகிலுங்கண் டிதுவோதக்கவாறென்மினே. (ரு)

ப.—அநந்தரம், உதாரஸ்வபாவனானவனை எங்கேனுமாகிலும் போய்க் கண்டு இதுவோ தகுதியென்று சொல்லுங்கோளென்று தான் வளர்த்த சில கிளிகளைப்பார்த்துச் சொல்லுகிறாள்.

யான்—(பிரிந்தவவன் பரிகரம்போலே செருக்கடியாதே) நான்
வளர்த்த—வளர்க்கவளர்ந்த
கிளிகாள்—கிளிகாள்!
வம்மின்—அதிபரிசயத்தாலே அநாதரித்திராதே வாருங்கோள்,
யான்—வளர்த்த உங்களாலே பயன் பெறவிருக்கிற நான்,
நுங்கட்கு—நானுண்டாகில் உண்டாகும்படியான வுங்களுக்கு
உரைக்கேன்—நீங்களேயறிந்துசெய்யும் காரியத்தைச் சொல்லுகிறேன்,
வெம்—ப்ரதிபந்தகங்களை யழலவிழிக்கும்
கண்—கண்ணையுடைய
புள்—பெரியதிருவடியை
ஊர்ந்து—தன்னுடையத்வரைதோன்றும்படி நடத்திக்கொண்டு
வந்து—என்பக்கலிலேவந்து
வினையேனை—இன்று பிரிந்திருக்கைக்கடியான பாபத்தையுடையேனான வென்னை
நெஞ்சம்கவர்ந்த—நானுமறியாதபடி சித்தாபஹாரம்பண்ணினவனாய்,
செங்கண்—அவ்வபஹாரஹேதுவான அந்த சிவந்த திருக்கண்ணையும்
கருமுகிலை—அதுக்குப் பரபாகமாய் பொன்மலையின் மீமிசைக் கார்முகில்போலே பெரிய திருவடி திருத்தோளிலே பொருந்தவிருக்கிற காளமேகநிபமான ரூபத்தையுடையனாய்,
செய்யவாய்—நினைத்தது முடித்தப்ரீதியாலே சிவந்த அதரசோபையையுமுடையனாய்,
செழுங்கற்பகத்தை—இவ்வழகைத் தன்பேறாக வநுபவிப்பிக்கையாலே விலக்ஷண கல்பகம்போலே மஹோதாரனானவனை
எங்காகிலும்—பரவ்யூஹவிபவாதிஸ்தலங்களெங்கேனுமாகிலும்
சென்று—சென்று
கண்டு—கண்டு
இதுவோ—இவளை சித்தாபஹாரம் பண்ணித் தனிமைப்படுத்தினவிதுவோ
தக்கவாறு—தகுதி
என்மின்—என்றுசொல்லுங்கோள்

ஆறு;—(நுங்கட்கு) க்ரூராவலோகநகாலாநல தக்தப்ரதிகூலஜாலனான பெரியதிருவடி திருத்தோளிலே ஏறியருளிவந்து என்னோடே ஸம்ஶ்லேஷித்து விஶ்லேஷிக்கிறபோது அதிஶீதளமாய் ம்ருதஸஞ்ஜீவநமான திவ்யகடாக்ஷங்களாலும் அதிமதுரமான பணிமொழிகளினாலும் திருமேனியிலழகாலும், ஆத்மதாநரூபமான பரிஷ்வங்கத்தாலும் என்னுடையமந: ப்ரப்ருதி ஸகலகரணங்களையும் அபஹரித்துக்கொண்டுபோனவனைத் திருநாட்டிலே சென்றாகிலுங்கண்டு, உம்முடைய தக்கவாறிதுவோவென்று சொல்லவேணுமென்று, தான்வளர்த்த கிளிகளைக் குறித்துச் சொல்லுகிறாள். (௫)

ஈடு; அவ;— ஆறாம்பாட்டு. ஆஸ்ரிதரோடு ஏகரஸனாகையால் நம்மபேக்ஷிதங்கள் செய்யும் அவன் பாடேசென்று, இதுவோ தக்கவாறென்னுங்கோளென்று சில பூவைகளைக்குறித்துச் சொல்லுகிறாள்.

என்மின்னு நூல்மார்வனென்கரும் பெருமானென்கண்ணன் *
தன்மன்னுநீள்கழல்மேல் தண்டுழாய்நமக்கன்றிநல்கான் *
கன்மின்களென்றும்மையான் கற்பியாவைத்தமாற்றம்சொல்லி *
சென்மின்கள்தீவினையேன் வளர்த்தசிறுபூவைகளே. (௬)

ப — அநந்தரம், ஸர்வப்ரகார பவ்யனானக்ருஷ்ணன் திருவடிகளில் திருத்துழாய் நமக்கன்றித்தாரான், நான் உங்களைக் கற்பித்துவைத்த வார்த்தைகளைச் சொல்லுங்கோளென்று தான் வளர்த்த சிறுபூவைகளைக்குறித்துச் சொல்லுகிறாள்.

தீவினையேன்—நான் உங்கள் கார்யம் செய்கையன்றியே உங்களைக்கொண்டு கார்யம் கொள்ளவேண்டும்படி க்ரூரமானபாபத்தை யுடையேனான நான்
வளர்த்த—வளர்த்த
சிறு—முக்தமான
பூவைகளே—பூவைகாள் !
என்மின்னு நூல்மார்வன்—திருமேனிக்குப்பரபாகமாகும்படி மின்போலேவிளங்குகிற திருயஜ்ஞோபவீதத்தையுடைய திருமார்பை என்னையநுபவிப்பித்தவனாய்.
என்கரும்பெருமான்—இவ்வவயவ ஸோபாமாத்ரமன்றியே ஸமுதாயமான ஸ்யாமளவிக்ரஹத்தை எனக்கநுபவிப்பித்து என்னையடிமைகொண்டஸ்வாமியானவனாய்
என்கண்ணன்—எனக்கு ஸர்வப்ரகாரத்தாலும் நியமிக்கலாம்படி பவ்யனானக்ருஷ்ணனானவன்
தன்—தன்னுடையதாய்
நீள்—ஆஸ்ரிதரிருந்தவிடத்தளவும் செல்லும்
கழல்மேல்—திருவடிகளின்மேலே
மன்னு—மன்னின
தண்—ஸ்ரமஹரமான
துழாய்—திருத்துழாயை
நமக்கன்றி—நமக்கன்றி
நல்கான்—உகந்து வேறொருவர்க்குக் கொடான் ;
கன்மின்களென்று—கற்கும்படியிருங்கோளென்று
உம்மை—முக்தமாய்ச்செறுக்கடித்திருக்கிறவுங்களை
யான்—நிர்ப்பந்தித்து உங்களைக்கொண்டு கார்யங்கொள்ளவிருக்கிற நான்
கற்பியாவைத்த—என்மின்னு நூல் மார்பனென்று துடங்கி நல்கானென்ற விடமீறாகக்கற்பித்து வைத்த
மாற்றம்சொல்லி—வார்த்தையைச் சொல்லி
சென்மின்கள்—செல்லுங்கோள். (௬)

ஆறு ;—(என்மின்னு நூல்மார்வன்) இதுவோ தக்கவாறென்று சொல்லவேணுமென்று தான்வளர்த்த பூவைகளையபேக்ஷிக்க, பின்னையும் அவைபோகாதிருந்தவாறே, "நம்மபேக்ஷிதம் அவன் செய்தருளாவிடில்செய்வதென்" என்று போகாதிருந்தனவாகக்கொண்டு, ஸ்வகீயாஸங்க்யேயதிவ்யபூஷண பூஷிதமான திவ்யரூபத்தையும் தன்னையும் எனக்கே போக்யமாகப் பரிகல்பித்துக்கொண்டிருக்கிறவென் கண்ணன், தன்மன்னு நீள்கழல்மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான் ; ஆதலால் ஈண்டச்செல்லுங்கோ ளென்கிறாள். (௬)

ஈடு ; அவ ;—ஏழாம்பாட்டு. பரமசேதநன் பொகட்டுப்போனான், சைதந்ய லேசமுள்ளபக்ஷிகள் பறந்துபோவனவும் அந்யபரமாவனவுமாயிற்று. இதுக்குஹேது "சேதநங்களாகையோ" என்று பார்த்து, அசேதநமானபாவையை இரக்கிறாள். அசேதநமுங்கூடவெழுந்திருந்து கார்யம் செய்யவேண்டும்படிகாணும் இவளவஸ்த்தை.

பூவைகள்போல்நிறத்தன் புண்டரீகங்கள்போலுங்கண்ணன் *
யாவையும்யாவருமாய்நின்ற மாயனென்னாழிப்பிரான் *
மாவைவல்வாய்பிளந்த மதுசூதற்கென்மாற்றம்சொல்லி *
பாவைகள்தீர்க்கிற்றிரே வினையாட்டியேன்பாசறவே. (௭)

ப.—அநந்தரம், அபிரூபனாய் அகிலாத்மபூதனாய் ஆஸ்ரிதவிரோதி நிவர்த்தகனானவனுக்கு என்வார்த்தையைச்சொல்லி என்வைவர்ண்யத்தைத்தீர்க்க வல்லிகோளோவென்று தன்னார்த்த்யதிஸயத்தாலே, அசேதநங்களென்று பாராதே சிலபாவைகளைக்குறித்துச் சொல்லுகிறாள்.

பூவைகள்போல்—பூவைப்பூக்கள்போலே தர்ஸநீயமான
நிறத்தன்—நிறத்தையுடையவனாய்
புண்டரீகங்கள்போலும்—அதுக்குப் பரபாகமாம்படி புண்டரீகங்கள் போலேயிருக்கிற
கண்ணன்—கண்களையுடையனாய்,
யாவையும்—இவ்வஸாதாரண விக்ரஹத்தளவன்றியே ஸகலாசேதநங்களையும்
யாவரும்—ஸகலசேதநரையும்
ஆய்—ஸரீரமாகக்கொண்டு
நின்ற—தத்தாகாரேணாவஸ்திதனாய்
மாயன்—தத்கததோஷைரஸம்ஸ்ப்ருஷ்டனாம்படி ஆஸ்சர்யஸக்தியுக்தனாகையாலே கலந்திருக்கச்செய்தேகழல நிற்கவல்லனாய்,
என்னாழிப்பிரான்—கையும் திருவாழியுமானவடிவழகை அடியிலே எனக்கநுபவிப்பித்த மஹோபகாரகனாய்

மாவை—அநுபவிக்கிற கோபிமார்க்கு ப்ரதிபந்தகமான கேஶியை
வல்—ப்ரபலமான
வாய்—வாயை
பிளந்த—கிழித்தவனாய்
மதுசூதற்கு—விரோதி நிரஸநம்ஸ்வ பாவஸித்தமான மதுஸூதநனானவனுக்கு
என்மாற்றம்—கிளிகளுக்கும் பூவைகளுக்கும் சொன்ன வென்வார்த்தையை
சொல்லி—சொல்லி
பாவைகள்—பக்ஷிகள்போலே பறந்துபோகாதே என்னார்த்திகண்டு பொறுதேயிருக்கிற பாவைகாள்
வினையாட்டியேன்—உங்களைக்கொண்டு கார்யங்கொள்ளவேண்டும் பாபத்தையுடையவென்
பாசறவு—நிறத்தில் பசுமையழிவை
தீர்க்கிற்றிரே—தீர்க்கவல்லிகோளோ?.

ஆறு;—நான்வளர்த்த சிறுபூவைகளினுடைய நிறம்போலேயிருந்த திருநிறத்தையும், புண்டரீகங்கள்போன்றிருந்த கண்களையும், அக்கண்களாலே ஸூசிதமான சேதநாசேதந ஸமஸ்தவஸ்துக்களினுடைய நியமநாநுபாஸ்சர்யத்தையும், என்னைத்தோற்பித்தடிமையாக்கின திருவாழியையேந்தினவழகையும், திருக்கைத்தழும்பாலே ஸூசிதமான மதுகைடபாதி ப்ரதிகூல நிரஸந திவ்யசேஷ்டிதங்களையு மடையாளமாகவுடையனாயிருந்த வெம்பெருமானுக்கு என்மாற்றம்சொல்லி என்னிழவை நீங்களே தீர்க்கத்திருமந்தனே, என்னாலொரு செயலில்லையென்று தன்னுடைய நிரவதிக வ்யஸநத்தாலே கலங்கித் தன்பாவைகளை ப்ரார்த்திக்கிறாள். (எ)

ஈடு; அவ;—எட்டாம்பாட்டு. முன்பேநின்ற குருகைக்குறித்து நித்யஸூரிகளைப்போலே உம்மாலல்லது செல்லாதே உம்மைப்பிரிந்து நோவுபடா நின்றாளென்று சொல்லென்கிறாள்.

பாசறவெய்தியின்னே வினைபேனெனையூழிநைவேன் *
ஆசறுதூவிவெள்ளைக்குருகே யருள்செய்தொருநாள் *
மாசறுநீலச்சுடர்முடிவானவர் கோனைக்கண்டு *
ஏசறுநும்மையல்லால் மறுநோக்கிலள்பேர்த்துமற்றே. (அ)

ப.—அநந்தரம், ஸூரிஸேவ்யனான ஸர்வாதிகனைக்குறித்து உம்மையொழிய வேறொருபதார்த்தத்தில் கண்வைக்கிறில ளென்றுசொல்லி ஒருநாள் க்ருபைபண்ணி யருளவேணுமென்று ஒருகுருகை அபேக்ஷிக்கிறாள்.

ஆசு—கமநத்தில் குறை
அறு—அற்ற
தூவி—சிறகையுடையையாய்
வெள்ளை—அகவாயில்ஸாத்திக்கும் ப்ரகாஸகமாம்படி வெளுத்தநிறத்தையுமுடையையான
குருகே—குருகே!
வினையேன்—விரஹத்துக்கு முடிவு காணாத பாபத்தையுடைய நான்
பாசறவெய்தி—நிறமழிந்து
இன்னே—இப்படியே
எனையூழி—அநேககல்பங்கள்
நைவேன்—ஸிதிலையாகாநிற்பன்;
மாசறு—(ஆனபின்பு) அழுக்கற்ற
நீலச்சுடர்—நீலச்சுடரையுடைத்தான
முடி—மயிர்முடியையுடையனாய்
வானவர்—நித்யஸூரிகளுக்கு
கோனை—நிர்வாஹகனான ஸர்வாதிகனை
கண்டு—கண்டு
ஏசறு—பழிப்பற்ற
நும்மையல்லால்—உம்மையொழிய
பேர்த்து—பின்னை
மற்று—வேறு
மறுநோக்கிலள்—மறித்துப்பார்ப்பது ஒன்றில்லையானுள்,
என்றுசொல்லி—என்றுசொல்லி
ஒருநாள்—ஒருநாள்
அருள்செய்—எனக்கு உபகரிக்கவேணும்,
அருள்செய்தென்று பாடமானபோது "என்றுசொல்" என்று வாக்யபேதமாகக்கடவது. ஏசறுமென்று ஏச்சுக்குவிஷயமான வவஸ்த்தையைக் கடந்தாளென்றுமாம்.
ஆசு—குற்றம். (௮)

ஆறு;—(பாசறவெய்தி) நீங்களும் சொல்லவேணுமென்று சில குருகுகளையபேக்ஷிக்க, அவைபோகாதிருந்தவாறே "பிரிந்தவுத்தக்ஷணத்திலே தூதப்ரேஷணம்பண்ணுமித்தனையோ? அவன் விளம்பித்தாலல்லவோ தூதப்ரேஷணம் பண்ணுவது," என்று போகாதிருந்தனவாகக்கொண்டு அவனையிழந்து இப்படியே வ்யஸநப்படுகிறது எத்தனையாயிரம் ப்ரஹ்மகல்பமுண்டு. ஆதலால் பரதுக்காஸஹிஷ்ணுதைகஸ்வபாவரான நீங்கள் விமலநீல ஜ்யோதிர்மய குந்தல பாராலங்க்ருதனுப் பரமஸூரி பரிசரிதசரணயுகளனுமிருந்த வெம்பெருமானுக்கு, 'அநாத்ருதபரோக்தே பாலம்பையாம்படி உன்பக்கலிலே அபிநிவிஷ்டையானாள்; நீ உபேக்ஷிக்கிலும் உன்னுடைய கடாக்ஷமல்லது வேறொருதுணையுண்டென்றிராளென்று சொல்லவேணுமென்று குருகுகளை இரக்கிறாள். (௮)

ஈடு; அவ;—ஒன்பதாம்பாட்டு. சில புதாவினங்களைக்குறித்து நீங்கள்சென்றால் அவன் வந்திலனாகிலும் அந்துத்தை வார்த்

தையைக்கொண்டுவந்து என்னை நித்யமாக உஜ்ஜீவிப்பிக்கவேணு மென்கிறாள்.

பேர்த்துமற்றோர்களைகண் விளையாட்டியேன்நானொன்றிலேன் *
நீர்த்திரைமேலுலவி யிரைதேரும் புதாவினங்காள் *
கார்த்திரள்மாமுகில்போல் கண்ணன்விண்ணவர்கோனைக்கண்டு *
வார்த்தைகள்கொண்டருளி யுரையீர்வைகல்வந்திருந்தே. (சு)

ப —அநந்தரம், அந்தப்பாத்வத்தோடே ஆஸ்ரிதஸுலபனான க்ருஷ்ணனைக்கண்டு வார்த்தைகேட்டுவந்து சொல்லவேணுமென்று சில பெருநாரைகளைப்பார்த்துச் சொல்லுகிறாள்.

நீர்திரை—நீரின் திரை
மேல்—மேலிடாதபடி அவற்றையமுக்கிமேலே
உலவி—உலாவி
இரை—உங்களுக்குபோக்யமான ஆமிஷத்தை
தேரும்—ஆராயும்
புதாவினங்காள்—பெருநாரையினங்காள்
விளையாட்டியேன்—உஜ்வப்ராப்தனானவன் உதவாதபடியான பாபத்தையுடையேனான
நான்—நான்
பேர்த்து—உங்களையொழிய
மற்று—வேறு
ஓர்—அத்விதீயமாயிருப்பதொரு
களைகண்—ரக்ஷகவஸ்து
ஒன்று—ஒன்று
இலேன்—உடையேனல்லேன்;

கார்—(ஆனபின்பு) கார்காலத்தில்
திரள்—திரண்ட
மாமுகில்போல்—மஹாமேகங்கள்போலே அபிரூபனாய்
கண்ணன்—அவதாரமுகத்தாலே ஆஸ்ரிதர்க்கு அத்யந்தபவ்யனாய்,
விண்ணவர்கோனை—அவ்வழகைப் பரமபதவாஸிகளுக்கு (அநுபவிப்பிக்கும் ஸர்வாதிகனை
கண்டு—கண்டு
வார்த்தைகள்கொண்டு—அவனருளிச்செய்யும் வார்த்தைகளைக்கொண்டு
அருளி—என்பக்கலிலேக்ருபைபண்ணி
வந்திருந்து—வந்திருந்து
வைகல்—இதுதானே போதுபோக்காம்படி நெடும்போது
உரையீர்—சொல்லவேணும்,
'பொதா" என்பாருமுளர். (சு)

ஆறு;—(பேர்த்து) ஸஸ்யங்கள் உலராநிற்க மேகங்கள் கடலிலேவர்ஷிக்குமாபோலே தன்னுடைய கடாக்ஷமொழிய வேறொரு கதியின்றியே நான் தளராநிற்கத் தன்னுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிவிஷய ஸர்வகால ஸாக்ஷாத்கார ஜநிதநிரவதிகாநந்த மஹார்ணவாந்தர்நிமக்நரான அயர்வறுமமரர்களுக்கே தன்னையநுபவிக்கக் கொடுக்கு மித்தனையோவென்று எம்பெருமானுக்கு விண்ணப்பம்

செய்து, பின்னை அவனருளிச்செய்தருளின வார்த்தைகளைக்கேட்டு, (௧) "ஸுகாஸீநோபவேஸித:- ப்ருஸ்யாம்ஸமுபவேஸித:" என்னும் ப்ரக்ரியையாலே இருந்து என்பக்கலிலே க்ருபையைப் பண்ணி எனக்கெப்போது மவற்றைச்சொல்லி என்னை தரிப்பிக்க வேணுமென்று சில புதாவினங்களைநோக்கிச் சொல்லுகிறாள். (௯)

ஈடு ; அவ ;—பத்தாம்பாட்டு. சில ஹம்ஸிதுங்களைக்குறித்துப் பிராட்டியும்தானுமான ஏகாந்தத்திலே என்தசையை விண்ணப்பம்செய்து மறுமாற்றம்வந்து சொல்லவேணுமென்கிறாள்.

வந்திருந்தும்முடைய மணிச்சேவலும்நீருமெல்லாம் *
அந்தரமொன்றுமின்றி யலர்மேலசையுமன்னங்காள் *
என்திருமார்வற்கென்னை யின்னவாறிவள்காண்மினென்று *
மந்திரத்தொன்றுணர்த்தி யுரையீர்மறுமாற்றங்களே. (௧௦)

ப —பரத்வ ஸௌலப்ய ப்ரகாஸகமான ஸ்ரிய:பதித்வத்தையுடையவனுக்கு ஏகாந்தத்திலே இவள்படி இதுகாணுமென் றொருவார்த்தைசொல்லி, அவன் சொன்ன மறுமாற்றங்களெல்லாம் எனக்குச் சொல்லவேணுமென்று சில அன்னங்களை அர்த்திக்கிறாள்.

வந்து—அபேக்ஷாநிரபேக்ஷமாகவந்து,
இருந்து—அந்யபரதையின்றியே ஆபிமுக்யம்பண்ணியிருந்து
உம்முடைய—உங்கள் கண்ணுக்கினிய
மணி—ஸ்லாக்யமான
சேவலும்—சேவல்களும்
நீரும்—நீரும்
எல்லாம்—மற்றுமுண்டான பந்துவர்க்கங்களுமெல்லாங்கூட
ஒன்றும்—ஸம்ஸ்லேஷரஸத்துக்கொரு
அந்தரமின்றி—இடையூறின்றியே
அலர்மேல்—புஷ்பங்களின்மேலே
அசையும்—உலாவுகிற
அன்னங்காள்—அன்னங்காள் !
எம்—என்போல்வாரான பெண்பிறந்தார்க்கு ஸ்வாமியான
திரு—லக்ஷ்மியை
மார்வற்கு—திருமார்பிலேயுடையவனுக்கு
என்னை—என்னை
இவள்—இவள்
இன்னவாறு—இப்படி-இவ்வண்ணமானாள்
காண்மினென்று—காணுமென்று
மந்திரத்து—அவனுமவளுமான ஏகாந்தஸ்தலத்திலே
ஒன்று—ஒருவார்த்தை
உணர்த்தி—அறிவித்து
மறுமாற்றங்கள்—அவனருளிச்செய்த மறுமாற்றங்களை
உரையீர்—சொல்லுங்கோள். (௧௦

ஆறு ;—(வந்திருந்து) திருவோலக்கத்திலே எழுந்தருளியிருந்த ஸமயத்தில் திருவுள்ளம் அந்யபரமாயிருக்கிறபோது சொல்லாதே, அவ்வோலக்கம்கிளம்பி திவ்யாந்தஃபுரத்திலே எழுந்தருளினால் அங்கே பிராட்டியுடைய திவ்யஸந்நிதியிலே திருவுள்ளத்திலே படும்படி என்திறம் விண்ணப்பம்செய்து அவனருளிச்செய்தருளின மறுமாற்றங்கொண்டு என்னருகேவந்திருந்து சொல்லவேணுமென்று அநவரத ஸம்ஶ்லேஷைகபோகமான அன்னங்களைக்குறித்துச் சொல்லுகிறாள். (௧௦)

ஈடு ; அவ ;—நிகமத்தில் இத்திருவாய்மொழியில் ஆழ்வாருடைய வார்த்தியை அநுஸந்தித்தார் ஸ்ரீதிலராவரென்கிறார்.

மாற்றங்களாய்ந்துகொண்டு மதுசூதபிரானடிமேல் *
நாற்றங்கொள்பூம்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன்சொன்ன *
தோற்றங்களாயிரத்துளிவையு மொருபத்தும்வல்லார் *
ஊற்றின்கண்நுண்மணற்போ லுருகாநிற்பர்நீராயே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப.— அநந்தரம் இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லவர்கள் இதினர்த்தத்தில் ப்ரேம பாரவஶ்யத்தாலே த்ரவஸ்வபாவராகா நிற்பர்களென்று பலத்தை யருளிச்செய்கிறார்

மாற்றங்கள்—விலக்ஷணமான ஶப்தங்களை
ஆய்ந்துகொண்டு—ஆராய்ந்து கொண்டு
மதுசூதன்—ஜ்ஞாநஹேதுவான வேதங்களை யபஹரித்த மதுவை நிரஸித்த
பிரான்—உபகாரகனுடைய
அடிமேல்—திருவடிகள் விஷயமாக
நாற்றங்கொள்—பரிமளோத்தரமான
பூ—பூவையுடைத்தான
பொழில்—பொழில்கள்
சூழ்—சூழ்ந்த
குருகூர்—திருநகரிக்கு நிர்வாஹகராய்
சடகோபன்—பாஹ்யகுத்ருஷ்டி நிரஸநஶீலரான வாழ்வார்
சொன்ன—அருளிச்செய்ததாய்
தோற்றங்கள்—பகவதாவிர்ப்பாவம் போலே வேதாவிர்ப்பாவ ரூபமான
ஆயிரத்துள்—ஆயிரந் திருவாய்மொழிக்குள்ளும்
ஒரு—அத்வி தீயமான
இவைபத்தும்—இவைபத்தையும்
வல்லார்—பாவவ்ருத்தியோடே அப்யஸிக்க வல்லவர்கள்

ஊற்றின்கண் — ஊற்றினிடத்து
நுண் — நுண்ணிய
மணல்போல்—மணல்நீர்வளத்திலே பொழுதுமாபோலே
நீராய்—பாவவ்ருத்தி பரவஸராய்க் கொண்டு
உருகாநிற்பர்—ஆர்த்ரீபவியா நிற்பர்கள்.

இது கலித்துறை. (கக)

ஆறு ;—(மாற்றங்கள்) பொலிந்துநின்றபிரான் திருவடிகளிலே நாற்றங்கொள் பூம்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன், அஸங்கல்ப பூர்வகமாக தத்விஷய நிரதிஶயாநுராக ப்ரேரிதனாய்க்கொண்டு அதிமதுரமாய் ம்ருதுவாயிருந்த சொற்களாலேசொன்ன வாயிரத்துள் இத்திருவாய்மொழியில் ஆழ்வார்க்குச்சென்ற வ்யஸநத்தை யநுஸந்தித்தார் ஆத்மதாரணக்ஷமரன்றியே ஊற்றின்கண் நுண்மணற்போல் நீராயுருகாநிற்பரென்கிறார். (கக)

ஆறும்பத்து எட்டாந்திருவாய்மொழி

வ்யாக்யாநங்கள் முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஒன்பதாந்திருவாய்மொழி—நீராய்நிலனாய் ப்ரவேஶங்கள்.

ஆறு ;—இப்படி தூதப்ரேஷணம் பண்ணியும் எம்பெருமான் வரக்காணாமையாலே அவனைத் தம்முடைய பெரியவார்த்தியோடே கூடத் திருநாட்டிலேகேட்கும்படி கூப்பிட்டழைக்கிறார். *

ப —ஒன்பதாந் திருவாய்மொழியில் இப்படி கடகமுகத்தாலே ஸம்ஶ்லேஷிக்கப் பாரித்தவிவருடைய வார்த்த்யதிஶயத்தைக்கண்டு ஈஶ்வரன் தன்னுடைய ஸர்வாத்மபாவத்தாலே ஸமாதாநம் பண்ணப்பார்க்க, அது இவர்க்குத்ருஷ்டிவிஷயமல்லாமையாலே அஸாதாரணமான விக்ரஹத்தோடே காணவேணுமென்று விஶ்வரூபம்கண்ட அர்ஜுநனைப்போலே ஆசைப்பட்டு, அதுக்கு ஹேதுவான அநுபாவ்ய சிஹ்நயோகத்தையும், அழகைக்காட்டி அநந்யார்ஹமாக்கு மதிஶயித ஶக்தியையும், அகிலப்ரகார ரக்ஷணத்தையும், அதிப்ரபல விரோதிநிவ்ருத்தியையும், பரத்வாத்யவஸ்தாபஞ்சக யோகத்தையும், அஶேஷஜந ஸம்ஶ்லேஷத்தையும், அகிலவஸ்து வ்யாபகத்வத்தையும், விலக்ஷணவிக்ரஹயோகத்தையும், விரோதிநியமந யோக்யதையையும், அதிஶயிதவைலக்ஷண்யத்தையு மநுஸந்தித்து ஏவம்விஶிஷ்டனான நீ உன்வடிவை என்னுடைய கண்ணுக்கிலக்காம்படி காட்டியருளவேணுமென்று அபிநிவேஶாதிஶயத்தாலே அத்யந்தமார்த்தராய்க் கூப்பிடுகிறார். இந்தப்ராப்ய விஷயத்தில் அபிநிவேஶக்ருதையானவார்த்தியிறே ஆஶ்ரயணோந்முகனான வதிகாரிக்கு விஶேஷணம்.

ஈடு ; அவ ;—"எங்குச்சென்றாகிலுங்கண்டு" என்றும், "வானவர்கோனைக்கண்டு" என்றும், தூதுபோகச்சொன்னார். அவைபோகமாட்டாதபடி தம்முடைய ஆர்த்தத்வநியாலேயழித்தார். "மரங்களுமிரங்கும்"என்று அசேதநங்களிரங்காநின்றால், சிறிது சைதந்யமுடையபக்ஷிகளழியக்கேட்கவேண்டாவிறே. "ஊற்றின்கண் நுண்மணல்போலுருகாநிற்பர் நீராய்" என்றது தூதரையொழியவன்றிறே; தம்பரிஸரத்தில் கால்நடைதந்து போவாரில்லையே ; அசேதநங்களுங்கூட வழிகிறவிடத்தில் பரமசேதநனானவனுக்குச் சொல்லவேணுமோவென்றுபார்த்து தம்மிடற்றோசையையிட்டு அழைத்துக்கொள்ளப் பார்க்கிறார்.

தமக்கு ஆர்த்தத்வநிகிடக்க வேறொருவர் போகவேண்டும்படியாயிருந்ததோ ?. கலங்காப்பெருநகரமான ஸ்ரீவைகுண்டத்திலும் தரிக்கவொண்ணாதபடி கால்குலைந்துவரும்படி பெருமிடறுசெய்து கூப்பிடுகிறார்.

இனித்தான் தூதுபோவார்க்கு காலாலேயாதல் சிறகாலேயாதல் போகவேண்டுகையாலே தடையுண்டு. இவர் மிடற்றோசைக்குத் தடையில்லையிறே. இவர்படுகிற வ்யஸநத்துக்கு ஹேதுசொல்லப்போகாது. பிராட்டி சிறையிருந்ததுக்கு ஹேது சொல்லப்போகாதாப்போலே; அவளிருப்பு பராநுக்ரஹத்தாலேயானாப்போலே, இவருடைய வ்யஸநமும் பராநுக்ரஹத்துக்கு உடலாயிருக்கிறபடி. அவள் சிறையிருந்தபடியை ஸ்ரீவால்மீகிபகவாந் எழுதிவைத்து இன்று நாடெல்லாம் வாழ்கிறாப்போலே, அன்று இவர்தாம் வ்யஸநப்பட்டாரேயாகிலும் இவரருளிச்செய்த ப்ரபந்தங்கள் லோகத்துக்குத் தண்ணீர்ப்பந்தலாயிற்றது. திருக்குழலோசையாலே திருவாய்ப்பாடியில் பெண்களெல்லாம் பட்டதைத்தம்மிடற்றோசையாலே அவன்படும்படி பண்ணுகிறார்.

வாரீர் நீர் நம்மை யிருந்தவிடத்தி லிருக்கவொட்டாதே இங்ஙனபடுத்துகிறதென்? நாம் உம்மைவிட்டு தூரப்போனோமோ? ஏதேனுமொன்றைப் பற்றினாலும் அது நம்மைப் பற்றிற்றென்று சொல்லலாம்படியிருக்கிற ஜகதாகாரதையைக் காட்டினோமேயென்று அவன் திருவுள்ளமாக, அதில்குறையென்? நீ ஜகச்சரீரனாய் நிற்கிறவிந்தஜ்ஞாநம் எனக்கில்லையோ? இந்த ஜ்ஞாநந்தானேயிறே அஸாதாரணாகாரத்தையும் காணவேணுமென்னப் பண்ணுகிறது. எனக்குப்ராப்யமானதுகிடக்க, அல்லாதவற்றைக் காட்டினால் அப்ரயோஜநமென்கிறார். அத்தையு முன்னைஶ்வர்யத்துக்குப் புறம்பல்லாமையாலே வேணுமாகில் ப்ரதிபத்திபண்ணுகிறேன். அத்தால்வந்தது "உன்னதானவற்றை யென்னது" என்றிருக்கிற ப்ரமம் நிவ்ருத்தமாகிறது. அர்ஜுநனும் ஸ்ரீவிஶ்வரூபம்கண்ட வநந்தரத்திலே (க) "தேநைவ ரூபேண சதுர்புஜேந" என்று அஸாதாரணமான வடிவை எனக்குக்காட்ட வேணுமென்றானிறே.

என்னார்த்தத்வநி கேட்டிரங்கி வந்திலையாகிலும், உன்னுடைய விபூதியழியாமல் நோக்கவேணுமாகில் வாவென்கிறாரென்றுமாம். இவருடைய வார்த்தநாதந்தான் அவனுக்கு உபயவிபூதியிலும் குடியிருப்பரிதாய் காணுமிருக்கிறது.

(க) கீதை. கக. சகூ

ஈடு; அவ;—முதற்பாட்டு. ஜகதாகாரனாயிருக்கிற படியைக் காட்டித் தந்தோமிறேயென்ன, அதுபோராது. அஸாதாரணமான வடிவைக் காணவேணுமென்கிறார்.

நீராய்நிலனாய்த்தீயாய்க் காலாய்நெடுவானாய் *
சீரார்சுடர்களிரண்டாய்ச் சிவனாயயனாய் *
கூராராழிவெண்சங்கேந்திக் கொடியேன்பால்வாராய் *
ஒருநாள் மண்ணும் விண்ணும்மகிழவே. (க)

ப —முதற்பாட்டில் அகிலஜகதாகாரனாய் நிற்கிற நீ உன்ன ஸாதாரண விக்ரஹத்தோடேவந்து முகம் காட்டவேணு மென்கிறார்.

நீராய்—(க) "அப ஏவ ஸஸர்ஜாதௌ" என்று சொல்லப்பட்ட ப்ராதம்யத்தையுடைய நீரும்

நிலனாய்—அந்நீரின் கார்யமான ப்ருதிவியும்

தீயாய்—உபயகாரணமாய் சாந்தோக்ய ஸித்தப்ராதம்யத்தையுடைய அக்நியும்

காலாய்—தத்காரணனான வாயுவும்

நெடுவானாய்—இந்த பூதசதுஷ்டய ப்ரதாநமாய் மஹாவகாஶமான ஆகாஶமுமாகிற ஸமஷ்டியைஸ்ருஷ்டித்து அநுப்ரவேஶித்து ததாத்மகனாய்,

சீரார்—(உ) "ஸூர்யாசந்த்ரமஸௌ தாதா யதாபூர்வமகல்பயத் - ஸூர்யா சந்த்ரமஸௌதாதாயதாபூர்வமகல்பயத்" என்கிறபடியே வ்யஷ்டி ஸ்ருஷ்டிக்குப்ரதாநபூதராய்

இரண்டு சுடர்களாய்—உஷ்ணநுஷ்ண ப்ரகாஶத்தாலே உபகாரகரான சந்த்ரஸூர்யர்களும்

சிவனாய்—(தத்தத்ஸம்ஹார ஸ்ருஷ்டிகளுக்குக்கடவருத்ரனும்

அயனாய்—ப்ரஹ்மாவும் ப்ரகாரமாம்படி தத்ததந்தராத்மாவானவனே!

கூரார் — (இந்த ஸாதாரணாகாரத்தை யொழிய) ஆஶ்ரிதவிரோதிநிரஸநத்தில் கூர்மையையுடைய

ஆழி—திருவாழியையும்

வெண்—ஆஶ்ரிதர்க் கநுபாவ்யமான பரிஶுத்தமான வர்ணத்தையுடைய

சங்கு—ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும்

ஏந்தி—ஏந்தி

மண்ணும்—"ஒருவர்க்கு ஒருவனுபகரிக்கும்படியே" என்று பூம்யுபலக்ஷிதமான லீலாவிபூதியோடு

விண்ணும்—பரமவ்யோமஶப்த வாச்யமான நித்யவிபூதியோடு வாசியற

மகிழ—உகக்கும்படி

கொடியேன்பால் — அஸாதாரணவேஷத்தைக் காட்டவேணுமென்று நிர்ப்பந்திக்கும் கொடுமையையுடைய என்பக்கலிலே

ஒருநாள்—ஒருநாளாகிலும்

வாராய் —நடந்துவரவேணும். (க)

(க) மநு க-அ (உ) தை-நா-க

ஆறு ;—ப்ரஹ்மாதி பிபீலிகாந்த ஸர்வஜந்து ஸத்பாவார்த்தமாக அவற்றுக்கு ஆத்மதயா அவஸ்த்திதனாய், அவற்றுக்கு பிபாஸாதி நிவ்ருத்தி தொடங்கி தமோநிரஸநபர்யந்தமான உபகாரத்தைப் பண்ணுகைக்காக ஸலிலாத்யபர்யந்த பதார்த்தங்களுக்கும் ஆத்மபூதனாயிருந்த பரமகாருணிகனே ! உன்னைக்காணப்பெறாதே கூப்பிடுகிற வென்னுடைய வார்த்தஸ்வரத்தைக்கேட்டு இவ்வண்டாந்தர்வர்த்திகளான வாத்மாக்களும் திருநாட்டிலுள்ள திவ்யபுருஷர்களுமடைய முடியக்கிடாய்ப்புகுகிறது. ஆதலால் உன்னுடைய லீலோபகரணமும் போகோபகரணமும் மகிழும்படி கூராராழி வெண்சங்கேந்தின வழகோடே உன்னுடைய விபூதியெல்லாம் துறந்து தளரும்படிக் கூப்பிடுகிற கொடியேன்பால் ஒருநாளாகிலும் வாராயென்று கூப்பிடுகிறார். (௧)

ஈடு ; அவ ;—இரண்டாம்பாட்டு. வாராயென்று நிர்ப்பந்தித்தல்லகாணும் நம்மைக்காண்பது. உம்மையொரு தேஶவிஶேஷத்திலே யழைத்துக்காணும் காட்டுவதென்ன, அவ்வடிவு தன்னையே இங்கே கொடுவந்து இதரஸஜாதீய மாக்கிக்காட்டிற்றிலேபோ வென்கிறார்.

மண்ணும்விண்ணும்மகிழக் குறளாய்வலங்காட்டி *
மண்ணும்விண்ணுங்கொண்ட மாயவம்மானே *
நண்ணியுனைநான்கண்டுகந்துகூத்தாட *
நண்ணியொருநாள் ஞாலத்தூடேநடவாயே. (௨)

ப.—அநந்தரம், மஹாபலிக்கு உன்னழகைக்காட்டி அகிலலோகத்தையும் அநந்யார்ஹமாக்கிக்கொண்ட வாஶ்சர்யஶக்தியையுடைய நீ நான் கண்டுகக்கும்படி இந்தவிடத்திலே வரவேணுமென்கிறார்.

மண்ணும்—பூமியும்
விண்ணும்—ஊர்த்த்வலோகமும்
மகிழ—உகக்கும்படியாக
குறளாய்—பெரியவடிவைச்சிறுக்கின வாமநனாய்
வலம்—அர்த்தித்தவநந்தரம் கையிலே நீர் விழுந்தவாறேவளர்ந்த ஸர்வஶக்தியோகத்தை
காட்டி—ப்ரகாஶிப்பித்து
மண்ணும்—பூமியையும்
விண்ணும்—ஊர்த்த்வலோகத்தையும்
கொண்ட—அளந்துகொண்ட
மாயம்—ஆஶ்சர்யசேஷ்டிதத்தை யுடைய
அம்மானே—ஸ்வாமியானவனே

உனை — ப்ரயோஜநாந்தரபரர்க்குப் ப்ரகாஶிப்பித்த வடிவழகையுடையவுன்னை
நான் — கண்டல்லது நிற்கமாட்டாதசாபல்யத்தையுடைய நான்
நண்ணி — அந்த வடிவழகோடேகிட்டி
கண்டு — மாநஸஸாக்ஷாத்கார மன்றியே கண்ணாலேகண்டு
உகந்து — ப்ரீதனாய்
கூத்தாட — கூத்தாடும்படியாக
நண்ணி — யஜ்ஞவாடத்திலேவந்தாப்போலே நீதானேவந்து கிட்டி
ஒருநாள் — எனக்காகவும் ஒருநாள்
ஞாலத்தூடே — பூமியிலே
நடவாய் — நடந்துவரவேணும். (௨)

ஆறு ;—(மண்ணும்) ஸ்ரீவாமநனாய்வந்து பிறந்தருளி உன்னுடைய நிரவதிகஸௌந்தர்யமாகிற பலத்தாலே மஹாபலியைஜயித்து லோகங்களைக் கொண்டருளிற்று, இவ்வண்டாந்தர்வர்த்திகளான வாத்மாக்களும் திருநாட்டிலுள்ள திவ்யபுருஷர்களும் ப்ரீதராகைக்கன்றோ ? ஆதலால் அவர்களுடைய உஜ்ஜீவநார்த்தமாக ஸோகாக்நி கர்ஶிதமான வென்னுடைய காத்ரங்களாலே உன்னை ஸ்பர்ஶித்து உன்னழகையும் உன் நடையையும் கண்ணாலேகண்டுகந்து அந்த ப்ரீத்யதிஶயத்தாலே நான் கூத்தாடும்படி வந்து ஒருநாள் ஞாலத்தூடே நடவாயென்கிறார். (௨)

ஈடு ; அவ ;—மூன்றாம்பாட்டு. ஜகதாகாரனான வடிவுகாட்டினது எனக்குப்போராது, அஸாதாரணமான விக்ரஹத்தைக் கொடுவந்து காட்டவேணுமென்றார், அது உமக்குக்காட்டுவது ஒரு தேஶவிஶேஷத்தே கொடுபோய்க் காணுமென்ன, அது தன்னை இங்கே கொண்டுவந்து இதரஸஜாதீயமாக்கிக் காட்டிற்றிலையோவென்றார். அது ஒருநாள் சற்றுப்போது காட்டாறுபெருகினாப்போலே செய்தோமென்ன, அது காதாசித்கமென்ன வொண்ணாதபடி யுகந்தோறும் ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப்பண்ணி ரக்ஷிக்கை உனக்கு ஸ்வபாவமாயிருக்க, நான் நோவுபடக்கடவேனோ வென்கிறார்.

ஞாலத்தூடேநடந்து நின்றும் கிடந்திருந்தும் *
சாலப்பலநாளுகந்தோறுயிர்கள்காப்பானே *
கோலத்திருமாமகளோடுன்னைக்கூடாதே *
சாலப்பலநாளடியேனின்னந்தளர்வேனோ ? (௩)

— அநந்தரம், அகிலப்ரகாரத்தாலும் ஆஶ்ரிதஸம்ரக்ஷணார்த்தமான வ்யாபாரத்தையுடையவுன்னை ஸஹதர்மசாரிணியான லக்ஷ்மியோடேகூட வநுபவிக்கை இங்ஙனே யுள்ளதனையும் தளரக்கடவேனோ வென்கிறார்.

உகந்தோறும்—யுகந்தோறும்
ஞாலத்தூடே—பூமியிலே அவதரித்து
நடந்தும்—(க) "[illegible] - சசாரவஸுதாதலே" என்று நடந்தருளியும்
நின்றும்—(உ) "[illegible] - அவஷ்டப்யசதிஷ்டந்தம் தத்ர்ஸ தநுரூர்ஜிதம்" என்று வில்லைக்கோத்துப்பிடித்து நின்றும்,
கிடந்தும்—(ங) "[illegible] - ப்ரதிபிம்பயே மஹோததே:" என்று கடலுக்கெதிரே ஒருகடல் கிடந்தாப்போலே கண்வளர்ந்தருளியும்
இருந்தும்—(ச) "[illegible] - ஏவமாஸ்தேஸதத்ர மாத்மாஸீதயாஸஹராகவ:" என்று பிராட்டியோடேகூட வினிதாக வெழுந்தருளியிருந்தும்
சாலப்பலநாள்—(ரு) "[illegible] - தஸவர்ஷஸஹஸ்ராணி தஸவர்ஷஸதாநிச" என்கிறபடியே அநேககாலம்
உயிர்கள்—ப்ராணிகளை
காப்பானே—ரக்ஷித்துக்கொண்டு போருமவனே!
கோலம்—(சு) "[illegible] - ஸ்வேஷ்ணோர்தேஹாநுரூபாம்வை கரோத்யேஷாத்மநஸ்தநூம்" என்று நீகொண்ட வடிவுக்கீடானவாபிருப்யத்தை யுடையளாய்க்கொண்டவதரிக்கும்
திருமாமகளோடு—லக்ஷ்மியோடே கூடியிருக்கிற
உன்னை—உன்னை
கூடாதே—கிட்டியநுபவியாதே
சாலப்பலநாள்—அநாதிகாலமிழந்தவோபாதிமேலுள்ள காலமெல்லாம்
அடியேன்—உறவறியாதிருக்கை யன்றிக்கே உறவறிந்தநாள்
இன்னம்—விஷயபாரூய் ருசியில்லாதிருக்கையன்றியே ருசிபிறந்தபின்பும்
தளர்வேனோ—அநுபவாலாபத்தாலே ஈடுபடக்கடவேனோ? (௩)

ஆறு;—(ஞாலத்தூடே) வாமநனும் சக்ரவர்த்தி திருமகனும் ஸ்ரீவஸுதேவர் திருமகனும் மற்றும் அஸங்க்யேயங்களான திருவவதாரங்களைப்பண்ணி ஸகல மநுஜநயநவிஷயதாங்கதனாய், அஸேஷமநோநயநஹாரி திவ்யசேஷ்டிதாநிகுர்வாணனாய்க்கொண்டு ஸர்வாத்மாக்களையும் யுகந்தோறும் ரக்ஷித்தருளுகிற பரமகாருணிகனே! நீ பிராட்டியோடேகூட வெழுந்தருளியிருக்கிற விருப்பை

(க) பார-ஆர-
(உ) ரா-கி-கக-உரு-
(ங) ரா-யு-உக-ங-
(ச) ரா-அயோ-கூகா-உ.
(ரு) ரா-ப-க-கள-
(சு) வி-பு-க-கூ-கசரு-

யும் உன்னழகையும் உன்னுடைய திவ்யசேஷ்டிதங்களையும் நானொ ருத்தனும் ஸர்வகாலமும் காணப்பெறாதே தளருமித்தனையோ வென்கிறார். (௩)

ஈடு ; அவ ;—நாலாம்பாட்டு. தளரக் கடவீரல்லீர் ; உம்முடைய தளர்த்தி பரிஹரிக்கக்கடவோம், ஆனாலும் ப்ரதிபந்தகம் கனத்திராநின்றது காணுமென்ன, ஓம் அப்படியே சகடாஸுரனி லுங்காட்டில் வலியதிறே என்னுடைய விரோதியென்கிறார். உன் கால் கண்டபோதே போகாதோ வென்கிறார். “அடிபடிற்செய்வ தென்” என்று சும்மெனாதே கைவிட்டோடுமிறே.

தளர்ந்தும்முறிந்தும் சகடவசுரருடல்வேறா *
பிளந்துவீயத்திருக்காலாண்ட பெருமானே *
கிளர்ந்துபிரமன்சிவனிந்திரன் விண்ணவர்சூழ *
விளங்கவொருநாள் காணவாராய்விண்மீதே. (௪)

ப—அநந்தரம் ப்ரபலமான சகடாஸுரனை நிரஸித்த நீ வருகைக்கு விரோதியுண்டாகிலும் அத்தைப்போக்கி நான்காணும்படி வரவேணுமென் கிறார்.

சகடவசுரார்—சகடாஸுரனுடைய
உடல்—உடலானது
தளர்ந்தும்—கோப்புக்குலைந்தும்
முறிந்தும்—நடுவே முறிந்தும்
வேறா—வேறாம்படி
பிளந்து—பிளந்து
வீய—உருமாயும்படியாக
திருக்கால்—திருவடியை
ஆண்ட—கார்யங்கொண்ட
பெருமானே—ஸ்வாமியானவனே !
கிளர்ந்து—தங்களீஶ்வராபிமாநத்தைப் பொகட்டு ஸாதரமாக வுத்யுக்தராய்
பிரமன்—ப்ரஹ்மாவும்
சிவன்—ருத்ரனும்
இந்திரன்—இந்த்ரனும்
விண்ணவர்—தேவர்களும்
சூழ—சூழ்ந்து ஸேவிக்க
விளங்க—அவர்களுக்கு நாயகனான வௌஜ்ஜ்வல்யம் தோன்றும் படி ஶ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு வந்தாப்போலே
ஒருநாள்—ஒருநாள்
விண்மீது—ஆகாஶத்தின்மேலே
காண—கண்ணுக்குத் தோற்றும்படி
வாராய்—வரவேணும். (௪)

ஆறா ;—(தளர்ந்தும்) ஶகடாஸுரநிரஸநம் பண்ணினாப்போலே உன்னைக்காண்கைக்கு விரோதியான வென்பக்கலுள்ள பாபங்களை நிஶ்ஶேஷமாக நீயே நிரஸித்தருளி மதுஜ்ஜீவநார்த்தமாக வெழுந்தருளுகிறபடியைக் கண்டு ப்ரஹ்ருஷ்டரான சதுர்முகபஶுபதி ப்ரப்ருதிஸமஸ்தஸுரகண பரிவ்ருதனாய் யுகபதுதிததிநகரஶத

ஸஹஸ்ரதேஜஸ் ஸத்ருசமான வுன்னுடைய திருமேனியில் தேஜஸ்ஸாலே ஸகலலோகங்களும் விளங்கும்படி ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு வந்து தோற்றினாப்போலே ஒருநாள் காணவாராய் விண்மீதே யென்று கூப்பிடுகிறார். (௪)

ஈடு ; அவ ;—அஞ்சாம்பாட்டு. ஸர்வத்ரஸந்நிஹிதனாய் என் ஹ்ருதயத்திலும் ஸ்பஷ்டமாகப் ப்ரகாசித்து வைத்து என்கண்ணுக்கு விஷயமாகாதொழிந்தால் நான் தளரேனோவென்கிறார்.

விண்மீதிருப்பாய்மலைமேல் நிற்பாய்கடல்சேர்ப்பாய் *
மண்மீதுழல்வாயிவற்று ளெங்கும்மறைந்துறைவாய் *
எண்மீதியன்றபுறவண்டத்தா யெனதாவி *
உள்மீதாடியுருக்காட்டாதே யொளிப்பாயோ. (௫)

ப.—அநந்தரம் பரத்வாத்யவஸ்தாபஞ்சகத்தாலும் ஆஸ்ரிதரை யநுபவிப்பிக்கிற நீ, என்னெஞ்சிலே ப்ரகாசிப்பித்து உன்வடிவைக் காட்டாதே மறைக்கலாமோ வென்கிறார்.

விண்மீது—நித்யாஸ்ரிதர்க்கு அநுபாவ்யனாய்க்கொண்டு மேன்மைக்கெல்லையான பரமபதத்திலே
இருப்பாய்—ஸர்வஸ்மாத்பரனாய்க்கொண்டு இருக்குமவனாய்
மலைமேல்—தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கைக்காக நீர்மைக்கெல்லைநிலமான திருமலையிலே
நிற்பாய்—அர்ச்சாரூபேண நிற்குமவனாய்
கடல்—ப்ரஹ்மாதிகளுக்கு ஆஸ்ரயணீயனாகைக்காகத் திருப்பாற்கடலிலே
சேர்ப்பாய்—அநிருத்தரூபேண வ்யூஹித்துக் கண்வளர்ந்தருளுமவனாய்
மண்மீது—அளவிலிகளானாரை அழகாலே வஸீகரிக்கைக்காக ராமக்ருஷ்ணாதி விபவரூபேண பூமியிலே அவதரித்து
உழல்வாய்—அங்குள்ளாரோடு ஸஜாதீயனாய் ஸஞ்சரிக்குமவனாய்
இவற்றுள்—இஜ்ஜகத்தில்
எங்கும்—ஸமஸ்தபதார்த்தங்களிலும்
மறைந்து—அந்தராத்மபூதனாய் இந்த்ரியகோசரனன்றியே
உறைவாய்—வர்த்திப்பானாய்
எண்மீது—ஸங்க்யைக்குமேலே
இயன்ற—போகக்கடவதான
புறம்—புறம்புண்டான
அண்டத்தாய்—அண்டங்களிலுமுளனான நீ
எனது—என்னுடைய
ஆவி—ப்ராணாஸ்ரயமான நெஞ்சுக்குள்ளே
உள்மீதாடி—மிகவும் நடையாடிவிட்டு
உரு—வடிவை
காட்டாதே—கண்ணுக்கிலக்காக்காதே
ஒளிப்பாயோ—மறைக்கக்கடவையோ? (௫)

ஆறு ;—(விண்மீது) திருநாட்டிலும் திருமலையிலும் திருப்பாற்கடலிலும் மற்றும் பூமியிலுள்ள திருநகரிகளிலும் இவற்றிலும் அண்டாந்தர்வர்த்திகளான ஸ்தாவரஜங்கமாத்மக ஸர்வவஸ்துக்களிலும், அஸங்க்யேயமான அண்டாந்தரங்களிலுள்ளும் என்னுத்மாவினுள்ளும் எங்கும் ஆச்ரிதார்த்தமாக ஸந்நிஹிதனுயிருந்து வைத்து எனக்கொருத்தனுக்கும் உன்திருவடியைக் காட்டாதொளிக்கவோ பார்த்தருளிற்றென்கிருர். (௫)

ஈடு; அவ ;—ஆறும்பாட்டு. உம்முடைய வபேக்ஷிதம் செய்யக்கடவோம். அதிலொரு குறையில்லை. ஆனாலும் ப்ரயோஜநம் உம்மதானபின்பு நீரும் சிலயத்நம் பண்ணவேணுங் காணுமென்ன, இந்த மர்யாதை என்றுதுடங்கிக் கட்டிற்றென்கிருர். அன்றியே காண்கைக்குத் தாம் அயோக்யரென்று உபேக்ஷித்தானுக நினைத்து, யோக்யதாயோக்யதை பாராதே எல்லார்தலையிலும் திருவடிகளை வைத்தவுன்னுலே யிழக்கப்படுவாருண்டோ வென்கிருராகவுமாம்.

பாயோரடிவைத்ததன்கீழ் பரவைநிலமெல்லாம் *
தாயோரடியாலெல்லாவுலகும் தடவந்தமாயோன் *
உன்னைக்காண்பான் வருந்தியெனைநாளும் *
தீயோடுடன்சேர் மெழுகாயுலகில்திரிவேனே ? (௬)

ப —அநந்தரம் யோக்யாயோக்ய விபாகமில்லாதபடி அபேக்ஷஸம்ச்லேஷஸ்வபாவனுன வுன்னைக்காணவேணுமென்று அக்நிஸகாசத்தில் மெழுகுபோலே சிதிலனுய்த் திரியக்கடவேனேவென்கிருர்.

ஓரடி—ஒருதிருவடியை
பாய்—பரப்பி
வைத்து—வைத்து
அதன்கீழ்—அதின் கீழேயாம்படி
பரவை—ஸமுத்ரையான
நிலமெல்லாம்—ஸகலபூமியையும்
தாய்—தாவி
ஓரடியால்—மற்றையொரு திருவடியால்
உலகு—ஊர்த்வலோகம்
எல்லாம்—எல்லாவற்றையும்

தடவந்த—மேலேதடாவின
மாயோன்—ஆச்சர்யபூதனே !
உன்னை—உன்னை
காண்பான்—காணவேணுமென்று
எனைநாளும்—எல்லாக்காலத்திலும்
வருந்தி—க்லேசித்து
தீயோடு—தீயோடே
உடன்—கிட்ட
சேர்—சேர்ந்த
மெழுகாய்—மெழுகின் ஸ்வபாவத்தை யுடையேனுய்

உலகில்—நாட்டிலே
திரிவேனோ—முடியவும்பெறாதே
ஸ்த்திரமாயிருக்கவும்பெறாதே
அலமாக்கக்கடவேனோ ?
தடவருதல்—உள்ளேவளைத்துக்
கொள்ளுதலுமாம். (௬)

ஆறு ;—(பாயோராடிவைத்து) என்னை உன்திருவடிகளிலே சேர்க்கவேணுமென்று லோகவிக்ரமண வ்யாஜத்தாலே விலையில்லா ததொரு ரத்நம் கெடுத்துத்தேடுவாரைப்போலே பெரியவருத்தத் தோடே உன்திருவடியாலே என்னைத்தேடிக்கொண்டு திரிந்த உன் னைநான் காணவேணுமென்று ஆசைப்பட்டு (க) " எங்குற்றாயெம் பெருமான் " என்று வருந்தித்தேடிக்காணப் பெறாதே ஸோகாக்நி யாலே தீயோடுடன்சேர் மெழுகுபோலே தஹ்யமானனாய் இவ்வுலகத் திலே நானுள்ளதனையும் திரியுமத்தனையோ வென்கிறார். (௬)

ஈடு ; அவ ;—ஏழாம்பாட்டு. உலகில் திரிவேனோ வென்கிற வுறைப்பாலுண்டான ஸ்வாதந்த்ர்யம் உம்முடையதலையிலே கிடந்த தேயென்ன, ஸாதநமும் ஸாதகரும் த்வததீநமானபின்பு, இவ்வாற் றாமை எனக்கு ஸ்வரூபமாயந்வயிக்கு மித்தனையன்றோ வென்கிறார். அன்றியே பேறு உம்மதானபின்பு நீரும் சிறிதுயத்நம்பண்ணவே ணுங்காணுமென்ன, ஸர்வமும் த்வததீநமாயிருக்க அதுக்குப்புறம் போ நான் என்கார்யம் செய்கைக்கென்கிறாராகவுமாம்.

உலகில்திரியும்கரும கதியாயுலகமாய் *
உலகுக்கேயோருயிருமானாய் புறவண்டத்து *
அலகிற்பொலிந்த திசைபத்தாயவருவேயோ *
அலகிற்பொலிந்த வறிவிலேனுக்கருளாயே. (௭)

ப—அநந்தரம் கர்த்ரு க்ரியாரூபமான லௌகிக ஸமஸ்தவஸ்துவுக்கு மந்தராத்மபூதனான நீ, உன்னைப்ராபிக்க விரகறியாத வெனக்கு க்ருபைபண் ணியருளவேணு மென்கிறார்.

உலகில்—லோகத்தில்
திரியும்—வ்யாபரிக்கிற
கருமம்—கார்யரூபமான
கதி—உபாயங்களுக்கு
ஆய்—நிர்வாஹகனாய்
உலகம்—அவ்வுபாயகர்த்தாக்களான
லௌகிகாதிகாரிகளுக்கு
ஆய்—அந்தராத்மதயாநின்று ப்ரவர்த் தகனாய்
உலகுக்கு—(இப்படி ப்ரவர்த்தகத்வ மாத்ரமன்றியே) ஸர்வ லோகங்களுக்கும

(க) திருநெடு - ௯.

ஒருயிரும்—ஏகாத்மாவாயும்
ஆனாய்—நிற்பானாய்
புறவண்டத்து—அண்டாத்பஹிர்வர்த்திகளாய்
அலகில் பொலிந்த—அஸங்க்யேய ஸ்வரூபராய்
பத்து—(ஜ்ஞாநதர்மத்தாலே) பத்து
திசை—திக்கிலும்
ஆய—வ்யாப்தரான
அருவே—முக்தாத்மாக்களை ப்ரகாரமாகவுடையவனே !
அலகில் பொலிந்த—எண்ணிறந்த
அறிவிலேனுக்கு—அறிவுகேட்டையுடையேனாகையாலே உன்னைப்பெற விரகறியாதவெனக்கு
அருளாய்—ஸாதநமும் நீயேயாய் பலமும் நீயேயாம்படி க்ருபை பண்ணியருளவேணும்
'ஓ'' என்கிறவசை ஆர்த்தியால்வந்த கூப்பீட்டைக் காட்டுகிறது, (எ)

ஆறு ;—(உலகில்திரியும்) ஸ்வாபிமத புருஷார்த்த ஸாதநத்வேந அநுஷ்டேயமாநமாயிருந்த யாகாதி ஸர்வக்ரியைகளும், அந்த க்ரியாநுஷ்டாநாநுகுணமானலோகமும், அந்த லோகத்திலே வர்த்தமாநராய் க்ரியாநுஷ்டாதாக்களானவாத்மாக்களும்; அண்டாந்தர்ப்பஹிர்வர்த்தமாநராய் கர்மபிரஸங்குசித ஜ்ஞாநராய் அஸங்க்யேயராயிருந்த முக்தாத்மாக்களும் இதெல்லாம் உன்ஸங்கல்பாயத்தமன்றோ ? ஆதலால் என்னாலொருசெயலில்லை. த்வத்தர்மோபாய விஷயஜ்ஞாந கந்தமின்றியேயிருக்கிற வெனக்கு உன்னுடைய நிரவதிக க்ருபையாலே உன்னைக்காட்டியருளாயென்கிறார். (எ)

ஈடு ; அவ ;—எட்டாம்பாட்டு. அருளாயென்ற வாயோடேவந்தருளக்கண்டிலர். தன்பக்கல் நின்றும் பிரித்துதன்னைக் கைவிடப்பார்த்தானாகாதே யென்கிறார்.

அறிவிலேனுக்கருளா யறிவாருயிரானாய் *
வெறிகொள்சோதிமூர்த்தி யடியேன்நெடுமாலே *
கிறிசெய்துதன்னைப் புறத்திட்டின்னம்கெடுப்பாயோ *
பிறிதொன்றறியாவடியேனாவிதிகைக்கவே. (அ)

ப.—அநந்தரம் தேஜோமய விக்ரஹத்தை யுடைய நீ அவ்வடிவை எனக்கநுபவிப்பியாதே ஸாம்ஸாரிக விஷயங்களிலே தள்ளி இன்னம் கெடுக்கத்தேடுகிறாயோ வென்கிறார்.

அறிவார்—அறிவுடையாரான விலக்ஷணர்க்கு
உயிரானாய்—தாரகனாய்
வெறிகொள்—அவர்களை தரிப்பிக்கும் படியான ஸர்வகந்தமாய்
சோதி—தேஜோமயமாயுள்ள
மூர்த்தி—திவ்யவிக்ரஹத்தையுடையனாய்
அடியேன்—உனக்கே அநந்யார்ஹனும் படி என்னைப்பண்ணி உன்பக்கலிலே சபலனும்படி பண்ணின
நெடுமாலே—அதிஶயித வ்யாமோஹத்தை யுடையனானவனே
அறிவிலேனுக்கு—அந்தவடிவை யநுபவிக்கைக்கு விரகறியாதவெனக்கு
அருளாய்—உன்க்ருபையாலே அநுபவிப்பித்தருளவேணும்
பிறிது—அங்ஙனன்றியே உன்னையொழிய
ஒன்று—கத்யந்தரம்
அறியா—அறியாதே
அடியேன்—நீ இட்டவழக்கான ஸ்வரூபத்தை யுடையேனான வென்னுடைய
ஆவி—நெஞ்சு
திகைக்க—கலங்கும்படியாக
கிறிசெய்து—விரகாலே ருசியை ஜநிப்பித்து
என்னை—அதுக்கீடான வநுபவம் தாராதே வடிவழகில் வாசியறிந்தவென்னை
புறத்து—பாஹ்யவிஷயங்களிலே
இட்டு—அகப்படுத்தி
இன்னம்—அநாதிகால மிழந்ததுபோராமல் அபிநிவேஶம் பிறந்தவின்றும்
கெடுப்பாயோ—கெடுக்கததேடுகிறாயோ
"வெறிகொள் சோதி" என்று — கண்வெறியோடும்படி மிக்கதேஜஸ்ஸென்றுமாம் (அ)

ஆறு ;—(அறிவிலேனுக்கு) என்னை யுள்ளபடி யறிவாரக்கன்றோ நான் என்னைக் காட்டிக்கொடுப்பதென்னில் ; த்வதேகாத்மதாரணாராகையாலே அவர்களுக்கு உன்னைக்காட்டிக் கொடுக்கை ப்ராப்தம். அறிவிலேனுக்குச் செய்தருளுகையன்றோ குணமாவது. ஆதலால் உன்னுடைய நிரதிஶயௌஜ்ஜ்வல்ய ஸௌந்தர்ய ஸௌகுமார்யாத்யபரிமிதோதாரகுண ஸாகரமான உன்திருமேனியை கேவலம் உன்க்ருபையாலே எனக்குக்காட்டி யருளவேணுமென்றபேக்ஷிக்க, ததுத்தரக்ஷணத்திலே செய்தருளக்காணாமையாலே அதிமாத்ரபீதராய், நெடுங்காலமெல்லா முன்னைக்காணப் பெறாதே விஶீர்ணனும்படி எனக்கரியனான நீ உன் திருவடிகளல்லது மற்றொரு ப்ராப்யமும் ப்ராபகமுமில்லை யென்றிருக்கிற விவ்வறிவும்கூடக் கலங்கும்படி உன்னைக்காட்டாதே என்னைவஞ்சித்து ஶப்தாதிவிஷயங்

களைக்காட்டி என்னை யின்னம் கெடுக்கவோ பார்த்தருளிற் றென்கிறார். (அ)

ஈடு ; அவ ; —ஒன்பதாம்பாட்டு. உம்மை இங்குக்கெடுத்ததென்னென்ன, கண்டகாட்சியிலே இழுத்துக்கொள்ளக் கடவதான விஷயங்கள் பரிமாறுகிற விடத்தே வைத்தாயாகில் இனிக்கெடுக்கை யென்றொன்றுண்டோ வென்கிறார். என்னை இங்கேவைத்தபோதே குழியைக்கல்லி மண்ணையிட்டமுக்கப் பார்த்தாயன்றோ வென்கிறார் (க) " தாநஹம்த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் । க்ஷிபாமி - தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் । க்ஷிபாமி " என்னும்படியே.

ஆவிதிகைக்கவைவர்குமைக்குஞ்சிற்றின்பம் *
பாவியேனைப்பலநீகாட்டிப்படுப்பாயோ *
தாவிவையங்கொண்ட தடந்தாமரைகட்கே *
கூவிக்கொள்ளுங்கால மின்னங்குறுகாதோ. (௯)

ப.—அநந்தரம் உனக்கு விதேயமான விஷயேந்த்ரியங்கள் நடையாடுகிற தேசத்திலே வைத்து என்னைமுடிக்கத் தேடுகிறாயோ ? உன் திருவடிகளிலே அழைத்துக்கொள்ளுங்காலம் அணித்தாகாதோ வென்கிறார்.

ஆவி—நெஞ்சு
திகைக்க—கலங்கும்படியாக
ஐவர்—ஐந்திந்த்ரியங்களும்
குமைக்கும்—தாதாவென்று பீடிக்கிற
சிறு—அல்பஸாரமான
இன்பம்—விஷயஸாரஸ்யத்தை
பல—பஹுமுகமாக
காட்டி—ப்ரகாசிப்பித்து
நீ—இவற்றைக்கழிக்கவல்லசக்தியையுடைய நீ
பாவியேனை—நிரதிசயாநந்த யோக்யனாய் வைத்து நித்யதுக்க தேசத்திலே வர்த்திக்கும்படி பாபியான வென்னை
படுப்பாயோ—முடிக்க நினைக்கிறாயோ;
வையம்—பூமியை
தாவி—அநந்யார்ஹையாம்படி அளந்து
கொண்ட—கொண்ட
தடம்—நிரதிசயபோக்யமான
தாமரைகட்கு—திருவடித்தாமரைகளிலே நானந்வயிக்கும்படி
கூவிக்கொள்ளும்—என்னையழைத்துக்கொள்ளும்
காலம்—காலம்
இன்னம்—விஷயாந்தரதர்சநம் விநாசஹேது வென்னுமவஸ்த்தை பிறந்தவளவிலும்
குறுகாதோ—சுறுகாதோ (௯)

(க) கீதை-௧௬-௧௯-

ஆறு ;—(ஆவிதிகைக்க) ஶப்தாதிவிஷய ஸுகம் புருஷார்த்தமன்றோ. அத்தை அநர்த்தரூபமாகச் சொல்லுவானென்னென்னில், ஜ்ஞாநஸ்கலநஹேதுவாய் துக்கபஹுளமாய் அத்யல்பமாய் அத்யந்தமஸ்திரமாயிருக்கையாலே வைஷயிகஸுகம் அபுருஷார்த்தமாகையாலே அந்தவிஷயங்களைக் காட்டி உன்னையிழப்பித்து என்னைத் தரைப்படுத்தாதே, லோகமெல்லாம் நிறையும்படி மலர்ந்தவுன் திருவடிகளாகிற தாமரைத் தடாகத்திலே என்னைவாங்கி யருளாயென்றபேக்ஷிக்க அப்போதே செய்தருளாமையாலே அக்காலம்வந்தால் செய்கிறோமென்றுணக்கொண்டு அக்காலம் இக்காலமெல்லாம் முடிந்தாலும் வரக்கடவதன்றோவென்று கூப்பிடுகிறார். (௯)

ஈடு ; அவ ;—பத்தாம்பாட்டு. "ஐஶ்வர்யாதிகள் அல்பாஸ்திரங்கள்" என்று வேண்டாவென்கிறீராகில், அவ்வளவன்றிறே அநந்தமுமாய்ஸ்திரமுமா யிருக்குமிறே ஆத்மாநுபவம். அத்தை யநுபவித்தாலோவென்ன, நீசொன்னது உபபத்தியாகில் செய்யலாயிற்று. அவை அல்பம் அஸ்திரம் என்றவிடம் ஸ்வரூபகதநம் பண்ணினேனத்தனை. உன்னுடைய போக்யதையைச் சொல்லிற்றும் ஸ்வபாவமிருந்தபடி சொன்னேனத்தனை. அதுதீது என்றுவிட்டும் இதுநன்று என்று பற்றுகிறேனுமல்லேன்; உன்னைப்பற்றிற்றும் நீயாகையாலே; அவற்றை விட்டதும் நீயல்லாமையாலேயென்கிறார். வகுத்தவிஷயத்திலே குணஸௌந்தர்யாதிகளு முண்டாகப்பெற்றேனித்தனை.

குறுகாநீளாவிறுதிகூடா வெனையூழி *
சிறுகாபெருகாவளவிலின்பம் சேர்ந்தாலும் *
மறுகாவின்றிமாயோ னுனக்கேயாளாகும் *
சிறுகாலத்தையுறுமோ வந்தோதெரியிலே. (௧௰)

ப — அநந்தரம் விலக்ஷணமான வாத்மாநந்தாநுபவ லாபமும், அதிஶயித வைலக்ஷண்யத்தை யுடைய வுனக்கு ஶேஷமாயிருக்கு மல்பகாலத்துக்கு ஸத்ருஶமோ வென்கிறார்.

குறுகாநீளா—ஸ்வரூபகதமான ஸங்கோசவிகாஸமின்றியே
இறுதி—முடிவும்

கூடா—இன்றியே
எனையூழி—நித்யமாகையாலே ஸர்வகாலத்திலும்

சிறுகாபெருகா—க்ஷயவ்ருத்திகளு மின்றியே யிருக்கிற
அளவில்—ஸ்வபாவத:பரிச்சேதரஹித மான
இன்பம்—ஆத்மாநந்தம்
சேர்ந்தாலும்—பெற்றாலும்
மாயோன்—அல்பகாலாநுபவமும் அதிஶயிதவிலக்ஷணமாம்படி யான வாஶ்சர்யத்தை யுடையவனே
தெரியில்—நிரூபித்துப்பார்க்கில்
மறுகாலின்றி—பின்னையொருகாலு மின்றியே
உனக்கே—உனக்கே
ஆளாகும்—அடியேனுக்கொண்டு ஶேஷத்வரஸத்தை யநுபவிக்குமா
சிறுகாலத்தை—அத்யல்பகாலத்தை
அந்தோ—ஐயோ
உறுமோ—ஒக்கவற்றோ ?
அந்தோவென்று—ஒவ்வாதென்று சொல்லவேண்டுவதே யென் னும் விஷாதத்தைக் காட்டு கிறது. (௧௰)

ஆறு ;—(குறுகா) வைஷயிகஸுகம் அல்பாஸ்திரத்வாதி தோஷதுஷ்டமாகையாலே உமக்கபேக்ஷிதமன்றாகில், ப்ராசுர்ய ஸ்திரத்வாத்யநேக குணயுக்தமான கேவலாத்மாநுபவலக்ஷண ஸுகத்தை ப்ராப்யமாகக் கொள்ளலாகாதோவென்னில் ; கேவலாத்மாநுபவ ஸுகம் துக்காஸம்பிந்நமாய் நித்யஸித்தமாய் நிரவதிகமாவது. த்வத் கைங்கர்யஸுகம் க்ஷணிகமாய் அத்யல்பமாவது. ஆகிலும் அந்தவாத்மாநுபவஸுகம் ஒருதட்டும், இந்த கைங்கர்யஸுகம் ஒருதட்டுமானால், இத்தைக்கைவிட்டு அத்தைப்பற்றுகை உறுமென்றிருப்பாரோ வறிவுடையார். இப்பொருள் உபபாதநீயமோ ? அந்தவைஷயிக ஸுகத்தினுடைய அல்பாஸ்த்திரத்வாதி தோஷகீர்த்தநம் பண்ணிற்று-அநபேக்ஷிதத்வஹேதுவாகவன்று. ஸ்வரூபநிரூபணம் பண்ணினவித்தனை. வைஷயிகஸுகம் - அநபேக்ஷிதமாகைக்குஹேது த்வத் கைங்கர்ய வ்யதிரிக்தமாகை ; ஆதலால் அந்தவைஷயிக ஸுகத்தையும் கைவல்யஸுகத்தையுமொழிய த்வதநந்யார்ஹ ஶேஷத்வரூப ஸம்பத்தை எனக்குத்தந்தருளவேணுமென்று எம்பெருமானை ப்ரார்த்தித்து முடிக்கிறார். (௧௰)

---

௧௧ ; அவ ;—நிகமத்தில் இப்பத்தும் கற்றவர்கள் ஸர்வேஶ்வரனுக்கு அந்தரங்ககிங்கரராவரென்கிறார்.

தெரிதல்நினைதலெண்ணலாகாத் திருமாலுக்கு *
உரியதொண்டர்தொண்டர் தொண்டன்சடகோபன் *
தெரியச்சொன்னவோராயிரத் துளிப்பத்தும் *
உரியதொண்டராக்கு முலகமுண்டாற்கே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழி தன்னோடன்வய முடையாரை ஸர்வ ரக்ஷகனானவனுக்கு அநந்யார்ஹ ஶேஷபூதராக்குமென்று பலத்தை யருளிச் செய்கிறார்.

தெரிதல்—ஶ்ரவணத்தாலே தெளிந்து
நினைதல்—மநநத்தாலே ப்ரதிஷ்டிதமாம்படி நினைத்து
எண்ணல்—நிதித்யாஸநத்தாலே த்ருவையான ஸ்ம்ருதியைப் பண்ணினாலும்
ஆகா—பரிச்சேதிக்க வொண்ணாத
திருமாலுக்கு—ஶ்ரிய:பதியானவனுக்கு
உரியதொண்டர்—அநந்யார்ஹ ஶேஷபூதரானார்க்கு
தொண்டர்—ஶேஷபூதரானார்க்கு
தொண்டன்—ஶேஷபூதரான
சடகோபன்—ஆழ்வார்
தெரிய—பகவத்வைலக்ஷண்யத்தையும் இதரவைலக்ஷண்யத்தையும் விஶதமாக
சொன்ன—அருளிச்செய்த
ஓராயிரத்துள்—ஓராயிரத்துள்
இப்பத்தும்—இப்பத்தும் (அப்யஸித்தவர்களை)
உலகமுண்டாற்கு—ஸர்வரக்ஷகனுக்கு
உரியதொண்டர்—அநந்யார்ஹ ஶேஷபூதர்
ஆக்கும்—ஆக்கும்.
இது—கலித்துறை (௧௧)

ஆறு ;—(தெரிதல்) விதிஶிவஸநகாதிகளுடைய ஶ்ரவணமநந நிதித்யாஸநங்களுக்கு அபூமியாய் ஶ்ரிய:பதியாயிருந்த வெம்பெருமானுக்கு உரிய தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன் சொன்னவாயிரத்துள் கண்டால் கண்டதிற்காட்டிலும் விஶதமாம்படிசொன்ன வித்திருவாய்மொழியை வல்லார்களை இத்திருவாய்மொழிதானே அவன் குணங்களுக்குத் தோற்று அடிமையாம்படி பண்ணுமென்கிறார். (௧௧)

திருவாய்மொழி ஆறும்பத்து ஒன்பதாந்திருவாய்மொழி வ்யாக்யாநங்கள் முற்றிற்று.

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:.

பத்தாந்திருவாய்மொழி—உலகமுண்ட ப்ரவேஶங்கள்.

ஆறு;—(உலகமுண்ட பெருவாயா) இப்படி திருநாட்டிலே கேட்கும்படி கூப்பிட்டழைத்தும் அவனைக்காணப் பெறாமையாலே, இனி இவனைக்காண்கைக்கு உபாயம் இவன் திருவடிகளை ஶரணம் புகுகைபோக்கி மற்றொன்றுமில்லையென்று பார்த்து, இவனுடைய காருண்யவாத்ஸல்யாதி குணங்களைப்பற்றாசாகச் சொல்லிக்கொண்டு பிராட்டி புருஷகாரமாக ஸர்வலோகஶரண்யனை திருவேங்கடமுடையான் திருவடிகளைச் சரணம்புகுகிறார்.

ப.—பத்தாந் திருவாய்மொழியில், கீழ்தமக்குப்பிறந்த ப்ராவண்யாதிஶயத்தாலே புருஷார்த்தவைலக்ஷண்ய நிபந்தநமான வார்த்திபிறந்து கூப்பிட்டவர், பலஸித்திக்கு ஶரண்யனவன் திருவடிகளையொழிய வுபாயமில்லையென்றறுதியிட்டு, ஶரண்யத்வப்ரகாஶகமான அகிலஜகத்ரக்ஷணாகாரத்தையும், அபேக்ஷவிரோதி நிவர்த்தநத்தில் அத்யுஜ்ஜ்வல பரிகரயோகத்தையும், ரூபகுணஸாரஸ்யத்தாலுண்டான உத்துங்காநுபாவ்யதையையும், ஜகத்விரோதிகளுக்குத் தீங்குவிளைக்கும் ஶ்ரீமத்தையையும், ஆஶ்ரிதரக்ஷணார்த்தமான வநாயாஸ வ்யாபாரத்தையும், அதிஶயிதஜ்ஞாநர்க்கும் ஆராத்யனும்படியையும், ஸர்வஸாதாரண ஸாரஸ்யாதிஶயத்தையும், ஸாவரோதரான வீஶ்வராபிமாநிகளுக்கும் ஸாதராஶ்ரயணீயனும்படியையும், அதிஶயித போக்யமான வவயவஶோபையையும் ஆஶ்ரயணீயத்வாகாரத்தையுமநுஸந்தித்து இப்படி ஶரண்யனான திருவேங்கடமுடையான் விஷயமாக ஸக்ரமஸமக்ர ஶரணாகதியைப்பண்ணித் தலைக்கட்டுகிறார். *

ஈடு;—கீழில் திருவாய்மொழியில் ப்ராப்யவேஷமிருக்கும்படி குறைவறச்சொன்னார். இத்திருவாய்மொழியில், ப்ராபகவேஷம் குறைவறச் சொல்லுகிறார். கீழில் அதிலுபாய ப்ரஸங்கமுண்டேயாகிலும் ப்ராப்யப்ரதாநமாகக்கடவது. இதில் உபேயப்ரஸங்கமுண்டேயாகிலும் ப்ராபகப்ரதாநம். கீழில் திருவாய்மொழி திருமந்த்ரம்போலே, இத்திருவாய்மொழி சரமஶ்லோகம்போலே. இரண்டுமொன்றிலேயுண்டிறே யென்னில்; அதுஶக்தியோகத்தாலே வருமதிறே. அவஸ்தாந்தரங்களைப் பற்றிவரு மிரண்டும் இரண்டாயே இருக்கக்கடவதிறே.

பெரியவார்த்தியோடே பரமபதத்திலே கேட்கும்படி கூப்பிடச்செய்தேயும் ஸர்வரக்ஷகனானவன் வந்து முகங்காட்டாமையாலே மிகவுமவஸந்நரானவர், ஶ்ரிய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய் உபயவிபூதியுக்தனாய் ஸமஸ்தகல்யாண குணாத்மகனாய் (க) "[illegible] [illegible] – வைகுண்டே துபரே லோகே ஶ்ரியா ஸார்த்தம் ஜகத்பதி: । ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர் பாகவதைஸ்ஸஹ" என்கிறபடியே ஸ்ரீவைகுண்டத்திலே நித்யஸூரிகளுக்குக் காட்சிகொடுத்துக் கொண்டிருக்கக்கடவ ஸர்வேஶ்வரன், பலரும் நம்மை இழக்க நாம்நெடுங்கை நீட்டாகவிருக்கவொண்ணாது என்று பார்த்தருளி ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப்பண்ணி ஸமகாலத்திலுள்ளார்க்குத் தன்குணசேஷ்டிதங்களைக்காட்டி யநுபவிப்பித்தும், அக்காலத்திலும் பிற்பாடரான ஸம்ஸாரிகளுக்கு மிழக்கவேண்டாதபடி ருசிஜநகனாய்க்கொண்டு திருமலையிலே நாய்ச்சிமாருடனேகூட நின்றருளினபடியைக் கண்டு அதிகாரிநியதி காலநியதி அங்கநியதி என்றுப்போலே சொல்லுகிற நிர்ப்பந்தங்களொன்று மின்றிக்கே ஆஶ்ரயிக்கலாம்படியிருக்கிற ஸௌஶீல்யத்தைக்கண்டு திருவேங்கடமுடையான் திருவடிகளில் பெரியபிராட்டியார் முன்னிலையாகத் தம்முடைய அநந்யகதித்வத்தை விண்ணப்பம்செய்து ஶரணம்புக்குத் தம்முடைய அத்யவஸாயத்தை யறிவிக்கிறார்.

கீழேயும் பலவிடங்களிலே ப்ரபத்திபண்ணினார். அவ்விடங்களிலே தர்மிபுக்கவிடத்தே நிரூபகதர்மங்களும் புகக்கடவதென்கிற ந்யாயத்தாலே லக்ஷ்மீஸம்பந்தம் சொன்னார். இங்கு அதுதன்னையே வாய்விடுகிறார்; கீழில்ப்ரபத்திகள் திருமந்த்ரம்போலே. இதுத்வயம் போலே. திருமந்த்ரத்திலும் லக்ஷ்மீஸம்பந்தத்துக்கு வாசகமான ஶப்தங்கள் உண்டாயிருக்கச்செய்தே முக்தகண்டமாகச் சொல்லிற்று த்வயத்திலேயிறே; அதுபோலே இத்திருவாய்மொழி.

(உ) [[illegible] தாவதார்த்திஸ்ததாவாஞ்சா தாவந்மோஹஸ்ததாஸுகம்] [தாவதார்த்தி:] இழந்ததுபெறவேணுமென்னு மதுவுமவ்வளவே. [ததாவா

(க) வாயுபுராணம் (உ) வி-பு-

ஞ்சா] அப்ராப்தவிஷயத்தில் பண்ணும் சாபலமும் அவ்வளவே. [தாவந்மோஹ:] தேஹத்தையு மாத்மாவையும் ஏகீக்ருத்யபுத்தி பண்ணுகை. [ததாஸுகம்] (௧) "ஏஷ ஹ்யேவாநந்தயாதி - ஏஷ ஹ்யேவாநந்தயாதி" என்கிறதுக்கு விரோதமாய்வரும் ஸுகங்களு மவ்வளவே. [யாவந்நயாதி ஶரணம் த்வா மஶேஷாகநாஶநம் - யாவந்நயாதி ஶரணம் த்வா மஶேஷாகநாஶநம்] ஐஶ்வர்யம் ஆத்ம ப்ராப்தி - பகவத்ப்ராப்தி விரோதி. இவையெல்லா முன்னைக்கிட்டு மளவேயிறே நிற்பதென்கிறது; இப்படியே தம்முடைய ஸகல விரோதிகளும்போய் ஸகலாபேக்ஷிதங்களும் கிடைக்கைக்கு ஒரு குறையில்லையென்று ஸதாஸந்நிஹிதனான திருவேங்கடமுடையான் திருவடிகளிலே ஶரணம் புகுகிறார்.

இனித்தான் ஶரணாகதி பலப்ரதையாமிடத்தில் ஶரண்யன் பக்கலிலே பண்ணவும்வேணும். தானதிகாரியாகவும் வேணும்; வ்யதிரிக்த விஷயங்களிலே பண்ணுமிடத்தில் அதுதானே ஹாநஹேது வாகக்காணாநின்றோமிறே. இங்ஙனே யிருக்கச்செய்தேயும் அவ்வோ விடங்களிலேயும் பலிக்கிறவிது-இவ்விஷயத்தில் பலியாநின்றதென்னுமிடம் கிம்புநர்ந்யாயஸித்தம். இனித்தான் அதிகாரியாமிடத்தில் மெய்யே அநந்யகதியாகவும் வேணும். ஶரணம்புகா - பலித்ததில்லையென்று (௨) * "க்ஷமயா ஹி ஸமாயுக்தம்விஜாநாதி-அஸமர்த்தம் விஜாநாதி" என்பாராகாது. மயர்வறமதிநல மருளினனென்று, அநந்தரத்திலே மடலெடுத்துக்கொண்டு புறப்படுவார்வேணும். பண்ணின ப்ரபத்திக்கு பலம்தாழ்த்ததென்று, வேறேபோக்கடி யுடையார்க்குக் கார்யமாகாதிறே.

(௩) "சாபமாநய ஸௌமித்ரே ஶராம்ஶ்சாஶீவிஷோபமாந்-ஸாகரம் ஶோஷயிஷ்யாமி பத்ப்யாம்யாந்து ப்லவங்கமா:" என்று அவன் தாழ்த்ததுவே ஹேதுவாக ஜலதத்வத்தை யழித்துப்பொகட்டுமற்றை நாலையுங்கொண்டு கார்யங்கொள்ளுகிறேனென்றானிறே. (௪) [க்ஷயோ ஹி ஸதாயக்ஷ-க்ஷமயா ஹி ஸமாயுக்தம்] "ஒருபெண் பெண்டாட்டி எனக்கு என்றதை ஸ்வீகரிக்கையாவதென்" என்று ராஜ்யத்தைப் பொகட்டுப்பொறுத்துப் போந்தார். இங்கேவருணனை

(௧) தை ஆந- (௨) ரா-யு-௨௧-௨௧
(௩) ரா-யு-௨௧-௨௨. (௪) ராயு-௨௧-௨௦.

வழிவேண்டி, அவன் முகங்காட்டிற்றிலனென்று சீறிக்காலைக்கை யைக்காட்டாநின்றார்; இதிருந்தபடியென், என்றாப்போலே இருந்தார் கள் முதலிகள். க்ஷமைக்கு விஷயமுண்டு. ஈத்ருஶஜநத்தில் க்ஷமை யொண்ணாதென்கிறார். இவன்வந்திலனென்று நாம்சீறவொண்ணாத படி வாலி புறப்படுகிறபோது தாரைவந்து காற்கட்டினவோபாதி க்ஷமைவந்து நம்மைக்காற்கட்டாநின்றதென்றார். [ஊாடு - மாம்] (௧) "ஸஹஸ்ருஷ்டோத்தகநவிதா நாஸோஸவஜ்ஞா நஸஞ்ரஷ்டு - ஸுப் தப்ரமத்தகுபிதாநாம் பாவஜ்ஞாநம் த்ருஷ்டம்" என்று கோபம் விளைந்த வநந்தரம் ஜந்மத்தை யுணர்ந்தார். "பிறர்கை பார்த்திருக் கும் குடிப்பிறப்பன்று" என்றிருக்கிறதில்லை. நம்மை "ஐயர்மகன்" என்றறிகிறதில்லை. [ஸாப்தேத்யாதி] தந்தாம் ஸ்வபாவத்தை மறை த்துவர்த்தித்தவர்கள் ஸ்வப்நாதிதஶையிலே ஸ்வஸ்வபாவாநு குணம் பாஷிப்பர்களிறே; அப்படி இவரும் க்ஷத்ரியத்வத்தை யுணர் ந்தார்; [அயம்] மஹோததி யென்கிற பெருமையை நினைத்திரா நின்றது. தன்னைச் சிறுங்கித்திருக்கிற நம்மையறிகிறதில்லை. [மகரா லயஃ] ஒரு அயோத்யாதிபதி கோஸலாதிபதிகளோ டொக்கக்கா ணும் தன்னை நினைத்திருக்கிறது. தன்னைமீன்படு குட்டமாகவறிகிற தில்லை. [அஸமர்த்தம் விஜாநாதி] செவ்வைகெடப்பரிமாறினாரையும் ஒக்கவிட்டுக்கார்யம் கொள்ளவல்லோமென்றறிகிறதில்லை. இவ்வள வில்செய்யவடுப்பதென்னென்னில் [திக்க்ஷமாம்] இப்போது க்ஷமை யைவேண்டோம். விநியோகமுள்ள விடத்தேயன்றோ கார்யங்கொள் வது. கோபத்தோபாதி கார்யகாலத்தே யழைத்துக்கார்யம் கொள் ளப்பார்த்தோம். அதுவென்? இக்ஷ்வாகு வம்ஶ்யராயிருப்பார்க்கு க்ஷமைகொண்டு கார்யம்கொள்ளவேண்டாவோ வென்னில்; [ஈத்ரு ஶேஜநே] அத்தால் பெற்றதென்? அது இங்கு ஜீவிக்கிறதில்லை. இதுக்கு இங்குள்ளாருடைய ஸம்பந்தமே பலியாநின்றதே. ஒன்பது பாட்டாலும் ஶரண்யன்படிசொல்லி பத்தாம்பாட்டிலே ஶரணம் புகுகிறார்.

ஈடு; அவ ;—முதற்பாட்டு; உன்னையொழிய வேறுகதியின்றிக் கேயிருக்கிற வென்னை உன்திருவடிகளிலே சேரும்படிபண்ணியரு ளவேணுமென்கிறார்.

உலகமுண்டபெருவாயா வுலப்பில்கீர்த்தியம்மானே *
நிலவும்சுடர்சூழொளிமூர்த்தி நெடியாயடியேனாருயிரே *
திலதமுலகுக்காய்நின்ற திருவேங்கடத்தெம்பெருமானே *
குலதொலடியேனுனபாதம் கூடுமாறுகூறாயே. (௧)

ப,—அநந்தரம் முதற்பாட்டில் அகிலஜகத்ரக்ஷகமான ஸ்வபாவவிஶேஷங்களை யுடையையாய்க்கொண்டு திருமலையிலே ஸந்நிஹிதனானவுன்னை ஸ்வதஸ்ஸித்தஶேஷத்வ ஸ்வரூபனான நான்கிட்டும் ப்ராகாரம் அருளிச்செய்யவேணுமென்கிறார்

உலகம்—(ப்ரளயாபத்திலே) லோகத்தை
உண்ட—அமுதுசெய்கிற விடத்தில்
பெருவாயா—ரக்ஷ்யத்தளவன்றியே பெரும் பாரிப்பை யுடைத்தான ரக்ஷணோபகரணமான திருப்பவளத்தை யுடையனாய்
உலப்பு—ரக்ஷணோபயுக்தமாய் முடிவு
இல்—இன்றியே யிருக்கும்
கீர்த்தி—ஜ்ஞாநஶக்த்யாதி ஸமஸ்த கல்யாணகுண ப்ரதையையும்
அம்மானே—நிருபாதிக ஶேஷித்வ ஸ்வரூபத்தையு முடையனாய்
நிலவுச்சுடர்சூழ்—இந்த ரக்ஷணத்துக்கு அஸாதாரணமான பரிகரமாய் ஸ்வாபாவிகஸௌந்தர்ய லாவண்யாத்யகில குணௌஜ்ஜ்வல்ய பூர்ணமாய்
ஒளி—அப்ராக்ருததேஜோமயமான
மூர்த்தி—திவ்யவிக்ரஹத்தை யுடையனாய்
நெடியாய்—கீழ்ச்சொன்ன ஸ்வரூபரூபகுண சேஷ்டிதங்களுக்கு பரிச்சேதமில்லாத பெருமையை யுடையனாய், (இப்படி பஞ்சப்ராகார விஶிஷ்டனாய்க் கொண்டு)
அடியேன்—த்வதீநனான வெனக்கு
ஆருயிரே—பரிபூர்ணப்ராணபூதனாய்
உலகுக்கு—இப்படி முகந்தோற்றாதே நின்று ரக்ஷிக்குமவனன்றியே ஸர்வலோகத்துக்கும்
திலதமாய்—ஊர்த்த்வபுண்ட்ரரூபேண ஶிரஸாவாஹ்யமான திலகமாய்க் கொண்டு
நின்ற—ஸுஸ்திரமாய் நின்ற
திருவேங்கடத்து—திருமலையிலே
எம்பெருமானே—எனக்கு உன்னுடைய ஶேஷித்வத்தை ப்ரகாஶிப்பித்து நின்றவனே!
குலம்—குலக்ரமாகதமாம்படி
தொல்—பழைய
அடியேன்—அடியேனான நான்
உனபாதம்—ஶேஷியாய்ரக்ஷகனாய் போக்யபூதனான வுன் திருவடிகளை
கூடுமாறு—ப்ராபிக்கும் ப்ரகாரம்
கூறாய்—அருளிச்செய்யவேணும்

ப்ரளயாபத்திலேயோ ரக்ஷிக்கலாவது? விரஹாபத்தில் ரக்ஷிக்கலாகாதோ?, லோகமாகவீடுபடிலோ ரக்ஷிக்கலாவது, அது ஒருவனுக்குண்டானால் ரக்ஷிக்கலாகாதோ? ஆர்த்தியை யறியதாரையோ ரக்ஷிக்கலாவது. ஆர்த்தியறிந்து கூப்பிட்டாரை ரக்ஷிக்கலாகாதோ; அர்த்தித்வமில்லாதாரையோ ரக்ஷிக்கலாவது. ஆசைப்

பட்டாரை ரக்ஷிக்கலாகாதோ. வயிற்றிலேவைத்தோ ரக்ஷிக்கலாவது, வடிவுகாட்டி ரக்ஷிக்கலாகாதோ? நியமிநிவேஶித்தாரையோ ரக்ஷிக்கலாவது. உன்னை யபிநிவேஶித்தாரை ரக்ஷித்தாலாகாதோ; வாயாலேயோ ரக்ஷிக்கலாவது; வார்த்தையாலே ரக்ஷிக்கலாகாதோ ? அபர்யந்த குணங்களை யழியமாறியோ ரக்ஷிக்கலாவது. அவற்றை யநுபவிப்பித்து ரக்ஷிக்கலாகாதோ உறவறியாத லோகத்தையோ ரக்ஷிக்கலாவது; உறவறிந்த விஷயத்தை ரக்ஷிக்கலாகாதோ ? வடிவில்வாசியறியாதாரையோ ரக்ஷிக்கலாவது; வாசியறிந்தாரை ரக்ஷிக்கலாகாதோ ?. பெருமையுணராதாரையோ ரக்ஷிக்கலாவது. பெருமையுணர்ந்தாரை ரக்ஷிக்கலாகாதோ வ்யதிரேகத்தில் தரிப்பாரையோ ரக்ஷிக்கலாவது; வ்யதிரேகத்தில் தரியாதாரைரக்ஷிக்கலாகாதோ? ஸௌலப்ய ஜ்ஞாநமில்லாதாரையோ ரக்ஷிக்கலாவது. ஸுலபனென்றறிந்தாரை ரக்ஷிக்கலாகாதோ ? அந்யாபேக்ஷகரையோ ரக்ஷிக்கலாவது. அநந்யார்ஹாபேக்ஷகரை ரக்ஷிக்கலாகாதோ ? அந்யகதிகளையோ ரக்ஷிக்கலாவது; அநந்யகதிகளை ரக்ஷிக்கலாகாதோ ? ப்ரயோஜநாந்தரபரரையோ ரக்ஷிக்கலாவது. அநந்யப்ரயோஜநரை ரக்ஷிக்கலாகாதோ; பிரியநினைப்பாரையோ ரக்ஷிக்கலாவது; கூடநினைப்பாரை ரக்ஷிக்கலாகாதோ ? மஹாவ்யாபாரம் பண்ணியோ ரக்ஷிக்கலாவது (௧) „ ஊரஸ்ரவஃ-மாஸூச :'' என்று ரக்ஷிக்கலாகாதோவென்று கருத்து. (௧)

ஆறு ;— காருண்ய வாத்ஸல்யாத்யநவதிகாதிஶயா ஸங்க்யேய கல்யாணகுணனுகையாலும், ஸ்வதேஜஸாநிகில ஜகத்தையுமுத்பாஸிப்பியாநின்ற திவ்ய ரூபத்தையுடையனுப்,—எனக்கு தாரகனுகையாலும், பரமவ்யோம நிலயனுன நீ காரணபூத விதூரவர்த்தியாகையன்றியே காண விஷயமாகைக்காக ஸகலலோக திலகபூதமான திருமலையிலே புகுந்து நின்றருளுகையாலும், நான் உனக்குக் குடியடியேனுகையாலும் உன் திருவடிகளிலே என்னைச் சேர்த்தருளவேணுமென்கிறார். (௧)

ஈடு ; அவ ;—இரண்டாம்பாட்டு; கூடக்கடவீர். அதுக்கொருகுறையில்லை. ஆனாலும் ப்ரதிபந்தகங்கள் கனத்திராநின்றதேயென்ன ; உன்கையில் திருவாழியிருக்க நீ இங்ஙனே சொல்லலாமோவென்கிறார்.

கூறுய்நீறுய்நிலனுகிக் கொடுவல்லசுரர் குலமெல்லாம் *
சீறுமெரியும்திருநேமி வலவாதெய்வக்கோமானே *
சேறர்சுனைத்தாமரைசெந்தீ மலரும்திருவேங்கடத்தானே *
ஆறுவன்பிலடியேனுன் னடிசேர்வண்ணமருளாயே. (உ)

---

(௧) கீதை-௧அ-௬௬-

ப—அநந்தரம் அபேக்ஷவிரோதி நிவர்த்தகமான வாயுதௌஜ்ஜ்வல்யத்தையுடைய நீ, அத்யந்தாபிநிவிஷ்டனான நான் உன் திருவடியைச் சேரும்படி க்ருபை பண்ணவேணுமென்கிறார்.

கொடு—க்ரூராய்
வல்—ப்ரபலரான
அசுரர்—அஸுரர்களுடைய
குலமெல்லாம்—திரளெல்லாம்
கூறாய்—நாநாவாகச் சிந்நமாய்
நீறாய்—தூளியாய்
நிலனாகி—தரைப்பட்டிருக்கச்செய்தே
சீறு—பின்னையும் சீறி
எரியும்—ஜ்வலியாநிற்கிற
திரு—ஸ்ரீயையுடைய
நேமி—திருவாழியை
வலவா—அடக்கியாளவல்ல ஸர்வ ஶக்தியாய்
தெய்வம்—இப்படி யாஶ்ரித விரோதி நிரஸநத்தாலே நித்யஸூரிகளுக்கு
கோமானே—நிர்வாஹகனாய்க்கொண்டு
சேறு—தாமரையினுடைய பங்கஜத்வத்துக்கு நிமித்தமான சேற்றாலே
ஆர்—பூர்ணமான
சுனை—அருக்கயத்திலே
தாமரை—சிவந்த தாமரையானது
செம்—சிவந்த
தீ—தீப்போலே யிருக்கிற நிறத்தையுடைத்தாய்க்கொண்டு
மலரும்—மலரும்படியாயிருக்கிற
திருவேங்கடத்தானே—திருமலையிலே வர்த்திக்கிறவனே!
ஆறு—ஒருகாலுமளவுபடாத
அன்பு—ப்ரேமத்தை
இல்—உடையேனாய்
அடியேன்—ஶேஷபூதனான நான்
உன்—ஸ்வரூபாநுரூபமான வுன்
அடி—திருவடிகளை
சேர்வண்ணம்—சேரும்படி
அருளாய்—க்ருபைபண்ணி யருளவேணும்.
நேமிவலவனென்று—வலத்திலே யுடையவனென்னவுமாம்
ஆகவென்று—எச்சம் திருத்திச்சொல்லவுமாம். (உ)

ஆறு ;—(கூறாய்) ப்ரதிபந்தகங்களான பாபங்கள் போனாலன்றோ என்னோடு ஸம்ஶ்லேஷிக்கப் பெறலாவதென்னில்; ஸமாஶ்ரிதரான தேவர்களுக்கு விரோதிகளான அஸுரவர்க்கங்களைத் திருவாழியைக்கொண்டு நிரஸித்தாப்போலே என் பக்கலுள்ள ப்ரதிபந்தகத்தையும் நிரஸித்து ஸ்வப்ரபையாலே திருமலையெல்லாம் விளங்கும்படி அத்யுஜ்ஜ்வலமாய் அதிஶீதளமாய் ஸம்ருஷ்டநாளமாய் உத்புல்லமாயிருந்த வருணாரவிந்த ப்ருந்தங்களாலே யலங்க்ருதமான திருமலையிலே நின்றருளின உன் திருவடிகளை உபர்யுபரி வர்த்தமாந பகவத்விஷயாநுராக ஸஹார்ணவாந்தர்நிமக்நனான வடியேன் சேரும்படி க்ருபைபண்ணியருளாயென்கிறார். (உ)

ஈடு; அவ;—மூன்றாம்பாட்டு, அருளாயென்றீர், இங்ஙனே நினைத்தபோதாக வருளப்போமோவென்ன, வ்யதிரிக்த விஷயங்களில் போகாதபடியான ஜ்ஞாநலாபத்தைப்பண்ணித்தந்த வுனக்கு ப்ராப்திபண்ணித்தருகை பெரியபணியோவென்கிறார். என்னால் வந்த குறையறுத்த வுனக்கு உன்னால்வரும் குறையறுக்கை பெரிய பணியோ.

வண்ணமருள்கொளணிமேகவண்ணா மாயவம்மானே! *
எண்ணம்புகுந்துதித்திக்குமமுதே யிமையோரதிபதியே *
தெண்ணலருவிமணிபொன்முத்தலைக்கும் திருவேங்கடத்தானே *
அண்ணலேயுன்னடிசேர வடியேற்காவாவென்னாயே. (௩)

ப—அநந்தரம் உன்னுடைய ரூபத்தாலும் குணத்தாலும் இனிமையாலும் ஸூரிகளுக்கு உத்துங்காநுபாவ்யனாயிருக்கிற நீ அபேக்ஷாநிரபேக்ஷமாகத் திருமலையிலே ஆஶ்ரயணீயனாய் வந்தவோபாதி அடியோங்களுக்கு இரங்கியருளவேணுமென்கிறார்.

வண்ணம்—நிறத்தில்
மருள்கொள்—பிச்சேறும்படியான
அணி—அழகையுடைத்தாயுள்ள
மேகம்—மேகம்போன்ற
வண்ணா—வடிவையுடையனாய்
மாயம்—ஆஶ்சர்யாவஹமான குணங்களால்
அம்மானே—ஸர்வாதிகனாய்
எண்ணம்—புஜிக்கவொண்ணாதபடி நெஞ்சுக்குள்ளே
புகுந்து—புகுந்து
தித்திக்கும்—ரஸிக்கும்
அமுதே—அம்ருதமாய்
இமையோர்—இந்த விக்ரஹகுண ஸாரஸ்யங்களை நித்யஸூரிகளுக்கு அநுபவிப்பிக்கும்
அதிபதியே—மேன்மையையுடையனாய்
தெள்—தெளிந்து
நல்—தர்ஶநீயமான
அருவி—அருவிகள்
மணி—மணிகளையும்
பொன்—பொன்னையும்
முத்து—முத்தையும்
அலைக்கும்—அலைக்கும்
திருவேங்கடத்தானே—திருமலையிலே ஸந்நிஹிதனாய்
அண்ணலே—அஸாதாரண ஶேஷித்வத்தை ப்ரகாஶிப்பித்துக் கொண்டு நிற்கிறவனே;
உன்—உன்னுடைய
அடி—ப்ராப்தமான திருவடிகளை
சேர—சேரும்படி
அடியோர்க்கு—ஶேஷபூதரான வெங்களுக்கு
ஆ-ஆ—ஐயோ ஐயோ
என்னாய்—என்றிரங்கியருளவேணும்.
வண்ணமருளென்று—உதாரஸ்வபாவமென்றுமாம். (௩)

ஆறு ;—(வண்ணமருள்கொள்) நிர்ஹேதுகமாகச் செய்யக்கடவதோவென்னில்; உன்னோடு ஸம்ச்லேஷிக்கைக்கு அயர்வறுமமரர்களுளராயிருக்கச்செய்தே கேவலக்ருபையாலே நிரதிசயரமணீய நீலமேக ஸத்ருசாச்சர்யபூத திவ்யரூப விசிஷ்டனாய்க்கொண்டு என் நெஞ்சு நிறையப்புகுந்து எனக்கு இனியையானாப்போலே இன்னம் உன் க்ருபையாலே ஸுப்ரஸந்நரமணீய ஸலிலஸரித்தரங்க பரம்பராநீதமான விமலருசி விவிதமணிகநக மௌக்திக நிகரங்களாலே விராஜமாநமான திருமலையிலே நின்றருளின வுன்திருவடிகளிலே பிரானே என்னைச் சேர்த்தருளவேணுமென்கிறார். (௬)

ஈடு ; அவ ; நாலாம்பாட்டு, உன்னை ப்ராபிக்கைக்குறுப்பாக நீ கண்டுவைத்த ஸாதநங்கள் எனக்கொன்று முடலாகிறனவில்லை. ஆனபின்பு தேவரை நான் ப்ராபிக்கைக்கு எனக்கென்னத்தனியே ஒரு ஸாதநங்கண்டு தரவேணுமென்கிறார்.

நம்பிள்ளை ஜீயரை ஒருநாள் "பஞ்சமோபாயமென்றுகொண்டு ஒன்றுண்டு என்று சொல்லாநின்றார்கள். நாட்டிலேயும் அங்ஙனே யிருப்பதொன்றுண்டோ" என்று கேட்டருள ; "நானறிகிறிலேன், இனி சதுர்த்தோபாயந்தான் பகவானேயாயிருக்க, வ்யோமாதீதஞ் சொல்லுவாரைப்போலே அவனுக்கு மவ்வருகே யொன்றுண்டென்கையிறே ; அது நான் கேட்டறியேன்" என்றருளிச்செய்தார். ஆனால், "ஆவா" என்கிற பாட்டருளிச்செய்யும்போது எனக்குத்தனியே ஒரு ஸாதநங்கண்டு தரவேணுமென்கிறாரென்றருளிச்செய்கையாயிருக்குமேயென்ன, "அதுவோ ; அது உன் ப்ரதிபத்தியில் குற்றங்காண், அதுக்கு இங்ஙனேகாண்பொருள், நீயும் உளையாயிருக்க, நானிங்ஙனே யிழப்பதேயென்கிறார்காண்" என்றருளிச்செய்கிறார்;— (க) [ஸாஹம் கேசக்ரஹம் ப்ராப்தா த்வயி ஜீவதி அபி ப்ரபோ] நீயும் உளையாயிருக்க, என் மயிரைப் பிடித்துச் சிலர் நலியும்படி நான் பரிபூதையாவதே ? உன் ஸத்தைக்கும் என் பரிபவத்துக்கும் என்ன சேர்த்தியுண்டு, [ப்ரபோ] நீயும் என்னோடொக்க ஸ்த்ரீயானாயாகில் நானுறியிருக்கலாயிற்றே. நீ பரிப்ருடனாயிருக்கச்செய்தே நான் நோவுபடுவதே. நஞ்சீயர் ஸ்ரீபாதத்திலே யாச்

(க) பார-உத்யோ.

ரயித்தாரொருவன், எம்பெருமானே உபாயமாகில் ப்ரபத்திகொண்டு இங்குச் செய்கிறதொன்றும் கண்டிலேன், என்ன; செவியைப்புதைத்து "நாதமுனிகள் தொடங்கி இவ்வளவும்வர நம்மாசார்யர்கள் பரமரஹஸ்யமாக வுபதேசித்து ஓராண்வழியாய்க் கொண்டுபோந்த வித்தை இதின் சீர்மையறியாத வுனக்கு மஹாபாபியேன் இத்தை வெளியிடுவதே" என்று திருமுடியிலே யடித்துக்கொண்டு திருப்பள்ளியறையிலே புக்கருளினார். திவ்யமங்கள விக்ரஹமும் விக்ரஹகுணங்களும் திவ்யாத்மஸ்வரூபமும் ஸ்வரூபகுணங்களும் நித்யமுக்தர்களுக்கு ப்ராப்யமானாப்போலே, முமுக்ஷுவாய் ப்ரபந்நனான இவ்வதிகாரிக்கு த்வயமரீரமே ப்ராப்யமாயிருக்குமிறே.

ஆவாவென்றுதுலகத்தை யலேக்குமசுரர் வாணாள்மேல் *
தீவாய்வாளிமழைபொழிந்த சிலையாதிருமாமகள்கேள்வா
தேவா* சுரர்கள்முனிக்கணங்கள் விரும்புந்திருவேங்கடத்தானே
பூவார்கழல்களருவினையேன் பொருந்துமாறுபுணராயே. (௪)

ப — அநந்தரம் ஜகத்துக்கு விரோதிகளானாரை யழியச்செய்யும் ஶ்ரீமத்தையையுடைய நீ, உன் நிரதிஶயபோக்யமான திருவடிகளை நான் கிட்டும்படி பண்ணியருளவேணுமென்கிறார்,

உலகத்தை — லோகத்தை
ஆஆ என்றுது — ஐயோ ஐயோவென்றிரங்காதே
அலேக்கும் — நலிந்தலேக்குமவர்களான
அசுரர் — ஆஸுரப்ரக்ருதிகளுடைய
வாணாள்மேல் — ப்ராணன் விஷயமாக
தீவாய் — அக்நிமுகமான
வாளி — அம்புகளை
மழை — மழைபோலே
பொழிந்த — சொரிகிற
சிலையா — ஶ்ரீஶார்ங்கத்தையுடையையாய்
திருமாமகள் — அந்தவிரோதி நிரஸநத்தாலே ஹ்ருஷ்டையாய் வீரபத்நியாயுள்ள லக்ஷ்மிக்கு
கேள்வா — அநுரூபநாயகனாய்
தேவா — அத்தாலே உஜ்ஜ்வலரூபனாய்
சுரர்கள் — இந்த விரோதிநிரஸநம்பற்றுசாக தேவர்களும்
முனி — ருஷிகளும்
கணங்கள் — திரள்திரளாக
விரும்பும் — ஆதரிக்கும்படியான
திருவேங்கடத்தானே — திருமலையிலே வர்த்திக்கிறவனே
பூ — அவர்களிட்டபூவாலே
ஆர் — நிறைந்த
கழல்கள் — திருவடிகளை
அருவினையேன் — அநுபவ யோக்யனாய் வைத்து இழக்கும்படி துஸ்தரமான பாபத்தையுடையேனான நான்
பொருந்துமாறு — கிட்டும் ப்ரகாரம்
புணராய் — கற்பித்தருளவேணும்.
புணர்த்தல் — கிட்டுவித்தலாய், சேர்த்துக்கொண்டருள வேணுமென்றுமாம் (௪)

ஆறு ;—(ஆவாவென்றுது) நிர்க்ருணரான வஸுராலே உபத்ருதமான லோகத்தினுடைய வ்யஸநம் பொறுக்கமாட்டாமை அவ்வஸுரருடல் ஶராக்நியாலே தக்தமாம்படி அவர்கள் ப்ராணன்கள் மேலே ஶரவர்ஷத்தை வர்ஷித்து லோகத்தை நிருபத்ரவமாக்கினுப்போலே, நிச்யஸித்த புருஷர்களுக்கும் ஸ்ப்ருஹணீயமான திருமலையிலே பிராட்டியோடேகூட நின்றருளின வுன்னுடைய நிரவதிக போக்யமான திருவடிகளைச் சேருகைக்கு எனக்கென்னவே அபூர்வமாயிருப்ப தோருபாயத்தைப் பரிகல்பித்து, அவ்வுபாயத்தாலே என்னைச் சேர்த்தருளி, அடியேனுடைய ஸமஸ்த துக்கத்தையும் போக்கியருளவேணுமென்று ப்ரார்த்திக்கிறுர். (௪)

ஈடு ; அவ ;—அஞ்சாம்பாட்டு, நீர் இங்ஙன் த்வரிக்கிறதென் ? உம்முடைய வபேக்ஷிதம் செய்கிறேமிறேயென்ன, அது என்றென்கிறுர்

புணரா நின்றமரமேழன் றெய்தவொருவில்வலவாவோ *
புணரேய்நின்றமரமிரண்டின் நடுவேபோனமுதல்வாவோ *
திணரார்மேகமெனக்களிறு சேருந்திருவேங்கடத்தானே *
திணரார்சார்ங்கத்துனபாதம் சேர்வததடியேனெந்நாளே. *

ப —அநந்தரம் ஆஶ்ரித ரக்ஷணுர்த்தமான வநாயாஸ வ்யாபாரத்தையுடைய வுன்திருவடிகளைச் சேர்வதெந்நாளென்கிறுர்.

புணரா—செவ்வைகண்டு இலக்குக் குறிக்கவொண்ணுதபடி திரளாக
நின்ற—நின்ற
மரம்—மராமரங்கள்
ஏழு—ஏழையும்
அன்று—மஹாராஜர் பலாதிஶங்கை பண்ணினவன்று
எய்த—அவருக்கு விஶ்வாஸம் பிறக்கும்படியாக வெய்த
ஒருவில்வலவா—ஏகதநுர்த்தரனுய்
புணர்—சேர்த்தி
ஏய்—பொருந்தும்படி
நின்ற—நின்ற
இரண்டு—இரண்டு
மரத்தின்—மரத்தின்
நடுவே—நடுவே
போன—போய
முதல்வா—ஜகத்துக்குக் காரணபூதனுனவனுய்
திணர்—சதிப்பு
ஆர்—விஞ்சின
மேகமென—மேகங்களென்னலாம்படி
களிறு—யானைகள்
சேரும்—சேர்ந்துவர்த்திக்கிற
திருவேங்கடத்தானே—திருமலையிலே ஸந்நிஹிதனுனவனே

திணர்—பிடித்த கை நிரம்பும் பெருமையை
ஆர்—உடைத்தான
சார்ங்கம்—ஸ்ரீசார்ங்கத்தையுடையனுன
உன—உன்
பாதம்—திருவடிகளை
அடியேன்—உன் வீர சரித்துக்குத் தோற்று அடிமைப்பட்ட நான்
சேர்வது—சேருவது
எந்நாள்—எந்நாள்.

ஓஓவென்று—சேரப்பெருத விஷாதாதிஶயத்தைக் காட்டுகிறது
திணர்—கதிப்பாய், பெருமையைச் சொல்லுகிறது.

ஆரு ;—(புணரா) இதுக்குமுன்பு க்லிப்தமன்றியே அபூர்வமாயிருப்பதோருபாயத்தைப் பரிகல்பிக்கமுடியுமோவென்னில், ஒரு திருச்சரத்தினுலே மஹீதரஸந்நிபமான மராமரங்களேழையும் மஹீதரத்தையும் ரஸாதலத்தையும் உருவும்படியெய்த வுனக்கு முடியாததுண்டோ? ஆதலால் அன்று உனக்கொரு தீங்கு விளையாதபடி மருதின் நடுவேபோய் என்னுடைய மஹாபயத்தைப்போக்கி என்னை உஜ்ஜீவிப்பித்தாப்போலே ஸர்வபூத ஶரண்யமான திருமலையிலே ப்ரணதஜந துரிதநிரஸந ஸமர்த்தமான ஸ்ரீஶார்ங்க ப்ரப்ருத்ய ஸங்க்யேய திவ்யாயுதோபேதனுய்க்கொண்டு நின்றருளினவுன் திருவடிகளிலே சேர்த்து என்னை உஜ்ஜீவிக்கப்பண்ணுவது எந்நாளென்கிருர். (௫)

ஈடு ; அவ ;—ஆரும்பாட்டு, எந்நாளென்று ஸந்தேஹிக்கிறதென்? அதொரு தேசவிசேஷத்திலே வ்யவஸ்த்திதமன்ருேவென்ன, அங்குள்ளாருமிங்கேவந்தன்ருே உன்னைப்பெற்றநுபவிக்கிறதென்கிருர்; அங்ஙனன்றிக்கே, ப்ரயோஜநாந்தரபரரான வந்தரஜாதிகளுங்கூட அநந்யப்ரயோஜநரைப்போலே வந்தாஶ்ரயிக்க நிற்கிறவிடத்தே நானிழந்துபோவதேயென்கிருராகவுமாம்.

எந்நாளேநான்மண்ணளந்த விணைத்தாமரைகள்காண்பதற்கென்று *
எந்நாளும்நின்றிமையோர்களேத்தி யிறைஞ்சியினமினமாய் *
மெய்ந்நாமனத்தால்வழிபாடுசெய்யும் திருவேங்கடத்தானே *
மெய்ந்நாவெனய்திஎந்நாளுன்னடிக் களடியேன்மேவுவதே. (௬)

ப.—அநந்தாம் அதிஶயிதஜ்ஞாநரான ஸூரிகளும் அடிமைசெய்யும் திருமலையிலே உன் திருவடிகளைக்கிட்டி நானடிமை செய்வது எந்நாளென்கிருர்.

மண்—வரையாதே பூம்யுபலக்ஷித ஸகல லோகத்தையும்
அளந்த—அளந்து எல்லாரோடும் ஸம்ஶ்லேஷித்த ஸ்ரீலாதிஶயத்தை யுடைய
தாமரைகள்—திருவடித்தாமரைகள்
இணை—இரண்டையும்
நாம்—பரத்வைகாநுபவபரரான நாம்
காண்பதற்கு—காண்பதற்கு
எந்நாளேம்—எந்நாளையுடையோம்
என்று—என்று
இமையோர்கள்—அஸ்ங்குசித ஜ்ஞாநரான ஸூரிகள்
எந்நாளும்—எல்லாக்காலத்திலும்
நின்று—நின்று
ஏத்தி—இப்படி சொல்லி ஸ்துதித்து
இறைஞ்சி—வணங்கி
இனமினமாய்—திரள்திரளாக
மெய்ந்நாமனத்தால்—ஶரீரவாங்மநஸ் ஸுக்களாலே
வழிபாடு—அடிமை
செய்யும்—செய்யும்படியான
திருவேங்கடத்தானே—திருமலையிலே ஸந்நிஹிதனானவனே!
அடியேன்—அநந்யார்ஹனாய்
நான்—அபிநிவிஷ்டனான நான்
மெய்—ஸ்வப்நகல்பமான மாநஸாநுபவமின்றியே மெய்யேகண்டு
எய்தி—கிட்டி
உன்—உன்
அடிக்கள்—திருவடிகளிலே
மேவுவது—பொருந்துவது
எந்நாள்—எந்நாள்.
எந்நாளேமென்று—எந்நாளை யுடையோமென்றபடி. (௩)

ஆறு ;—(எந்நாளே) பரமவ்யோமத்திலிருக்கும் ஸர்வ ஸ்வாமிக்கு ஸர்வஶேஷவ்ருத்தியும் பண்ணுகையன்றோ வெல்லார்க்கும் ப்ராப்யமென்னில், அங்குள்ள அயர்வறுமமரர்களும், திருவேங்கடமுடையான் திருவடிகளையென்றோ நாங்கள் காண்பதென்று ஆசைப்பட்டு இங்கே இனமினமாகவந்து உன்னுடைய திருவடிகளிலேயன்றோ வாங்மந: காயங்களாலே ஸர்வகாலமும் ஸர்வஶேஷவ்ருத்தியும் பண்ணுகிறது. அப்படி எனக்கும் இதுவே ப்ராப்யமாதலால் திருமலையிலே செல்லவேணுமென்னத்தகாத நான் மெய்யாகத்திருமலையிலே வந்து உன்திருவடிகளிலே ஸர்வ காலமும் ஸர்வ கரணங்களாலும் ஸர்வஶேஷவ்ருத்தியும் பண்ணுவதென்றோவென்கிறார். (௩)

ஈடு ; அவ ;—ஏழாம்பாட்டு, மெய்ந்நானெய்தி யென்கிற வித்த ஜ்ஞாநஸாபமுமக்கு உண்டாயிற்றிறே. அது பலத்தோடே வ்யாப்தமாயல்லது நில்லாதிறே. ஆனபின்பு இவ்வளவும் நீர் ஆறியிருந்தாலோவென்ன, அத்தனை க்ரமப்ராப்தி பார்த்திருக்கப்போகிற

தில்லை, உன் போக்யதையென்கிறார். உன்றனையாறியிருக்க நா மாட்டுகிறிலேன்.

அடியேன்மேவியமர்கின்ற வமுதேயிமையோரதிபதியே *
கொடியாவடுபுள்ளுடையானே கோலக்கனிவாய்பெருமானே
செடியார்வினைகள்தீர்மருந்தே திருவேங்கடத்தெம்பெருமானே
நொடியார்பொழுதுமுனபாதம் காணநோலாதாற்றேனே.

ப — அநந்தரம் என்னோடு ஸூரிகளோடு வாசியற ஸர்வ ஸாதாரணமாக ரஸிப்பித்துக்கொண்டவுன்னை யநுபவிக்கைக்கு ஸாதநம் அநுஷ்டியாதிருக்க அநுஷ்டித்துப்பலம் தாழ்ந்தாரைப்போலே க்ஷணகாலமும் பொறுக்கமாட்டுகிறிலேனென்கிறார்.

அடியேன்—நிருபாதிக ஶேஷத்வத்தை ஸ்வரூபமாகவுடையேனான நான்
மேவி—கிட்டி
அமர்கின்ற—நிரந்தரானுபவம் பண்ணும்படியான
அமுதே—நித்யபோக்யபூதனாய்
இமையோர்—இப்படி ஸூரிகளையுமநுபவிப்பித்து அவர்களுக்கு
அதிபதியே—நிர்வாஹகனாயிருக்கும் மேன்மையை யுடையையாய்
அடு—இந்த போக்யதைக்கு ஸூசகமாம்படி ஆஶ்ரிதவிரோதி நிரஸநஶீலனான
புள்—பெரியதிருவடியை
கொடியா—கொடியாக
உடையானே—உடையையாய்
கோலம்—இந்த போக்யதாவர்த்தகமான ஸௌந்தர்யாதிகளையுடைத்தாய்
கனி—பக்வபலம்போலே சிவந்த
வாய்—அதர ஶோபையை யுடையனாய்க்கொண்டு
பெருமானே—இந்த போக்யதைக்கு எல்லை காணவொண்ணாத பெருமையை யுடையனாய்
செடி—போகப்ரதிபந்தகமாய் செடி போலே
ஆர்—செறிந்த
வினைகள்—பாபங்களை
தீர்—தீர்க்கைக்கு
மருந்தே—அப்ரதிஹதௌஷதமாய்
திருவேங்கடத்து—திருமலையிலே ஸந்நிஹிதனாய்
எம்பெருமானே—என்னை அடிமை கொண்ட ஸ்வாமியே
உன பாதம்—உன் திருவடிகளை
காண—காண்கைக்கு
நோலாது—நோற்றுவையாதே
நொடி—நோற்றார் பலம் தாழ்க்கப் படும் கணக்கிலே நொடி
ஆர்—சேர்ந்த
பொழுதும்—க்ஷணமாத்ரமும்
ஆற்றேன்—ஆற்றமாட்டுகிறிலேன்.

ஆறு ;—(அடியேன்மேவி) உபாயாநுஷ்டாநம் பண்ணிற்றிலேன் ரே விந்தப்ராப்யம் பெறலாவதென்னில் ; பரமவ்யோமநிலயரான

பரமஸாத்விகளாலே பரிவ்ருதனுக்கொண்டு, உனக்கு விஜயத்வஜமாய் ஆஸ்ரிதவிரோதி நிரஸநஸ்வபாவனான பெரிய திருவடித் திருத்தோளிலே யேறியருளி எனக்காகத் திருமலையிலே புகுந்தருளி என் பக்கலுள்ள ப்ரதிபந்தகத்தைப்போக்கி, என்னெஞ்சிலேவந்துபுகுந்தருளி உன் திருப்பவளத்தினழகாலே ப்ராக்ருத விஷயப்ரவணனான வென்னையுங்கூடத் தோற்பித்தடிமையாக்கி ஒருக்ஷணமாத்ர விச்சேதத்திலும் ஆத்மதாரணக்ஷமனன்றியே அவிச்சேதேநநானுன்னையநுஸந்திக்கும்படி எனக்கு பரமபோக்யமாயிருக்கையாலே உன்னைக் காண்கைக்கு ஒருபாயமநுஷ்டித்திலேனாகிலும் உன்னைக் காணாதொழியில் தரிக்கமாட்டேன். ஆகலால் உன்னைக்காட்டியருளாயென்கிறார். (௭)

ஈடு ; அவ ;—எட்டாம்பாட்டு, உன்னைக்கிட்டுகைக்கு என்தலையிலொருஸாதநமில்லையென்னாநின்றீர், இதொரு வார்த்தையோ, ஸாதநமநுஷ்டித்தார்க்கன்றி பலமுண்டோவென்ன, தந்தாமுடைய அபிமதஸித்தி ஸாதநாநுஷ்டாநத்தாலே யென்றிருக்கும் ப்ரஹ்மாதிகளுக்கும் கிட்டினால் பாசுரமிதுவன்றோ வென்கிறார். தந்தாமுடைய வாஞ்சநயத்தை முன்னிடுமத்தனைபோக்கி ஒன்றநுஷ்டித்துப் பெறலாம்படியோ நீயிருக்கிறது.

நோலாதாற்றேனுனபாதம் காணவென்றுநுண்ணுணர்வில் *
நீலார்கண்டத்தம்மானும் நிறைநான்முகனுமிந்திரனும் *
சேலேய்கண்ணார்பலர்சூழ விரும்புந்திருவேங்கடத்தானே *
மாலாய்மயக்கி அடியேன்பால் வந்தாய்போலேவாராயே (௮)

ப —அநந்தரம் ஸாவரோதநரான வீஸ்வராபிமாநிகளும் ஸமாஸ்ரயணம் பண்ணும்படி ஸுலபனாய் நிற்கிற நீ, க்ருஷ்ணனாய் வந்தாப்போலே என்பக்கலிலே வரவேணுமென்கிறார்.

உனபாதம்—உன் திருவடிகளை
காண—காண்கைக்கு
நோலாது—ஸாதநமநுஷ்டியாதே வைத்து
ஆற்றேன்—ஆற்றமாட்டுகிறிலேன்
என்று—என்றுசொல்லி
நுண்ணுணர்வில்—ஸர்வஜ்ஞனாகை கையாலே ஸூக்ஷ்மார்த்த தர்ஸியாய்
நீலார்—விஷத்தாலே கருமையார்ந்திருக்கிற
கண்டம்—கண்டத்தையுடையனாய்

அம்மானும்—அத்தாலே ஜகத்ப்ரதாநனான ருத்ரனும்
நிறை—தஜ்ஜநகனாய் ஸ்ரஷ்ட்ருத்வாத்யநுகுண ஜ்ஞாநாதி பூர்ணனான
நான்முகனும்—சதுர்முகனும்
இந்திரனும்—த்ரைலோக்யைஸ்வர்ய விஸிஷ்டனான விந்த்ரனும்
சேலேய்—முக்தமான சேல்போலேயிருக்கிற
கண்ணார்—கண்ணையுடையரான
பலர்—உமாஸரஸ்வதீஸசீப்ரப்ருதிகளான பலபெண்டுகளும்
சூழ—தங்கள் பரிஸரவர்த்திகளாக
விரும்பும்—ஸாதரமாக வாஸ்ரயிக்கு
திருவேங்கடத்தானே—திருமலையிலே ஸந்நிஹிதனானவனே
மாலாய்—கரிய நிறத்தையுடையனாய்க் கொண்டு க்ருஷ்ணனா
மயக்கி—குணசேஷ்டிதங்களாலே எவரையும் மயக்
வந்தாய்போலே—வந்தாப்போலே
அடியேன்பால்—உன்னையொழியச் செல்லாதபடி அநந்யார்ஹனான வென்பக்கலிலே
வாராய்—வரவேணும்.
மாலாய்—க்ருஷ்ணனா யென்றபடி.

ஆறு ;—(நோலாதாற்றேன்) உபாயஸூந்யராயிருந்து வைத்து ஆசைப்பட்டால் கிடைக்குமோவென்னில்; அறிவுடையரான ஸர்வ சதுர்முகேந்த்ராதி தேவர்களும் கூட ஸபரிக்ரஹமாகவந்து, நாங்கள் உபாயஸூந்யராகிலும் உன்னைக்காணுதொழியில் தரிக்கமாட்டோமென்றாசைப்பட்டன்றோ உன்னைக்காணப்பெறுகிறது. ஆகலால் அடியேனும் உன்னை ஸர்வகாலமும் காணும்படி வரவேணுமென்றபேக்ஷிக்க- அப்போதே எழுந்தருளாவிட்டவாறே இப்படி செய்கை திருவுள்ளமன்றாகில், உன்னைக்காணப்பெறாத வ்யஸநத்தாலே பித்தேறி மயங்கியிருந்தவடியேன்பால் ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு வந்து தோற்றினாப்போலேயாகிலும் வந்தென்னை தரிப்பித்தருளாயென்கிறார்.

(௮)

ஈடு ; அவ ;—ஒன்பதாம்பாட்டு, தாம் அபேக்ஷித்தபோதே காணப்பெறாமையாலே இப்போதே உன்னைக்காணுவிடில் தரிக்கமாட்டேனென்கிறார்.

வந்தாய்போலேவாராதாய் வாராதாய்போல்வருவானே *
செந்தாமரைக்கண்செங்கனிவாய் நால்தோளமுதேயெனதுயிரே *
சிந்தாமணிகள்பகரல்லைப் பகல்செய்திருவேங்கடத்தானே *
அந்தோவடியேனுனபாத மகலகில்லேனிறையுமே. (௯)

ப.—அநந்தரம் அதிஶயிதபோக்யமான வவயவஶோபையை யுடைய னுன வுன்திருவடிகளை க்ஷணமும் பிரியமாட்டேனென்கிறார்.

வந்தாய்போலே—அநாஶ்ரித விஷயத்தில் வந்துகைப் புகுந்தாப்போலே
வாராதாய்—கைவாராதிருக்குமவனுய்
வாராதாய்போல்—ஆஶ்ரித விஷயத்தில் ஆகிஞ்சந்யத்தாலே வருகைக்கு ஶங்கையில்லையென்று நினைத்திருக்கச் செய்தே
வருவானே—இஷ்டவிநியோகார்ஹமாம்படிகை வருமவனுய்
செம்தாமரை—சிவந்த தாமரைப்போலேதர்ஶநீயமாய் ஜிதமென்னும்படி பண்ணும்
கண்—திருக்கண்களையும்
செம்—சிவந்த
கனி—கனிபோலே போக்யமாய்
வாய்—(௧) "ஏகமேவ ஶரணம் வ்ரஜ - மாமேகம் ஶரணம் வ்ரஜ" என்னும் திருப்பவளத்தையும்
நால்தோள்—(௨) "ஸமாலோக்ய பரிஷஸ்வஜே - ஸாகாடம்பரிஷஸ்வஜே" என்று ஆஶ்ரிதரை யெடுத்தணைக்கும் நாலு திருத்தோள்களையு முடையனுய்
அமுதே—ஆஶ்ரிதர்க்கு நித்யபோக்யனுயிருக்கிற விருப்பை
எனது—எனக்கு ப்ரகாஶிப்பித்து
உயிரே—தாரகனுனவனுய்
சிந்தாமணிகள்—நினைத்ததெல்லாம் கொடுக்கவற்றுன மஹார்க்க ரத்நங்களினுடைய
பகர்—ஒளியானது
அல்லை—(ஸக்ருத்திவாவாம்படி) ராத்ரியை
பகல்செய்—பகலாக்குவதான
திருவேங்கடத்தானே—திருமலையிலே ஸந்நிஹிதனுனவனே
அந்தோ—ஐயோ
உனபாதம்—நிரதிஶயபோக்யமான வுன் திருவடிகளை
அடியேன்—அநந்யார்ஹனும்படி அத்யந்த பரதந்த்ரனுன நான்
இறையும்—ஏகதேஶமும்
அகல—அகல
கில்லேன்—க்ஷமனுகிறிலேன்.
அந்தோவென்றது—ஆர்த்திக்குமேலே அபேக்ஷிக்கவும் வேண்டுவதேயென்று கருத்து. பகர் - ஒளி. (௧௦)

ஆறு ;—(வந்தாய்போலே) ப்ரதிகூலர்க்குக் கண்டவாற்றுலே எளியாரைப்போலேயிருந்து அரியையாகையாலும், ஆஶ்ரிதர்க்குக் கண்டவாற்றுல் அரியாரைப்போலேயிருந்து எளியையாயிருக்கையாலும், நீ என்னை த்வத்ஸௌந்தர்யைக தாரகபோஷகபோக்யனுக்குகையாலும் நிகரகிரணஸந்தீபமாக ஸ்வப்ரபைகளாலே ராத்ரியையும் பகலாக்காநின்ற ரத்நங்களாலே அலங்க்ருதமான திருமலை

(௧) கீதை-௧௮-௬௬. (௨) ராயு-௧-௧௫.

யிலே எனக்காக நின்றருளுகையாலும் அடியேன் ஒருக்ஷணமும் உன்திருவடிகளை விஶ்லேஷிக்கமாட்டாமையாலும் உன் க்ருபையாலே அடியேனை உன் திருவடிகளிலே சேர்த்தருளவேணு மென்கிறார். (௯)

ஈடு ; அவ ;—பத்தாம்பாட்டு, தம்முடைய வபேக்ஷிதம் ஸக்கென ஸித்திக்கைக்காகப் பெரியபிராட்டியாரைப் புருஷகாரமாக்கொண்டு திருவேங்கடமுடையான் திருவடிகளிலே ஶரணம் புகுகிறார். ஆக, ஒன்பது பாட்டாலும் ஶரண்யன் ஸ்வரூபத்தைச் சொன்னார். இதில் தம்முடைய ஸ்வரூபத்தைச்சொல்லிச் ஶரணம் புகுகிறார். கீழே, அடியேனென்றும், அருவினையேனென்றும் தம்முடைய வாகிஞ்சந்யத்தையும் ஶேஷத்வத்தையும் அவனுடைய ஶரண்யதைக் குறுப்பாகச்சொல்லிக்கொண்டு போந்தார். இந்த அது தன்னையே பேற்றுக்குடலாகச்சொல்லி ஶரணம் புகுகிறார். இப்பாட்டு தன்னை த்வயத்தில் பதங்களோடொக்க யோஜித்துத் தலைக்கட்டக்கடவது ; அதிலர்த்த ப்ராப்தமான அஹமர்த்தத்தை இங்கு அடியேனென்கிறது.

அகலகில்லேனிறையுமென் றலர்மேல்மங்கையுறைமார்பா *
நிகரில்புகழாயுலகம்மூன்றுடையா யென்னையாள்வானே *
நிகரிலமரர்முனிக்கணங்கள் விரும்புந்திருவேங்கடத்தானே *
புகலொன்றில்லாவடியேனுன் னடிக்கீழமர்ந்துபுகுந்தேனே.

ப —அநந்தரம், ஆஶ்ரயணீயதைக்கு ஏகாந்தமான புருஷகாரயோகத்தையும் குணயோகத்தையு முடைமையாயிருக்கிற வுன்திருவடிகளை அநந்யகதியாய்க்கொண்டு ஆஶ்ரயித்தேனென்று ஸக்ரமமாக ஶரணாகதியைப் பண்ணுகிறார்.

இறையும்—ப்ரபாப்ரபாவரங்களைப் போலேயிருக்கிற ஸ்வரூபஸம்பந்தத்தாலும் எதிர்த்தலையில் போக்யதாதிஶயத்தாலும் க்ஷணமாத்ரமும்
அகல—விஶ்லேஷிக்க
கில்லேன்—க்ஷமையல்லேன் ;
என்று—என்று

அலர்மேல்—பூவில் பிறப்பாலுண்டான மார்த்தவபோக்யதைகளையுடையளா
மங்கை—மங்கைப் பருவத்தாலுண்டான வால்லப்யாதிஶயத்தையுடைய லக்ஷ்மியானவ
உறை—தன்னுபிஜாத்யமும் ஆத்மகுணமும் ஆபிரூப்யமும் இட

ஓரவயவவிசேஷத்திலே நித்ய வாஸம் பண்ணும்படியான போக்யதாதிஶயத்தை யுடைய

மார்பா—திருமார்பையுடையையாய்

நிகரில்—இவளோட்டைச் சேர்த்தியடியாக வுதிக்கக்கடவதாய் ஆஶ்ரிததோஷா நபிஜ்ஞதையாலே குணாந்தரங்களோடு சேர்க்க வொண்ணாதபடி நிருபமமான

புகழாய்—நிரவதிக வாத்ஸல்ய ப்ரதையையுடையையாய்

மூன்றுலகம்—இதுக்கு ஹேதுவாயிருக்கிற ப்ரமாண ப்ரஸித்தமாயுள்ள த்ரிவித சேதநாசேதநங்களையும்

உடையாய்—ஸ்வம்மாகவுடைய ஸ்வாமித்வத்தை யுடையையாய்,

என்னை—அந்தமேன்மையேயன்றியே அத்யந்த ஹேயனான வென்னையும்

ஆள்வானே—அங்கீகரிக்கும் ஸௌஶீல்யாதிஶயத்தையுடையையாய்

நிகரில்—அந்த ஶீலத்தோடேயெல்லாரும் கண்டநுபவிக்கும்படி ஜ்ஞாநப்ரேமாதி குணோத்கர்ஷத்துக்கு ஒப்பில்லாதபடியாயுள்ள

அமரர்—கைங்கர்ய நிஷ்டரான வமரரும்

முனி—குணாநுபவபரராய்க்கொண்டு மநநஶீலரான முனிவர்களுமான

கணங்கள்—திரள்களானவை

விரும்பும்—வாத்ஸல்யாத்யநுபவாபிநிவேஶத்தாலே அத்யந்தாதரம் பண்ணிவர்த்திக்கும்

திருவேங்கடத்தானே—திருமலையிலே ஸந்நிஹிதனான ஸௌலப்ய பூர்த்தியையுடையவனே!

புகல் - உன்னையொழிய வுபாயாந்தரங்களான புகலும் ரக்ஷகாந்தரங்களான புகலும்

ஒன்றில்லா—ஒன்றுமில்லாதபடி அநந்யஶரணனான

அடியேன்—பாரதந்த்ர்யத்தை யுடைய நான்

உன்—ஶ்ரீயுக்தமான புருஷகாரயோகத்தையும் குணயோகத்தையுமுடைய வுன்னுடைய

அடி—திருவடிகளின்

கீழ்—கீழே

அமர்ந்து—ரேகாவதந்தர்க்கதனாய்க்கொண்டு

புகுந்தேன்—அநந்யப்ரயோஜநத்வ வ்யவஸாய விஶிஷ்டனாய் ஆஶ்ரயித்துவிட்டேன்.

அகலகில்லேனென்கையாலே - ஶ்ரீஸப்தார்த்தமான ஸேவாகரணத்தாலே வந்த நித்யாநபாயித்வத்தையும், அலர்மேல்லென்கையாலே - ஸேவ்யதைக்கு ஏகாந்தமான மார்த்தவாதி யோகத்தையும், மங்கையென்கையாலே - ஸேவாகரணத்துக்கடியான வால்லப்யத்தையும், உறைமார்பாவென்கையாலே - மதுபர்த்தமான நித்யயோகத்தையும், நிகரில்புகழாயென்று தொடங்கி - திருவேங்கடத்தானே யென்றதறுதியாக (க) " [illegible] நிவாஸ: -

(க) [illegible]

மாதாபிதாப்ராதாநிவாஸ :" என்று நாராயண ஶப்தார்த்தத்தைச் சொல்
ஶ்ருதிக்ரமத்தாலே வாத்ஸல்யாதிகுண சதுஷ்டயக்ரமத்தையும், புகலொன்று
லாவென்கையாலே - அதிகாரி விஶேஷணமான ஆகிஞ்சந்யாநந்யகதித்வத்
யும், அடியேனென்று - க்ரியாபதத்தில் உத்தமனாலே யாக்ஷிப்தமான அதிக
ஸ்வரூபத்தையும், உன்னென்று - ஸம்புத்த்யந்த யோஜனையாகையாலே
யாஹார்யமான த்வஶப்தார்த்தத்தையும் அடிக்கீழென்கையாலே - சரண ப
தார்த்தத்தையும், அமர்ந்தென்கையாலே - க்ரியாபதத்தில் உபஸர்க்கார்
மாய், உபாயோபேய விஷயமான வ்யவஸாயத்தையும் புகுந்தேனென்ற
க்ரியாரூபமான ஆஶ்ரயணத்தையும், புகுந்தேனென்கிற பூதார்த்த நிர்த்தேச
தாலே ஆஶ்ரயணத்துக்கு ஆவ்ருத்த்யபேக்ஷையில்லாத ஸக்ருத்கரணத்தை
ப்ரகாஶிப்பித்ததாய், இது - பூர்ணஶரணாகதியாகையாலே ஆஶ்ரயணார்த்தமா
லக்ஷ்மீ ஸம்பந்தமும் குணயோகமும் ப்ராப்யாந்விதமாயிருக்கையாலும், அ
யேனென்கிற அதிகாரிஸ்வரூபத்திலே அநந்யார்ஹஶேஷத்வாநந்ய ஶரண
த்வங்களோபாதி அநந்யபோக்யத்வமும் ஸூசிதமாகையாலே, அமர்ந்தென்
ப்ரயோஜநாந்தர நிராஸம் ஸூசிதமாகையாலே, நமஶ்ஶப்தார்த்தம் ஸித்திக்கை
யாலும், புகுந்தேனென்கிற கதிவசநம் ப்ராப்திக்கும் ஸூசகமாகவற்றாகை
லும், ப்ரதாநமான உபாயவரண வாக்யத்துக்குள்ளே வாக்யஶேஷமான உத்
வாக்யார்த்தமும் அந்தர்க்கதமாயிற்றதாயிற்று ; ஆகையாலே இப்பாட்டு வா
த்வயார்த்த ப்ரகாஶகமாகையாலே பூர்ணஶரணாகதியாகக்குறையில்லை, இ
படி - இப்பத்தாலே கீழில் பத்திலுபாயதயாநிஷ்கர்ஷித்த வஸ்துவை ஸ
காரமாக ஸ்வீகரித்தருளினாராயிற்று. (௧௦)

ஆறு ;— (அகலகில்லேன்) அபாரகாருண்ய மஹோததியா
உன்னுடைய குணங்களாலே அஸ்மத்ஸ்வாமிபுமாய், திருநா
டிலே த்வத்பரிசர்யைகபோகராயும் த்வத்குணாநுபவைகபோகரா
யும் நிருபமராயிருந்த நித்யஸித்தபுருஷர்களுக்கும்கூட ஸ்ப்ருஹ
ணீயமான திருமலையிலே அநாலோசித விஶேஷாஶேஷலோக ஶர
ண்யனாய்க்கொண்டு நின்றருளுவதும் செய்த வுன் திருவடிகளை அ
ந்யஶரணனானவடியேன் அநந்யப்ரயோஜனனாய்க்கொண்டு பெரி
பிராட்டியார் புருஷகாரமாக ஶரணம் புகுந்தேன், இப்போதே
நிரஸ்த ஸமஸ்த ப்ரதிபந்தகனாய் உன் திருவடிகளிலே ஸர்வகா
மும் ஸர்வ கைங்கர்யமும் அடியேன் பண்ணப்பெறவேணுமெ
கிறார். (௧)

ஈடு ; அவ ;—நிகமத்தில் இத்திருவாய்மொழி கற்றார், பரம பதத்திலேசென்று தாஸ்யத்திலே அபிஷிக்தராய் அடிமைசெய்யப் பெறுவர்களென்கிறார்.

அடிக்கீழமர்ந்து புகுந்தடியீர் வாழ்மினென்றென்றருள்கொடுக்கும்
படிக்கேழில்லாப்பெருமானைப் பழனக்குருகூர்ச்சடகோபன்
முடிப்பான்சொன்னவாயிரத்துத் திருவேங்கடத்துக்கிவைபத்தும்
பிடித்தார்பிடித்தார்வீற்றிருந்து பெரியவானுள் நிலாவுவரே. (௧௧)

ப—அநந்தரம் இத்திருவாய்மொழியைப் பற்றினவர்கள் மஹாவகாஶமான பரமபதத்திலே வ்யாவ்ருத்தராயிருந்து நித்யவாஸம் பண்ணுவரென்று பலத்தையருளிச்செய்கிறார்.

அடியீர்—ஶேஷபூதராயுள்ளவர்களே!
அடிக்கீழ்—நம்முடைய வடிக்கீழ்
அமர்ந்து—அநந்யஸாதநராய் அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு வ்யவஸ்திதராய்
புகுந்து—புகுந்து
வாழ்மின்—நிரந்தராநுபவம் பண்ணுங்கோள்
என்றென்று—என்றென்று
அருள்—உபாயபாவத்திலும் உபேயபாவத்திலும் தன்க்ருபையை
கொடுக்கும்—உபகரிக்கும்
படி—ப்ரகாரத்துக்கு
கேழில்லா—ஒப்பில்லாத
பெருமானை—ஸர்வாதிகனைக் குறித்து
பழனம்—ஶ்ரமஹரமான நீர்நிலங்களையுடைய
குருகூர்—திருநகரிக்கு நிர்வாஹகரான
சடகோபன்—ஆழ்வார்
முடிப்பான்—தம்முடைய கார்யமடங்கத் தலைக்கட்டிக்கொள்வதாக
சொன்ன—அருளிச்செய்த
ஆயிரத்து—ஆயிரம் திருவாய்மொழியிலும் வைத்துக்கொண்டு
திருவேங்கடத்துக்கு—திருமலைக்கு ப்ரதிபாதகமான
இவைபத்தும்—இவைபத்தையும்(ஞா
பிடித்தார்—ஶப்தாவலம்பநம் பண்ணி
பிடித்தார்—அர்த்தாவலம்பநம் பண்ணினரெல்லாரும்
பெரிய—நிரதிஶயமஹத்தையையுடைத்தாய்
வானுள்—பரம்வ்யோம ஶப்தவாச்யமான பரமபதத்திலே
வீற்றிருந்து—இத்திருவாய்மொழியில் ஸம்பந்தமடியானவ்யாவ்ருத்தி தோன்றும்படியிருந்து
நிலாவுவர்—நித்யாநுபவம் பண்ணி வர்த்திப்பர்
நிலாவுதல்—நிலைநிற்க நடத்தல்
பிடித்தாரைப் பிடித்தென்றுமாம்
இது அறுசீராசிரிய விருத்தம். (௧௧)

ஆறு ;—(அடிக்கீழமர்ந்து) கைங்கர்யை கரதிகளாய்க்கொண்டு தன் திருவடிகளைச்சரணம் புக்கவர்களுக்கு கைங்கர்ய ஸம்பத்தைக்

கொடுத்துக்கொண்டு நிற்கிற நிருபமமான வாஸ்ரித வாத்ஸல்யதையுடைய திருவேங்கடமுடையானைச் சேர்ந்து முடிக்கைக்காக திருமலையில் ஸம்ருத்தியைச்சொன்ன வித்திருவாய்மொழியை யாஸ்ரயித்தவர்களை யாஸ்ரயித்தவர்களே திருநாட்டிலே பகவச்சேஷத்வ ஸாம்ராஜ்யத்திலே அபிஷிக்தராய் ஸர்வகாலமும் ஸர்வேஷவ்ருத்தியும் பண்ணிக்கொண்டு வர்த்திக்கப்பெறுவரென்கிறு

திருவாய்மொழி ஆறாம்பத்து வ்யாக்யாநங்கள்

முற்றுபெற்றன.